
# தமிழரசு






15262


எல்லோரும் இந்தியரே





1
8
1986


ரூ. 1



ஆகஸ்ட 2 [illegible] 1986

# தமிழரசு

JL
V211m N86
N86·8
85378



சென்னை ஐஸ்ஹவுஸ் பகுதியில் 17.7.86 அ
கள்ளிரவில் தீவிபத்து ஏற்பட்ட பகுதிகளை மாண்
முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் 18.
அன்று நேரில் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட
களுக்கு ஆறுதல் கூறியதுடன் உடனடி நிவா
நடவடிக்கைகளுக்கும் ஆணையிட்டார்.



# தமிழகத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்

**மாண்புமிகு முதல்வர்**
**டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின்**
**அறிக்கை**

வறட்சி நிவாரண, துயர்துடைப்புப்பணி களுக்காக ரூ. 310 கோடி அளவிற்கு மத்திய உதவிகோரி இன்றே அறிக்கை மைய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

கோவை, சேலம், தர்மபுரி, அண்ணா, மதுரை, இராமநாதபுரம், பசும்பொன்முத்து ராமலிங்கம், காமராஜர், பெரியார், திருச்சி ராப்பள்ளி, கன்னியாகுமரி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப் பட்ட மாவட்டங்கள் என ஏற்கெனவே தமிழ் நாடு அரசு அறிவித்துள்ளது. ஜனவரி, மே ஆகிய இரு மாதங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் வறட்சி நிலைமை பற்றி ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்பட்டன.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலவும் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக ரூ. 12 கோடி அளவிற்குச் செலவிடுவதற்கான திட் டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஆடி 17
மலர் : 17 1-8-1986 இதழ் : 3

பாதிக்கப்பட்ட பகுதிகளில் 2,622 ஆழ் துளைக் குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 661 வட்டக் கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டன. 36 திறந்த கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டன. இவை தவிர தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 3016 திறந்த கிணறுகள் ஆழப்படுத்தப் பட்டன.

பல பகுதிகளுக்கு லாரிகள் மூலமும், தண்ணீர் வண்டிகள் மூலமும் குடிநீர் கொண்டு சென்று வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த இனங்களில் ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சிப் பகுதிகளில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப் போக்குவதற்காக ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மொத்த நிலையும் பரிசீலிக்கப்பட்டு மேல்குறித்த பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ததும் அல்லாது துயர்துடைப்புப் பணிகளுக்காக ஒட்டுமொத்தமாக ரூ. 30 கோடி நிதி ஒதுக்கீடு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் டெல்டா பாசனப் பகுதிகளிலும் தென்ஆர்க்காடு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் சிறு விவசாயிகளும், வேளாண்மை தொழிலாளர்களும் பெரும் பாதிப்புக்கு ஆளாகி வேலை இல்லாத நிலைமை உருவாகியுள்ளது.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றின் கீழ் இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான ஏற்பாடுகள் விரைவாகவும் முனைப்பாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக வறட்சி காரணமாக வேலையின்றி வாடும் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டங்களைத் தீவிரமாகவும், நேரடி மேற்பார்வையிலும் நிறைவேற்றும்படி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசுத்துறைத் தலைவர்களுக்கும் ஆணையிடப்பட்டுள்ளது.

ஊரக வளர்ச்சி, வேளாண்மைப் பொறியியல் துறை, பொதுப்பணித்துறை மூலம் பல வேலைவாய்ப்புத் திட்டங்களை உருவாக்கி 1,59,22,450 மனித உழைப்பு நாட்களுக்கேற்ற பணிகளை அடுத்த இரண்டு மாத காலத்திற்குள் செய்து கொடுக்க முடியும் என்று கணக்கிடப்பட்டு அதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளும்படி மாவட்ட அதிகாரிகளுக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வருவாய் நிர்வாகத் தனி ஆணையர், நில நிர்வாகத் தனி ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்தத் தனி ஆணையர் ஆகிய உயர் அதிகாரிகள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, இப்பணிகள் செம்மையாகவும், முழுமையாகவும் நடைமுறைப் படுத்தப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கவும், தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் பணிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்பணிகளின் முன்னேற்றம் பற்றி அரசு அளவில் உயர்மட்ட ஆய்வு தொடர்ந்து செய்யப்படும்.

(தமிழ்நாட்டில் வறட்சி நிவாரணப் பணி பற்றி 24-7-86 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்களது அறிக்கை.)

## புதிய தலைமைச் செயலாளர்

### திரு ஏ.பத்மநாபன், இ.ஆ.ப,



தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராக மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி திரு ஏ. பத்மநாபன் 21.7.86 அன்று பதவியேற்றார். இதற்கு முன்னர் இவர், ஊழல் ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை ஆணையர் மற்றும் செயலாளராகப் பணியாற்றினார்.

திரு ஏ. பத்மநாபன் அவர்கள் 14.12.1928ல் பிறந்தார். இவர் 1951ல் அரசுப் பணியைத் தொடங்கினார். துணை மாவட்ட ஆட்சித் தலைவராகவும் (சப்-கலெக்டர்), மாவட்ட ஆட்சித் தலைவராகவும், தலைமைச் செயலகத்திலும் மாவட்டங்களிலும் மிக முக்கியமான பதவிகளையும் வகித்தார். பொதுப்பணித்துறை, மக்கள் நல் வாழ்வுத்துறை மற்றும் தொழிலாளர் நலத்துறைச் செயலாளராகப் பணிபுரிந்துள்ளார். மிக முக்கியமான நேரத்தில் தமிழ்நாடு மின் வாரியத் தலைவராக இருந்திருக்கிறார். இதேபோல் மைய அரசின் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சகத்தில் இணைச் செயலராக இருந்து, மாநிலத்தின் கப்பல் போக்குவரத்து மேம்பாட்டிற்கும் பொதுவாக இந்தியாவின் நீர்வழிப் போக்குவரத்து மேம்பாட்டிற்கும் சீரிய பணியாற்றியிருக்கிறார்.

இவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர். அண்மைக் கால வரலாற்றில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் தமிழக அரசின் தலைமைச் செயலாளராக நியமிக்கப்பட்டு, பொறுப்பு ஏற்பது இதுவே முதல் தடவை.

தலைமைச் செயலர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டார். பொறுப்பேற்ற புதிய தலைமைச் செயலாளரை துறைச் செயலர்கள், அரசு அலுவலர்கள், அலுவலர் சங்கப் பிரதிநிதிகள், காவல்துறை அதிகாரிகள் மற்றும் பலர் சந்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



# ஊரகத் தொழிலில் உயர்ந்திடும் தமிழகம்

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்

### திரு ஆனூர் ஜெகதீசன்

தமிழக மக்களின் வாழ்வு வளம்பெற வேண்டுமாயின் தமிழகத்துல் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதைத தமிழக அரசு நன்குணர்ந்துள்ளது. கிராமப்புறங்களிலுள்ள பெரும்பாலான மக்களை வறுமைப் பிடியிலிருந்து விடுவிக்க ஊரகத் தொழில் வளர்ச்சியில, அரசு பெரிதும் அக்கறை செலுத்தி வருகிறது. குறிப்பிட்டதொரு முதலீட்டிற்கு, அதிகப்படியான வேலை வாய்ப்பினை குறுகிய கால அளவுக்குள் ஏற்படுத்தக் கூடியவை சிறு தொழில்களேயாகும். ரூ. 35 இலட்சத்திற்கு மேற்படாத முதலீட்டைக் கொண்ட தொழில்கள் சிறு தொழில்கள் எனப்படும்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் சிறு தொழில்களின் வளர்ச்சி பொதுவாகத் தனியார் துறையிலேயே அமைந்திருப்பதால், தொழில்கள் தோன்றி வளர்வதற்குரிய சாதகமான சூழ்நிலையை உருவாக்கிட பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக நடைமுறைகள் எளிதாக்கப்பட்டுள்ளன; உரிமங்கள் தாமதமின்றிக் கிடைத்திட ஆய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன; மாவட்ட அளவிலேயே தேவையான உதவிகள் கிடைத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன; அதிகாரம் பரவலாக்கப்பட்டுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாகக் கடந்த சில ஆண்டுகளில் போற்றத்தக்க வளர்ச்சி காணப்பட்டுள்ளது. 1978 மார்ச் முடிய 18,789 நிரந்தரப் பதிவு பெற்ற சிறு தொழில்கள் இருந்தது; இவற்றால் 2,60,836 பேருக்கு வேலைவாய்பபு கிடைத்தது. 1986 மார்ச் முடிய நிரந்தரப் பதிவு பெற்ற சிறு தொழில்களின் எண்ணிக்கை 71,774 ஆக உயர்ந்தது; 8,61,283 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்தது. இதிலிருந்து கடந்த எட்டு ஆண்டுகளில் சிறுதொழில்கள் ஏறத்தாழ நான்கு மடங்கு வளர்ச்சி பெற்றுள்ளன என்பது தெரிகிறது. சிறு தொழில்கள் உரிமங்கள் பெறுவதிலுள்ள சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கென அமைக்கப்பட்ட பல்வேறு துறை அலுவலர்களைக் கொண்ட குழுக்கள் மாவட்ட அளவில் கூடி நடவடிக்கை எடுக்கின்றன. 1985/86ல் மட்டும் மாவட்ட அளவில் இக்குழுக்கள் 202 முறை கூடி 2000க்கு மேற்பட்ட பிரச்சினைகளுக்குத்தீர்வு கண்டுள்ளன.

படித்த இளைஞர்கள், அரசு மற்றும தனியார் நிறுவனங்களில் கிடைக்கும் வேலைகளை மட்டுமே நம்பியிராமல் தாமே சிறு தொழில் செய்து பிழைப்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் முன்னாள் பாரதப் பிரதமர் அன்னை இந்திரா காந்தி அம்மையார் உருவாக்கிய சுயவேலை வாய்ப்புத் திட்டத்தைத் தமிழகம் வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ் 1985-86ஆம் ஆண்டுக்குத் தமிழகத்துக்கென்று மைய அரசு நிர்ணயித்த இலக்கு 18,100. இதனை விஞ்சி 18,759 பேருக்கு 37,44.64 இலட்சம் ரூபாய் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகமெங்கும் சிறு தொழில்கள் தோன்றி வளர்ந்திட அனைத்து உதவிகளையும் அளிக்கத்தக்க வகையில் மாவட்டம் தோறும் மாவட்டத் தொழில் மையங்கள் செயலாற்றி வருகின்றன. இவை சிறுதொழில்களுக்குத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து நிதியுதவி பெற்றுத் தருகின்றன.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் மின்னணுவியல் மற்றும் மின்னியல் சார்ந்த தொழில் முக்கியப்பங்கு வகிக்கிறது. தற்போது மின்னணுவியல் மற்றும் மின்னியல் தொழில்களுக்கென்று 7 தொழிற்பேட்டைகள் உள்ளன. தரப்பரிசோதனை வசதிகள் அளிக்க 4 இடங்களில் பரிசோதனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழில் பற்றித் தொழில் முனைவோர்களுக்கு ஆலோசனை வழங்கத் தகவல் களஞ்சியம் ஒன்று சென்னையில் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழில்பேட்டையில் செயல்பட்டு வருகின்றது. தமிழகத்தில் 1980-ல் 224 மின்னணுத் தொழில்கள் இருந்தன. இவை 1986ல 462 ஆகப் பெருகியுள்ளன.

தொழில் வளர்ச்சிக்கு, கூட்டுறவுத்தத்துவத்தைப் பயன்படுத்தி, வசதிவாய்ப்புப்பெற்றிராத நபர்கள், ஒன்று சேர்ந்து தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து உற்பத்தியில் ஈடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய சங்கங்களுக்குத் தொழில் நுட்பம், நிர்வாகம் மற்றும் நிதி உதவியும் அளிக்கப்படுகிறது. 1977-78ல் இத்தகைய சங்கங்களின் எண்ணிக்கை 297ஆக இருந்தது. 1985-86ல் 600 சங்கங்களாகப் பெருகியுள்ளது. தேங்காய் நார், கயிறு, ஜவ்வரிசி, மாவுப்பொருட்கள் தயாரிப்பு, தீப்பெட்டி, தேயிலை, பாலிதீன், முந்திரி, செங்கல்சூளை போன்ற பல பொருட்களின் உற்பத்திக்கெனத் தொழிற்கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப் பெற்று, சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவற்றுக்குக் கடனுதவி செய்யும் பொருட்டே தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கி இயங்கி வருகிறது.

சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் நலனுக்காக, தொழில் கூட்டுறவு தேயிலை

தொழிற்சாலைகள் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன்முறையாக அமைக்கப்பட்டுள்ளன. தற்போதுள்ள இத்தகைய 12 தொழிற்சாலைகளில் 8,933சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன்பெறுகின்றனர்.

மரவள்ளிக்கிழங்கு மாவிலிருந்து ஜவ்வரிசி மற்றும் மாவுப்பொருட்கள் தயாரிக்கும் தொழிலில் 600-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் ஈடுபட்டுள்ளன. இடைத் தரகர்கள் விளைவிக்கும் இடையூறுகளிலிருந்து உற்பத்தியாளர்களை மீட்கவும், அவர்கள் உற்பத்தி செய்த பொருளுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யவும், சேலம் மாவட்டத்தில் ''சேகோ சர்வ்'' என்றும், தர்மபுரி மாவட்டத்தில் ''ஸ்டார்ச் சர்வ்'' என்றும் இரு சங்கங்கள் தொடங்கப்பட்டு இலாபகரமாகவும், பயனுள்ள வகையிலும் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் அதாவது (டான்சி) பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் தேவைப்படும் பல்வேறு பொருட்களையும் சாதனங்களையும் தனது 47 தொழிற்கூடங்கள் மற்றும் 7 விற்பனைக் கூடங்கள் மூலமாகத் தரமாகத் தயாரித்து வழங்கி வருகிறது. இதில் சுமார் 3,900 பேர் வேலை செய்கின்றனர்.

சிறு தொழில்களுக்கு உதவுவதற்கென்று நிறுவப்பட்ட தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் அதாவது சிட்கோ நம் மாநிலத்தில் பரவலாகத் தொழிற்பேட்டைகளை அமைத்து அங்கு மேம்படுத்தப்பட்ட மனைகளையும் தொழிற்கூடங்களையும் ஒதுக்கீடு செய்தல்; முக்கிய மூலப் பொருட்கள் கிடைக்குமாறு செய்தல்; மத்திய, மாநில மானியங்களைப் பெற்றுத் தருதல்; சிறு தொழில்களுக்குப் பணி ஆணைகளை பெற்றுத் தருவதோடு அவற்றின் உற்பத்திப்பண்டங்கலை விற்பனை செய்வதற்கான வசதிகளைச் செய்து தருதல் போன்ற பணிகளைச் சிறப்பாகச்செய்து வருகிறது. பல ஆண்டுகளாக வாடகை அடிப்படையில் இயங்கி வந்த 783 அரசு தொழிற்கூடங்களை அதில் தொழில் நடத்துபவர்களுக்குத் தவணை முறையில் சொந்தமாக்கித் தருகிறது. சிட்கோ இதுவரை 3,209தொழிற்கூடங்களைக் கட்டியுள்ளது. திருப்போரூரை அடுத்த ஆலத்தூரில் மருந்துத்தொழிலுக்கென்றே தனியாக ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கி வருகிறது. இந்நிறுவனம் தொடர்ந்து லாபத்தில் இயங்கி வருகிறது. 1986-87ல் சிட்கோ திருவள்ளுரையடுத்துள்ள காக்களூரில் ஒருபுதிய தொழிற்பேட்டையைக் கட்டி முடிக்க இருக்கிறது.

இந்திய நாட்டில் தோல் தொழிலில் தமிழகம் ஒரு பெருமை மிக்க இடத்தை வகித்து வருகிறது. நாட்டின் மொத்த தோல் உற்பத்தியில் 70 விழுக்காட்டையும், ஏற்றுமதியில் 60 முதல் 65 விழுக்காட்டையும் தமிழகம் செய்து வருகிறது. இந்தியாவிலுள்ள மொத்தம் 1,600 தோல் பதனிடும் தொழிற்கூடங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 521 தோல் பதனிடும் கூடங்கள் உள்ளன.

தமிழ்நாடு தோல் வளர்ச்சி நிறுவனம் அதாவது 'டால்கோ' தோல் தொழில் கைவினைஞர்களுக்கு இலவசப் பயிற்சி அளித்தல், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு சந்தை வாய்ப்பினை உண்டாக்கி வருதல்; தோல் பதனிடுவோருக்குத் தேவையான மூலப்பொருட்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை வாங்கி, மூலப்பொருள் வங்கிகளில் சேமித்து வைத்து, விற்பனை செய்தல் ஆகிய பணிகளைச் செய்து வருகிறது. தோல் பதனிடுவதிலிருந்து வெளியாகும் கழிவுநீரைச் சுத்தப்படுத்தி, சுற்றுப்புறத்தைச் சுகாதாரமாக வைத்திருக்கும்பொருட்டு, பெரும் பொருட்செலவில் வாணியம்பாடியிலும், ஈரோட்டிலும் கூட்டுறவு அடிப்படையில் கழிவு நீர் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் தொடங்கப்படவுள்ளன.

மாநிலத்தின் முதல் நிதி நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் அதாவது 'டிக்' 1949ல் தொடங்கப்பட்டது. நடுத்தர, சிறிய தொழில் நிறுவனங்களுக்கு நிலம், கட்டடம், இயந்திரம் வாங்க இந்நிறுவனம் கடன் வழங்குகிறது. தனி உரிமையாளர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் ரூ. 30 இலட்சம் வரையிலும், கூட்டாண்மை அமைப்புகளுக்கு ரூ. 60 இலட்சம் வரையிலும் கடன் வழங்கப்படுகிறது.

1949 முதல் 1978 வரை 30 ஆண்டுக் காலத்தில் இந்நிறுவனம் வழங்கிய கடன் ரூ. 74.51 கோடி, 1979 முதல் 1985 மார்ச் வரை 6 ஆண்டுகளில் இந்நிறுவனம் வழங்கிய கடன் ரூ. 206.75 கோடி.

இந்த நிதி நிறுவனம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது.

கிராமப்புறங்களில் அதிக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தக் கருதிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் விவசாயத்தோடு இணைந்த தொழிலும், குறைந்த மூலதனத்தில், நிறைந்த வருவாயைத் தரக்கூடியதுமான, பட்டுத் தொழிலை நாடெங்கிலும் வளர்ச்சி அடையச் செய்யக் கருதியதன் விளைவாக 1979ஆம் ஆண்டில் தமிழக அரசு இத்தொழிலுக்கெனத் தனியாக ஓர் இயக்ககத்தை சேலத்தில் ஏற்படுத்தியுள்ளது. 1977ல் 15,382 ஏக்கர் பரப்பளவில் இருந்த பட்டு வளர்ப்புத் தொழில் 1986ல் 72,662 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டு 3.76 இலட்ச கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்து வருகிறது. தற்போது இந்தியாவில் பட்டுத்தொழிலில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது.

''பூம்புகார்'' என்ற பெயரில் வழங்கும் தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி நிறுவனம் கைத்தறிப் பொருட்களின் வளர்ச்சிக்கும், கைவினைஞர்களின் முன்னேற்றத்திற்கும் பேருதவி புரிந்து வருகிறது. கைவினைஞர்களுக்கு மூலப்பொருட்கள் வழங்குதல், நிதி, தொழில் நுண்ணறிவு வளர்ச்சி ஆகிய உதவிகளை வழங்குவேதோடு அவர்களின் பொருட்களை விற்பனை செய்வதற்கும் உதவி செய்து வருகிறது.

இவ்வாறு அரசு நிறுவனங்கள் சிறு தொழில் வளர்ச்சிக்குப் பல்வேறு வகைகளில் பணியாற்றி வருகின்றன. தமிழக மக்களுக்கு-குறிப்பாக, கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்கள் வாழ்வு வளம் பெறச் செய்வதைத் தனது முக்கிய நோக்கமாகத் தமிழக அரசு கொண்டுள்ளது. தமிழக அரசின் இந்த நோக்கம் வெற்றி பெறத் தமிழகத்தில் வாழும் மக்களும் பிற மாநிலங்களிலும் அயல்நாடுகளிலும் வாழும் தமிழ் மக்களும் தமிழக அரசு அளிக்கும் எல்லா உதவிகளையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டு தமிழகத்தில் தொழில் தொடங்கிட வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



அன்னை நாடு அடிமைப்பட்டுக்கிடந்த காலம்! ''வெள்ளையனே வெளியேறு'' என்று வீர முழக்கமிட்ட நேரம்!

'வந்தே மாதரம்' என்று தாய் நாட்டைக் காக்கப் போராடிய வேளை!

இலட்சக்கணக்கான மக்கள் விடுதலைப் போர்ப்பரணி பாடி அந்நியரின் அடக்குமுறை-தடியடி-சிறைவாசம் என்றெல்லாம் சந்தித்து ஆனந்த சுதந்திரம் மலர வழி வகுத்தார்கள்.

அன்று பல இன்னல்களுக்கும், கொடுமைகளுக்கும் ஆளாகி இன்றும் தியாக தீபங்களாக ஒளிவீசிக்கொண்டிருப்பவர்கள் பலர். அவர்களோடு வாழ்ந்து கொண்டிருக்கும் பேறுபெற்றவர்கள் நாம். அவர்களில் சிலரைச் சந்தித்தோம்:



# தியாக தீபங்கள்

## முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம்


**பெருந்தலைவர் காமராஜருடன் இணைந்து, சுதந்திரப் போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தடியடி, சிறைவாசம் என்று பல இன்னல்களை அனுபவித்த 89 வயதான முன்னாள் முதல்வர் திரு எம். பக்தவத்சலம் அவர்கள் அந்தக் கால நிகழ்ச்சிகளை நினைவு கூர்கிறார்:**

சிறு வயதிலிருந்தே தலைவர் காமராஜர் அவர்களுடன் தொடர்பு உண்டு. அவர் அவ்வப்போது கிராமங்களில் சுற்றிக் கொண்டிருப்பார்கள். அவரைப் பார்க்க முடியாமல் நான் திரும்பி விடுவேன்.

1930-ஆம் ஆண்டில் மதுரை மாநாட்டின்போது, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு நான் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பல ஆண்டுகள் செயலாளராகவும், பிறகு துணைத் தலைவராகவும் இருந்தேன்.

காங்கிரஸ் தலைவர்களில் தமிழ்நாட்டில் அதிகமாகச் சுற்றுப் பயணம் செய்தவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்கள். அவருடன் நான் 21 நாட்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றி வந்தேன். அப்போது ஒலிபெருக்கி இல்லாதகாலம். அவரது பேச்சை நானே மொழிபெயர்த்தேன்.

1932-ஆம் ஆண்டு ஜனவரி 21ந் தேதி, விடுதலை உறுதி மொழி எடுத்துக் கொள்ள சென்னை சௌகார் பஜாரில் ஊர் வலமாகப் போனோம். ஊர் வலத்தில் முத்துரங்க முதலியார், ஆதிகேசவ நாயக்கர் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஊர்வலத்தைப் போலீசார் தடுத்து விடுவார்கள்என்று அவர்களுக்குத் தெரியாமலேயே ஊர்வலத்தை நடத்திச் சென்றோம். பிறகு எப்படியோ போலீசாருக்குத் தெரிந்து விட்டது. அவர்கள் வேகமாக வந்து ஆவேசத்துடன் எங்களை அடித்தார்கள். சிறைக்கு அனுப்பினார்கள். தண்டனையும் கிடைத்தது.



காங்கிரசிலேயே தொடர்ந்து 65 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியிருக்கிறேன். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ள தமிழ்நாட்டிலிருந்து நானும், சத்தியமூர்த்தி, தலைவர் காமராஜர், முத்துரங்க முதலியார் ஆகியோரும் பம்பாய்க்குச் சென்றிருந்தோம். சத்தியமூர்த்தி வேறிடம் தங்க, நாங்கள் மூவரும் ஓரிடம் தங்கியிருந்தோம்.

மறுநாள் காலை, காந்தியடிகள் எங்களைப் பார்க்க வரச் சொன்னார். ஆனால் அதற்குள்ளாகவே அதாவது விடியற்காலையிலேயே காந்தியடிகளையும் மற்ற தலைவர்களையும் கைது செய்து விட்டார்கள். உடனே நாங்கள் டிக்கெட் எடுத்துக் கொண்டு சென்னை திரும்பினோம். குண்டக்கல் சென்றதும் ஆந்திரர் சிலரைக்

பார்களே என்று பயந்து அழுது கொண்டிருந்தேன். அங்கிருந்த ஒருவர் கதர்த் துண்டு கொடுக்க, அதை உடுத்திக் கொண்டு வீடு சென்றேன். அன்று முதல் கதர் உடுக்கத் தொடங்கினேன். நாடகக் கம்பெனிக்கு வர இதுவே காரணமாக அமைந்தது.

என்னுடைய தாயார் ஜோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர். அவர் சோதிடம் பார்க்கும் போது, ''இவன் படிக்க மாட்டான். இப்படித்தான் ஊர்சுற்றிக் கொண்டிருப்பான்; ஜெயிலுக்குக் கூடப் போவான்'' என்று சொன்னாராம். நானும் ஊர்வலம், பொதுக் கூட்டம் என்றெல்லாம் சென்று கொண்டிருந்ததால், டி.கே.எஸ். தாயார் திருமதி சீதையம்மாள் அதாவது எனது பாட்டி எங்கள் வீட்டுக்கு வந்து, 'இவனை நான் அழைத்துப் போகிறேன்' என்று



எம். எஸ். விஸ்வநாத தாஸ்

தன்னுடன் அழைத்துச் சென்றார். என்னைப் பார்த்ததும் திரு.டி.கே. முத்துசாமி ''இந்த வாலை ஏன் அழைச்சிகிட்டு வந்தே!'' என்றார். என் பாட்டி தான் நான் நாடக உலகில் பிரவேசிக்கக் காரணமாக இருந்தார்.

நாடகக் கம்பெனிக்கு வரும் போது கதர்க்குல்லா, காந்தி பாட்ஜ் அணிந்து கொண்டுதான் வந்தேன்.

அவ்வப்போது ஊர்வலம், கூட்டம் என்று நடக்கும்போது அதிலெல்லாம் தவறாமல் கலந்து கொள்வேன். பகத்சிங்கைத் தூக்கில் போட்டதற்கான கண்டனக் கூட்டம். தஞ்சை வெங்கட கிருஷ்ண பிள்ளை அவர்களின் தலைமையில் தடையை மீறி

## சுதந்திர தேவி துதி

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்,
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந் தெனை அழித்திட் டாலும்,
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!

நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்,
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துயர்ந் திட்டா ரேனும்,
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்!

—பாரதியார்

நடந்தது. அப்போது நான் நடிகனாக இருந்தேன். வயது 14.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பலர் கைதுசெய்யப்பட்டார்கள். நான் சிறுவன் ஆனதால் போலீசார் என்னை அடித்து விரட்டிவிட்டார்கள்.

1942 ஆகஸ்டுப் போராட்டம் சூடுபிடித்த நேரம், மதுரையில் எங்கள் நாடகம் நடந்து கொண்டிருந்தபோது அதற்குத் தடை விதிக்கப்பட்டது.

மில் துணிகள் விற்கும் கடைகளை மூடச்செய்து ஆர்ப்பாட்டம் செய்தோம். சௌந்தரபாண்டியன் பழக்கடைக்கு முன்னால் துப்பாக்கிப்பிரயோகம் நடந்தது. பலர் தடியடிக்கு உள்ளானார்கள். என்னை நடிகன் என்று இப்போதும் விட்டு விட்டார்கள்! சிறைக்குப் போக வேண்டும் என்று எவ்வளவோ முயன்றும் சிறு பையன், நடிகன் என்று காரணம் காட்டி விட்டு விட்டது எனக்கு வருத்தமாகவே இருந்தது.

1939-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். ரகசிய சுற்றறிக்கைகளை எடுத்துக்கொண்டு கால் நடையாகவே வந்து,ஊர் ஊராகக் கொடுப்பார்கள். அப்படிக் கொடுத்ததை நான் திருப்பூரில் விநியோகம் செய்தேன், போலீசுக்குத் தெரியாமல்!

நாகர்கோவிலில் உள்ள கழுவன் தட்டு என்னுமிடத்தில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் மகாத்மா காந்தியடிகள் பேசினார். அந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன்.

சுதந்திரப் போராட்டத்தில் நடிகர்கள் அதிகமாகக் கலந்து கொண்டாலும், ஒரு சிலரே கைது செய்யப்பட்டார்கள். மற்றவர்கள் பயமுறுத்தி அல்லது அடித்து விடப்பட்டார்கள்.

அந்தக் காலத்தில், விஸ்வநாத தாஸ், எம்.ஜி.நடராஜப்பிள்ளை, ராஜா சண்முகதாஸ், வாசுதேவ நாயர், கே.பி. ஜானகி அம்மாள் ஆகிய நடிகர்கள் மேடை நாடகங்களில் சுதந்திரப் பாடல்களைப் பாடுவார்கள். போலீசார் வந்து கைது செய்வார்கள். இப்படி எதற்கும் அஞ்சாமல் அடக்குமுறை மிகுந்திருந்த அந்தக் காலத்தில் துணிச்சலுடன் வெள்ளையருக்கு எதிராகப் பாட்டுப்பாடி மக்களைச் சுதந்திர உணர்ச்சி கொள்ளுமாறு தூண்டினார்கள்.

நானும்,'கதரின் வெற்றி', 'தேச பக்தி' முதலான நாடகங்களில் பபூனாகத் தோன்றி விடுதலைப் பாடல்களைப் பாடியிருக்கிறேன்.

பேட்டி: பி.வி.கிரி



# விடுதலை இயக்கப் பாடல்கள்

இங்கிலாந்துக்கும் கிழக்குநாடுகளுக்கும் இடையே வியாபாரத் தொடர்பைஏற்படுத்திக் கொள்வதற்காக - இங்கிலாந்து மன்னர், முதலாவது ஜேம்ஸின் பிரதிநிதியாக சர் தாமஸ் ரோ என்னும் ஆங்கிலேயர் 1615 செப்டம்பர் திங்களில் இந்தியாவுக்கு வருகை புரிந்தார்.

அந்நாளில் இந்தியாவை ஆட்சி செய்து வந்த மொகலாய மன்னரான ஜஹாங்கீரைச் சந்தித்து, வியாபாரத்துக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொண்டார். வியாபாரத்தைப் பெருகச் செய்ததுடன் கிழக்கிந்தியக் கம்பெனி என்னும் நிறுவனம் அமைவதற்குரிய வலுவான அடித்தளத்தையும் உருவாக்கினார் ரோ.

அவருக்குப் பின்னர் இங்கிலாந்து நாட்டைச் சார்ந்த வியாபாரிகள் பலர், ஒவ்வொருராக இந்தியாவுக்கு வந்து சென்றனர்.

ஔரங்கசீப்பின் காலத்தில் வந்த ஜாப் கார்னாக் என்னும் ஆங்கிலேயர், வங்க மாநிலத்தில் கல்கத்தாவில் ஹுக்ளி நதிக்கரையில் 1690 ஆகஸ்டு 24 அன்று ஆங்கிலேயர்களின் கொடியை முதன் முதலில் பறக்கவிட்டு தங்களது வளர்ச்சிக்கு வழி வகுத்தார்.

பின்னர் வந்த ஆங்கிலேய அதிகாரிகள் கவர்னர் ஜெனரல்கள் வைஸ்ராய்கள் என்ற பெயரில் இந்தியாவுக்குள் நுழைந்தனர். இங்குள்ள குறுநில மன்னர்களிடையே இருந்த ஒற்றுமைக் குறைவைப் பயன்படுத்தி அவர்களுக்குள்ளே நடைபெற்ற போர்களில் தலையிட்டு ஒரு பகுதியினருக்கு உதவி செய்வதாகச் சொல்லி, அவர்கள் இந்திய மண்ணில் வேரூன்றத் தலைப்பட்டனர்; நிலங்களைச் சம்பாதித்துக் கொண்டனர். கொஞ்சம் கொஞ்சமாக இந்திய நாட்டை இங்கிலாந்து நாட்டுக்கு உரிமையுடையதாக்கி விட்டனர். இதன் காரணமாக இந்திய மக்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு அடிமை ஆகினர்.

மற்ற வல்லரசுகளுடன் ஆங்கிலேயர்கள் போர் தொடுத்த காலத்தில் எல்லாம் இந்தியாவும் இந்தியர்களும் அதில் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் 1885-ல் இந்தியர்களின் நலனுக்காக எழுந்தது இந்திய தேசிய காங்கிரஸ், தொடக்கத்தில், 'இந்தியர்களுக்கு அரசாங்கத்தில் அலுவல் தரப்பட வேண்டும்' என்பதுதான் இந்த இயக்கத்தின் கொள்கையாக இருந்தாலும், நாளடைவில் இயக்கம் வளர்ச்சி பெற்று 'இந்திய நாட்டின் விடுதலைதான் தனது குறிக்கோள்' என்ற கொள்கையை ஏற்படுத்திக் கொண்டது.

கோபாலகிருஷ்ண கோகலே, தாதாபாய் நௌரோஜி, பால கங்காதர திலகர் போன்ற பெரும் பெருந் தலைவர்கள் எல்லாம் இந்த இயக்கத்தில் கலந்து கொண்டனர். பின்னர் அண்ணல் காந்தியடிகள் இந்த இயக்கத்தில் ஈடுபட்டார். அவரது ஈடுபாட்டுக்குப் பின்னர் இயக்கம் வலுவடைந்தது. தன்னல மறுப்பும், அகிம்சையும் அவரது ஆயுதங்களாக மாறின. அதன் காரணமாக காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை இந்திய மக்கள் அனைவரின் இதயத்திலும் காந்தியடிகள் இடம் பெற்றார். மகாத்மா என்ற சிறப்புப் பெயரையும் மக்கள் அவருக்கு வழங்கினர்.

நாடெங்கும் தேசிய உணர்ச்சி பெருக்கெடுத்ததால்- ஆங்கில அரசு - அடக்குமுறையை அவிழ்த்து விட்டது. தடியடிப் பிரயோகம் - காட்டு தர்பார் - சிறையில் தள்ளுதல் -அராஜக நிகழ்ச்சிகள் -நூற்றுக் கணக்கானோரைத் துப்பாக்கிக்கு இரையாக்குதல் - இப்படிப் பலப்பல அநியாயங்களை ஆங்கில அரசு கட்டவிழ்த்து விட்டது. 'ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன ' என்று எண்ணியிருந்த- சாதாரணப் பொதுமக்களின் நெஞ்சத்தில் கூட விடுதலை உணர்ச்சி வீறிட்டெழச் செய்தது.

அரசியல் களத்தில் மட்டுமல்ல கலை, இலக்கிய மேடைகளிலும் காந்தியடிகளின் கொள்கைகள் முழங்கின. அண்ணல் ஏற்படுத்திய சுதந்திர உணர்ச்சி நாடக மேடைகளிலும் ஒலித்தது. நாடகத்தில் பங்கு கொண்ட கலைஞர்கள் - தேசீய உணர்ச்சி மிக்க பாடல்களையும் காந்தியடிகளின் புகழ் பாடும் பாடல்களையும் அவ்வப்போது ஆர்வத்துடன் பாடி வந்தார்கள். பொதுமக்களும், நாடக ரசிகர்களும் அந்தப் பாடல்களை விரும்பி வரவேற்றுப் போற்றினார்கள். அது மட்டுமல்ல, ''தேசியப் பாடல் பாடுக''என்று கலைஞர்களிடம் வேண்டுகோளையும் விடுத்தனர். நாடக நடிகர் - புராணப் பாத்திரத்தை ஏற்றிருந்தாலும் சரி, அது குறித்துக் கவலை கொள்ளாமல், மகாத்மாவைப் பற்றியும் கதர் இயக்கத்தைப் பற்றியும் மணிக்குர

வில் பாடி, மக்களின் மனக்குமுறலுக்கு இத மளித்து வந்தனர்.

போராட்டங்களில் ஈடுபட்ட அரசியல் வாதிகளை மட்டுமல்ல - தேசியப் பாடல் பாடியவரையும் கைது செய்து, சிறையில் அடைத்தது அந்நிய அரசு. இந்தத் துன்பத்தை எல்லாம் பொருட்படுத்தாமல் - நாட்டுக்காகப் பாடுபட்ட பாடகர்கள் - நடிகர்கள் மிகப் பலர். இந்திய விடுதலை வேள்வியில் நாடகக் கலைஞர்கள் ஆற்றிய பங்கும் குறிப்பிடத் தக்கது என்பதை மறந்துவிட முடியாது.

அத்தகைய கலைஞர்கள் பாடிய ஒரு சில பாடல்கள் 1933-ல் இசைத்தட்டுகளாக வும் வந்துள்ளன. இன்றைய தலைமுறை யினர் இந்தப் பாடல்களைத் தெரிந்துகொள் வது அவசியம் என்பதால் ஒரு சிலரின் பாடல் களை, இந்திய நாட்டின் 40வது விடுதலை நாளையொட்டி வெளியிட்டுப் பெருமை கொள்கிறது 'தமிழரசு'.

---

பல்லவி

கதர் கப்பல் கொடி தோணுதே
கரம்சந்த்ர மோகனதாஸ் காந்தி இந்தியா சுதேச (கதர்)

அனுபல்லவி

அதற்கப்பால் ஞானாகாசம்
அதிலே பாரத வாசம்
இதற்குள் சிவப்ரகாசம்
இனி நமக்குச் சந்தோஷம் (கதர்)

சரணம்


மானிட சிப்பிக்குள்ளே
மகாத்மா ஓர் முத்துப்போலே
ஞானவடிவம் கொண்டு
நம்மைக் காக்க வந்ததாலே

லௌகீகம் விட்டால்
வைதீகம் பெற்றால்
மெய்தேசம் நாம்
நன்றாய்க் கொள்வோம் நாகரீகம் (கதர்)

பஞ்சத்தைப் பஞ்சால் வெல்வோம்
படையை உடையால் கொல்வோம்
வஞ்சத்தை விட்டகல்வோம்
மார்க்கத்திலே முயல்வோம்

மறை நேர்க்கும் இந்த
முறையேற்கும் மகாத்மா
உரைகாக்கும் நம்
மறைமக்கள் மானங் காக்கும் (கதர்)

பாடியவர் : எஸ். எஸ். விஸ்வநாததாஸ்



காந்தியோ பரம
கடவுளின் ப்ரதிநிதி
சாந்த நெசவுவில
சமத்துவச் சுதந்திரம்

ஏழைச்சந் யாசி
யான விஸ்வாசி
சாயச் சுதேசி
தருமுபன் யாசி (கா)

தாழ்ந்த சோதரரின்
தரணியி லவதாரஞ்
ஆழ்ந்த கருத்துடைய
அடிமை யகற்றவந்தார்

தாய் தந்தை போலே
செய்தாரிக் காலே
ராட்டினத் தாலே
அன்பாய் முன்னாலே (கா)

மாசிலாத அவர்
மடமைச் சாதிவித்யாச
கூசிடாம வன்பு
கொடிய பஞ்சப்பிணியைக்

மார்க்கத்திற் சேர்வோம்
மாச்சர்யந் தீர்வோம்
கொண்டின்பம் ஆர்வோம்
கொன்றின்பஞ் சார்வோம்! (கா)

பாடியவர் : கே. பி. சுந்தராம்பாள்



---

பல்லவி

தாழ்த்தப்பட்ட சோதரரைத் தாங்குவாருண்டோ
தாங்குவாருண்டோ மண்ணில் ஓங்குவாருண்டோ (தா)

அனுபல்லவி

வீழ்த்தப்பட்டு வாடுகின்றார் வெம்பியே திண்டாடுகின்றார்
பாழ்த்த மனப் பாவியர்செய் பாதகத்தாலே
பாதகத்தாலே இந்த மேதினிமேலே (தா)


தொகையறா

இருக்கவும் இடமில்லை நிற்கவும் நிழலில்லை
என நொந்து வாடியழுறார்
இல்லமொன்றில்லாது அல்லலே வடிவமாய்
ஏங்கியே ஏங்கி விழுறார்
நெருக்கவும் பண்ணையார் குடிக்கவும் நீரின்றி
நீட்டுரத்தால் கதறுறார்—கொஞ்சம்
நெஞ்சிரக்க மற்ற வஞ்சகக் கொடியரை
நினைந்துதான் பதறுறார்
சுருக்கவும் உடம்பினைப் பெருக்கவும் வியர்வைநீர்
கஷ்டக் கண்ணீர் வடிக்கிறார்—அவர்கள்
காலமெல்லா முழைத்திங்கு கூலி பெறமாட்டாது
கலங்கி நித்தமுந் துடிக்கிறார்
இருக்கவும் பொறிகள்போல் அடக்கவும் உணர்வினை
தீயவர்களால் நலிகிறார்
செத்திடவு மொண்ணாது நித்தமு மடிமைகளாய்
தீண்டாமையால் நலிகிறார்

அனுபல்லவி எடுப்பு

பன்றுப் பறையரென்றும் பாமரரைக் காக்கவுன்றும்
கொன்கையிலும் புண்ணியந்தான் குவலயமீது
குவலயமீது வேறு கூறுவீரேது (தாழ்)

பாடியவர் : எஸ். எஸ். விஸ்வநாததாஸ்







நாட்டுப்பருத்தியை
நாகரீகமான
வீட்டிற் கொருவராய்
விரைந்து சுழன்றுநின்

வித்து நீக்கி—நல்ல
பஞ்சண்டாக்கி—நாம்
மேற்கு நோக்கி—நன்றாய்
நாடுராட்டே—மகிழ்ந்

நாடு ராட்டே மகிழ்ந்
ஆட்சியைக் கண்டோமென்

நாடுராட்டே—சுய
நாடுராட்டே

கைத்தொழில் யாவையும்
கேட்டாலெவர் தான்
கீளர்த்தி யுணர்த்திநின்

பறித்துப்போட்டார்—இதை
நகைக்கமாட்டார்—நன்றாய்
நாடுராட்டே

ஆடுராட்டே மகிழ்ந்
ஆட்சியைக் கண்டோமென்

நாடுராட்டே—சுய
நாடுராட்டே

இந்து முஸ்லீம் மக்கள்
இனிய தமிழ் பாஸ்கர
ஜெயமே அடைந்தோமென்
ஆட்சியைக் கண்டோமென்

ஒன்றுகூடி—காந்தி
கீதம் பாடி—
நாடுராட்டே—சுய
நாடுராட்டே!

பாடியவர் : எஸ். ஆர். ராமாமணிபாய்

இராகம் : காபி                தாளம் : ஆதி

பல்லவி

ராட்டினமே நம்மைக் காக்கும்
காந்தீஸ்வரனும்-நானும்
ப்ரமாணம்—சுதேசிய (ரா)


அனுபல்லவி

நாட்டிற் கதர் வேலை நன்றாய்க் கட்டுவோம்
குட்டிநற் கங்கணம்
குணம்—நாகரீக (ரா)

சரணம்

வீட்டிற்கு வீடிது
மீட்சி பெறத் தூண்டுமே
ஆட்சி தமிழ் பாடுமே
மெய்யாக வேண்டுமே
பாஸ்கரன்
மிக முழங்கிடும் (ரா)

பாடியவர் : டி. ராமானுஜ அய்யங்கார்



## திரட்டு

—தமிழ்ப்பித்தன்

சத்யமெங்கு மேதளரா நாடு—இந்து
தேசமதைப் புகழ்ந்து பாடு—இது
வித்யானுகூலமுள்ள நாடு—இதில்
விளையுமல்லவோ சொர்ண மேடு (சத்ய)

கைத்தொழிலை விருத்திசெய்ய வாதா—இந்த
கன்னியரி யந்த்ரமென்ன தோதா—உள்ள
புத்தியும் நமக்குப்போ தாதா—காந்தி
போதனை நமக்குவொண் ணாதா (சத்ய)

மங்கள முடிக்கும் மனத் தலைவா—பிர்மன்
முடிச்சு அன்னிய நூலின் விளைவா—அது
மங்கையர் கழுத்தில் வந்து விழவா—அதற்கு
மாங்கல்யமென்ற பெயருந் தரவா (சத்ய)

பாடியவர் : மதுரை எம். கண்ணம்மாள்

ராஜி உடன் படிக்கை
முக்ய நட வடிக்கை
தேச குடி படைக்கே
நன்மை தரும் படிக்கே

தொகையரா

வைசிராயின் மாளிகையில்
வார்த்தை பேசிய நேர்த்தியாம் (ராஜி)

சாந்த மிகுந்த காந்தி வகுத்த
சாத்விக சட்ட மறுப்பையும்

நடுக்கும் சர்க்கார்
அடக்கு முறையின்

...ாண்டவத்தையும் நிறுத்தியே
...டப்பு வரி யொழித்தார்
...ப்பியது மதித்தார்—அதிகார வர்க்கம்
...ாங்கிரஸைத் தாங்கி நின்ற
...கைதிகளை விடுவித்தனர் (ராஜி)

பாடியவர் : பி. எஸ். சிவபாக்கியம்



# கோவலன் கைது!

சென்னை ஒற்றவாடை தியேட்டரில் 1922ஆம் ஆண்டு ஒருநாள், கோவலன் நாடகம் நடந்து கொண்டிருந்தது. ஒரே மக்கள் கூட்டம்! தியேட்டருக்கு உள்ளேயும் வெளியேயும் போலீஸ் பட்டாளம். நாடகத்தில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடிந்தது. ''பஞ்சாப் படுகொலையைப் பற்றி பாட்டுப்பாடு'' என்று மக்கள் குரல் கொடுத்தனர். திரை விழுந்தது. கோவலன் மேடையில் தோன்றினான்.

'போலீஸ் புலிக்கூட்டம்-
-நம்மீது
போட்டுவருது கண்ணோட்டம்'

என்ற பாட்டைக் கோவலன் பாடினான். மக்களின் கரமுழக்கம் இடியோசை போல் கேட்டது. போலீஸ் அதிகாரி மேடைக்குத் தாவினார். கோவலனை முறைத்துப் பார்த்து, ''தேசியப் பாட்டுப் பாடக் கூடாது'' என்றார். மணி அடித்தது. திரை விலகியது. கோவலன், மாதவியின் நாட்டியம் கண்டு மையல் கொண்டார். திரைவிழுந்தது. மீண்டும் கோவலன் மேடையில் தோன்றினார்.

''பஞ்சாப் படுகொலை
பாரில் கொடியது
டயர் மட மட்டி செயல்''

என்று உரத்த குரலில் கோவலன் பாடினார். வரிக்கு வரி மக்கள் கர முழக்கம் செய்தார்கள். நாடகம் முடிந்ததும். கோவலன் கைது செய்யப்பட்டார்.

காரைக்குடி சண்முகவிலாஸ் தியேட்டரில் ஹரிச்சந்திரன் நாடகம் நடந்தது. முதல் சீன்முடிந்ததும் ஹரிச்சந்திரன் மேடையில் தோன்றினார்.

''கதர்கப்பல் கொடி தோணுதே
கரம் சந்திர மோகன்தாஸ்
காந்தி
இந்திய சுதேசி கதர் கப்பல்
கொடி எங்கும் தோணுதே''

என்று ஹரிச்சந்திரன் பாடினார். அவர் பாடி முடித்ததும் போலீஸ் மேடை மீது ஏறியது.

'' கைது செய்திருக்கிறோம்'''

''யாரை?''

''உம்மை....''

''தற்சமயம் ஹரிச்சந்திரன் தான் இருக்கிறார். நாடகம் முடிந்ததும் என்னைப் பார்க்கலாம்.''

இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த மக்கள் துள்ளிக் குதித்து கோஷமிடக் கேட்கவா வேண்டும்? நாடகம் முடிந்ததும் ஹரிச்சந்திரன் கைது செய்யப்பட்டார்.

திண்டுக்கல்லில் வள்ளித் திருமணம் நாடகம் நடந்தது. சென்னையில் கோவலனாகவும், காரைக்குடியில் ஹரிச்சந்திரனாகவும் தோன்றியவர் திண்டுக்கல்லில் முருகனாகத் தோன்றினார். முருகன் தேசியப் பாடல்கள் பாடினால் கைது செய்ய வாரண்டோடு போலீஸ் அதிகாரிகள் காத்துக் கொண்டிருந்தனர்.

''தாழ்த்தப்பட்ட சோதரரை
தாங்குவாருண்டோ ''

என்று தீண்டாமை ஒழிப்புப் பாட்டுபாடி முருகன் வள்ளியைக் கைப்பிடித்தார். உடனே போலீஸ் அதிகாரி மேடைக்கு வந்து, ''ஓய் நீர் என்ன பாடுகிறீர்? தேசியப் பாடலா? நாடகப் பாடலா? கொஞ்சம் ஏறிப்பாடும்'' என்றார். ''அடுத்தசீன் முடிந்ததும் பாடுகிற பாடலை ஏறிப்பாடுகிறேன்'' என்றார் முருகன். அடுத்த சீன் எப்பொது முடியுமென்று போலீஸ் அதிகாரிகளும் பொது மக்களும் ஆவலாடு எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

சீன் முடிந்ததும் முருகன் வந்தார். ''மகா ஜனங்களே இதற்கு முன்னால் நான் பாடிய பாட்டு என்ன பாட்டு என்று தெரியவில்லை என்றும், ஏறிப் பாட வேண்டுமென்றும் போலீஸ் அதிகாரி கேட்டுக்கொண்டார். ஒரு வேளை நான் பாடுகிற பாட்டு லண்டனுக்குக் கேட்க வேண்டும் என்று நினைக்கிறார்கள் போலும். நான் ஏறிப் பாடுகிறேன்''என்று முருகன், ஒரு குட்டிப் பிரசங்கம் அடித்துவிட்டு மேடையில் ஊன்றி இருந்த மூங்கில் கம்பத்தில் மளமளவென்று பாதிதூரம் ஏறி ''அதிகாரி அவர்களே, இவ்வளவு தூரம் ஏறிப் பாடினால் போதுமா இல்லை கூரைக்கே ஏறிப் பாடட்டுமா?'' என்று கேட்டார். போலீஸ் அதிகாரிக்கு முகம் கறுத்துப் போய்விட்டது. மன்றத்தில் பலத்த சிரிப்பொலி!

''கொடுப்பது எப்போது
சொல்வீர்-சுயராஜ்யம்
கொடுப்பது எப்போது
சொல்வீர்''

என்று மூங்கில் கம்பத்தில் ஏறிய முருகன் பாடினார். அந்தப் பாட்டோடு நாடகம் நின்றது. முருகன் சிறை ஏகினார்!

இங்ஙனம் நகரங்கள் தோறும் நடந்த நாடகத்தில் கைது செய்

கைது செய்து ரயிலில் ஏற்றி னார்கள்.

நாங்கள் எல்லாரும் ஒரே பெட்டியில் பயணம் செய்தோம். அப்போது தலைவர் காமராஜர் அவர்கள் சொன்னார்—

''திடீரென்று நம்மையெல்லாம் கைது செய்துவிட்டால் இயக்கம் என்னாவது? கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்று. அப்படியே கடவுள் காப்பாற்றி, 1947-ல் சுதந்திரம் அடைந்தோம்.

தலைவர் காமராஜர் அவர்கள் அரக்கோணத்தில் இறங்கிக் கொண்டார்கள். நானும், முத்துரங்க முதலியாரும் சென்ட்ரலை அடைந்தபோது அங்கே கைது செய்யப்பட்டோம். பிறகு வேனில் ஏற்றிச் சென்று நுங்கம்பாக்கம் போலீஸ் ஸ்டேஷனில் அன்றைய இரவு வைத்திருந்தார்கள். மறு நாள் காலை பெரம்பூருக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து ரயில் மூலம் வேலூர் சிறைக்கு அனுப்பினார்கள். அங்கிருந்து ஒரு வாரத்திற்குள் எங்களை நாகபுரியிலிருந்து 100 மைல்களுக்கப்பாலுள்ள அமராவதி சிறைக்குக்கொண்டு போனார்கள். அங்கே நான் இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் இருந்தேன்.

முத்துரங்க முதலியாரும், சத்தியமூர்த்தியும் வெள்ளை மருத்துவ அதிகாரியின் வற்புறுத்தலின் பேரில் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டார்கள். சத்தியமூர்த்தி அகால மரணம் அடைந்தது சிறைவாசத்தால் தான்.

1944 கடைசியில் நான் வேலூருக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு நாள் விடுதலை செய்யப்பட்டேன். பிறகு தொடர்ந்து காங்கிரசில் ஈடுபட்டிருந்தேன்.

காங்கிரஸ் கேட்டபடி, சுதந்திர அரசு முடிவு செய்த பிறகு, 1946-ல் அமைக்கப்பட்ட அரசில் நான் ஒரு அமைச்சரானேன். 1967 வரை அமைச்சராக இருந்து பின்னால் காங்கிரஸ் பணியில் ஈடுபட்டேன்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, சுதந்திர ஆட்சியிலும் கலந்து கொண்டது எனக்கு ஏற்பட்ட அரிய வாய்ப்பு.

**தமிழ்நாட்டை வேறுகட்சி ஆண்டாலும், பெரிய ஜனநாயகம் நடைபெறுகிறது என்ற பெருமிதம் எனக்கு எப்போதும் உண்டு.**



## திரு கே. பெருமாள் உடையார்

**அண்ணல் காந்தியடிகள் ஆசி பெற்று தனிப்பட்ட சத்தியாக்கிரகம் செய்து தடியடி, கசையடி, சிறைவாசம் என்று பல துன்பங்களை அனுபவித்தவர் திரு கே. பெருமாள் உடையார் அவர்கள். அவருக்கு வயது 70. அவர் சுதந்திரப் போராட்ட காலத்தில் ஏற்பட்ட தம் அனுபவங்களைப் பெருமிதத்துடன் கூறுகிறார்:**

மகாத்மா காந்தி அவர்கள், இந்தி பிரச்சார சபா வெள்ளி விழாவில் கலந்து கொள்ள இரண்டு நாள் சென்னையில் தங்கியிருந்தார். இதுவே காந்தியடிகள் கடைசியாகத் தமிழ்நாட்டுக்கு வருகை தந்தது. அந்தச் சமயத்தில் அவருக்கு நான் பணிவிடை புரியும் தொண்டனாக இருக்கும் பேறு பெற்றேன்.



'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டத்தில் - தனிப்பட்ட சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள வேண்டுமானால் காந்தியடிகளின் ஆசி பெற வேண்டும். அதற்குத் தக்களியால் நூல் நூற்க வேண்டும். நூல் அறுபடாமல், பொறுமையாக யார் நூல் நூற்றுத் தருகிறார்களோ அவர்களே சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்ள முடியும். அதாவது பொறுமையும் திறமையும் சோதிக்கவே இந்தத் தக்களி நூற்பு. அதன்படி நான் தக்களியால் நூல் நூற்று காங்கிரஸ் கமிட்டியில் நூலைச் சேர்ப்பித்தேன். இதுபோல் பலர் நூலைத் தந்தார்கள். நூல் நூற்பவர்களின் பட்டியலை காந்தியடிகளுக்கு அனுப்பினார்கள். இரண்டாவது பட்டியலில் என் பெயர் இடம் பெற்றிருந்தது. அதில் காந்தியடிகள் கையெழுத்திட்டிருந்தார்கள். இது 1944-ல் நடந்தது.

பிறகு சென்னை மீர்சாகிப் பேட்டையில் உள்ள செல்வ விநாயகர் கோயிலின் முன் சத்தியாக்கிரகம் செய்தேன். ஸ்மாலர் துரை என்பவர் என்னைக் கைது செய்தார். மூன்று மாதம் சிறைத் தண்டனை கிடைத்தது.

சிறையில் முன்னாள் முதல்வர் எம். பக்தவத்சலம் சி. என். முத்துரங்க முதலியார், சர்தார் ஆதிகேசவநாயக்கர் முதலானோர் உடன் இருந்தார்கள்.

சிறையிலிருந்து விடுதலைக்குப் பிறகு 15 நாட்கள் கழித்து சென்னை கிருஷ்ணாம்பேட்டையில் சத்தியாக்கிரகம் செய்து, ஒன்பது மாதம் சிறைத்தண்டனை பெற்று, முதலில் சென்னை மத்திய சிறைச்சாலையிலும் பிறகு பெல்லாரியில் உள்ள சிறையிலும், அதன் பிறகு அலிப்புரம் சிறையிலும், இருந்தேன். இந்தச் சிறையில் 5,000 போராட்ட வீரர்கள் இருந்தார்கள். அவர்கள் தமிழ்நாடு, பாண்டிச்சேரி, கேரளம், கர்நாடகத்தைச் சேர்ந்தவர்கள்.

*1942 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 15.*

'வெள்ளையனே வெளியேறு' என்ற போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

காங்கிரஸ் தீர்மானங்களைத் தமிழ்நாட்டில் விநியோகிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி கோயில் தெருவிலுள்ள திரு ஆர். கணேசன், திரு. ஆர். பாலன் ஆகியோர் வீட்டில் இரவு 3 மணிக்கு நடந்தது. கூட்டத்தில் ம.பொ. சிவஞானம், கே. சடகோப ஐயங்கார், என். எஸ். வரதாச்சாரி, இன்ஜினியர் சங்கர் முதலான 15 பேர் கலந்து கொண்டனர். தமிழ்நாடு முழுக்க பிரசுரங்களையும், செலவுக்குப் பணத்தையும் விநியோகிப்பது என்றும், அதற்குத் தகுதியான ஒருவரைத் தேர்ந்தெடுப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. எல்லாருடைய ஆலோசனைக்குப் பிறகு என்னையே தேர்ந்தெடுத்தார்கள். திரு ஏ. என். சிவராமன் அவர்கள் நிறையப் பிரசுரங்களை தந்தார்கள்.

பிரசுரங்கள், பணம் விநியோகிக்க, நானும், அரவங்காடு வெடி மருந்து தொழிற்சாலையைஅழிக்கும் வேலையில் திரு என். எஸ். வரதாச்சாரியும் பொறுப்பு ஏற்றோம்.



சென்னையில் பொழுது விடிவதற்கு முன்பே சைக்கிளில்சென்று கூட்டம் போட்டுப் பேசினேன். தொண்டர்களைத் திரட்டினேன், உற்சாகமூட்டினேன்.

பிறகு கோயம்புத்தூர் சென்றேன். பல இடங்களில் தங்கிப் பிரசுரங்களை விநியோகித்தேன். கரூர் சென்றபோதுதான் போலீசார் என்னைக் கைது செய்யும் சூழ்நிலை உருவானது. பழனி லட்சுமிராஜாவிடம் கூடிக் கலந்து பேசியபிறகு மதுரை வந்து அங்கு பாரதி பிரஸ்ஸில் தங்கியிருந்தேன். இதற்கிடையில் என் புகைப் படத்தை 'இந்து' பத்திரிகையில் வெளியிட்டு என் அங்க அடையாளங்களையும் குறிப்பிட்டுக் கைது செய்யும்படி செய்தி வெளியிட்டிருந்தார்கள்.

மதுரையில் டீச்சட்டி கோவிந்தன் என்பவர் அப்போது சர்க்கின் இன்ஸ்பெக்டராக இருந்தார். அவர் மீது திராவகம் வீசிய சம்பவம் காரணமாக மதுரையே பரபரப்பில் ஆழ்ந்திருந்தது. இந்தச் சமயம் லட்சுமி பாய், சொர்ணத்தம்மாள் இரு பெண்மணிகள் திருமலை மகால் முன்பு சத்தியாக்கிரகம் செய்த போது கைது செய்யப்பட்டு நிர்வாணமாக்கிக் கொடுமை செய்தார்கள். அதைக் கேள்விப்பட்ட எனக்கு நெஞ்சம் கொதித்தது. இந்தக் காட்டுமிராண்டிச் செயலைக் கண்டிக்கத் துடித்தேன். என்ன வந்தாலும் வரட்டும் என்று துணிச்சலுடன் காரியத்தில் இறங்கினேன்.

திருப்பரங்குன்றம் கோர்ட்டுக்கு முன்னே சென்று 'வந்தே மாதரம்' 'வெள்ளையனே வெளியேறு' என்று முழங்கினேன். கோர்ட்டில் ஒரே பரபரப்பு. அப்போது கோர்ட்டில் ஒரு முக்கியமான வழக்கு நடந்துகொண்டிருந்தது. என்னுடைய முழக்கத்தைக் கேட்ட நீதிபதி உடனே போலீசாரைக் கூப்பிட்டு 24 கசையடி கொடுக்கும்படி உத்தரவிட்டார். போலீசார் உடனே ஓடி வந்தார்கள். கோர்ட்டுக்கு முன்னே என்னை நிற்க வைத்து 24 கசையடி அடித்தார்கள். நான் மயங்கி விழுந்தேன். பிறகு என்னை வேனில் ஏற்றி மதுரை போலீஸ்ஸ்டேஷனுக்குக்கொண்டு சென்றார்கள். அங்கேயும் என்னை அடித்தார்கள். குடிக்க தண்ணீர் கேட்டபோது சிறுநீரைக் கொடுத்தார்கள். என்மீது இரக்கம் கொண்ட ஒரு போலீஸ்காரர் யாருக்கும் தெரியாமல் தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார்.

அன்று இரவு 12 மணிக்கு என்னை வேனில் ஏற்றி புளியங்குளம் பக்கத்தில் உள்ள ஒரு காட்டிற்குக் கொண்டுபோய், நிர்வாணமாக்கி மூர்ச்சையாகும் வரை அடித்துப் போட்டுவிட்டுச் சென்று விட்டார்கள்.

பிறகு எப்படியோ ஊர்ப்பக்கம் சென்று, மதுரை கருவேப்பிலைக்காரத்தெரு குஸ்திப் பள்ளியில் ஓய்வு எடுத்தேன். 15 நாள் கழிந்தது. ஒரு நாள் இரவு நான் கைது செய்யப்பட்டேன். முதலில் மதுரை சிறைவாசம். பிறகு வேலூர் சிறை. அங்கு ரகளை ஏற்படவே கேரளாவில் உள்ள கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டேன். ஓராண்டு அங்கிருந்தேன். பிறகு தஞ்சை கேம்ப் ஜெயிலில் அடைக்கப்பட்டேன். இங்கு எல்லாத் தலைவர்களும் இருந்தனர். சுமார் 6,000 விடுதலை வீரர்கள் இருந்தனர்.

காந்தியடிகளின் தலைமையில் லட்சக்கணக்கான தொண்டர்கள் புரிந்த இந்த வீரப்போர், வீண் போகவில்லை. 'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று' என்று பாடிய பாரதியின் வாக்கு பொய்க்கவில்லையே!





## திரு டி.என். சிவதாணு

**'நாடகத்துறைக்கு வருவதற்குக் காரணமாக அமைந்தது சுதந்திர வேட்கையே' என்று பெருமிதத்துடன் கூறுகிறார், பழம்பெரும் நடிகர் திரு டி. என் சிவதாணு அவர்கள். அவருக்கு வயது 68. அவர், தம் இளமைக்கால நினைவுகளை நம்முடன் பகிர்ந்து கொள்கிறார்:**

நாகர்கோவிலில் நான் 4வது வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்போது முத்துசாமிப் பிள்ளை, ரங்கநாதம் பிள்ளை முதலான பெரியவர்கள் நூல் நூற்றல், காந்தி பஜனைப் பாடல்கள், சத்தியாக்கிரகம் பற்றியெல்லாம் சொல்வார்கள். சிறுவர்களான நாங்கள் அவற்றையெல்லாம் உன்னிப்பாகக் கேட்போம். அதுமுதல் எனக்கு சுதந்திர தாகம் ஏற்பட்டது. படிப்பில் வேகம் ஏற்படவில்லை.

மகாத்மா காந்தியடிகள் கைது செய்யப்பட்டதைக் கண்டிக்கும் வகையில் நாகர்கோவில் பெரிய ஊர்வலம் ஒன்று நடந்தது. அதில் நானும் உற்சாகமாகக் கலந்து கொண்டேன்.

ஒரு சமயம் இங்குள்ள நகர சபை மைதானத்தில் அந்நியத் துணி பகிஷ்காரம் நடந்தது. அந்தப் போராட்டத்தில் எம்.வி. நாயுடு, செய்குத்தம்பிப்பாவலர், முத்துக்கருப்ப பிள்ளை முதலானோர் கலந்து கொண்டு பேசினார்கள். நானும் அங்கே சென்று உணர்ச்சிமிக்கவனாய், கட்டியிருந்த துண்டைத் தீயில் போட்டுப் பொசுக்கினேன்.

சிறுவனாதலால், துண்டு இல்லாமல் போனால் வீட்டில் அடிப்

யப்பட்டு சிறைச்சாலை சென்றவர் தேச பக்தர் விஸ்வநாததாஸ் அவர்கள் தான். அவர் நடத்திய அந் நாடகங்களுக்கு இடையிடையில் பாடிய தேசியப் பாடல்களைக் கண்டு அன்றைக்கிருந்த அந்நிய அரசாங்கம் அச்சம் கொண்டது. காரணம், அவருடைய ஒவ்வொரு நாடகமும் ஒரு வெடி குண்டாக அமைந்து பாமர மக்களையும், தேசபக்தர்களையும் வீறு கொள்ளச் செய்தது.

காந்திஜி முதல் முதலாகத் தமிழகத்திற்கு வந்த போது தூத்துக்குடியில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் இளைஞர் விஸ்வநாததாஸ், பாரதியாரின் ''கரும்புத் தோட்டத்திலே'' என்ற பாடலை உணர்ச்சிப் பெருக்கோடு பாடினார். அவர் பாடி முடித்து உட்காரும் சமயத்தில் மீண்டும் பாட வேண்டும் என்று திரண்டிருந்த மக்கள் கேட்டார்கள். ''மக்கள் என்ன குரல் கொடுக்கிறார்கள்'' என்று காந்திஜி மேடையிலிருந்தவரைக் கேட்டார். ''பாட்டுப் பாடிய இளைஞரை மீண்டும் பாடச் சொல்லுகிறார்கள்'' என்றார். காந்திஜி, விஸ்வநாததாஸை அழைத்து மீண்டும் ஒரு பாட்டுப் பாடும்படி கூறினார். அந்த இளைஞரை அவர் முதுகில்தட்டிக் கொடுத்தார். காந்திஜி கரம் பட்டு ஆசீர்வாதம் பெற்ற விசுவநாததாஸ் தேசிய பிரசாரத்துக்கு நாடகத் துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

சிவகாசியில் பிறந்து, மதுரை மாவட்டத்தில் திருமங்கலத்தில் வளர்ந்து, தமிழகம் முழுவதையும் பட்டி தொட்டியெங்கும் நகரமெங்கும் விஸ்வநாததாஸ் தேசியக் கனலைக் கொழுந்து விட்டு எரியச் செய்தார். நாடகத்தில் தேசியப் பாடல் பாடுவார். கைது செய்யப்படுவார்; சிறை செல்வார்; விடுதலையாகி வந்து மீண்டும் நாடகம் நடத்தி, புரட்சிப் பாடல்கள் பாடிச் சிறை செல்வார். ஒருமுறை இரு முறையல்ல, 21 முறை சிறை சென்றார். ஒரு வார சிறை தண்டனையிலிருந்து ஓர் ஆண்டு கடுங்காவல் தண்டனைவரை பெற்றார்.

1932ஆம் ஆண்டு திருநெல்வேலி கணபதி விலாஸ் தியேட்டரில் வள்ளித் திருமணம் நாடகம் நடந்தது. நாடகத்தில் தேசியப் பாடல்கள் பாடக் கூடாது என்று தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும், விஸ்வநாததாஸ் தடையை மீறிப் பாடினார். வழக்கம் போலக் கைதானார்.



இம்முறை அவர்மீது ராஜத்துவேஷக் குற்றம் சாட்டப்பட்டது. அரசாங்கம் தொடுத்த வழக்கை எதிர்த்து வாதாட கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் ஏற்பாடு செய்திருந்தார். இரண்டு மூன்று வாய்தாக்கள் நடந்தன. 'அந்நிய அரசாங்கம் தொடுத்த வழக்கை எதிர்த்து வாதாட வேண்டாம்' என்று, அன்று தமிழ்நாடு காங்கிரஸ்கட்சி விஸ்வநாததாஸிற்குக் கட்டளையிட்டது. அந்தக் கட்டளையை ஏற்று ''கோர்ட்டார் அவர்களே எதிர்வழக்காடக் கூடாது என்று எனது குருபீடம் கட்டளையிட்டிருக்கிறது. எனவே, என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்று சிறை செல்லத் தயாராக இருக்கிறேன்'' என்று விஸ்வநாததாஸ் வழக்கு மன்றத்தில் வீரமுழக்கமிட்டார். தீர்ப்பு, ஓர் ஆண்டு கடுங்காவல்!

ஓராண்டு சிறைத் தண்டனை முடிந்து வ்ஸ்வநாததாஸ் வெளியே வந்தபோது வெளளை அரசாங்கத்தின்அடக்கு முறையை எதிர்த்து நிற்க வேண்டியிருந்தது. வெள்ளை அரசாங்கத்தின் ஏவலாளர்கள் விஸ்வநாததாஸின் நாடகங்களில் கலகம் செய்தனர். ''தீண்டத் தகாத-முடிதிருத்தும் தொழிலாளியோடு சேர்ந்து நடிப்பதா'' என்று அவரோடு நடித்த நடிகைகளைப் பிரித்தனர். கலகம் கண்டோ, குழப்பம் கண்டோ விஸ்வநாததாஸ் கலங்கவில்லை. ஆனால் அவரது குடும்பம் வறுமைக்கு உட்பட்டது. ஒப்பந்தம் செய்த நாடகங்களைச் சிலரின் தூண்டுதல் காரணமாக ரத்து செய்ததாலும், தொடர்ந்து பல நகரங்களில் நாடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதாலும், சில நடிகர்களுக்குச் சொத்துக்களையெல்லாம் விற்று சம்பளமாகக் கொடுத்தார்.

1940ஆம் ஆண்டு திருமங்கலத்திலிருந்த அவரது வீடு ஏலத்திற்கு வந்தது, அப்போது விஸ்வநாததாஸ் சென்னையில் இருந்தார்.

''விஸ்வநாததாஸ், இதோ இரண்டாயிரம் ரூபாய், ஏலத்தில் போகும் உமது வீட்டைத் திருப்பிக் கொள்ளும். மாதம் உமக்கு இருநூறுரூபாய் கொடுக்கிறோம். நீங்கள் நாடகங்க்ள் நடத்திக் கொள்ளலாம். ஆனால் தேசியப் பாடல்கள் மட்டும் பாடவேண்டாம்'' என்று ஒருவர் கேட்டார். அதற்கு விஸ்வநாததாஸ் வேறொன்றும் கூறவில்லை. இரண்டாயிரம் ரூபாய் நோட்டுக்களை எடுத்தார். அவர் முகத்திற்கு நேராக விசிறி அடித்தார்; வெளியேறினார்.



1940ஆம் ஆண்டு டிசம்பர் 30ஆம் நாள், எந்த ஒற்றவாடை தியேட்டரில் தேசியப் பாடல் பாடி முதன் முதலாகச் சிறை சென்றாரோ, அதே தியேட்டரில் விஸ்வநாததாஸ் வள்ளித் திருமணம் நாடகம் நடத்தினார். அன்றைக்கும் தேசியப் பாடல்கள் பாடினார். விஸ்வநாததாஸைக் கைது செய்யப் போலீஸ் அதிகாரிகள் தயாராக நின்றார்கள். மயில் மீது அமர்ந்து விஸ்வநாததாஸ் ''மாய உலகை நம்பாதே'' என்று பாடிக் கொண்டிருந்தார். அந்தப் பாட்டு முடிவதற்கு முன்பே அவர் மயங்கி விழுந்தார். ஆர்மோனியம் போட்டுக்கொண்டிருந்த அவரது சகோதரர் சண்முகதாஸ் அவரைத் தாங்கிப் பிடித்தார். மயில் மீது அமர்ந்த நிலையிலேயே விஸ்வநாததாஸ் அமரரானார். அன்றைக்குத்தான் அவர் போலீசாருக்கு வேலை வைக்கவில்லை.

('ஆனந்த விகடனில்' வெளிவந்த கட்டுரையிலிருந்து.)



இராமநாதபுரம் நகரின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகப் பல முன்னோடித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இராமநாதபுரம் நகரில் 8 டேங்கர்கள் மூலம் குடிநீர் 48 இடங்களில் வநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. கூடுதலாக 8 இடங்களில் ஜூன் 14 முதல் குடிநீா விநியோகம் செய்யப்படுகிறது. இதற்காக அரசு ரூ.4 இலட்சத்து 14 ஆயிரம் நிதி ஒதுக்கடு செயதுள்ளது. இராமநாதபுரம் நகரில 10 உறை கிணறுகளும், 5 குழாய்க் கிணறுகளும் ரூ. 80 ஆயிரம் செலவில் நிறுவப்பட்டு அவற்றின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. லட்சுமிபுரம் ஊரணி, முகவை ஊரணி, நீலகண்டி ஊரணி, நொச்சிவயல் ஊரணி ஆகிய 4 இடங்களில் ரூ. 2 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் திறந்த கிணறுகள் நிறுவப்பட்டு வருகின்றன. இவற்றில் 3 கிணறுகளின் தண்ணீர் குடிநீருக்காகப் பயன்படுத்தப்படும். பொட்டிதட்டியில் 2 ஆழ் குழாய்க் கிணறுகளும், 2 நுண் துளைக் கிணறுகளும் ரூ. 7 இலட்சம் செலவ்ல் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலமும் இராமநாதபுரம் நகருக்குக் கிடைக்கும் குடிநீரின் அளவு அதிகமாக்கப்படுகிறது.

தொண்டியில் ரூ. 46 இலட்சத்து 60 ஆயிரம் செலவ்ல மீன்பிடி துறைமுக வளாகம் கட்டப்பட்டு வருகிறது. இப்பகுதியல் வாழ்ந்து வருகின்ற மீனவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் மீன்பிடி துறைமுக வளாகம் அமையும். ரூ. 5 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் சிப்பங்கட்டும் கூடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. ரூ. 41 இலட்சம் செலவில் படகுத்துறை, வலை பின்னும் கூடம், மீன் விற்பனைக் கூடம், நிர்வாக அலுவலகக் கட்டடம் மற்றும் இணைப்புச்சாலை அமைத்தல் போன்ற வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் நடப்பு ஆண்டு ஆகஸ்டு மாத இறுதிக்குள் முடிக்கப்பட்டு விடும் எனத் தெரிகிறது.

கடந்த 22.6.86 அன்று இலங்கை அகதிகள் 47 குடும்பத்தைச் சேர்ந்த 130 நபர்கள் இராமேஸ்வரம் வந்தார்கள். 8.10.85க்குப்பின் ஓரே நாளில் அதிகம் அகதிகள் வருகை புரிந்தது 22.6.86 அன்றுதான்.

தற்சமயம் மண்டபம் அகதிகள் முகாமில் 1,089 குடும்பங்களைச் சார்ந்த 3,947 நபர்கள் உள்ளார்கள். புதிதாக வந்த அகதிகள், இலங்கையைச் சார்ந்த பேசாலை, மன்னார் பகுதிகளைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிக அளவில் கிடைக்கக் கூடிய பனைப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கும் கூட்டுறவு முறையிலான தொழிற்கூடங்கள் அமைக்கும் முன்னோடித்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலை வாய்ப்புகள் பெருகும், பனைப் பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.

இராமநாதபுரம் மாவட்ட மெல்லோட்டக் கழகத் தொடக்க விழா (ஜாக்கிங் கிளப்) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தேபேந்திரநாத் சாராங்கி, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் 21.6.86 அன்று நடைபெற்றது.

## இராமநாதபுரம் மாவட்டத்தில்...



கோ. தி. மோகன
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம் மாவட்டம்

தனது தலைமையுரையில் மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டதாவது:

''இராமநாதபுரம் மாவட்ட விளையாட்டு மன்றத்தின் சார்பாகத் துவக்கப்பட்டுள்ள மெல்லோட்டக் கழகத்தில் இராமநாதபுரத்திலுள்ள மாணவர்களும், பெரியோர்களும் உறுப்பினர்களாகச் சேர்ந்து தினசரி, பயிற்சி பெறலாம். இதன் மூலமாக உடலும் உள்ளமும் சோர்வில்லாமல் தொடர்ந்து சிறந்த பணியாற்ற முடியும். மேலும் இருதய நோயாளிகளுக்கும் இப்பயிற்சி பயனுள்ளதென மருத்துவர்கள் தெரிவித்துள்ளார்கள். விளையாட்டுகளில் இந்திய மக்கள் பங்குபெறுதல் மிகவும் அவசியமாகும். தொடர்ந்து 100 நாட்கள் இக்கழகத்தின் மூலம் பயிற்சி பெறுபவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும்.''

இவ்விழாவில் இராமநாதபுரம் நகரசபைத் தலைவர் திரு எம். எஸ். கே. ராஜேந்திரன் மற்றும் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த புத்தேந்தல் கிராமத்தில் தாரா திட்டத்தில் ரூ.59 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுக் கூடத்தின் புதிய கட்டடத்தை மாண்புமிகு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் திரு டி.இராமசாமி அவர்கள் (2.7.86) திறந்து வைத்து, புதிய தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வழங்கிச் சிறப்புரை ஆற்றினார்.

''சத்துணவுத் திட்டம் ஆரம்பித்த பொழுது மையங்கள் எல்லாம் முதலில் தனியார் கட்டடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இன்றைய தினம் சுமார் 20,000 மையங்களுக்குக் குறையாமல் இதுபோன்று புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அதில் இயங்கி வருகின்றன. இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 33 சத்துணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 14 மையங்கள் அரசுக்குச் சொந்தமான இதுபோன்ற புதிய கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ரூ. 59,000 செலவில் கட்டப்பட்டுள்ள இந்தக் கட்டடத்தில் புத்தேந்தல் கிராமத்தில் உள்ள ஏழை எளியவர்களின் 50 குழந்தைகள் சத்துணவு சாப்பிடுவதோடு மட்டுமல்லாமல் கல்வியும் கற்றுக் கொள்கிறார்கள்''.

—இவ்வாறுஅப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றினார்.

விழாவிற்கு இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு கிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து வளர்ச்சி) திரு நடேசன், புத்தேந்தல் ஊராட்சித் தலைவர் திரு அம்மாசி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள.

முன்னதாக இராமநாதபுரம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு சொக்கையன் ஆண்டறிக்கை படித்து வரவேற்றுப் பேசினார். விழா முடிவில் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திரு சீனிவாசன் நன்றி கூறினார்.



அண்ணா விருது ஆகியன குறிப்பிடத் தக்கதாகும். சென்ற ஆண்டு, திருவள்ளுவர் விருதைத் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், பேரறிஞர் அண்ணா விருதை மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களும் பெற்றார்கள்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

உலகளாவிய நிலையில் தமிழையும், தமிழ் தழுவிய சிந்தனைகளையும் கொண்டு செல்வதை நோக்கமாகக் கொண்டு ஓரமைப்புச் செயல்பட வேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் விரும்பிய நோக்கத்தின் அடிப்படையில், 1970-ஆம் ஆண்டு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் தொடங்கப் பெற்றது. வெளிநாட்டினர் பலர் இந்நிறுவனம் வந்து தமிழ் பயின்று செல்கிறார்கள். பழந்தமிழ் ஓலைச் சுவடிகள் பலவற்றை நிறுவனம் அச்சேற்றி வருகிறது. இலக்கியம், இலக்கணம், கலை, நாகரிகம் உள்ளிட்ட துறைகள் சார்ந்து ஆங்கிலத்திலும், தமிழிலுமாக நூற்றுக்கும் மேலான நூல்களையும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. தமிழர் மரபுச் செல்வம் என்ற வரிசையில் ஆண்டுதோறும் இலக்கியம், இலக்கணம், தத்துவம், கட்டடக்கலை, மருத்துவம், கோயிற் கலை ஆகியன பற்றிக் கருத்தரங்கம் நடத்தி அக் கருத்தரங்கக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் நூலாக்கி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிட்டு வருகிறது. இந்நிறுவனம் தமிழியல் என்னும் ஆங்கில அரையாண்டு இதழொன்றையும் வெளியிட்டு வருகிறது.



## மொழிபெயர்ப்புத் துறை

ஆங்கிலேயர் காலத்திலிருந்து அரசின் நடைமுறைகள் ஆங்கிலத்தில் வெளி வந்ததை முறை மாற்றி அருந்தமிழ்ப் படுத்தி வெளி வருமாறு செய்வது இம் மொழிபெயர்ப்புத் துறையின் முதன்மையான பணியாகும். அரசையும் மக்களையும் நெருக்கமாக இணைக்கும் மையத்துறையாக இத்துறை இயங்கி வருகிறது.

## செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்ட இயக்ககம்

உலக மொழிகளில் மூத்ததும், இயற்கையாக எம்மொழித் துணையின்றியும் வளர்ந்த செந்

தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு திருவள்ளுவர் விருதினை மாண்புமிகு முதல்வர் வழங்கினார்.



தமிழ் மொழியின் சொற்கள் ஒவ்வொன்றிற்கும் உள்ள தோற்ற வரலாற்றைப் பெருமையுடன் வெளியிட வேண்டும் என்ற அரசின் உயர்ந்த குறிக்கோளுக்கேற்ப மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணரவர்கள் முதல் இயக்குநராக வீற்றிருந்து முதன் மடலத்தை எழுதி முடித்தார்கள். இம்முதன் மடலத்தைத் தமிழக அரசு வெளியிட்டுப் பெருமை கொண்டது.

மொழி ஞாயிறு பாவாணரின் மறைவிற்குப் பிறகு பேராசிரியர் இரா. மதிவாணனைப் பொறுப்பு இயக்குநராகக் கொண்டு இச் சொற்பிறப்பகர முதலித்துறை இயங்கி வருகிறது.

## தொல்பொருள் ஆய்வுத்துறை

தமிழகத்தின் வரலாறு, கலை, பண்பாடு ஆகியவற்றை அறிவதற்கு மிகவும் அடிப்படையான துறையாக இத்தொல் பொருள் ஆய்வுத்துறை திகழ்ந்து வருகிறது. மாவட்டந்தோறும் தொல்பொருள் ஆய்வு அதிகாரிகளை அமர்த்தி, ஊர்தோறும் உள்ள பழமரபுச் செய்திகளைச் சேகரித்துப் புதிய வரலாற்றொளியைப் பாய்ச்சி வருகிறது.

வரலாற்று முதன்மை வாய்ந்த இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைத்தும் அகழ்வாராய்ச்சி செய்தும், தமிழக வரலாற்றில் ஒரு புதிய மறு மலர்ச்சியை இத்துறை தோற்றியுள்ளது.

சோழ மாமன்னன் முதலாம் இராசராசனின் ஆயிரமாவது ஆண்டு முடிசூட்டு விழாவை இத்தொல்பொருளாய்வுத் துறை சிறப்பாகக் கொண்டாடியது. இவ் விழாவைச் சிறப்பிக்க அந்நாள்



கலைமாமணி விருதினை மாண்புமிகு முதல்வர் வழங்குதல்.

பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அம்மையாரை அழைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அணி செய்து மகிழ்ந்தார்கள்.

இடைக்காலத் தமிழகத்தில் நீண்ட நாளைய தலைநகராக விளங்கிய கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ மாமன்னர்கள் வீற்றிருந்து ஆண்ட மாளிகைப் பகுதிகளை அகழ்வாய்வு செய்து வெளிக் கொணர்ந்து, புதிய சாதனையை இத்துறை செய்தது. மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் இம் மாளிகைப் பகுதியில் கிடைத்த பொருட்களைக் கொண்டு அருங்காட்சியகம் வைப்பதற்காக அடிக்கல் நாட்டியுள்ளதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

## அருங்காட்சியகம்

வரலாற்றுப் பழமை மிக்க தமிழர்களின் வாழ்க்கைமுறையை நேரில் ஒரு சேரக் காண்பது போன்ற உணர்வைத் தோற்றுவிக்கும் வகையில் தமிழகத்தில் தலைநகரில் அருங்காட்சியகம் திகழ்ந்து வருகிறது. பண்டு தொட்டு இன்று வரை பல்வேறு பண்பாடு, கலை, அறிவியல் ஆகிய துறைகளில் தமிழினம் கடந்து வந்த பாதையை இங்குக் கண்டு பெருமூச்செறியலாம். தமிழக அரசு இத்துறையை மேலும் வளர்க்கும் நோக்கத்துடன் சிறுவர் அருங்காட்சியகமும் வளர் கலை அருங்காட்சியகமும் புதிதாகக் கட்டியுள்ளது.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இந்த அருங்காட்சியகத்தைக் கண்டு மகிழ்கின்றார்கள். சென்னைக்கு வரும் அயல்நாட்டார்க்கும் இவ்வருங்காட்சியகம் சிறந்த காட்சி விருந்தளிக்கிறது.

## திருக்குறள் நெறி பரப்பு மையம்

தமிழின் பெருமையை உலகெங்கும் பரப்பிய திருக்குறளின் நெறிமுறைகளை முறையாகப் பரப்புவதற்குப் புரட்சித் தலைவரால் தோற்றுவிக்கப் பட்ட புதிய துறையே திருக்குறள் நெறி பரப்பு மையமாகும். கடந்த அரை நூற்றாண்டாகத் தமிழகம் முழுவதும் திருக்குறட் சொற்பொழிவாற்றி வள்ளுவர் கருத்துக்களை மக்கள் மனங்களிலெல்லாம் விதைத்து வரும் திருக்குறளார் வீ. முனிசாமி அவர்களையே இயக்குநராகக் கொண்டு இம் மையம் இயங்கி வருகிறது. திருக்குறளின் பெயரால் பரிசுத் திட்டங்கள் பல வகுத்தும் நாடாப் பதிவு செய்த திருக்குறள் சொற்பொழிவுகளைப் பல்வேறிடங்கட்கு வழங்கியும் வாரந்தோறும் வெள்ளிக் கிழமையெல்லாம் திருக்குறள் வகுப்புகள் நடத்தியும் இம் மையம் தன் பணியைத் தொடர்கிறது.

## கீழ்த்திசை ஓலைச் சுவடி நூலகம்


ஆங்கிலேயர் காலத்திலிருந்தே நாட்டில் பலவிடங்களிலும் கிடைத்த பல்வேறு மொழிகளிலும் அமைந்த ஓலைச் சுவடிகள் தொகுக்கப்பட்டன. கர்னல் மெக்கன்சி, கிழக்கிந்திய கம்பெனியார், பிரவுன் போன்ற பெருமக்களின் அரிய தொகுப்புகளும் இங்கு உள்ளன. இங்குள்ள பல்லாயிரக்கணக்கான ஓலைச் சுவடிகளையும் பேணிப் பாதுகாத்து அச்சேற்றியும் வருகின்ற பெரும் பணியை இந்நூலகம் செய்து வருகிறது. தமிழக அரசு இத்துறையில் தனிக் கவனம் செலுத்தி ஊக்கப்படுத்தி வருவது குறிப்பிடத் தக்கதாகும்.

## இயலிசை நாடக மன்றம்

முத்தமிழை வளர்க்கும் கலைஞர்கட்குக் கலைமாமணிபோன்ற விருதுகளை வழங்கியும், பழந்தமிழ் மரபுப்படி புதிய நாடகங்களை நடத்தியும் இம்மன்றம் பணி செய்து வருகிறது. தமிழக அரசின் அரசவைக் கலை மன்றமாக இம்மன்றம் பெருமையுடன் இயங்குகிறது.

## இசைக்கல்லூரி

தமிழோடு ஒன்றாகக் கலந்த இசையைத் தனித்த ஒரு சிலரின் குடும்பச் சொத்தாக இருக்க வைக்காமல் தமிழகமெங்கும் வாழும் எல்லாநிலை மக்களும் இசை பயிலும் வாய்ப்பைப் பெற இவ்விசைக் கல்லூரி மூலம் அரசு செய்து வருகிறது. தமிழகத்தின் முக்கியமான தலைநகர்களிலும், இசைக் கல்லூரிகள் அமைக்கும் திட்டத்தை அரசு முடுக்கி வருகிறது. சென்னையில் அமைந்



சிறந்த நூலுக்குரிய பரிசு பெறுகிறார் எழுத்தாளர் ஜெயகாந்தன்.

துள்ள இசைக் கல்லூரியின் முதல்வராக திருமதி டாக்டர் பானுமதி இராமகிருஷ்ணா அவர்கள் விளங்கி வருகிறார்கள்.

## ஓவிய நுண்கலைக்குழு

நுட்பமான மனவுணர்வில் வளரும் அரிய கலையான ஓவியக்கலையை வளர்ப்பதிலும், தமிழக அரசு தனிப் பொறுப்புக் கொண்டுள்ளது. இந்திய அரசு ஓவியக் கலையை லலித் கலா அகாடெமி வாயிலாக வளர்ப்பது போன்றே, தமிழக அரசு இவ்வோவிய நுண்கலைக் குழு மூலம் கலையைப் போற்றி வளர்த்து வருகிறது. நாட்டின் பல்வேறிடங்களில் ஓவியக் கண்காட்சியை நடத்துதலும், வளரும் ஓவியக் கலைஞரை




முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

இன்சூரன்ஸ் — நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!


# பட்டொளி வீசும் பண்பாட்டுத்துறை


டாக்டர் ஔவை நடராசன்
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை


மக்கள் நலம் பேணும் நல்லரசு தன் ஆட்சிக்குட்பட்ட அனைத்து மக்களுக்கும் தெளிவாக விளங்கும் வகையில் தனது கருத்துக்களை, அரசியல் நடைமுறைகளைப் புலப்படுத்த வேண்டும். அவ்வாறே மக்களின் கருத்தையும் நேரடியாக அரசு புரிந்து கொள்ள வேண்டும். அரசுக்கும் மக்களுக்கும் இடையிலமைந்த நெருக்கமான உறவு, நாட்டின் ஆக்கமான அனைத்துப் பணிகளுக்கும் அடிப்படையாகும். இத்தகைய மூலமான- இறுக்கமான இணைப்பை ஒரு நாட்டில் வழங்கும் மக்கள் மொழியே- தாய்மொழியே நல்க முடியும். இவ்வுண்மையை நன்கறிந்த தமிழக அரசு வளர்ச்சி-பண்பாட்டுத்துறை என்னும் புதிய துறையொன்றைத் தோற்றுவித்து, நாட்டு முன்னேற்றத்திற்குத் தடங்காட்டும் வெற்றிப் பணியைச் செய்து வருகின்றது.


**தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறையின் தோற்றம்.**

இந்தியப் பேரரசின் மதிப்புமிக்க தலைமையமைச்சர் மாண்புமிகு ராஜீவ் காந்தியவர்கள் பொறுப்பேற்ற பிறகு நாட்டின் பல துறைகளையும் சீர்திருத்தவும் கண்காணிக்கவும் செய்தார்கள். கல்வியென்பது மனித ஆற்றலை மேம்படுத்தும் பணிக்குரியதே என்ற வகையில் தனது அமைச்சகத்தில் மனித ஆற்றல் மேம்பாட்டுத்துறையை- Human Resource Development Dept. உருவாக்கினார்கள். அத்துடன், கல்வி, மக்களின் கலை, நாகரிகம், பண்பாடு, தழுவி வளர வேண்டும் என்ற உணர்வில் இத்துறையின் எல்லை விரிந்தது. பாரதத் தலைமை யமைச்சரின் கருத்திற்கேற்பப் பல மாநில அரசுகளும், தம் தலைமைச் செயலகத்தில் மொழி- பண்பாட்டுத் துறைகளைத் தோற்றுவித்தன.

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் பாரதப் பிரதமர் இப்பண்பாட்டுத்துறையை உருவாக்குதற்கு முன்னரே தமிழகத்தில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறையைத் தோற்றுவித்து, இந்தியப் பேரரசுக்கே முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் விளங்கியுள்ளார்கள் என்று குறிப்பிடுவதில் நாம் பெருமை கொள்ளலாம்.

19.4.1984லிருந்து கல்வித் துறையில் இணைந்திருந்த மேற்குறித்த துறைகள் யாவும் தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறையின் தலைமையில் புது வேகத்துடன் செயல் புரிந்து வருகின்றன.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் கீழ் இயங்கி வரும் பல துறைகளின் பயன்மிகு பணி



பண்பாட்டுப் பலகணியின் சார்பில் நடைபெற்ற வாத்திய இசை நிகழ்ச்சி.

களைச் சுருக்கமாகத் தமிழக மக்கள் அறிந்து கொள்வது மகிழ்ச்சியைத் தரும்.

**தமிழ் வளர்ச்சி இயக்ககம்**

தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்ட தமிழ் வளர்ச்சி இயக்ககம் அதற்கேற்ப மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் உதவி இயக்குநர் ஒருவரைக் கொண்டு பணிபுரிந்து வருகிறது. இவ்வுதவி இயக்குநர்கள் மாவட்ட, வட்ட, அரசு அலுவலகங்களில் தமிழை ஆட்சிமொழியாக்குவதற்கு வழிகாட்டியும் நெறியுரைத்தும் துணைபுரிந்து வருகின்றார்கள்.

தமிழ்நாட்டரசு அலுவலகங்களில் தமிழிலேயே ஆணைகள், மடல் போக்குவரவுகள் அனைத்தும் தகுந்த கலைச் சொற்கள் கொண்டு இயங்கி வருவதால் அரசின் செயற்பாடுகளையும், நடைமுறைகளையும் மக்கள் நேரடியாகப் புரிந்து கொள்கிறார்கள்.

தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் தலைமை அலுவலகம் குறளகத்தில் முடுக்கமான பணிகளைச் செய்து வருகின்றது. தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் பல வழிகளில் அளிப்பதென்றும் அரசின் அடங்காத ஆர்வத்தின் பேரில் ஆண்டுதோறும் இத்தமிழ் வளர்ச்சி இயக்ககம் தமிழில் வெளிவரும் சிறந்த நூல்கட்குப் பரிசளித்தும், சிறந்த நூல்களை வெளியிடப் பொருளுதவி செய்தும், அகவை முதிர்ந்த தமிழறிஞர்கட்கும், பிற மாநிலங்களில் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களுக்கும், தமிழ் நிறுவனங்களுக்கும் நிதியுதவியும் நிரம்பிய பணிகளைச் செய்து வருகின்றது. தமிழை முழுவதுமாக ஆட்சி மொழியாக ஆக்குவதற்கான முனைப்பான திட்டமொன்றையும் இத்துறை 'விரைந்து செய்து வருகின்றது. தமிழ்த் தட்டச்சுப் பொறிகளை ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகட்குப் பதிலாக அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப் பரவலாக்குவது, மூன்றாண்டுகட்குள் 75 விழுக்காட்டளவுக்குத் தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைப் பயன்படும்படிச் செய்வது ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ் நலமும் இனநலமும் கருதி வாழ்ந்த உழைத்த சான்றோர்களின் நினைவாக விருதுகளைத் தோற்றுவித்து தக்கோர்க்கு அவற்றை வழங்கிச் சிறப்பிக்கின்றது. திரு.வி.க. விருது, பாவேந்தர் விருது, திருவள்ளுவர் விருது, பேரறிஞர்

ஊக்குதலும், ஆண்டுதோறும் ஓவியக் கண்காட்சியைத் தமிழ் நாட்டிலும் பிற மாநிலங்களிலும் நடத்துதலும், பிற மாநில ஓவியக் கண்காட்சிகளைத் தமிழ் நாட்டில் நடத்துதலும் ஆகிய வகையில் அவ்வமைப்பின் பணிகள் அமைந்துள்ளன.

### சவகர் சிறுவரில்லம்

இந்தியப் பேரரசின் கல்வியமைச்சக நேரடிப் பார்வையில் 1956 ஆம் ஆண்டு புதுதில்லியில் தொடங்கப்பட்ட அமைப்பு சவகர் சிறுவரில்லமாகும். 5 முதல் 16 அகவைக்குட்பட்ட சிறுவர்களைக் கலை வல்லுநர்களாக வளர்ப்பதே இவ்வமைப்பின் நோக்கமாகும்.

தமிழகத்தில் 1974 ஆம் ஆண்டு முதல், சவகர் சிறுவரில்லம் நேரு நினைவு நிதியிலிருந்து 16 இலக்கம் ஒதுக்கியதன் காரணமாக இராசாசி வளாகத்தில் இயங்கி வருகிறது. இதில் 400 சிறுவர்கள் பயிற்சி பெறுகின்றனர். திருச்சியிலும், புதுக்கோட்டையிலும் இதன் கிளைகள் இயங்கி வருகின்றன. இப்பொழுது, மதுரை காந்தி நினைவில்லத்திலும் கிளையொன்று தொடங்கிச் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் 1986 ஏப்ரல் 14ல் இக்கிளையைத் தோற்றுவித்தார்கள்.

### பழங்கலை இயக்கம்

புதுப்புது மரபுகட்கு மூலமாக விளங்கும் பழங்கலையைக் கால வெள்ளத்தில் கரைத்து விடாமல் தொட்டெடுத்துப் பேணிக் காக்கத் தமிழக முதல்வரால் மீண்டும் உருவாக்கப்பட்ட புதுத்துறையே பழங்கலை இயக்ககமாகும். கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம் இதன் இப்பொழுதைய இயக்குநராக இருந்து பணி செய்து வருகின்றார்.

### அகமுக வளர்ச்சியில் ஆர்வம்!

ஒரு மனிதனுக்கு உள்ளமும் உணர்வும் அகமாக இருந்து அவனின் புறச் செயல்களைத் தூண்டி இயக்குதல் போல் ஒரு நாட்டை அதன் மொழியும் பண்பாடும் வரலாறும் கலையும் நாடி நரம்பாக நின்று புறநிலை வளர்ச்சிகள் அனைத்தையும் பீடுநிறைந்ததாக ஆக்க வல்லமையை வழங்குதல் வேண்டும். அத்தகைய வல்லமை வழங்கும் வளஞ்சால் துறைகளையே தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை இன்று கட்டிக் காத்து ஊக்கி வருகிறது.

உள்ளார்ந்த அடிப்படையே எத்துணைப் பெரிய புறவளர்ச்சியையும் தாங்க முடியும். வழிவழியாகப் பல்லாயிரமாண்டுகளாக வாழ்ந்து வரும் தமிழகத்தின் மூலவூற்றை அடிக்கடி வீசி வீசி ஓயும் புறநிலைப் புழுதிகள் அடைத்துவிடக் கூடாதென்பதற்காகவே தமிழக அரசு இன்று இத்துறையில் தனிக்கவனம் செலுத்தி,பேணி வருகிறது.

தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை மேற்குறித்த பல்வேறு துறைகளையும் கட்டமைத்து இயக்குவதுடன், தமிழ், தமிழ்ப் பண்பாடு தொடர்பாகத் தோன்றும் புதுப்புது அமைப்புகளையும், விழாக்களையும் கைநீட்டித் தாங்கி அதனை முடுக்கிவிடும் பணியையும் செய்து வருகின்றது.

### தென்னகப் பண்பாட்டு மையம்

அண்மையில் பாரதத் தலைமையமைச்சர் மாண்புமிகு ராஜீவ் காந்தியவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட தென்னகப் பண்பாட்டு மையத்தின் தொடக்க விழாப் பணிகளையும், வளர்ச்சிப் பணிகளையும் மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால் மாமதுரையில் ஏப்ரல் 14 இல் தொடங்கப் பெற்ற உலகத் தமிழ்ச் சங்கம் தொடர்பான பணிகளையும் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறையே பொறுப்பேற்று நெறிப்படுத்தி வருகின்றது.

தமிழகத்தை எல்லா நிலைகளிலும் புத்தொளி நிரம்பிய புதுமைநிலமாக ஆக்க வேண்டும் என்ற முனைப்பில் சோர்வின்றி அதற்கான பணிகளில் ஈடுபட்டு வரும் தமிழக அரசின் தலையாய சாதனைகளில் தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறையின் மூலம் ஆற்றும் பணிகள் ஆணிவேராக வரலாற்றில் நிலைப்பனவாகும். இத்துறையின் பணிகள் தலைக்குடியாகிய தமிழ்க் குடிக்குத் தகுதியான தடங்காட்டும் வல்லமை மிக்கதாகும். இத்துறையின் பணி மேலும் ஓங்குமாக!

## மனிதனுக்கு எல்லையே இல்லை!

கண்கள் கட்டப்பட்ட நிலையில், அந்தப் பெண்மணி, காகித அட்டைகளின் நிறங்களைப் பிசகாமல் கூறுகிறார்.

ரசிகர்களில் ஒருவரை, கையால் பிடித்துக் கொண்டு, மேடையில் அந்த ரசிகர் மறைத்து வைத்திருக்கும் பொருட்களைக் கண்டுபிடிக்கிறார்.

8 இலக்கம் கொண்ட எண்களை மனதுக்குள்ளேயே பெருக்கி விடை சொல்கிறார்;

சிகரம் போல் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பட்டாக் கத்திகளின்மீது வெறுங் காலுடன் ஏறி நிற்கிறார்.

யார் அந்த விந்தைப் பெண்மணி?

அவர்தான் சோவியத் பெண் மாஜிக் நிபுணர் ஸ்வெத்லானா திமோபெயேவா.

சோவியத் நாட்டில் இருக்கும் ஒரே பெண் மாஜிக் நிபுணர் இவர்தான்.

அவரது மாஜிக் நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம் என்ன என்று கேட்டபோது அவர், ''மனிதன் எந்த அளவுக்குத் திறன் படைத்தவன் என்பதை எடுத்துக் காட்டுவதே எனது நிகழ்ச்சிகளின் நோக்கமாகும். நாம் நமது மூளையை 10 முதல் 15 சதவீதம் வரை தான் உபயோகப்படுத்துகிறோம். இயற்கை வழங்கியுள்ள ஆற்றல்கள் அனைத்தையும் பயன்படுத்தினால், மனிதன் எந்த 'எல்லை' வரையிலும் செல்ல முடியும் என்பதையே எனது நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது. ஒருவர், தனது ஆற்றலை, பயிற்சியின் மூலம் வளர்த்துக் கொள்வாரேயானால் அவரால் அடைய முடியாதது எதுவுமே இல்லை'' என்று பதிலளித்தார்.

—சோவியத் சிறப்புக் கட்டுரைகள்

# குடும்பநலக் கல்வி



### குடும்பநலப் பிரச்சாரக்கல்வி தகவலளிக்கும் திட்டம்:

மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி தகுதியுள்ள தம்பதியர், 'திட்டமிட்ட குடும்பம்' என்னும் கோட்பாட்டைப் பின்பற்றுவது குறித்து அவர்களுக்கு விளக்கி அவர்கள் அதனைப் பின்பற்றச் செய்வதில் மேற்சொன்ன பிரிவு முக்கியப் பங்காற்றுகிறது. இவ்வமைப்பு வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்றவற்றின் மூலமாகக் குடும்ப நலத்திட்டத்தைக் குறித்து இடைவிடாது பிரச்சாரம் செய்கிறது. மேலும் கட்டுமான விளம்பரங்கள், போக்குவரத்து வண்டிகளில் சுவரொட்டிகள், சுவரோவியங்கள் மூலமாக விளம்பரப்படுத்துவதன் மூலமாகவும் மேற்சொன்ன திட்டத்தைப் பிரச்சாரம் செய்வதோடு திரையரங்குகளில் (Slides) சருக்காடிகள் மூலமாகவும் பிரச்சாரப் பணியைச் செய்கிறது. மேலும் பிறப்பு வீதத்தைப் பெருமளவில் கட்டுப்படுத்த வேண்டும் என்ற அரசின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் தற்காலிகக் குடும்பநலத் திட்ட முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை இளம் வயதினரிடையே போதிப்பதில் தனிக்கவனத்தைச் செலுத்துகிறது. பொருட்காட்சிகள், தெருக்கூத்துகள், நாடகங்கள், சிறப்புத் திரைப்படங்கள் ஆகியவற்றை நடத்துவது போன்றவை பொதுமக்களிடையே தொடர்பு கொள்ளும் திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். திட்டமிட்ட குடும்பம் என்னும் கோட்பாட்டைச் செயற்படுத்துவதில் தொண்டு நிறுவனங்களின் ஒத்துழைப்பும் பெறப்படுகிறது.

தகுதியான தம்பதியரிடம் 'திட்டமிட்ட குடும்பம்' என்ற கோட்பாட்டை நயம்பட எடுத்துரைப்பதற்காக, அவர்களுடன் அவர் கருத்துருவாக்கும் தலைவர்களை (Opinion Leader) நேரடித் தொடர்பு கொள்ளவைத்து மேற்சொன்ன திட்டத்தைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோககம. கடந்த ஒன்பது ஆண்டுகளில் கிராமத் தலைவர்களுக்கான ஒன்பதாயிரம் குடும்பநலப் பயிற்சி முகாம்கள் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டுள்ளன. மகளிருக்கென குடும்பநலப் பயிற்சி முகாம்கள் தனியாக நடத்தப்பட்டன.

### குடும்பநலன் குறித்த இளைஞர் சங்கங்கள் :

1985ஆம் ஆண்டு அனைத்து நாட்டு இளைஞர் ஆண்டாகக் கொண்டாடப்பட்டது. எனவே 'திட்டமிட்ட குடும்பம்' என்ற கோட்பாட்டை மக்களிடையே பரப்புவதற்காக இளைஞர்களை ஈடுபடுத்துவது மிகவும் பொருத்தமுடையதாகும் என்று அரசு கருதியது. அதன்படி மாவட்டங்களில் 160 குடும்பநல இளைஞர் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு, ஒவ்வொரு சங்கத்திற்கும் ரூ.2000 என்ற வீதத்தில் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது. இதனால், மாநிலம் முழுவதற்கும் ரூ.3.20 இலட்சம் செலவிடப்படுகிறது. இந்த இளைஞர் சங்கங்கள் வழக்கமாகக் கிராமங்களில் அமைந்திருக்கின்றன. அவற்றில் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்களுடன் குடும்பநலத் தலைவர் முகாம்களில் பயிற்சி அளிக்கப்பட்ட உள்ளூர்த் தலைவர்களும் உறுப்பினர்களாவர். தினசரிப் பத்திரிகைகள், சஞ்சிகைகள், விளையாட்டுப் பொருள்கள் முதலியவையும் இச்சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றன. சங்க உறுப்பினர்களின் பயனுக்காக அருகிலுள்ள தொடக்க சுகாதார நிலையத்தின் மருத்துவ அதிகாரி-வட்டார விரிவாக்கப் பயிற்சியாசிரியர், மகப்பேறு குழந்தை நலம்-சத்துணவு, சுற்றுப்புற சுகாதாரம், குடும்பநலத் திட்டம், ஏனைய பொருள்கள் குறித்து வாராந்திர, மாதாந்திரக் கூட்டங்களை நடத்துகிறார். கிராமப்புற மக்களிடையே திட்டமிட்ட குடும்பத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவதில் இந்த இளைஞர் சங்கங்கள் முக்கியப் பங்கு வகிக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

### புதிய முறையிலான விளம்பரம் :

குடும்பநலத்திட்டம் குறித்த பொன்மொழி முழக்கங்கள் சிமிட்டிப் பலகைகளிலும் பெரிய கட்டுமான விளம்பரங்களிலும் எழுதப்பட்டு வருகின்றன. இத்தகைய விளம்பரங்களை அமைத்ததில் பல துறைகளின் - குறிப்பாக பால்வள நிறுவனம், வேளாண்மைத் துறை, குடும்பநலத்துறை ஆகியவற்றின் ஒத்துழைப்பு நன்கு வெளிப்படுகிறது. மாநில அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டரைப் பயன்படுத்தி நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் குடும்பநலம் பற்றிய தகவலடங்கிய துண்டுப் பிரசுரங்களை வீசியது பொதுமக்களிடம் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இதே போல மாவட்டங்களிலும் மாநிலத் தலைமையிடங்களிலும் வெவ்வேறு பணிச்சங்கங்கள் நடத்திய ஊர்வலங்களும், திட்டமிட்ட குடும்பநலம் தொடர்பான, பல்வேறு காட்சி விளம்பரங்களையும் அமைத்து மிகச்சிறந்த பயனை அளித்துள்ளது. பெண்கள் தொண்டு நிறுவனங்கள் ஒன்று சேர்ந்து தேவையில்லாமல் குழந்தைகள் பெறுவதிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் என்று கோரி சென்னை மாநகரில் பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தி, பெறும் வெற்றி கண்டனர்.

மருத்துவமனைகளில் மகப்பேறுக்குப்பின் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைப் பிரிவு



# கோழி கூவுது

தமிழ்நாடு கோழிவளர்ப்பு நிறுவனத்தின் அரிய பணிகள், அண்மைக் காலமாக அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பவைகளாக உள்ளன.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ஆர். அவர்களின் துணைவியார் திருமதி கே. ஆர். ஆர். கல்யாணி அவர்கள் தலைவராகவும், திரு. கே. அலாவுதீன் இ.ஆ.ப., அவர்கள் நிர்வாக இயக்குநராகவும் உள்ள இந்த நிறுவனம் உருவானது எப்படி? உயர்ந்து வருவது எப்படி?

பொதுவாக விவசாயத் தொழில் குறைந்து காணப்படும் பல வறண்ட மாவட்டங்களில் கோழிப் பண்ணைகள் பெருமளவில் அமைந்து வருகின்றன. சேலம் மாவட்டத்திலுள்ள நாமக்கல், கோவை மாவட்டம் பல்லடம் மற்றும் முகவை மாவட்டம் இராஜபாளையம் போன்ற பகுதிகளில் விவசாயிகள் இத்தொழிலில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். எனவே இப்பகுதிகளில் மாநில மொத்த முட்டை உற்பத்தியில் பெருமளவு உற்பத்தி செய்யப் படுகின்றன.

கடந்த பத்தாண்டுகளில் தமிழக அரசு இம்மாநிலத்தில் திட்டமிட்டுச் செயல்படுத்திவரும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களில், குறிப்பிடத்தக்கது கோழி வளர்ச்சி. விவசாயிகளுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள தொழில் நுணுக்க விவரங்கள் மற்றும் அவர்களிடையே எழுந்துள்ள ஆர்வம், வருமானம் காரணமாக இத் தொழில் வேகமாகப் பரவி வருகின்றது.

### நிறுவனத்தின் நோக்கம்

கிராமப் புறங்களிலுள்ள ஏழை விவசாயிகளுக்குக் கூடுதல் வருவாய் கிடைத்திட வழிவகை செய்தல் மற்றும் இன்றியமையாத புரதச்சத்து மிகுந்த உணவுகளையும் முட்டைகள் மற்றும் இறைச்சி இவைகளின் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்துடனும் இத் தொழிலில் ஈடுபட்டு வந்த விவசாயிகளுக்குத் தேவையான யோசனைகளையும் வசதிகளையும் செய்து கொடுக்கவும் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம் 12.7.1973 அன்று அரசு நிறுவனமாகத் துவக்கப்பட்டது.

கோழி வளர்ப்பு, அதன் துணைப் பொருட்கள், தீவனம், தேவைப்படும் சாதனங்கள் ஆகியவற்றை உருவாக்கி கோழி வளர்ப்புத் துறையில் உற்பத்தி,விற்பனை, வாகன வசதி,விநியோகம் ஏற்றுமதி, இறக்குமதி ஆகிய பணிகளுக்கு உதவுதல் போன்ற குறிக்கோளுடைய இந்த அமைப்பு, தரமான கோழிக் குஞ்சுகளை உற்பத்தி செய்வதிலிருந்து விளை பொருட்களை விற்பனை செய்வது உட்பட கோழி வளர்ப்போருக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் உதவிகளையும் அளிப்பதுவரை சிறப்புறச் செயப்பட்டு வருகிறது.



கோழிப் பண்ணைக்காக கடன் வழங்கல்.

கோவை மாவட்டம் அரசூரிலும் மதுரை மாவட்டம் கப்பலூரிலும் கோழிக் குஞ்சு பொரிப்பகங்கள் இரண்டு இயங்கி வருகின்றன. இக் குஞ்சு பொரிப்பகங்கள் உலகப் புகழ்பெற்ற ''பாப்காக்'' இன முட்டையிடும் கோழிக் குஞ்சுகளையும் ''காப் பிராய்லர்'' இன இறைச்சிக் கோழிக் குஞ்சுகளையும் பொரித்து வருகின்றன. இக் குஞ்சுகள், இம்மாநிலத்தில் உள்ள கோழி வளர்ப்போருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

1981-82ஆம் ஆண்டில் 16.76 இலட்சங்களாக இருந்த கோழிக் குஞ்சுகள் உற்பத்தி 1984-85ல் 13.82 இலட்சமாக உயர்ந்து 1985-86ல் 20.24 இலட்சமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 7-வது ஆண்டு இறுதிக்குள் பெருகிவரும் தேவை கருதி, இக் கோழிக் குஞ்சுகள் உற்பத்தித் திறனை 33 இலட்சங்களாக உயர்த்த 'டாப்கோ' திட்டமிட்டுள்ளது.

### இனாமாக ஊசி மருந்து

மேலும் நடப்பாண்டு முதல் அரசினால் தயார் செய்யப்படும் தடுப்பு ஊசி மருந்துகளை, கோழிப் பண்ணையாளர்களுக்கு இனாமாக அளிக்கவும் அரசு கருதியுள்ளது.

நந்தனம் (சென்னை), திருப்பூர் (கோவை மாவட்டம்), கப்பலூர் (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் கோழித்தீவன கலவை நிலையங்கள் இயங்கி வருகின்றன. அங்கெல்லாம் தரமான தீவன மூலப்பொருட்கள் கொள்முதல் செய்யப்படுகின்றன. தயாரிக்கப்பட்ட தீவனமும் மிகுந்த தரக்கட்டுப்பாட்டுச் சோதனைகளுக்குள்ளாக்கப் படுகின்றது. தற்போது தீவனக் கலவை விகிதம் கம்ப்யூட்டர் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.



கோழித்தீவனத் தரம் பார்த்தல்.

சென்னை நந்தனத்தில் தயாரிக்கப்படும் தீவனத்திற்கு இந்திய தர நிர்ணய நிறுவனத்தின் தரச் சான்றிதழும் பெறப்பட்டுள்ளது.

கோழி வளர்ப்போரின் நீண்ட நாளைய கோரிக்கைகளையும் டாப்கோவின் பெரு முயற்சியையும் ஏற்று தமிழக அரசு நடப்பாண்டு முதல் கோழித் தீவனத்திற்கு விதித்து வரும் விற்பனை வரியை 5% லிருந்து 2%ஆகக் குறைத்துள்ளது.இவ் வரிக்குறைப்பினால் கோழித் தீவனத்தின் விலை மற்றைய மாநிலங்களிலுள்ள தீவனத்தின் விலைகளைப் போல் குறைய வழி ஏற்பட்டு விற்பனை பெருக வாய்ப்புள்ளது.

கோழி வளர்ப்பில் சிறுவிவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காகத் தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கோழி வளர்ப்போரில் சிறு விவசாயிகள் ஒரு நாள் வயதுள்ள கோழிக்குஞ்சுகளைவளர்ப்பதற்குத் தேவையான தொழில் நுட்பங்களை இன்னமும் தெரிந்து கொள்ள வேண்டியிருப்பதாலும் இதற்கான அடிப்படை வசதிகள் இல்லாததாலும், 'டாப்கோ' நிறுவனம் தன் வளர்ப்புப் பண்ணைகளில் ஒருநாள் வயதுள்ள கோழிக் குஞ்சுகளை எட்டுவாரம் வரை வளர்த்து இம்மாதிரியான சிறு விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றது. மேலும் விற்பனை நிலையங்களுக்குத் தேவையான ''ப்ராய்லர்'' இன இறைச்சிக் கோழிக் குஞ்சுகளும் இவ்வளர்ப்புப் பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன.

இம்மாதிரியான நான்கு வளர்ப்புப் பண்ணைகள் செங்கல்பட்டு (செங்கை மாவட்டம்), கொட்டப்பட்டு (திருச்சி மாவட்டம்), பெருந்துறை (பெரியார் மாவட்டம்), சேஷன்சாவடி (சேலம் மாவட்டம்) ஆகிய ஊர்களில் அமைக்கப்பட்டுள்ளன என்று பெருமிதத்தோடு தெரிவித்தார் 'டாப்கோ' நிறுனவத் தலைவர் திருமதி கே.ஆர்.ஆர். கல்யாணி.

### விற்பனை எதற்காக?

இத் தொழிலில் ஈடுபட்டுள்ள இடைத்தரகர்களை அகற்றவும் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் விளை பொருட்களுக்கு நியாயமான விற்பனை விலை கிடைக்க வகை செய்யவும், முட்டை மற்றும் இறைச்சிகளை நுகர்வோருக்கு நியாய விலையில் கிடைக்கச் செய்யவுமே இந்நிறுவனம் விற்பனைப் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

இவ் விற்பனைப் பிரிவுகள் சென்னை, செங்கல்பட்டு, திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி, கோவை, சேலம் மற்றும் வேலூர் நகரங்களில் விற்பனைப் பணிகளைச் செய்து வருகின்றன. சென்னை மற்றும் முக்கியமான நகரங்களைச் சுற்றியும் 'டாப்கோ' நிறுவனமே விற்பனை மையங்களையும் சிற்றுண்டி நிலையங்களையும் திறந்து அதன் மூலம், படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கும் தாய்மார்களுக்கும் விற்பனை செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருகின்றது.

### வளர்ச்சிப் பணிகள்

வணிக நோக்கிலான பணிகளில் ஈடுபட்டு வருவதுடன் இந் நிறுவனம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது என்பதை நாம் இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (DPAP) முதன் முறையாக 1985-86ஆம் ஆண்டில் கோழி வளர்ச்சித்திட்டங்களை டாப்கோ கழகம் இராமநாதபுரம், தர்மபுரி, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர் மற்றும்திருநெல்வேலி மாவட்டங்களில் ரூ. 48.235 லட்சம் செலவில் செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள் இந்த நிதியாண்டில் முதன் முதலாக செயல்படும் திட்டமாகும்.

இத் திட்டம் மூலம் கிராமப் புறங்களிலுள்ள ஏழை எளியோர்களுக்கு நவீன முறையில் கோழிப் பண்ணைகளை அமைத்து நடத்துவது பற்றியும்,மேலும் அவர்கட்கு செயல்முறை மூலம் விளக்கம் அளிப்பதற்காகவும் தொடங்கப் படுகிறது.

கோழி வளர்ப்புச் செயல்முறை விளக்கப் பண்ணைகளில் கிராம மக்கள் கோழி வளர்ப்பு முறைகளைத் தெரிந்து கொள்வார்கள். இத்திட்டத்தின் கீழ்

களைப் பொழுது போக்குக் கல்விமையமாக உருவாக்கிப் பல தனியார் தொழில் நிலையங்களும் தொண்டு நிறுவனங்களும் முன்வந்திருப்பது இதனை ஊக்கப்படுத்துவதாகிறது. ஒவ்வொரு மருத்துவமனையிலும் மகப்பேற்றுக்குப் பின் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சை வார்டின் பொதுவான சூழ்நிலையை மேம்படுத்துவதற்குத் தனி பராமரிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அந்த வார்டுமருத்துவமனையில் சிறந்த மிகவும் வசதியான இடத்தில் அமைக்கப்பட வேண்டும் என்றும் பொதுப்பணித்துறைகளுக்கு மாநில அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. அறுவைச் சிகிச்சை செய்து கொள்கின்றவர்கள் வார்டில் இருக்கும்போது மிகவும் மகிழ்ச்சியாகப் பொழுது போக்க முடியும் என்ற எண்ணத்தில் மகப்பேற்றுக்குப் பின் கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்யும் மையங்களில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், வீடியோ காசெட் ரெக்கார்டர்கள், மின்விசிறிகள், சுவர் அலங்காரப் பொருள்கள் கொண்டதாக அமைந்திருக்கும் வகையில் தனியாரிடமிருந்து நன்கொடைகள் பெறப்படுகின்றன.

**பொது மக்களுக்கான தனி அறிவுரைச் செய்திகள் :**

இம்மாநிலத்தில் பல்வேறு திட்ட இலக்கில் தனி அறிவுரைச் செய்திககளைப் பொது மக்களுக்குப் பரப்புவதில் 1984-85 ஆம் ஆண்டில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதைக் காணலாம். மாநிலத்தின் நில உடைமையாளர்களிடையே 'ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரிசு' என்ற கருத்தைப் பரப்புவதற்குப் பெரியார் மாவட்டத்திலுள்ள அய்யம்புதூர் கிராமம் ஒரு முன் மாதிரியாக இருந்து வருகிறது. அய்யம்புதூர் கிராமம் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியில் பெரியார் மாவட்டத்தில் கோபிச் செட்டிபாளையம் பேரூராட்சியில் அமைந்திருக்கிறது. இக் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் குறைந்தது இருபது ஆண்டுகளுக்கு மேலாகத் திட்டமிட்ட குடும்பநலக் கோட்பாட்டை முறையாகப் பின்பற்றி வருகின்றனர். அதன் பலனாக ஒரு குடும்பத்திற்கு ஒரு வாரிசு என்ற நடைமுறையை அவர்கள் பின்பற்றத் தொடங்கியதிலிருந்து அவர்களிடையே அரசு செய்திப் படங்கள் தயாரித்து வெளியிட்டதன் மூலம் அதிகக் குழந்தைகள் பிறப்பதால் அவர்களிடையே நில உடைமைகள் துண்டாடப்படும் என்பதையும் அதனால் அவர்களுடைய நிலஉடைமை பெருமளவு குறையும் என்பதையும் கிராம விவசாயிகளிடையே எடுத்துக் கூறுவதில் பெருமளவு வெற்றி ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு வெவ்வேறு மாநில அரசுப் பணியாளர் சங்கங்கள் 1984 ஆம் ஆண்டைக் கருத்தரிக்காத ஆண்டாகவும், 1985 ஆம் ஆண்டினைக் குழந்தைகள் பிறக்காத ஆண்டாகவும் கொள்ள உறுதி எடுத்துக் கொண்டனர். 58 வயதில் ஓய்வு பெறும் நிலையிலுள்ள அரசுப் பணியாளர்கள் அவர்களுடைய 33 ஆம் வயதுக்குப்பின் குழந்தைகளைப் பெற்றெடுக்கக் கூடாது. அவ்வாறு பெற்றெடுப்பதனால் அவர்கள் பணியிலிருந்து ஓய்வடையும் முன் கடைசியாகப் பிறந்த குழந்தைக்குச் சரியான வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுக்க முடியாது என்ற அறிவுரையை அறிந்து அவர்கள் பாராட்டினர். அவ்வாறே பணிபுரியும் மகளிர் குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கு ஏற்ற வயது 20 முதல் 25 வயது வரையாகும் என்றும், ஒரு பெண் 25 வயதில் அல்லது 25 வயதுவாக்கில் கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்து கொள்வாரேயானால் பிறந்த குழந்தைக்காகக் கண்விழித்து சொல்லலொணாத் துன்பம் அடைவதிலிருந்து தப்பித்து அவருடைய பணியில் முழுக் கவனம் செலுத்த முடியும் என்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. பொது மக்களுக்கான இத்தகைய தனி அறிவுரைச் செய்திகள் வெவ்வேறு வகைத் தொழிலாளர்களிடையே பேரார்வத்தை ஏற்படுத்தியுள்ளதோடு திட்டமிட்ட குடும்ப நலக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளுவதற்கு ஒரு தூண்டுகோலாய் அமையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**திரைப்படங்கள் தயாரித்தல்**

குடும்பநலம் தொடர்பான பல்வேறு தலைப்புகளில் 15.15 இலட்சம் ரூபாய் செலவில் 12 வண்ணத் திரைப்படங்கள் மாநில அரசு தயாரித்து, வர்த்தக ரீதியான திரைப்படக் கொட்டகைகள் மூலம் திரையிடப்படுவதற்காக வெளியிட்டுள்ளது. திரைப்படம் காண்போரிடம் நன்மை பயக்கும் பழக்க வழக்கங்களை உருவாக்கத் திரைப்படம் பெருமளவில் துணை புரிந்துள்ளது என்பதையும் அதனால் பொது மக்களிடையே திட்டமிட்ட குடும்பக் கோட்பாட்டை வளர்க்கும் வாய்ப்பு பெற்றுள்ளது என்பதையும் அரசு உணர்ந்துள்ள காரணத்தால் இவ்வாறு செய்கிறது.





**ஒன்று பெற்றால் ஒளி மயம்**
**அதிகம் பெற்றால் அல்லல் மயம்**

**சிறந்த முழுநீளத் திரைப்படங்களுக்கும் நாடகங்களுக்கும் பரிசுகள் வழங்குதல்**

சிறந்த பரிசுகள் கொடுப்பதன் மூலம் முழு நீளத் திரைப்படம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் 'சிறு குடும்பக் கோட்பாடு' அல்லது 'திட்டமிட்ட குடும்பக் கோட்பாடு' ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் பிரதிபலிக்கும் திரைப்படங்களைத் தயாரிக்க ஊக்கமளிப்பதெனத் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது. அதற்காகக் கீழ்க்கண்டவாறு பரிசுகள் வழங்குவதன் மூலம் மேற் சொன்ன கோட்பாடுகளைப் பிரதிபலிக்கும் வகையில் நாடகங்கள் தயாரிக்க நாடகக் குழுக்களை ஊக்குவிப்பதெனவும் அரசு முடிவு செய்துள்ளது.

**சிறந்த திரைப்படங்களுக்கான பரிசுகள்**

| | |
|---|---|
| அ) சிறந்த திரைப்படத்திற்கான பரிசு | ரூ. 1,00,000 |
| ஆ) இரண்டாவது சிறந்த திரைப்படத்திற்கான பரிசு | ரூ. 50,000 |
| இ) மூன்றாவது சிறந்த திரைப்படத்திற்கான பரிசு | ரூ. 25,000 |
| மொத்தம் | ரூ. 1,75,000 |

**சிறந்த நாடகங்களுக்கான பரிசுகள்**

| | |
|---|---|
| அ) சிறந்த நாடகத்திற்கான பரிசு | ரூ. 15,000 |
| ஆ) இரண்டாவது சிறந்த நாடகத்திற்கான பரிசு | ரூ. 10,000 |
| மொத்தம் | ரூ. 25,000 |

இம்மாநிலத்தில் குடும்பநலத் திட்டம் கீழ்க்காணும்ஐந்து அடிப்படைகளைக்கொண்டு சீரான முறையில் செயற்படுத்தப்படுகிறது.

1. தகவல் தொடர்பு
2. குடும்பநலக் கல்வி
3. பணிகள்
4. தொடர் திட்டங்கள்
5. மகப்பேறு குழந்தை நலத் திட்டங்கள்.

இம்மாநில மக்களிடையே தகவல் தொடர்பு அமைப்பை உருவாக்க இந்த சீரான நடைமுறை வழி வகுக்கிறது. இத்திட்டத்தின் குடும்ப நலக் கல்வியம்சத்தில் கருத்தடைச் சாதனம் முதலியவற்றின் உபயோகம் குறித்துப் போதிப்பதற்கான பயிற்சிச் சாதனங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்[illegible] அதே சமயத்தில் பல்வேறு குடும்ப[illegible]களை ஏற்றுக் கொள்ளத் தயா[illegible]களுக்கு நிறுவன அடிப்படை[illegible]வசதிகளைச் செய்து கொடுப்பதும் [illegible]களில் அடங்கும்.

தொண்டு பணி நிறுவ[illegible]ங்களின் உறுப்பினர்கள் (மகளிர்) மருத்[illegible]க்கு குறிப்பாக மகப்பேற்றுக்குப் பிந்திய அறுவைச் சிகிச்சை நிலையங்களில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளத் தயாராக உள்ளவர்களைக் கண்டு அவசியமான உதவிகளைச் செய்ய முன் வந்துள்ளனர். சமூகத்தின் இத்தகைய நடுத்தர மேல்நிலை மக்களின் புதிய அணுகுமுறை சமூகத்தின் நலிந்த பிரிவினர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளப் பெருமளவில் ஊக்கமளிக்க உதவுகிறது. கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களின் இல்லங்களுக்கு இம்மகளிர் தொண்டர்கள் தொடர் சேவை புரியச் செல்கின்றனர். கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கும் பிந்திய அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்யும் வகையில் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் மருத்துவ நிலையத்திற்குமிடையே ஒரு பாலமாகச் செயல்படுகின்றனர். இது ஒரு புதுமைத் திட்டமாகும். இத்திட்டம் சென்னை மாநகரிலுள்ள அரசின் பெரிய மகப்பேறு மருத்துவமனைகள் சிலவற்றில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.


கருத்தடை அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய திட்டம் கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்து கொண்டவர்களின் நலன் மட்டுமின்றி அவர்களின் குழந்தை குறைந்த பட்சம் ஐந்து வயதேனும் அமையும் வரை அவர்களுடைய தேவைகளையும் கவனித்துக் கொள்கிறது. மகப்பேறு குழந்தை நலத் திட்டமானது, குடும்பநலத் திட்டத்தின் துணைத் திட்டமாகும். அதை ஒழுங்காகச் செயற்படுத்தினால் குடும்பநலத் திட்டம் வெற்றி பெறுவது உறுதி.

**நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளில் குடும்பநலம் மற்றும் தாய்சேய் நலப்பணிகள் தீவிரப்படுத்தும் திட்டம்:**

நகர்ப்புறக் குடிசைப்பகுதிகளில் குடும்ப நலம் மற்றும் தாய்சேய் நலப் பணிகளைத் தீவிரப்படுத்தும் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 15 நகராட்சிகளும் 3 மாநகராட்சிகளும் மற்றும் 2 நகரியங்களும் சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்படுவதற்குத் தகுதி பெற்றுள்ளன. இது வரையிலும் 6 நகராட்சிகளிலும் மற்றும் சென்னை நகரின் ஒரு பகுதியிலும் ஆக மொத்தம் 53 சுகாதார மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு வகையிலும் குடும்ப நலத் திட்டத்தின் வெற்றிக்கு உழைத்து வரும் தமிழக அரசு 1986 ஆம் ஆண்டினைத் திட்டமிட்ட குடும்ப ஆண்டாக அறிவித்துத் தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. மத்திய அரசின் முதல் பரிசாக ரூ. 2.5 கோடி 1984-85 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் குடும்ப நலத்திட்டச் சாதனைக்[illegible] வழங்கப்பட்டது. தொடர்ந்து தமிழ்[illegible] இரண்டாவது முறையும் முதலிடம் பெற்[illegible]து குறிப்பிடத்தக்கது. இத் தொடர் [illegible]றிக்குக் காரணம் மாண்புமிகு முதல்வர் [illegible]க்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அளித்து வரும் [illegible]சனைகளும் ஊக்கமும், ஈடுபாடுமே [illegible]

**(குடும்ப நலத் துறை)**



• 'டாப்கோ' தலைவரும், நிர்வாக இயக்குநரும்' மகளிர் ஊழியர் ஒருவரின் மனைவியிடம் குடும்பநல நிதி வழங்கல்.

ஏழை விவசாயிகளைக் கோழி வளர்ப்புப் பண்ணைகளில் ஓராண்டிற்குத் தினக்கூலி அடிப்படையில் வேலைக்கு அமர்த்தி அதன் மூலம் பயிற்சி அளித்து பயிற்சிக் காலம் முடிந்தபின் அவர்கள் தனியாகக் கோழிப் பண்ணைகளைத் தொடங்க வங்கிக் கடன் மற்றும் அரசின் மான்யத்தோடு 'உதவத் திட்டமிடப்பட்டுள்ளது.

கோழி முட்டை, இறைச்சி உற்பத்தியைப் பெருக்குவதோடு, அவைகளை நவீன முறையில் விற்பதற்காக, விற்பனை நிலையங்கள் பல முக்கிய நகரங்களில் வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டத்தின் கீழ் அமைக்கப்படவிருக்கின்றன.

''ஆதிதிராவிட நலச் சிறப்புத் திட்டம் செங்கற்பட்டு,வட ஆர்க்காடு மற்றும் மதுரை மாவட்டங்களில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் 100 கோழிகள் கொண்ட பிராய்லர் கோழிப் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 'டாப்கோ' இதுவரை சுமார் இத்தகைய 300 பிராய்லர் பண்ணைகளுக்கு மான்ய உதவி அளிக்கத் திட்டமிட்டு, அதன்படி 250 பண்ணைகளை அமைத்துள்ளது. மீதமுள்ள பண்ணைகள் இந்த நிதியாண்டின் இறுதிக்குள் நிறுவப்பட்டு விடும். இத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் விவசாயிகள் 50 சதவிகித ரொக்க மான்யம் பெறுகிறார்கள். மேலும் அவர்களுக்குக் கோழிப் பண்ணைகள் அமைக்கும் முன்பு, தக்க பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த பயிற்சிக் காலத்தில் நபருக்கு ரூபாய் 150 வீதம் உதவித் தொகையும் அளிக்கப்படுகிறது. இந்தப் பண்ணை மூலம் ஒவ்வொரு விவசாயியும் ரூ.170 முதல் ரூ.200 வரை கூடுதல் மாத வருமானம் பெறுகின்றனர். இத் திட்டத்தின் கீழ் இதுவரை 7.70 இலட்சங்கள் அரசு மான்யமாக வழங்கப்பட்டுள்ளது என்றார் 'டாப்கோ'வின் தலைவர் திருமதி கே.ஆர். ஆர்.கல்யாணி.

முட்டையிடும் 100 கோழிகளைக் கொண்ட சுமார் 3,100 பண்ணைகள் சிறப்புக் கால்நடை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரை தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை 63.5 லட்சம் அரசின் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. 1985-86ஆம் ஆண்டில் 'டாப்கோ' ரூ. 6.39 இலட்சம் வரை சுமார் 600 விவசாயிகளுக்கு கோழிவளர்ப்புக்காக மானியமாக வழங்கியுள்ளது.

### எதிர்காலத் திட்டம்

1986-87ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சம் செலவில் தீவனப் பரிசோதனை நிலையம் ஒன்று ஈரோட்டில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் நலிவடைந்த சமூகத்தினருக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பினை உருவாக்கும் பொருட்டு,தொழில் பேட்டைகளைப் போன்றே கோழி வளர்ப்புப் பேட்டைகளும் நிறுவத் திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்கான அடிப்படை வசதிகள் சமூக நலத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்களிலிருந்து நிதி உதவி பெற்று செய்துதரப்பட, திட்டமிடப்பட்டுள்ளது.

''பிராய்லர்'' இன இறைச்சிக் கோழிகளை சென்னை வாழ் நுகர்வோரிடையே அறிமுகம் செய்து பிரபலப்படுத்தி விற்பனை செய்து வரும் இந்நிறுவனம் தற்போது சுவைமிக்க ஜப்பானியக் காடைகளையும், சென்னையிலே அறிமுகம் செய்துள்ளது. பெருகிவரும் இவ் விறைச்சியின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் தற்போது இக் காடைகளையும் இந்நிறுவனம் வளர்த்து விற்பனை செய்து வருகிறது.

கூடிய விரைவிலேயே முயல்களை வளர்த்து இவ்விறைச்சியை விற்பனை செய்வதுடன் வாத்து இறைச்சியையும்விற்பனை செய்யவும் ஒரு திட்டமிருக்கிறது.

இந்நிறுவனம் 1984-85ல் சுமார் ரூ. 5 இலட்சமும், 1985-86ல் சுமார் ரூ. 18 லட்சமும் இலாபம் ஈட்டியுள்ளதாகத் தெரிகிறது.

"நடப்பாண்டிலும் இன்னும் வரக்கூடிய ஆண்டுகளிலும் மேற்கூறியுள்ளது போன்ற பல திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதன் மூலம் இந்நிறுவனம் மேலும் இலாபம் ஈட்டக்கூடிய வாய்ப்புள்ளது'' என்றார் நிர்வாக இயக்குநர் திரு கே.அலாவுதீன், இ.ஆ.ப. அவர்கள்.

'டாப்கோ' நிறுவனத்திற்கு தனிப்படத் தலைவர் பதவி 1982 ஆம் ஆண்டில் தான் தோற்றுவிக்கப்பட்டது. திருமதி கே.ஆர். ஆர். கல்யாணி அவர்கள் தான் இதன்முழுநேரத் தலைவராக முதன் முதல் பொறுப்பேற்றவராவார். அதற்கு முன்பெல்லாம் வேளாண்மைத் துறையின் ஓர் அங்கமாகவே தனித் தலைமையின்றி இந்நிறுவனம் விளங்கி வந்தது.

—பி.எல். ராஜேந்திரன்



# குழந்தைத் தொழிலாளர் நலன் காப்போம்

சிவகாசி நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிவகாசி, சாத்தூர், வெம்பக்கோட்டை ஒன்றியங்கள் மற்றும் சிவகாசி, சாத்தூர் நகராட்சிப் பகுதிகளில் சிறிதும் பெரிதுமாக சுமார 2500 தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களில் குழந்தைகள் மட்டும் சுமார் 45,000 எனவும் மீதம் உள்ளவர்களிலும் பெரும்பான்மையோர் பெண்களே எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. நமது நாட்டில் தீப்பெட்டித் தேவையில் 70%சிவகாசிப் பகுதியிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு விற்பனையாகிறது. நீண்ட வேலை நேரம், சுகாதாரமற்ற— பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை, குறைந்த ஊதியம், உயிருக்கும் உடலுக்கும் ஊறுவிளைவிக்கும் வேலைகள் - இவை தான் இத் தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் குழந்தைகள் மற்றும் பெண்களின் நிலையமாகும்.

தீப்பெட்டித் தொழிற்சாலையில் பணிபுரியும் மக்களை இந்த அவலநிலையிலிருந்து மீட்க, ஒரு சமூக நலப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ( SJAD ) மாநில அரசு, உலகக் குழந்தைகள் நல நிறுவனம் ( UNICEF ) ஆகியவற்றின் உதவியுடன் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் இப்பொழுது மக்களுக்குப் பயன்பட்டு வருகிறது. இத்திட்டம் 1984-85ஆம் ஆண்டு முதல் 1986-87 முடிய 3 ஆண்டுகளில் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி முறைசாராக் கல்விக்காக ரூ. 22 இலட்சமும், வடிகால் சாக்கடைகள் அமைத்தலுக்காக ரூ. 14.32 லட்சமும், தொழிற்சாலைகளுக்கு அருகில் குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ. 39.30 லட்சமும் ,சிறிய சுகாதார நிலையங்கள் அமைக்க ரூ.6 இலட்சமும்,அரசு மருத்துவமனையில் குழந்தைகள்மருத்துவப்பிரிவு அமைக்க ரூ. 5.16 லட்சமும், சத்துணவு, சத்துணவு விளக்க மையங்களுக்காக ரூ. 4.30 லட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

குழந்தை மற்றும் பெண்தொழிலாளர் நலத்தில் மேலும் முன்னேற்றம் காணச் செய்ய, மத்திய தொழிலாளர் நலத்துறையின் இரு நபர் குழு, இப்பகுதிக்கு வருகை தந்து தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டது. அதையொட்டி, குழந்தை, பெண் தொழிலாளர்களின் நலத்திற்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்று, ரூபாய் 50கோடி மதிப்பீட்டில் உருவாக்கி அதனை காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தமிழ்நாடு அரசுக்குச் சமர்ப்பித்தார். திட்டத்தைப் பரிசீலனை செய்து, இப்பொழுது ரூ. 13.89 கோடி மதிப்பீட்டில் தேசிய குழந்தைகள் நலத்திட்டத்தை சிவகாசிப் பகுதிக்கு மத்திய அரசு அனுமதித்துள்ளது.

இந்த, தேசிய குழந்தை தொழிலாளர்கள் நலத்திட்டத்தின் துவக்க விழாவும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக அச்சகக் கட்டடக் கால்கோள் விழாவும் சிவகாசியில் 20,4.86 அன்று மாண்புமிகு நிதி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நாவலர் டாக்டர் இரா.நெடுஞ்செழியன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு மத்திய அரசு தொழிலாளர் நல ராஜாங்க அமைச்சர் திரு பி.ஏ.சங்மா அவர்கள் திட்டத்தைத் துவக்கி வைத்தும், அச்சகத்திற்குக் கால்கோள் நாட்டியும் சிறப்புரையாற்றினார். அப்பொழுது, ''அகில இந்திய அளவில் தீப்பெட்டி, பட்டாசு தொழிற்சாலைகள், பீடித் தொழிற்சாலைகள், சிற்றுண்டி மற்றும் உணவு விடுதிகளில் குழந்தைகள் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களது வாழ்க்கையில் மறுமலர்ச்சி ஏற்படவும், அவர்களது குடும்பங்களின் வருமானத்தைப் பெருக்கவும், மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் இத்திட்டம் துவங்கப்படுகிறது. இத்திட்டம் அகில இந்திய அளவில் ஒரு சிறிய முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின் வெற்றி, தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், மற்றும் தொழிலாளர்களின் கையில் உள்ளது. இத்திட்டம் வெற்றி பெறத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள், தொழிலாளர்கள் ஆகியோர் உதவிட வேண்டும். மேலும் இத்திட்டம் செம்மையாகச் செயல்படத் தொழிற்சாலை உரிமையாளர்களே நிதி உதவி செய்ய வழிவகை செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வரப்படும்'' என்று தெரிவித்தார்.




குழந்தைகள் மற்றும் பெண்கள் தீப்பெட்டித் தொழிலை மட்டுமே சார்ந்திருக்கும் நிலையினைக் குறைப்பதற்கும், அவர்களுக்கு வருமானத்தைப் பெருக்க வேறு பல திட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதற்குமான ஒருங்கிணைந்த ஒரு திட்டமாகும். முழுவதும் குழந்தைகளே வேலை செய்து குடும்பத்தைக் காக்கும் நிலையினை மாற்றி, குழந்தைத் தொழிலாளர்களின் பெற்றோர்களுக்குக் கூடுதல்

வருமானம் கிடைக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தி, இக் குழந்தைகள் பள்ளிகளுக்குச் சென்று, பயின்று நல்லதொரு எதிர்காலம் பெற்ற குடிமகனாக அவர்களை மாற்றுவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆகும். இவர்களின் உடல் நலத்தைப் பேணிக் காக்கவும், இவர்களுக்கு முறைசாராக் கல்வி வசதி அளிக்கவும் வேலை விதிமுறைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தவும் இத்திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தினரின் வருமானத்தை, தற்போது நடைபெறும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை உறுதித் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலமாகவும், மத்திய மாநில அரசுகளின் வேறு பல புதிய வேலைவாய்ப்புத் திட்டங்கள் மூலமாகவும் அதிகரிப்பது குழந்தைத் தொழிலாளர்களுக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் முறைசாராக் கல்வி வசதியளித்தல், இவர்களுக்கு நல்ல சுகாதார, மருத்துவ வசதிகள் செய்தல், குழந்தைத்தொழிலாளர்களின் வேலையின் தன்மையும் வேலையின் விதி முறைகளையும் அபிவிருத்தி செய்தல், குழந்தைத் தொழிலாளர்களுக்குத் தினசரி ஒரு வேளை சத்துணவு வழங்கி, அவர்களின் உடல் நலத்தை முன்னேற்றுதல், இவர்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றம் செய்வது குறித்துப் பொதுமக்களின் நல்லெண்ணத்தைத் தட்டி எழுப்புதல் ஆகிய நோக்கங்களுடன் இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

மொத்தத் திட்ட மதிப்பீடாகிய ரூ. 13.89 கோடியில், ரூ. 9.10 கோடி மட்டும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம், மற்றும் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் ஆகியவற்றில் இவர்களின் வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. வருமானத்தையும், வேலைவாய்ப்பினையும் ஏற்படுத்தும் இத்திட்டங்களின் மூலம், குறைந்த வருமானத்தில் உள்ள இந்தக் குடும்பங்களின் சமூக-பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படுவதுடன், குழந்தைகளை இத்தொழிலில் ஈடுபடுத்துவதையும் கணிசமாகக் குறைக்கவும் வழிவகுத்தல். குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தினரின் சமூக-பொருளாதார நிலை உயர்ந்தால், குழந்தைகளை வேலைக்கு அனுப்பும் அவலநிலை குறையும் என்று நம்பலாம்.

மத்திய, மாநில அரசுகள், குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தினரின் வருமானத்தை பெருக்குவதற்கு மட்டும் தனியாக 19 தொழில்கள் வகைப்படுத்தப்பட்டு, துவங்கப்பட உள்ளன. ரூ. 52 லட்சம் மதிப்பீட்டில் சிவகாசியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தினரால் பெண்களுக்காகத் துவக்கப்படும் அச்சுக் கூடத்திற்கு இவ்விழாவில் மத்திய தொழிலாளர் நல அமைச்சரால் அடிக்கல் நாட்டப்பட்டது. இந்த அச்சகத்தில் மொத்தம் 150 பெண்கள் பணிபுரிவார்கள். இவர்களில் 75 பேர் உடல் ஊனமுற்றோர்கள். 75 பேர்கள் குழந்தைத் தொழிலாளர்களின் குடும்பத்தை சேர்ந்த பெண்கள்.




இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு ''தேசிய குழந்தைத் தொழிலாளர்கள் நலக் கூட்டுறவுச் சங்கம் -சிவகாசி'' என்ற பெயரில் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவைதவிர நடப்பு ஆண்டில் இன்னும் 10 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கப்பட உள்ளன.

**எஸ். தீனதயாளன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**காமராஜர் மாவட்டம்.**



# நில அளவை மற்றும் பதிவேடு துறைகள் கண்டுவரும் மேம்பாடு

நில அளவை மற்றும் நிலவரித் திட்ட இயக்குநர் நிலஅளவை மற்றும் நிலப்பதிவுருக்கள் பிரிவிற்குத் தலைவர் ஆவார். அவருக்கு உதவுவதற்கு ஒரு கூடுதல் இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மூன்று மண்டலத் துணை இயக்குநர்களும், இவர்களின் கீழ் மாவட்ட நிலஅளவை அலுவலகங்களில் பணியாற்றும் 19 உதவி இயக்குநர்களும், 10 தனி உதவி இயக்குநர்களும் உள்ளனர்.

**பணி**

நிலஅளவை மற்றும் நிலப்பதிவேடுகளைப் பராமரித்தல் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள கிராமம் மற்றும் நகர்ப்புறங்களுக்குரிய படங்களைத் தயாரித்து அவற்றைப் பராமரிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். நகரத்திலுள்ள பகுதிகளிலும், விவசாயப் பகுதிகளிலும் தேவைக்கேற்ப மூல அளவை, மறுஅளவை அல்லது துணை அளவை இத்துறையில் மேற்கொள்ளப்படுகிறது. அவ்வாறு அளவை செய்து கிராமப் படங்கள், வட்டப்படங்கள், மாவட்டப் படங்கள் மற்றும் நகரப்படங்கள் தயாரிக்கப்படுகின்றன.

**வரை படப் பிரிவு**

நிலஅளவை மத்திய அலுவலகத்தில் உள்ள வரைபடப் பிரிவின் முதன்மையான பணி கிராமம், நகரம் மற்றும் தெருப் பஞ்சாயத்துக்களின் படம் மற்றும் வட்ட, மாவட்ட, மறு பதிப்புப் படம் தயாரிப்பதாகும். தற்போது நாட்டில் நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத்திட்டம் அமல்படுத்தப்பட்டு, இதில் சம்பந்தப்பட்ட கிராமங்களுக்கான கிராமப்படங்களை இன்றைய நிலவரத்திற்கேற்ப மறுபதிப்புச் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணியில் அளக்கப்பட்ட 3,397 கிராமங்களின் படங்களை மாவட்டங்களிலிருந்து பெற்று மறுபதிப்புத் தயாரித்து அச்சிடப்பட்டு பராமரிப்புக்காகச் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றில் 844 கிராமங்களின் படங்கள் தயாரிப்பும், பதிவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதைத் தவிர 27 பஞ்சாயத்துக்களுக்குப் படங்கள் அச்சிடப்பட்டு பராமரிப்பிற்காக வழங்கப்பட்டன.

**போட்டோ சிங்கோ அச்சகம்**

போட்டோ லித்தோ கிராபி உத்திகளைக் கையாண்டு, அரசுத் துறைகளுக்குத் தேவையான படங்கள், பட்டியல் முதலானவற்றையும் கிராம, வட்ட மற்றும் நகரப் படங்கள் கருப்பு மற்றும் ஆறு வண்ணங்களிலும் மறு பதிப்புச் செய்து அச்சிடுவது போட்டோ சிங்கோ அச்சகத்தின் முதன்மையான பணியாகும். இதைத்தவிர, அரசின் பிற துறைகளுக்கும் உள்ளாட்சித்துறை மற்றும் பிற மாநிலங்களின் அரசுகளாலும் கேட்கப்படும் படங்களை அச்சிட்டுத் தரும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

**நிலஉடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம்**

மறு நிலஅளவை மேற்கொள்ளப்படாததால் நிலஅளவைப் பதிவு ஆவணங்களை

## மின்சாரம்

மின்சாரம் இல்லாத கிராமம் இன்று தமிழகத்திலே இல்லை. இந்தச் சாதனையை நிறைவேற்றிய தமிழ்நாடு அரசு $7\frac{1}{2}$ லட்சம் குடிசைகளுக்கு இலவசமாக ஒளியூட்டியிருப்பது புரட்சிகரமான ஒரு சாதனையாகும். ஏழை எளியவர்களின் இல்லங்களுக்கும், அவருடைய உள்ளங்களுக்கும் ஒளியூட்டி வருகிற இவ்வரசு இவ்வகையில் இந்திய மாநிலங்களின் ஒளிவிளக்காக விளங்கி வருகிறது. 10,74,184 பம்பு செட்டுகளுக்கு ஆற்றலைத்தந்து, 26,211 ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு வெளிச்சம் அளித்து வருகிறது தமிழ்நாடு அரசு.



**இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 30.4.1986 வரை செய்து முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம் வருமாறு**

| | கிராமங்களின் எண்ணிக்கை | பரப்பளவு ச.கி.மீ. |
|---|---|---|
| மொத்தப் பரப்பளவு | | |
| அளக்கப்பட்ட பரப்பளவு | 9,942 | 70,485 |
| தூயகணக்குகள் ஒப்படைக்கப்பட்ட பரப்பு | 9,942 | 70,485 |
| பட்டா வழங்கப்பட்ட பரப்பு | 9,942 | 70,485 |
| மத்திய நிலஅளவை அலுவலகத்திற்கு ஆவணங்கள் அனுப்பப்பட்ட பரப்பு | 9,942 | 70,485 |
| 13வது இறுதி விளம்பரம் செய்யப்பட்ட பரப்பு | 9,269 | 64,843 |
| அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை | 9,383 | — |
| புதுப்பிக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை | — | 86,59,167 |
| தெரிவிக்கப்பட்ட ஆக்கிரமிப்புகளின் எண்ணிக்கை | — | 25,60,962 |
| அளந்து குறிக்கப்பட்ட விளக்கிகளின் எண்ணிக்கை | — | 85,213 |
| முடிக்கப்பட்ட ஆட்சேபணைகளின் எண்ணிக்கை | — | 7,04,104 |
| தரமாற்றம் தேவையினை அறிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | — | 2,65,703 |
| வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை | — | 28,207 |
| பயனடைந்தோரின் எண்ணிக்கை | — | 73,34,000 |
| | — | 1,09,44,518 |

**இரண்டாவது கட்டமாக 49 வட்டங்களில் 30.4.1986 வரை இத்திட்டத்தின் கீழ் செய்து முடிக்கப்பட்ட பல்வேறு பணிகளின் விவரம்**

| | கிராமங்களின் எண்ணிக்கை | பரப்பளவு- ச.கி.மீ. |
|---|---|---|
| மொத்த பரப்பளவு | | |
| அளக்கப்பட்ட பரப்பளவு | 4,961 | 27,857 |
| பட்டா வழங்கப்பட்ட பரப்பு | 934 | 5,964 |
| அளக்கப்பட்ட உட்பிரிவுகளின் எண்ணிக்கை | 3 | 6 |
| புதுப்பிக்கப்பட்ட கற்களின் எண்ணிக்கை | 5,68,946 | |
| ஆக்கிரமிப்புகள் தெரிவிக்கப்பட்ட எண்ணிக்கை | 58,749 | |
| அளந்து குறிக்கப்பட்ட விளக்கிகளின் எண்ணிக்கை | 5,674 | |
| முடிக்கப்பட்ட ஆட்சேபணைகள் எண்ணிக்கை | 58,605 | |
| தரமாற்றம் தேவையினை அறிவிக்கப்பட்ட இனங்களின் எண்ணிக்கை | 90 | |
| வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை | 1,671 | |
| பயனடைந்தோரின் எண்ணிக்கை | 19,411 | |
| | 28,939 | |


இன்றைய நிலைக்கேற்ப மாற்றி அமைப்பது மிக அவசியமென உணரப்பட்டது. இந்த நோக்கத்தை குறைந்த செலவிலும், குறைந்த கால அளவிலும் அடைவதற்கு நிலவுடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டம் 1979-ஆம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கிராமத்திலுள்ள எல்லாப் பயிர்விளை நிலங் களிலும் துணை அளவை மேற்கொள்ளப்பட் டது. இதில் புலங்களுக்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட வெளி எல்லையை எதுவும் மாற்றாமல், புலத்தில் அடங்கியுள்ள புதிய உட்பிரிவுக்கு மட்டுமே அளவை செய்யப் பட்டது. மேலும் துணை நிலஅளவையையும், வருவாய்த் தொடர் பணியையும் ஒருங்கே இணைத்து நிலஅளவைக்கென ஏற்படுத்தப் பட்ட அலுவலகத்திலேயே நிலஅளவைத் துறை அலுவலர்களைக் கொண்டு ஒரு நில அளவை ஆய்வாளர் மற்றும் தனி வட்டாட்சி யர் ஆகியோரின் தலைமையின் கீழ் இத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு புலத்திலும் மேற்கொள்ள வேண்டிய மற்றும் பரிசீலனையில் காணாமல் போன கற்களைப் புதுப்பித்தும் புதிய விளக்கிகள் மற்றும் தேவையான புதிய உட் பிரிவுகள் அளக்கப்பட்டும் 'அ' பதிவேடு, சிட்டா, அடங்கல், புலப்படச்சுவடி, கிரா மப் படம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொண்டு அவை புதிதாகத் தயாரிக்



கப்பட்டன. இப்புதிய ஆவணங்களின் அடிப் படையில் ஒவ்வொரு பட்டாதாரரும் அவரது அனுபவத்தில் உள்ள நிலத்தைக் குறித்து விவரங்களுடன் நிலத்தின் தோராய படத் துடன் புதிய பட்டா வழங்கப்பட்டது. வழங் கப்பட்ட பட்டாக்களில் ஏதேனும் தடைகள் கள் இருப்பின் அதனைக் கேட்டறிந்து, ஆவணங்கள் சரி செய்யப்பட்டு, வட்டாட்சி யருக்குப் பராமரிப்பதற்காக வழங்கப்படு கின்றன. இந்த எளிய நடைமுறையினால் கிராமங்களில் ஆவணங்கள் சுமார் 10 மாத காலத்திற்குள் நவீனப்படுத்த இயலுகிறது. அரசின் பல்வேறு துறைகளினின்றும், வங்கி களிலும் அளிக்கப்படும் கடன்கள் மற்றும் இதர உதவிகளை எளிதில் பெறுவதற்கு இத் திட்டம் விவசாயிக்குப் பெரிதும் பயன்படு கிறது.

1979-ஆம் ஆண்டில் நில உடைமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டம் 30 வட்டங் களில் 28 அலகுகளுடன் ஆரம்பிக்கப்பட் டது. 1982-ஆம் ஆண்டு இத்திட்டத்தின் நடைமுறை குறித்து ஆய்வு செய்ததில் இத் திட்டத்தின் பயன் குறித்து திருப்தி அடைந்தபடியால், 1982-ஆம் ஆண்டில் கூடுதல் அலுவலர்களை நியமிக்க அரசு அனுமதி அளித்து, 70,485 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு உள்ள 99 வட்டங்களில் 108 அலகுகள் ஆரம்பிக்கப்பட்டன. முதல் பகுதியாக, களப்பணி 30.9.1985ல் முடிக் கப்பட்டு, அலுவலகத் தொடர் பணி 31.3. 1986ல் முடிவடைந்தது. மத்திய நில அளவை அலுவலகத்திற்கு ஆவணங்கள் அனுப்பப்படுவது 30.6.86ல் முடிவுறும். இத்திட்டம் சுமார் 10,000 ஊழியர்களுக்கு மாதச் சம்பளத்திலும், சுமார் 20,000 நபர் களுக்கு தினப்படியாகவும் வேலை கிடைக்க வழி செய்கிறது.



## தமிழ்நாடு சீட்டுக் கழகம்

தமிழ்நாடு சீட்டுக் கழகம் இந்திய நிறு வனங்கள் சட்டத்தின் கீழ் 1984 ஆம் ஆண்டு ஜனவரி 11-ஆம் தேதியன்று பதிவு பெற்று, 1984 ஏப்ரல் முதல்தேதி முதல், சீட்டுக்களை நடத்தி வருகிறது.

மொத்தம் ரூ. 1,05,000/- மதிப்புள்ள 8 சீட்டுகளுடன் துவங்கிய இச்சீட்டுக் கழகம் தற்போது ரூ.10.32 இலட்சம் சீட்டுத் தொகை யுள்ள 136 சீட்டுக்களை 4000 சந்தாதாரர் களுடன் நடத்துகிறது. தமிழ்ப் புத்தாண்டு நாளிலிருந்து புதிய கிளை ஒன்று சென்னையில் திறக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சீட்டுக் கழகம், அனுபவம் மிக்க முதுநிலை அதிகாரிகளைக் கொண்ட ஒரு குழுவினால் நிர்வகிக்கப்படுகிறது. தனி யார் சீட்டு நிறுவனங்களின் ஊழல்களிலிருந்து பொது மக்களைக் காப்பாற்றுவதே இக்கழகத் தின் முக்கிய நோக்கமாகும். இந்நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பு இயல்புகள் வருமாறு:

- தமிழ்நாடு சீட்டுக் கழகம் சீட்டில் சேருவதற்கு அனுமதித் தொகை உறுப்பினர்களிடமிருந்து வசூலிப்பது இல்லை.
- பிணையம் கொடுத்த மறுநாளே ஏலத் தொகை ஏலம் பெற்றவருக்கு வழங் கப்படுகிறது.
- உறுப்பினர்களுக்கு அவர்கள் சீட்டி லிருந்து நீக்கப்பட்ட பிறகு அவர்கள் செலுத்திய தொகை பிடித்தமின்றி முழுமையாகத் திருப்பித் தரப்படு கின்றது.

இக்கழகத்தின் சந்தாதாரர்களில் பெரும் பான்மையோர் அரசு ஊழியர்களும் இதர நடுத்தர வகுப்பைச் சார்ந்த பொது மக்களு மாவர். சமூகத்தில் பல்வேறு பிரிவினரின் நலன் கருதி, பல்வேறு தவணைகள், பல்வேறு சந்தாத் தொகைகள் கொண்ட சீட்டுகள் நடத்தப்பெற்று வருகின்றன. அவை வருமாறு:

| தவணைத் தொகை ரூ | மாதம் | சீட்டுத் தொகை ரூ |
|---|---|---|
| 2500 | 20 | 50,000/- |
| 1000 | 30 | 30,000/- |
| 1250 | 20 | 25,000/- |
| 1000 | 20 | 20,000/- |
| 500 | 30 | 15,000/- |
| 500 | 20 | 10,000/- |
| 250 | 40 | 10,000/- |
| 200 | 30 | 6,000/- |
| 250 | 20 | 5,000/- |
| 125 | 40 | 5,000/- |
| 100 | 30 | 3,000/- |
| 100 | 20 | 2,000/- |
| 50 | 40 | 2,000/- |
| 50 | 20 | 1,000/- |

மத்திய வகுப்பு மக்களின் கஷ்டப்பட்டு உழைத்துப் பெற்ற பணத்தை முதலீடு செய்ய இந்த சீட்டு நிதிக் கழகம் ஓர் உத்தரவாதமான அமைப்பாகும். தனியார் சீட்டு நிறுவனங் களில் பணம் செலுத்துகின்ற உறுப்பினர்கள் தாங்கள் செலுத்தும் பணத்தைத் திரும்பப் பெறலாம் என்கிற நம்பிக்கையை எப்போதும் அடைவதில்லை. ஆனால், தமிழ்நாடு சீட்டுக் கழகம் நடத்தும் சீட்டுகளில் சேருகின்ற பொதுமக்கள் தங்களின் பணத்தைத் திரும்பப் பெறும் உத்தரவாதம் நிச்சயம் என்றும் உள்ளது.

ஆளாது இனிமேல் இந்தக் கொக்கு-அதை
அடித்து விரட்டி ஒட்ட வேணும் பாப்பா-
சோ சோ சோ..'

மூவர்ணக் கதர்க் கொடியையும், கரன்சந்திர மோகனதாஸ் என்ற காந்திமகானையும் அறிமுகப்படுத்தி, சுதேசிக் கப்பல் ஓட்டிய தேசபக்தத் தமிழ்ச் செம்மல் வ. உ. சிதம்பரம் பிள்ளையையும் முன்னிறுத்தி, தேசபக்தர்களுக்கு அறிவுறுத்தும் கதர்க்கப்பல் கொடிப் பாட்டு, நாடக மேடைகளில் ஒலித்து எதிரொலித்து, விடுதலை உணர்வைக் கிளறிவிட ஏதுவாயிற்று:

'கதர்க்கப்பல் கொடி தோணுதே!
கரம்சந்திர மோகனதாஸ்
காந்தி இந்திய சுதேசிக்
கதர்க்கப்பல் கொடி தோணுதே!
பஞ்சத்தைப் பஞ்சால் வெல்வோம்
படையை உடையால் கொல்வோம்
வஞ்சத்தை விட்டகல்வோம்-சன்
மார்க்கத்திலே முயல்வோம்-நன்
மறைபோர்க்கும் காந்தி சிறைமீட்கும்-நம்
மனைவி மக்கள் மானம் காக்கும்
(கதர்க்கப்பல்)

'சிறைக்கு அனுப்பக் கைது செய்யும்வாரண்டு உத்தரவு, கையில் பூட்டும் இரும்பு விலங்குகள் எல்லாம் தேசபக்தர்களுக்குத் துச்சம். சத்தியாக்கிரகம் செய்யப் புறப்பட்டவர்களுக்கு— கலெக்டர்-கடவுளல்ல; கான்ஸ்டபிள்-எமனுமல்ல; சத்தியத்தை எதிர்க்கும் சக்தி -பீரங்கிக் குண்டுக்கு அல்ல; அதற்காக, அகிம்சை, சத்திய வழியிலிருந்து மாறாமல் சாத்விகப் போர்புரிந்து விடுதலை பெறுவோம்'-என்ற உருக்கமான பாடலையும், நாடக மேடையில் அன்று மக்கள் கேட்டு ஆரவாரித்தனர்; உணர்ச்சி பெற்றனர்.

'சிறைக்குள் விருந்து மனமே-களிப்படையும்
சீலர்க்கில்லை விசனமே - எப்போதுமே
கலெக்டரும் கடவுளல்ல-அடிமைப்போலீஸ்
கான்ஸ்டபிள் எமனுமல்ல - உயிரைக்
கொல்ல
நினைத்த சத்தியத்தை வெல்ல-பீரங்கிக்
குண்டு
நீடித்து நிற்குமோ சொல்ல (சிறை)

வாரண்டுத்தாள் இரும்புக் காப்பு
மகிமை நாங்கள் அறிகுவோம் - எம்மை
வந்தெதிர்த்து நிற்பாரோடு-எதுவும்
வம்புதும்பு செய்திடோம் (சிறை)'

வெள்ளையன் ஆட்சியின் கீழ், நாடு அடிமைப் பட்டுக்கிடந்தபோது, விவசாயம், கைத்தொழில் என்ற இரு ஊற்றுக் கண்களுக்கும் ஊனம் ஏற்பட்டு, நாட்டின் பொருளாதார வாழ்வு சீர்கெட்டு நலிந்து போவதை எண்ணி மனமுருகிய பாடல், அன்று நாடகமேடையில் ஒலித்தது.

'அதிசயமே! அதிசயமே!
அன்னியர் நம் இந்தியாவை
அடக்கி ஆள்வதும் பெரும்
அதிசயமே! அதிசயமே!
மதபக்தி தேசபக்தி அற ஒழித்தார்கள்
மஸ்லீன் நெய்தவர் கை விரலறுத்தார்கள்
இதமுறும் விவசாயம் எல்லாம் கெடுத்
தார்கள்





எமன்போல் இந்தியாவில் வந்து
நுழைந்தார்கள் (அதிசயமே)'

நாடு, அந்நியனுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில், காசுக்கு ஆசைப்பட்ட சிலஅடிமைப் பேடிகள், அந்நியனுக்குக் குற்றேவல் புரியும் நிலையில் இருந்ததையும், பட்டம், பதவிகளுக்கு ஆசைப்பட்டு தேசாபிமானமில்லாது வாழ்ந்த நிலையையும் இடித்துரைக்கும் பாடலும் அன்று நாடக மேடையில் முழங்கியது:

'ஊரான் ஊரான் தோட்டத்திலே
ஒருத்தன் போட்டானாம் வெள்ளரிக்காய்
காசுக்கு ரெண்டாக விற்கச் சொல்லிக்
காகிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்!

வெள்ளைக்காரன் பணம் வெள்ளிப்பணம்-
அது
வேடிக்கை காட்டுது சின்னப்பணம்-அந்த
வெள்ளிப் பணத்துக்கு ஆசைப்பட்
டல்லவோ - அவர்
வேசம் குலைஞ்சாரு, வீராயி !

ஆருக்கு தேசாபிமானம் இருக்குதோ
அவனே பெரியவனாம்!
யாருக்குள் அதிகாரம் பதவிகள் வந்தாலும்
பகதூர், சர். ஆனாலும் பெரியவன்
ஆனானோ?(ருக்கு)'

காந்தி அடிகளைப் பற்றி, விஸ்வநாததாஸ், நாடகமேடையில் உருக்கமாகப் பாடியது என் நினைவுக்கு வருகின்றது:

'காந்தி இன்னு சொல்லி ஒரு மகாத்மா
வந்தாரு — கை
ராட்டினத்தில் நூலை நூற்கணு மின்னாரு
சாந்தி வழி சுயராச்சியம் அடைவோ
மின்னாரு - முடிவில்
சத்தியமே வெல்லுமின்னு நித்தம்
சொன்னாரு(காந்தி)


கள்ளுக்குடியை விட்டு, கதர் கட்டச்
சொன்னாரு-அரிசனங்களைக்
கைதூக்கிவிடுவது நம்ம கடமை இன்னாரு
இந்து-முகலீம் என்பவங்க ரெண்டு கண்கள்
இன்னாரு
இந்தியர்கள் நாமெல்லோரும் ஒண்ணு
இன்னாரு(காந்தி)'

இவ்வாறு, செந்தமிழ்ப் பாடல்கள் மூலம், தேசபக்தியை ஊட்டி, விடுதலைக்குத் துணை நின்று, நாட்டுக்கும், கலைக்கும் சிறந்த தொண்டாற்றிய நாடக மேடைக் கலைஞர்கள் நினைவை என்றும் மதித்துப் போற்றுவது நம் கடமையாகும்.

அறிவியல் சாளரம் :

## இரு கண் இயந்திரமனிதன்.

'ரோபோத்' எனப்படும் இயந்திர மனிதனுக்குக் 'கண்' கொடுத்துள்ளனர் அமெரிக்க விஞ்ஞானிகள். சாதாரண மனிதர்களின் கண் பார்வையைப் போலவே இது உள்ளது என்பதுதான் இதன் தனிச்சிறப்பாகும்.



எதிரே இருக்கும் ஒரு பொருளைப் பார்க்க முடிவதுடன், அது எவ்வளவு தூரத்தில் உள்ளது என்பதை நிதானித்து அறியவும் இதனால் சாத்தியமாகும். அதனையடுத்து அந்தப் பொருளை நெருங்குவது பற்றியோ அல்லது அதனை எடுப்பது பற்றியோ இந்த 'ரோபோத்' தீர்மானிக்க முடியும்.


ரோபோத்தின் தலைப்பகுதியில் இரு வீடியோ காமிராக்கள் வைக்கப்பட்டுள்ளன; இந்த இரு காமிராக்கள் மூலம் பெறப்படும் காட்சியை, இதிலுள்ள ஒரு கம்ப்யூட்டர் ஒருங்கிணைக்கிறது. 10 வினாடிகளில் இந்த வேலை முடிந்து விடுகிறது; இதன்மூலம், சாதாரண மனிதர்களைப் போன்ற பார்வையை, ரோபோத் பெறமுடிகிறது.

இத்தகைய 'கண்' படைத்த ரோபோத்களை விண்வெளியில் விண்கலங்களை இணைக்கும் பணியிலும், கடலுக்கு அடியில் செலுத்தப்படக்கூடிய வாகனங்களிலும் பயன்படுத்த முடியும்.

## ஊட்டம் மிகுந்த மாட்டுத் தீவனம்

பயிர் சாகுபடியில் வீணாகி எஞ்சிப் போகின்ற பசுந்தாள், தழை ஆகியவற்றைக் கால்நடைத் தீவனமாக மாற்றக்கூடிய இரசாயன முறையொன்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

கோதுமை, ஓட்ஸ், நெல், பார்லி முதலிய பயிர்களின் கதிர்களிலும் பசுந்தாட்களிலும் 'செல்லோஸ்' இழை வடிவத்தில் ஏராளமான 'கார்போஹைடிரேட்' சத்து உள்ளது. இந்தக் கதிர்களையும் பசுந்தாட்களையும் அப்படியே உட்கொண்டால், இந்தச் 'செல்லுலோஸ்' இழைகளை நேரடியாக முழுமையாக ஜீரணிக்கக்கூடிய சக்தி கால்நடைகளுக்கு இல்லை. ஏனெனில், இந்தச் செல்லுலோசைச் சுற்றிலும் 'லிக்னைன்' எனப்படும் தாவரச்சத்து கோந்து போல ஒட்டிக் கொண்டுள்ளது. கால்நடைகளின் வயிற்றில் ஜீரணப் பணிகளுக்கு உதவும் நுண்ணுயிர்க் கிருமிகள் இந்தச் செல்லுலோசை நெருங்க விடாமல் இச்சத்து தடுத்து விடுகிறது.



எனவே, இந்தப் பசுந்தாட்களையும் கதிர்களையும் ''ஹைடிரஜன் பெராக்சைட்'' கரைசலில் நனைத்துப் பதப்படுத்துகிறார்கள். இந்தக் கரைசல் அப் பசுந்தாட்களின் 'லிக்னைன்' என்னும் தாவரச்சத்தை அறவே கரைத்து விடுகிறது. அதன்பிறகு அவற்றைத் தீவனமாக மாற்றுகிறார்கள்.

அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் இந்த நவீன முறையைக் கண்டுபிடித்திருக்கிறார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

# தருமபுரியில் பழைய ஓலைச்சுவடிகள்

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை தருமபுரி அருங்காட்சியகம், அண்மையில் பழைய தருமபுரியில் சில ஓலைச்சுவடிகளைச் சேகரித்தது. 'மதிகெட்டான் நாடகம்' என்ற சுவடியும் அவற்றில் ஒன்றாகும். 38 ஏடுகளைக் கொண்ட இந் நாடகம் இதுவரை அச்சில வராத நாடகமாகும். 'நொண்டி நாடகம்' போன்ற அமைப்பில் இந் நாடகம் இருந்தாலும் இது சில தன்மைகளில் மாறுபட்டுள்ளது.

கதாநாயகன் குந்தி மகாராசன் கோயில் தலங்களைத் தரிசிக்கச் செல்கிறான். திருவந்தூரில் (திருவொற்றியூர்) வல்லி என்ற தாசி வலையில் விழுந்து பொன் பொருள் யாவும் இழந்து தாசியினால் விரட்டியடிக்கப்பட்ட நிலையில் நாடக மேடையில தோன்றுகின்றான். நாடகம் நடிக்கும் நடிகர்கள் மேடையில் வந்த குந்தி மகாராசனின் கோலத்தைக் கண்டு அவனை எள்ளி நகையாடி விரட்ட முனைகின்றனர். நாடக நடிகர்களுடைய வினாக்களுக்குக் குந்தி மகாராசன் அறிவுபூர்வமாக விடையளிக்க, நாடக நடிகர்கள் குந்தி மகாராசனின் கடந்த கால வரலாற்றைக் கேட்கின்றனர்.

குந்தி மகாராசன் திருவொற்றியூர் தாசியிடம் தான் கொண்டிருந்த காமத்தை வருணிக்கிறான். காம விகாரத்தால் அறிவிழந்த தன்னை ''மதிகெட்டான்'' என்றே கூறிக் கொள்கிறான். இந்த நிலையிலும் வல்லியை மறக்க முடியாமல் வேதனைப்பட்டு, தன் மந்திரி செல்லப்பனை நோக்கி தியானிக்க, செல்லப்பன் மதிகெட்டான் முன் தோன்றுகிறான். மந்திரியிடம் தாசியை எப்படியாவது அழைத்து வருமாறு வேண்டுகிறான்.

மந்திரியும் ஆசைவார்த்தை கூறி வல்லியை மதிகெட்டான் முன் அழைத்து வருகிறான். அவளோ பணமின்றி மதிகெட்டானுடன் இணங்க மறுக்கிறாள். இறுதியாக ''தாசியை நம்பி மோசம் போகவேண்டாம்'' என உலகத்தாருக்கு மதிகெட்டான் அறிவுரை வழங்குகிறான்.



இந்த மதிகெட்டான் நாடகம் கூவைப்புலவன் என்ற பஞ்சலோகத்தைச் சேர்ந்தவனால் இயற்றப்பட்டது. 'கூவம்' சென்னைக்கருகில் உள்ள ஊராகும். கதைத் தலைவி வல்லியும் சென்னைக்கருகில் உள்ள திருவொற்றியூர் தாசியாகும். மேலும் ''திருப்போரூர் முருகன்'' பல இடங்களில் போற்றப்படுகிறான். நாடகம் எழுதப்பட்ட காலத்தில் இருந்த குறுநில மன்னன் பெயரும் நாடகத்தில் வருகிறது. சென்னகேசவன் எனும் சென்னப்பன் என்றும் அவன் பெயரைப் பார்க்கிறோம். சென்னைப் பட்டினமும் குறிப்பிடப்படுகிறது.

மதிகெட்டான் நாடகமே திருவொற்றியூர் அந்திகாப்பினில தொடங்குகிறது. கதைத் தலைவன் அயோத்திப் பட்டினத்திலிருந்து தான் புறப்படுகிறான். இவ்வூரும் சென்னையில் உள்ளதை நாமறிவோம். மேலும் சென்னையைச் சுற்றி பவழககாடு திருப்பாலை, வாழைப்பந்தல், திருக்காளத்தி, காஞ்சிபுரம், ஆர்க்காடு, வேலூர், விரிஞ்சிநகர், கலசப்பாககம், திருப்பதி, போளூர், வந்தவாசி, செய்யூர், மரக்காணம், நரிமேடு, செஞ்சி, மதுராந்தகம், கருங்குழி, நாசந்தூர், புதுப்பாளையம போன்ற ஊர்களும் குறிக்கப்படுகின்றன. நாடகததில் தொண்டைநாடு போற்றப்படுகிறது. சான்றாக—

''செந்தமிழுக் குபசாரம்
செய்யும் தொண்டை நாட்டில்
இந்திரன்போல் செல்வம்
எந்நாளும் பெற்றிருக்கும்
அந்தமுள்ள நகரசர்
அறிவுடையோர்'' என்ற வரிகளைக் குறிப்பிடலாம்.

'மதிகெட்டான் நாடகம்' பெரும்பாலும் இசைவடிவில் உள்ளது. ஆங்காங்கே வசனம் சுருக்கமாக வருகிறது. நாடகம் நடுவில் தொடங்கி கடந்த கால சம்பவங்களை விளக்கி, பின், எதிர் காலத்தை நோக்கிச் செல்கிறது.



நாடகம் முழுவதும் மதி கெட்டானைச் சுற்றியே நடக்கிறது. மதிகெட்டானே தன் வரலாற்றைச் சொல்வதுபோல் உள்ளது.


கதைத் தலைவியான வல்லி, மந்திரி செல்லப்பன், நாடகம் நடத்துபவர் (இங்கு விதூடகன் வேலையைச் செய்கின்றனர்.)மட்டுமே உள்ளனர். ஆடவரை மயக்க தாசிகள் செய்யும வசிய மருந்து விரிவாக வருணிக்கப்படுகின்றது. நாடகமானது சிருங்காரச் சுவையுடன் சுருக்கமாக அமைந்துள்ளது.

கி.பி. 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்த நாடகம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு கூட நடிக்கப் பெற்றதாக திரு காவேரி பூசாரி குறிப்பிடுகிறார். அப்பூசாரியே நாடகங்களில் நடித்தவர். தற்பொழுது பழைய தருமபுரியில் வசித்துவரும் 80 வயதைக் கடந்த இவர் 'மதிகெட்டான்' நாடகம் நடக்கும் போது மக்கள் விழுந்து விழுந்து சிரித்ததாகத் தம் பழைய அனுபவத்தைக் குறிப்பிடுகிறார். மதிகெட்டான் நாடகம் மட்டுமின்றி வேறுசில நாடகங்களையும் ஓலைச்சுவடியாக திரு பூசாரி வைத்துள்ளார்.

இவரிடமிருந்து பெறப்பட்ட ஓர் ஏடு நாடகக் காட்சியை வருணிக்கிறது. ·எழுத்துக்களுடன் படங்களும் இதில் உள்ளன. கோமாளி, ராசா மற்றும் இறை உருவங்கள்-மந்திரச் சொற்களை இதில் பார்க்கிறோம். மதிகெட்டான் நாடகத்தை இவ்வோவியம் குறிப்பிடுகிறதுபோலும். ஏட்டின் பின்புறத்தில் யாளி(சிங்கம்), அனம் (அன்னம்), நரி (சிறுத்தைப் புலி) இவைகளின் உருவங்களும் உள்ளன. வேறொரு சுவடியல் (காஞ்சி ஏகாம்பரநாதன் பேரில் சுரப்பிரபந்தம் என்ற சுவடியில்) காஞ்சிபுரம் அங்கு வாழ்ந்த ஏகாம்பரநாதபூபன் என்ற வணிகரும் போற்றப்படுகின்றனர்.

தருமபுரி அதியமான் மேநிலை பள்ளியில் 7ஆம் வகுப்பு படிக்கும் இலட்சப்பிரபு என்ற மாணவன் கி.பி.1747ல் கலிதீர்த்த வாத்தியார் என்ற தமிழ்ப் புலவருக்கு வாணியச் செட்டியார் ஒன்றுகூடி தானம் தந்த ஓலைச்சுவடியை அருங்காட்சியகத்திற்கு வழங்கி உள்ளான். புலவரின் வழித்தோன்றலே இம்மாணவன். மேற்கண்ட சுவடிகள் பல அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

**ச. கிருஷ்ணமூர்த்தி**
**தொல் பொருள் அலுவலர்,**
**தர்மபுரி**



## செங்கற்பட்டு மாவட்டத்தில்...

செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எண்ணிக்கை 14,310. இதில் தாழ்த்தப்பட்டோர் 8,074. வழங்கப்பட்ட மான்யம் ரூ. 222.06 லட்சம்.

சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சிறு நீர்ப்பாசனம், நிலச் சீர்திருத்தம் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 121.50 லட்சம். செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 66.35 லட்சம்.

தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 1985-86 ஆம் ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 247.19 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இதனால் பயனடைந்த தாழ்த்தப்பட்டோர் 13.55 லட்சம் பேர்.

547 எக்டேர் பரப்பளவில் சமூக நலக்காடுகள் விரிவாக்கப்பட்டுள்ளன.



கூட்டுறவுத் துறையின் மூலமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் 1985-86ஆம் ஆண்டு வழங்கப்பட்ட நகைக்கடன் ரூ. 615.31 லட்சமாகும். குறியீட்டைவிடக் கடன் தொகை அதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

1986-87ஆம் ஆண்டு இது வரை வழங்கப்பட்ட நகைக் கடன் தொகை ரூ.114.06 லட்சமாகும். 1985-86ஆம் ஆண்டிற்குக் குறுகிய காலப் பயிர்க் கடன் மொத்த தொகை கொடுப்பதற்குக் குறியீடு ரூ. 500 லட்சம். வழங்கப்பட்ட தொகை ரூ. 508 லட்சமாகும். 1986-87ஆம் ஆண்டிற்குக் குறுகியகாலக் கடன் குறியீட்டுத் தொகை ரூ 652 லட்சமாகும். 31.5.86 வரை 39.08 லட்சம் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1985-86ஆம் ஆண்டிற்கு மத்திய காலப் பயிர்க்கடன் கொடுக்கக் குறியீடு ரூ. 40 லட்சம். வழங்கப்பட்ட தொகை ரூ 40.42 லட்சம். 1986-87-ஆம் ஆண்டிற்கு மத்திய காலப் பயிர்க்கடனாக வழங்கக் குறியீடு ரூ. 50 லட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**எம். அண்ணாமலை,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செங்கல்பட்டு மாவட்டம்,**

# சுகாதாரப் போக்குவரத்து



மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறையைச்சார்ந்த மோட்டார் வாகனங்களைப் பராமரிக்க மற்றும் பழுது பார்ப்பதற்கென ஏற்படுத்தப் பட்ட தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத் துறை 15-7-1981-க்கு முன் பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறையில் ஒரு அங்கமாகச் செயல்பட்டு வந்தது.

பின்பு மாநில சுகாதாரப் போக்குவரத்து நிறுவனம் என்று ஒரு தனித்துறையாக ஏற்படுத்தப்பட்டது. மேலும் 26-11-83-லிருந்து தமிழ்நாடு மாநில சுகாதாரப் போக்குவரத்துத்துறை என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1-4-83 முதல் பணித்துறையாகச் செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் தற்போது ஒரு மத்திய பணிமனை திருச்சியிலும், நான்கு மண்டலப் பணிமனைகள் சென்னை, சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலும், 11 மாவட்ட தலைமையிடங்களில் மாவட்ட அளவிலான பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிமனைகளும், மற்றும் 20 நடமாடும் பணிமனைகளும் உள்ளன. மேலும் இத்துறையில் தொழில்நுட்பப் பணியாளர்கள், அமைச்சுப் பணியாளர்கள் உட்பட 592 நபர்கள் பணி புரிகின்றனர்.

இத்துறை தற்போது கீழ்க் கண்ட துறைகளைச் சார்ந்த 1800 மோட்டார் வாகனங்களைப் பராமரித்து வருகிறது.

பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத்துறை


மருத்துவம் மற்றும் குடும்ப நலத்துறை

குடும்பநலத்துறை

மருத்துவக் கல்வித்துறை

இந்திய மருத்துவத்துறை

ஆரம்பச் சுகாதார நிலையங்கள் துறை.



**ஆரம்பச் சுகாதார நிலையங்களில் அரும்பணி:**

1977-க்கு முன் தமிழ்நாட்டில் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்கள்தான் இருந்தன. 6வது திட்டக் காலத்தில் மேலும் பல ஆரம்பச் சுகாதார நிலையங்களைத் திறக்க முடிவு செய்து 73 நிலையங்களைத் திறந்தது அரசு. எனவே 1985 டிசம்பர் இறுதியில் தமிழ்நாட்டில் ஆரம்பச் சுகாதார நிலையங்களின் எண்ணிக்கை 456 ஆக உயர்ந்தது. இவற்றில் 31 நிலையங்கள் மேல்நிலைக்கு உயர்த்தப்பட்டன. இந்தநிலையங்களில் எக்ஸ்ரே பிரிவு, அறுவைச் சிகிச்சைப் பிரிவு, ஆய்வகப் பிரிவு ஆகியவற்றை ஏற்படுத்தவும், எம். எஸ். மற்றும் டி. ஜி. ஓ. முதுகலைப் பட்டம் பெற்ற மருத்துவ அலுவலர்களை நியமிக்கவும் 24 படுக்கைகள் கொண்ட பிரிவு கட்டவும் உத்தரவிடப்பட்டது. இவற்றில் இதுவரை 24 இடங்களில் கூடுதல் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. 15 இடங்களில் எக்ஸ்ரே பிரிவு அமைக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் மத்திய அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவியோடு 264 சிறு ஆரம்பச் சுகாதார நிலையங்களையும் கிராமப்புறங்களில் அமைக்க, தமிழக அரசு உத்தரவிட்டது. இவற்றில் 1985 டிசம்பர் இறுதியில் 261 சிறு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் செயல்படத் தொடங்கி விட்டன. மேலும் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்கும் 22 மருத்துவ நிலையங்கள் அனுமதிக்கப்பட்டதில் 15 நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்துச் செலவுகளுக்கு அளிக்கப்படும் தொகை 1980-81 முதல் ரூ. 14,000-த்திலிருந்து ரூ. 20,000 ஆக உயர்த்தப்பட்டதுடன் 333 நிலையங்களில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டெழுத்தர் பதவி ஏற்படுத்தப் பட்டு 333 தமிழ்த் தட்டெழுத்துப் பொறிகளும் வாங்கித் தரப்பட்டன. மேலும் 383 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு உருக்கு அலமாரிகள் வாங்கிக் கொள்ளவும் அரசு இந்த ஆண்டில் அனுமதி வழங்கியது.

தெரிந்தெடுக்கப்பட்ட ஆரம்பச் சுகாதார நிலையங்களில் ஊர்தியில் செல்லும் சுகாதாரக் குழுக்களை நியமித்து மக்களுக்கு அவர்களது வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளிக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது. 274 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இப்பொழுது இந்த வசதி இருக்கிறது.

விபத்து மற்றும் அவசர கால உதவித் திட்டம் 1979-ல் 107 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் தொடங்கப் பெற்று, இப்பொழுது 337 நிலையங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

# நாடக மேடை தேசபக்த நடிகர்கள்



இந்திய நாடு அந்நியனுக்கு அடிமைப் பட்டுக் கிடந்தபொழுது, நாட்டு மக்களைத் தட்டி எழுப்பி, சுதந்தர ஆவேசம் கொள்ளும்படி நடந்த விடுதலை இயக்கங்களில், மக்களை ஈடுபடச் செய்த நிகழ்ச்சிகள் பலவற்றிலும், நாடக மேடை நடிகர்களின் பங்கு மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

காந்தியடிகள், சுதந்திரப் போராட்டக் களத்தில் இறங்கிய பிறகு, ஆங்கிலேய அரசோடு ஒத்துழையாமை இயக்கம் நடந்த போதும், அந்நியத் துணிக்கடை, கள்ளுக் கடை மறியல் போராட்டக் காலங்களிலும், சாத்வீக சட்ட மறுப்பு இயக்கங்களிலும் மக்கள் பல்லாயிரககணக்கில் ஈடுபடுவதறகு, அக்காலங்களில் நடந்த நாடகங்களில் பங்கு கொண்ட நடிகர்களும், நடிகைகளும், தங்கள் தேசபக்திப் பாடல்களாலும், சுதந்திர தாகத்தை ஊட்டும் வீர நடிப்பாலும் - உத்வேகம் ஊட்டினார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது.

காந்தி அடிகள் சிறைப்பட்டதும், பஞ்சாப் ஜாலியன்வாலாபாக் படுகொலையும், பாஞ்சால வீரன் பகத்சிங் தூக்கிலிடப்பட்டதும், தேசபக்தத் தொண்டர்கள் தடியடி பட்டதும், சொல்ல முடியாத அல்லல்களுக்கு உள்ளானதும் - நாடகமேடை கலை நிகழ்ச்சிகளில் பிரதிபலிக்கப்பட்டு, மக்கள் உள்ளத்தில் சுதந்திர உணர்வை உண்டாக்கி, தியாகம் செய்யும் உறுதியையும் ஏற்படுத்தியது என்பது பிரசித்தமானதாகும்.

அக்காலத்தில் நாடக மேடைகளில் புகழ் பெற்ற நடிகர்கள், எனக்குத் தெரிந்தவர்கள்; பிறர் வாய்மொழியாக நான் அறிந்தவர்கள் ஆகிய பிரபல நடிகர்கள் - திருமங்கலம் விஸ்வநாததாஸ், இராமநாதபுரம் துளவாய் பொன்னம்பலம் ஆச்சாரி, மன்னார்குடி நடராஜ பிள்ளை, நயினார்கோவில் சக்திவேல் ஆச்சாரி, [illegible] எம். சிதம்பரநாதன், முத்தமிழ் கவி வித்வரத்ன டி. கே. சண்முகம், கோகிலத்வனி லோகநாயகி இன்னும் பல தேசபக்தக் கலைஞர்கள் பட்டியலில் இடம்பெற்று விளங்கியவர்கள்.

இவர்களில், குறிப்பிடத்தக்க சிலர்— 144 தடைச்சட்டத்துக்கு ஆளானார்கள்; அபராதம் விதிக்கப்பட்டார்கள்; சிறைவாசமும் ஏற்றார்கள் என்றால், அவர்களது தேசபக்தி, உச்சிமேல் வைத்து மெச்சத்தகுந்ததோடு, அவர்களுக்குப் புகழஞ்சலி செலுத்துவது, சுதந்திர இந்திய மக்கள் அத்தகைய நடிகமணிகளுக்குக் காட்டும் நன்றிக் கடனாகும்.


## முகவை இராஜமாணிக்கம்

**'கொஞ்சிடு கீதம் கோவலன் ஆக்டும், கோகிலத்வனி லோகநாயகி பாட்டும் செந்தேனொழுகுக் தேவுடு கீதமும் தித்திக்கும்'**

-என்ற செந்தமிழ் வரிகள், பெரிய எழுத்தில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் மூலம் விளம்பரமான 'வள்ளித் திருமணம்' நாடகத்தில் நடிகை - லோகநாயகி, தினைப்புனம் காக்கும் வள்ளியாக வந்து, ஆலோலம் பாடி பட்சிகளை விரட்டும் காட்சியில், வெள்ளையன்-எதிர்ப்புப் பாடலை, ரசிகர்கள் விரும்புமளவுக்குப் பாடி, மக்களைப் பரவசப்படுத்தி, தேசபக்தி உணர்வை ஊட்டினார்: ஆங்கில-எதிர்ப்பு உணர்ச்சியைப் பரப்பினார்:

'கொக்குப் பறக்குதடி பாப்பா-வெள்ளைக்
கொக்குப் பறக்குதடி பாப்பா-சோ சோ சோ
தேம்ஸ் நதிக்கரையிலே குஞ்சு பொரித்து
இந்தியா எங்கும் சுற்றிப் பறந்து திரிந்து
இன்னல்கள் பலசெய்யும் வெள்ளைக்
கொக்கே - சோ சோ சோ
ஆங்கிலேயக் கொக்கு - நம்மை
அடிமைகொள்ள வந்த வெள்ளைக் கொக்கு
-இங்கே

# நூல்நயம்



## வண்டைச் சுற்றிய பூக்கள்

ஆசிரியர்: ஹேமா ஆனந்த தீர்த்தன்

வெளியீடு: தமிழ்மணி பதிப்பகம், 107எ, பெரியார் பாதை (மேற்கு) சூளைமேடு, சென்னை-600 094.

விலை: ரூ. 9.50 பக்கம்: 128

இரண்டு குறுநாவல்களை இந்நூல் ஏந்தி வந்திருக்கின்றது.

பெண்களே பணிபுரியும் வங்கிக் கிளை ஒன்றின் மேலாளராகப் பொறுப்பேற்கிறார் ராஜ நாராயணன். அவரை அடைய நினைக்கின்றனர் வங்கியின் பெண் அலுவலர்கள். முடிவில் ஏமாற்றமே அடைகின்றனர். ஒவ்வொரு பெண்ணின் மனநிலையும் ஆர்வத்தையும் தக்க வகையில் எடுத்துரைத்து - முடிவில் - திடீர்த் திருப்பத்தை உருவாக்கியிருப்பது சுவையாக உள்ளது.

மனத்தை அடக்காமல் கண்டபடி திரியவிட்டால் தொல்லையும் துயரமும் தான் வந்து சேரும் என்ற நீதி பெண்ணாசை என்னும் குறுநாவலில் போதிக்கப்படுகிறது. பெரிய மனிதராகத் திகழும் சிவகுரு அற்ப எண்ணங்களையும், அயோக்கியத்தனங்களையும் விளைச்சல் செய்வதையும், இறுதியில் தனது இழிசெயலை உலகம் உணர்ந்து கொண்டது என்பதை அறிந்து-தன்னைத் தானே மாய்த்துக் கொள்வதையும் ஆசிரியர் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார். விறுவிறுப்பான நடையும் சம்பவக் கோவையும் ஒரே மூச்சில் படிக்கத் தூண்டுகின்றன.

—எஸ். எஸ். சுந்தரம்

## அதிசய அண்டார்டிகா

ஆசிரியர்: கு. ராஜாராம்

வெளியீடு: ஐந்திணைப் பதிப்பகம், 282, பாரதி சாலை, சென்னை-600 005

விலை : ரூ. 12.50 பக்: 148

அண்டார்டிக் கண்டம் பூமிக் கோளத்தின் தென்பாதியில், தென் கோடியில், தென் துருவத்தைச் சுற்றிலும் அமைந்துள்ளது. இது நெடுங்காலமாக யாருக்கும் தெரியாமல் இருந்தது. இன்று இதன் ரகசியங்கள் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன!

ஆம். 1981-ஆம் ஆண்டில், மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் பெரு முயற்சியின் காரணமாக இந்தியக் குழு அந்த அதிசய உலகில் காலடி வைத்தது. பத்து நாட்களுக்குப் பிறகு தாயகம் திரும்பியபோது கடலடியில் இதுவரை யாராலும் கண்டுபிடிக்கப்படாத மலை ஒன்றினை ஆராய்ச்சியாளர் கண்டு, அதற்கு இந்திரா காந்தியின் பெயரைச் சூட்டினர்.

அண்டார்டிகா என்னும் இந்த அற்புத உலகு பனிப் பிரதேசமாகும். அங்கே ஊர்வன நடப்பன இல்லை. மரம் செடி கொடிகளை இல்லை. ஆனால் பெங்குவின், வால்ரஸ், மீன் போன்ற உயிரினங்கள் உண்டு. இரவே வராத மாதிரி அதிகப் பகல் நேரம்..

இந்த மர்ம உலகைப் பற்றிய செய்திகளைச் சுவைபடத் தந்திருக்கிறார் ஆசிரியர். மாணவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் கூட இந்த நூலைப் படித்துப் பயன் பெறலாம்.

—பி.வி. கிரி

## விரல் மீட்டா வீணைகள்

ஆசிரியர் : பரிமளமுத்து

வெளியீடு : தமிழரசி பதிப்பகம், 10, சல்வன்ஸ் கார்டன் லேன், மயிலாப்பூர், சென்னை-600 004

பக்கம் : 124. விலை : ரூ. 10.50

75 கவிதைகளைக் கொண்ட இந்நூலில் ஒரு சில கவிதைகள் ஆழமான கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன.

ஆசிரியர் பெண்ணாயிருப்பதாலோ என்னவோ பெண்களைப் பற்றிய கவிதைகள் அதிகம் இடம் பெற்றுள்ளன. 'சோப்பு' எனும் தலைப்புடைய சிறு கவிதையில், பெண்கள் விளம்பரப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுவதை மறைமுகமாகச் சாடுகிறார். 'முகம் இல்லாத மனிதர்கள்' கவிதையில் பல்வேறு சமயங்களில் பலவாறான உணர்ச்சிகளைக் காட்டும் முகபாவத்தை நன்றாக எடுத்துரைத்துள்ளார். 'அம்மா! அம்மா' எனும் கவிதையில் அம்மாவை ஒரு குழந்தை ஆயா என்றழைப்பதாகக் கூறி அலுவலகத்தில் பணிபுரியும் மகளிரின் குழந்தைகளுக்கு ஏற்படும் ஏக்கத்தைச் சுவை ததும்பத் தெரிவிக்கிறார்.

_கு. மல்லிகா

## இழப்புகளைத் தவிர்க்க எளிய சில யோசனைகள்

ஆசிரியர்: வாசன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 098.

விலை ரூ. 4.50 பக்:63

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்நாளில் பல இழப்புகளைச் சந்திக்க நேரிடுகிறது.

அன்றாட வாழ்வில் நமக்கு ஏற்படும் இழப்புகளையும் அவற்றைச் சமாளிக்க நாம் எடுக்க வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகளையும் அந்நிகழ்ச்சிக்குப் பின் நாம் மேற்கொள்ள வேண்டிய காரியங்களைப் பற்றியும்இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. மிகவும் பயனுள்ள நூல்.

—அ. மருதவீரபலம்



## எரி நட்சத்திரம்

ஆசிரியர் : வி. ஸ. காண்டேகர்
தமிழாக்கம்: கா. ஸ்ரீ. ஸ்ரீ.

வெளியீடு: அல்லயன்ஸ கம்பெனி மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை : ரூ. 24.25 பக்: 348

எரிநட்சத்திரம், காண்டேகரின் அருமையானதொரு கலைப் படைப்பு. சமுதாயத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயன்றிருக்கிறார். விதவை மறுமணம் ஏற்கப்பட்டுள்ளது. சாதியின் ஏற்றத்தாழ்வுகள் சுட்டப்பட்டுள்ளன. ஆசிரியர் சீர்மிகு கருத்துகளின் பிழிவாகத் தன்னுடைய மொழியாக்கத்தை நல்ல முறையில் அமைத்துள்ளார் கா.ஸ்ரீ.ஸ்ரீ. காண்டேகர் நாவல்கள், தமிழரின் இதயத்தில் இடம் பெறக் காரணமாக இருந்தவர் கா.ஸ்ரீ.ஸ்ரீ.

மறுமணம் செய்து கொண்ட உல்காவின் தாயார்—அவரை விரும்பி ஏற்ற தந்தை-அவர்தம் வாழ்க்கைப் போராட்டங்கள், நாவலுள் செம்மையாக விளக்கப்பட்டுள்ளன. பிராமணர்-பிராமணரல்லாதார் கிளர்ச்சி பேசப்படுகின்றது.

வெறும் முறம் அழகானதுதான். ஆனால் சாணம் பூசினால்தான் பயன் படுகிறது. லட்சியவாதங்களும் அப்படித்தான். கேட்பதற்கு மகிழ்ச்சியாகத்தான் உள்ளது. ஆனால் பின்பற்றும்போது...

இளம் வயதிலேயே சாதி வேற்றுமை பாராட்டும் இந்துதிராவின் பெற்றோர் அடிமை என்பதால் வெறுக்கிறாள். பணம் படைத்தோரின் செருக்கு அவள் வழி வெளிப்படுகிறது. கள்வெறி ஏறியவர்கள் மற்ற எதைப்பற்றியும் சிந்திப்பதே இல்லை. சிந்தனை செய்யும் குணமும் இது போல்தான். மாற்றமே இல்லை என்ற கருத்து சொல்லப்படுகிறது. சமூகத்தின் நன்மைக்காக 'பேசுவதைக் காட்டிலும் செய்வது நல்லது' என்பதற்காகத் தான் கிராமத்தில் வாத்தியாராக வந்ததாகக் குறிப்பிடுகின்றார், உல்காவின் தந்தை.

மறுமணமும் கலப்பு மணமும் செய்து கொண்டவர்களின் குழந்தைகளுக்கு ஏற்படும் இடையூறுகள், துன்பங்கள் அழகாகப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. சீர்திருத்த உணர்வுகள், செயல்படுத்தப்படாமலிருக்க எந்தனைத் தடைக்கற்கள் அமைகின்றன என்பதும் காட்டப்படுகின்றது.

'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்ற வள்ளுவரின் வாய்மொழி இங்கு வலியுறுத்தப்படுகிறது. ''பணம் ஒன்று இல்லையென்றால் மேற்படிப்பு இல்லை; நல்ல கணவன் இல்லை. சிறிதளவு இன்பமும் இல்லை'' என்று சொல்வதன் மூலம். நீரோட்டமான நடை, நெகிழ வைக்கும் நிகழ்ச்சிகள், நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வர்ணனைகள், காலத்தால் அழியாத கருத்துகள் இவற்றால் ஏற்றம் பெறுகிறது எரி நட்சத்திரம். எல்லோரும் படிக்க வேண்டிய நாவல்.

—டாக்டர் சிவ அரசி முத்துக்காளத்தி

## தமிழில் பிழையின்றி எழுதுவோம்

தொகுப்பாசிரியர் : மயிலை சின்னதுரை சண்முகம்

வெளியீடு: சின்னதுரை நிலையம் 17, 14வது குறுக்குத் தெரு. சென்னை-600 028.

விலை ரூ. 4. பக் : 44

அன்னை தமிழ் அரியணை வீற்றிருக்கும் நாளிது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற உயர் நிலை உள்ள சூழ்நிலை. இந்நிலையில், தமிழில் பிழையின்றி எழுதுவது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. பிழையற்ற தமிழை எழுதுவது எப்படி? இந்நூல் அதற்குத் துணை செய்கிறது.

தமிழில் வல்லெழுத்துகள் மிகும் இடங்கள், ரகர-றகரச் சொற்களின் வேறுபாடுகள், பிழைகளும் திருத்தங்களும், திருத்தக் குறிகள், எழுத்துச் சீர்திருத்தம் ஆகிய தலைப்புகளின் கீழ், பிழையற்ற தமிழுக்கு வழிகாட்டுகிறார் நூலாசிரியர்.



## அதிர்ஷ்ட அமைபபுடன வீடு கட்டுவது எப்படி?

ஆசிரியர் : எம். கிரீடாதி அனந்தர்

வெளியீடு: புத்தகப் பூங்கா, 29, நல்லண்ண முதலி தெரு, சென்னை-600 014.

விலை : ரூ. 6 பக்: 64.

சொந்த வீடு கட்டிக் கொள்ள யாருக்குத்தான் ஆசை வராது? அவ்வாறு வீடு கட்ட மனை தேர்ந்தெடுப்பது முதல் நம் விருப்பப்படி வீடு அமைவது வரை எவ்வளவோ தொல்லைகள் இருந்தாலும், மனையைத் தேர்ந்தெடுக்கும்போதும், வீடு கட்டும் போதும் கவனிக்க வேண்டிய சாஸ்திர சடங்குகளும் நடைமுறையில் உள்ளன என்பது இந்நூலைப் படிக்கும்போது நன்கு புலனாகிறது.

மனையைப் பார்வையிடும் போதும், வீடு கட்டும்போதும் கவனிக்க வேண்டிய முறைகளை விளக்கமாகக் கூறும் மனையடி சாஸ்திரம் இது.

## இலக்கியப் பூங்கொடி

ஆசிரியர்: பி.எல். ராஜேந்திரன்

வெளியீடு: பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரக் குளம் மேற்கு வீதி, சென்னை-600004

விலை ரூ. 10: பக்:126

இலக்கியங்கள் இனிப்பவை: இதயத்தைத் தொடுபவை. அதிலே வரும்காட்சிகள் நம்மை மகிழ்விக்கும் மாட்சிகள். அவற்றைக் கற்கக் கற்கக் கற்கண்டாய் இனிக்கும். அத்தகு கற்கண்டுக் கட்டுரைகளை நமக்கு வழங்குவதுதான் இந்த இலக்கியப் பூங்கொடி.

திருக்குறள், குறுந்தொகை, புறநானூறு அகநானூறு நற்றிணை, ஐங்குறுநூறு, தனிப்பாடல் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள அருமையான காட்சிகளை அப்படியேபடம்பிடித்துக் காட்டியிருக்கிறார் நூலாசிரியர். இலக்கியப்பூங்காவில் விளங்கிடும் காதல் ஓவியங்கள் இவை. இளைஞர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் இந்த இலக்கியப் பூங்கொடியைச் சந்திக்கலாம், சிந்திக்கலாம் !

— பொ. மறைமலை

இரட்டை மலை சீனிவாசன் ஒரு பொதுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.



என்று சொல்லியவாறு ஆர்வத்துடன் - அழுத்தமாக அவரது கரத்தைக் குலுக்கினார் ஜார்ஜ் மன்னர்.

இங்கிலாந்தின் முதலமைச்சர் ராம்சே மாக்டொனால் உட்பட அம் மாமன்றத்தில் அமர்ந்திருந்த அனைத்து உறுப்பினர்களையும் ஐந்தாம் ஜார்ஜின் பெருந்தன்மையான மனப்பான்மை ஈர்த்தது.

இந்திய நாட்டில் அப்போதிருந்த இழிநிலையை, இலண்டனில் நடைபெற்ற முதலாவது வட்ட மேஜை மாநாட்டின்போது ஐந்தாம் ஜார்ஜ் மன்னரிடம் துணிவாக எடுத்துரைத்த அந்த மனிதர்தான், திவான் பகதூர் சீனிவாசன் என்றழைக்கப்பெறற இரட்டைமலை சீனிவாசன்.

1859 ஜூலை 7-ல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு கிராமத்தில் இரட்டை மலை என்ற ஒரு சாதாரணத் தொழிலாளியின் மகனாக சீனிவாசன் பிறந்தார். எனவே தன் பெயருக்கு முன்னால் தன் தந்தையின் பெயரை இணைத்துத் தன்னை இரட்டைமலை சீனிவாசன் என்று சூட்டிக் கொண்டார். சிறு வயதிலேயே தன் தாயாரை இழந்தார்.

சென்னை மாநிலத்தில், கோயம்புத்தூரில் அரசினர் கலைக் கல்லூரியில் பயின்றார். பின்னர் கணக்காயராகப் பணி புரிந்தார். 1887ல் அரங்கநாயகி அம்மாளை மணக்கும் போது அவருக்கு வயது 28. இவர்களுக்கு சுபத்திராதேவி, பாகீரதி அம்மாள், சிட்டிபாபு நீலகண்டன், காந்திமதி அம்மாள், அலங்காரசித்தன், குலசேகரன் என்கிற ஆறு பிள்ளைகள்.

1891ல் ஆர். சீனிவாசன் அவர்கள் 'பறையர் மகா ஜன சபை'யைத் தோற்றுவித்தார். 1893ல் 'பறையன்' என்ற வாரப் பத்திரிகையை 15 ரூபாயை மூலதனமாக வைத்துத் துவக்கினார். அப்பணத்தை ஒரு மலையாள நண்பரிடமிருந்து பெற்றார். இவர் நடத்திய பத்திரிகையின் பெயருக்குப் பலத்த எதிர்ப்பு இருந்த போதிலும் தொடர்ந்து 7 ஆண்டுகள் நடத்தி வந்தார்.

1893 டிசம்பர் 23ஆம் நாள் இரவு 11 மணியளவில் இராயப்பேட்டையிலுள்ள வெஸ்லியன் மிஷின் அரங்கில், தாழ்த்தப்பட்ட வகுப்பினரின் கூட்டம் ஒன்றினை நடத்தினார். நள்ளிரவில் அக்கூட்டம் நடந்ததற்குக் காரணம் ஆங்கிலேயர்களது இல்லங்களில் ஆதிதிராவிடர்களே சமையல், உணவு பரிமாறுதல், பரிமாறுவதைக் கவனித்தல், பண்டகப் பொருள் காத்தல் போன்ற பணிகளைப் பகல் முழுவதும் செய்துவிட்டு இரவு 10 மணியளவில்தான் வீடு திரும்புவர். எனவே அவர்களுடைய கூட்டத்தை நள்ளிரவில் நடத்துவதை தவிர வேறு வழியில்லை. 1895 அக்டோபர் 23ஆம் நாள் டவுன் ஹாலில் ஒரு கூட்டம் கூட்டி அவர்கள் எவ்வகையில் செயல்பட வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்தினார்.

ஆதிதிராவிடர்கள் சமூக ரீதியிலும் அரசியல் ரீதியிலும் தனிப்பட்ட முறையில் அங்கீகாரம் பெற்று, பிறருக்குச் சரிநிகராக வாழ்ந்திட சென்னைக்கு வருகை புரிந்த மேதகு வைஸ்ராய் லார்டு எல்ஜினிடத்தில் எடுத்துக் கூறி ஒரு மனுவை வழங்கிட, தூதுக் குழுவினை சீனிவாசன் அமைத்தார். 1895 டிசம்பர் 6 ஆம் நாள், தூதுக்குழுவினரை மேலைநாட்டு நாகரீக உடைகளை அணியச் செய்து ஒரு பெரும் ஆங்கிலக் கம்பெனி முதலாளியின் விலையுயர்ந்த கோச்சில் சீனிவாசன் மிகச் சிறந்த முறையில் ஆங்கிலேயரைப் போல் ஆடையணிந்து, அதில் அமர்ந்து, கோச்சின் இரு புறங்களிலும் வரிசையாக தூதுக் குழுவினர் முன் செல்ல, கோச்சு பின் தொடர வைஸ்ராயைக் காணச் சென்றார். ஒரு வைஸ்ராயை மற்றொரு சரிநிகரான அந்தஸ்துடையவர் காணச் சென்றது போன்று இருந்த அந்தக் காட்சி, காண்போர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

ஆதிதிராவிடர்களின் மனக்குறையை சீனிவாசன் கூற அதை நுணுக்கமாகக் கவனித்தார் வைஸ்ராய். அவரது பேச்சு வைஸ்ராய்க்கு அடுத்தாற்போல் விளங்கிய மேதகு ஆளுநர் லார்டு வென்லாக் அவர்களையும் சிந்திக்கச் செய்தது. ஆதிதிராவிட சமூகத் தலைவர் ஒருவர் இந்திய வைஸ்ராயை முதன் முதலில் சந்தித்து நேருக்கு நேர் பேசியது இந்திய வரலாற்றிலேயே இதுவே முதன் முறையாகும்.

1896 மார்ச் 12 ஆம் நாள்



சென்னை கிருஸ்துவக் கல்லூரியிலுள்ள ஆண்டர்சன் கூடத்தில் ஆளுநர் லார்டு வென்லாக்கிற்கு 'பறையர் மகாஜன சபை'யானது வழி அனுப்பு விழா நடத்தியது.

மேதகு ஆளுநர் பேசுகையில், 'வைஸ்ராயை ஒரு முறை இச் சங்கத்தினர் தான் சந்தித்தனர்' என்று குறிப்பிட்டார்.


1900-ல் இங்கிலாந்துக்குச் சென்ற காரணத்தினால் தமது பத்திரிகையை நிறுத்திக் கொண்டார் சீனிவாசன். இங்கிலாந்தில் பணியாற்றத் திட்டமிட்டிருந்த அவர், தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு 1904-ல் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று, நேட்டாலில் தங்கி, அங்கு ஒரு நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளராகப் பணியாற்றி வந்தார். காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் தங்கி வழக்கறிஞராகப் பணிபுரிந்த காலத்தில் அவருக்கு மொழிபெயர்ப்பாளராக விளங்கியவர் இரட்டைமலை சீனிவாசன் ஆவார். அங்கு காந்தியடிகளுக்கு தமிழ் கற்பித்தார். காந்தி என்று காந்தியடிகள் தமிழில் கையொப்பமிடுவதற்குக் காரணமாக இருந்தார். அவருக்குத் திருக்குறளை எடுத்துரைத்தார்.

1920-ல் தென்னாப்பிரிக்காவை விட்டுக் கிழக்கு ஆப்பிரிக்காவிற்குச் சென்று அங்கு இரண்டு ஆண்டுகள் தங்கியிருந்து 1921-ல் சென்னைக்குத் திரும்பினார்.

1923-லிருந்து தன் இறுதிக் காலம் வரையிலும் சென்னை மாநிலத்தின் மேல்சபையில் நியமன உறுப்பினராக விளங்கினார். ஜஸ்டிஸ் கட்சியில் முக்கிய அங்கம் வகித்தார்.

1924-ஆம் வருடம் ஆகஸ்டு மாதம் 25ஆம் நாள் சட்ட நிருபண சபையார் கூடியபோது சீனிவாசன் அவர்கள், தன் மனைவியாரின் கோரிக்கைக்கு இணங்கி, தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் பொதுச்சாலைகள், கிணறுகள், பொது இடங்கள், கட்டடங்கள் முதலியவைகளை உபயோகிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அத்தீர்மானம் 1925 ஏப்ரல் 28-ல் செயின்ட் ஜார்ஜ் போர்ட் கெஜட்டில் 1ஏ 2660 தி. எல்ஆ எம்மின் கீழ் நிறைவேற்றப்பட்டது.

இவரது சேவைகளை மதிக்கும் வகையில் - ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்திற்கு ஒரு வழி காட்டியாய் விளங்கிய காரணத்தைக் கொண்டு இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு




இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் மனைவியாரின் கல்லறையில் செதுக்கப்பட்டுள்ள அரசு ஆணை.

ராவ்சாகிப் என்ற பட்டம் அன்றைய இந்திய வைஸ்ராய் அவர்களால் 1926 ஜனவரி 1ல் வழங்கப்பட்டது. பிப்ரவரி 20 சனிக்கிழமை அன்று சென்னை சைதாப்பேட்டையில் மாவட்ட ஆணையாளர் அலுவலகத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. மாவட்ட ஆணையர் பி.சீதாராம ஐய்ய பந்துலுகாரு, சீனிவாசன் அவர்களைப் பாராட்டிப் பேசினார்.

இவர் தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகத்தையும், 1928-ல் சென்னை மாகாண தாழ்த்தப்பட்டோர் பெடரேஷனையும் தோற்றுவித்து, பின்னர் 'சென்னை மாகாண செட்யூல்டு கிளாஸ் பெடரேஷன்' என்று பெயர் மாற்றம் செய்தார்.

1928 பிப்ரவரி 4ஆம் நாள் சனிக்கிழமை இரவு 3 மணியளவில் அவரது மனைவி அரங்கநாயகி அம்மாள் தனது 60-வது வயதில் காலமானார். அம்மையாரின் கல்லறையில் 1925 ஏப்ரல் 28-ல் நிறைவேற்றப்பட்ட அரசு ஆணை கல்வெட்டாகச் செதுக்கப்பட்டுள்ளது.

முதல் வட்ட மேஜை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சீனிவாசன் இந்தியாவை விட்டுப்புறப்பட்டு 1930 அக்டோபர் 18 சனிக்கிழமை மாலை இலண்டன் போய்ச் சேர்ந்தார். இலண்டனில் அவர் தங்கியிருந்த வீடு நமது நாட்டின் ராஜாக்கள் மாளிகையைப்போல இருந்தது. வேலையாட்கள் அனைவரும் வெள்ளையர்களே!

முதல் வட்டமேஜை மாநாட்டில் (1930 டிசம்பர் 23-ல்) ராவ் சாகிப் இரட்டைமலை சீனிவாசன், ''தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு அரசியலில் அதிகாரம் கொடுக்கப்பட்டால்தான் தீண்டாமை என்னும் கொடிய பழக்கம் ஒழியும்....

'சட்டப் பேரவையில் எங்களுக்கும் பிரதிநிதித்துவம் அளித்தால்தான் எங்கள் லட்சியங்களை அடைய நாங்கள் போராட முடியும். வயது வந்தோர்க்கு வாக்குரிமை வேண்டுமென்பது எங்களது கோரிக்கை'' என்று பேசினார்.

வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டதற்கும் ராவ் பகதூர் என்ற பட்டம் பெற்றதற்கும் திரு ஏ. டபிள்யூ. அட்டன் தலைமையில் சீனிவாசன் அவர்களுக்கு, ஒடுக்கப்பட்டவர்கள் சங்கமும் மக்கள் நல்வாழ்வுச் சங்கமும், இணைந்து 1931 ஏப்ரல் 5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் தேனாம் பேட்டை செயின்ட் ஜார்ஜ் கேத்ரிடல் சாலையில் தாமோதர மாநகராட்சி பள்ளியில் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தின.

1931 செப்டம்பர் 7ல் நடந்தேறிய இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டிலும் இவர் கலந்து கொண்டார்.

வட்டமேஜை மாநாட்டில் முதலமைச்சர் ராம்சே மாக்டொனால் செட்யூல்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கக் கொண்டு வந்த தனித் தொகுதி முறையை எதிர்த்து, '1932 செப்டம்பர் 20 ஆம் தேதி முதல், தன் இறுதிக் காலம் வரையில் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக' காந்தியடியடிகள் எரவாடா சிறையில் செப்டம்பர் 13ல் அறிவித்தார்.

காந்தியடிகள் உண்ணா விரதத்தை அவர் அறிவித்தபடியே அதே நாளில் மேற்கொண்டார். தனித்தொகுதி முறைக்கு பிரைமரி தேர்தல் முறையை மாற்றுத் திட்டமாக சேட் பகதூர் சேப்ரு கொண்டு வந்த தீர்மானத்தை அண்ணல் அம்பேத்கார் ஆதரித்தார். எனவே அண்ணல் அம்பேத்காரும், ஏனைய செட்யூல்டு வகுப்புத் தலைவர்களும் எரவாடா சிறையில் காந்தியடிகளைச் சந்தித்துத் 'தனித் தொகுதி முறையை விட்டுக் கொடுத்து, பிரைமரி தேர்தல் முறையை ஏற்றுக் கையொப்பமிட்டார்கள். அதன் பின்னர் காந்தியடிகள் செப்டம்பர்



# நெடுஞ்சாலைப் பணிகள்

"சாலைமற்றும் பால" வேலைகளில் 1.4.1977 முதல் 31.3.86 வரையிலான கால கட்டத்தில் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறைத் திட்டப் பணிகளுக்கு ரூ. 214.25 கோடியும், திட்டம் சாராப் பணிகளுக்கு ரூ.286.06 கோடியும் ஆகமொத்தம் ரூ. 500.31 கோடி செலவு செய்து தமிழக அரசு சாதனைகள் புரிந்துள்ளது.

1977-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் இம்மாநிலத்தில் இருந்த சாலைகளின் மொத்த நீளம் 88,938 கி.மீ. ஆகும். இது 1985ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் 1,33,974 கி.மீ. ஆக அதிகரித்துள்ளது.

1977ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் 31,278 கி.மீ.நீளமுள்ள சிமிட்டிக் கற்கலவை மற்றும் தார்ச் சாலைகளையும், 22,005 கி.மீ. நீளமுள்ள கற்சாலைகளையும், 35,655 கி.மீ. நீளமுள்ள மேற்பரப்பற்ற சாலைகளையும் கொண்டு இருந்தது.

தற்போது 39,205 கி.மீ.நீளமுள்ள சிமிட்டிக் கற்கலவை மற்றும் தார்ச்சாலைகளும், 35,795 கி.மீ. நீளமுள்ள கற்சாலைகளும், 58,974 கி.மீ. நீளமுள்ள மேற்பரப்பற்ற சாலைகளும் இம்மாநிலத்தில் உள்ளன.

ஊரகச் சாலைகள் திட்டத்தின் கீழ் ஆறு கட்டங்களில் ரூ.75.67 கோடி செலவிலான மொத்தம் 6363 கி.மீ. நீளமுள்ள சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2498 பெரிய கிராமங்களும், 2085 இடைப்பட்ட குடியிருப்புகளும் பயன்பெறும் வகையில் ரூ. 65.13 கோடி செலவிலான மொத்தம் 6264 கி. மீ. நீளமுள்ள ஊர்திகள் செல்லக் கூடிய சாலைப் பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

1979-ஆம் ஆண்டிலிருந்து 1986 வரை 8,356 கி.மீ. நீளமுள்ளபேருந்து வழித்தடச்சாலைகள் அரசு செலவில் மேம்பாடு செய்யப்பட்டு வருகின்றன. அதனால், உள்ளாட்சி மன்றங்களின் நிதிச் சுமை குறைக்கப்படுகின்றது.

1984-85ஆம் ஆண்டில் மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டி பகுதியில் உள்ள 41 கி.மீ. நீளமுள்ள கடமலைக்குண்டு வெள்ளிமலைச் சாலைப் பணி ரூ. 260 இலட்சம் செலவில் எடுத்துச் செய்வதற்காக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.7.1984ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது. இதில் 11 கி.மீ. நீளமுள்ள சாலைகள் முடிக்கப்பட்டு மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 31.3.86 இறுதி வரை ரூ. 1443.25 இலட்சம் செலவிலான மொத்தம் 552 கி.மீ. நீளமுள்ள 88 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 178 கி.மீ. நீளமுள்ள 43 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.830.25 இலட்சத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 275 கி.மீ. நீளமுள்ள 40 பணிகள் நடைபெற்று வருகின்றன.

பழங்குடியினர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பின் வரும் ஒன்பது குறிப்பிடத்தக்க பழங்குடியினர் பகுதிகளில் சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

சேலம் மாவட்டம்
கொல்லிமலைத்தொடர்
ஏர்க்காடு மலைத்தொடர்
கல்ராயன் மலைத்தொடர்
அரனூத்துமலை
பச்சமலை

வட ஆர்க்காடு மாவட்டம்
சவ்வாதுமலைத்தொடர்

தென்ஆர்க்காடு மாவட்டம்
கல்வராயன்மலைத்தொடர்

தருமபுரிமாவட்டம்
சித்தேரி மலைத்தொடர்

திருச்சி மாவட்டம்
பச்சமலை.

இத்திட்டம் 1976-77-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1985-86 இறுதி வரை ரூ. 1394.76 இலட்சம் செலவிலான 26 பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் ரூ. 349.51 இலட்சம் செலவிலான 137.85 கி.மீ. நீளமுள்ள 12 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ. 1045.25 இலட்சம் செலவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட 241.70 கி.மீ. நீளமுள்ள 14 பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மேற்கு மலைப் பகுதி வளர்ச்சித் திட்டம்**

இத்திட்டம் 1975-76-ஆம் ஆண்டு மதுரை மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. ஒரு பணி அதாவது 8 கி.மீ. நீளமுள்ள சிறு மலைச்சாலைப் பணி ரூ. 15 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து ரூ.325.50 இலட்சம் செலவிலான 136.5 கி.மீ. நீளமுள்ள எட்டுப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் அனைத்தும் நடைபெற்று வருகின்றன.



# இலட்சியவாதி
# இரட்டைமலை சீனிவாசன்

ந. அ. கருணாகரன்



இலண்டன்நகரில் உள்ள அந்த மண்டபம் இந்தியப் பெருமக்களால் நிறைந்திருந்தது. இந்திய மக்களின் பல்வேறு உரிமைகள் குறித்து இன்னும் சில விநாடிகளில் அந்த மண்டபத்தில் விவாதம் நடைபெற உள்ளது என்பதை நினைத்து அனைவரின் இதயங்களிலும் ஆர்வ அலைகள் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தன. அனைவரின் கண்களும் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரை ஆவலுடன் எதிர்நோக்கிக் கொண்டிருந்தன.

மண்டபத்தில் அமைதி நிலவியது. ஐந்தாம் ஜார்ஜ் தமக்கே உரிய மிடுக்குடன் அங்கே வருகை புரிகிறார். இந்தியப் பெருமக்களை நோக்கி நடைபோட்ட ஜார்ஜ் மன்னர் ஒவ்வொருவரின் கையையும் குலுக்கிக் கொண்டே வருகிறார்.

டாக்டர் அம்பேத்கார், சர். ஏ. டி. பன்னீர்செல்வம், ஏ.ராமசாமி முதலியார், ஜெயகர், முகமது உஸ்மான் இப்படிப் பல பெருமக்களின் கைகளையும் குலுக்கியவாறே முன்னே சென்று கொண்டிருக்கிறார்.

முறுக்கு மீசையும் அகன்ற நெற்றியும் தெளிவான பார்வையும் கொண்ட ஒருவர், மன்னர் கை குலுக்க வரும்போது, கையை நீட்டாமல் இழுத்துக் கொள்கிறார். மன்னர் வியப்படைகிறார்.

உடனே அந்த மனிதர், "மாட்சிமை பொருந்திய மன்னர் பிரான் அவர்களே, நீங்கள் என்னைத் தீண்டக் கூடாது. தீண்டினால் மன்னருக்குத் தீங்கு விளையும்! ஏனென்றால் நான் இந்தியாவில் உள்ள தீண்டத்தகாத வகுப்புகளில் ஒன்றான பறையர் இனத்தைச் சேர்ந்தவன்" என்று தெளிவாக ஆங்கிலத்தில் எடுத்துச் சொல்கிறார்.

மன்னரின் வியப்பு,மேலும் அதிகரிக்கிறது. 'மனிதனை மனிதன் தீண்டுவது கூடாது என்பது என்ன நியாயம்?' - மன்னர் தனக்குள் கேட்டுக் கொள்கிறார்.

அவரது பார்வை, அந்த மனிதரது கோட்டில் இணைக்கப் பட்டிருந்த அட்டையில் காணப் பட்ட ஆங்கில எழுத்துக்களின் பக்கம் சென்றது.

"ராவ் பகதூர் ஆர். சீனிவாசன் - பறையன் - நான் ஒரு தீண்டப்படாதவன்" என்று அட்டையில் எழுதப்பட்டிருந்தது.

''பரவாயில்லை! மிஸ்டர் ராவ் பகதூர் சீனிவாசன் அவர்களே''



முதலாவது வட்ட மேஜை மாநாட்டில் முன்வரிசையில் வலமிருந்து இடம் மூன்றாவதாக சர் ஏ.டி. பன்னீர் செல்வம், நான்காவதாக டாக்டர் அம்பேத்கார், ஐந்தாவதாக இரட்டை மலை சீனிவாசன் ஆகியோர் அமர்ந்துள்ளனர்.

2-ஆம் தேதி திங்கட்கிழமை பிற்பகலில் தன் உண்ணா நோன்பை முடித்துக் கொண்டார்.

1935ல், அவரது இனமக்கள் சிலர், வேறு மதத்தை நாடிச்சென்றனர். இச் செயலை சீனிவாசன் சிறிதும் ஏற்றுக்கொள்ளவில்லை.

1936 ஜனவரி 1ஆம் தேதி அன்று, ராவ் பகதூர் சீனிவாசனார் அவர்களுக்கு வைஸ்ராய் அவர்கள் திவான் பகதூர் பட்டத்தை வழங்கியதற்காகப் பாராட்டு விழா நடை பெற்றது. ராவ் பகதூர் பன்னீர்செல்வம் போன்றவர்களுடைய பாராட்டுக்களைப் பெற்றார்.

1938 மே 28ல், ஜமீன்தார்களுடைய நிலங்களை உழவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற அறிக்கையை வெளியிட்டார்.

ராஜாஜி அவர்கள் சென்னை மாநிலப் பிரதமராக இருந்த காலத்தில்தான் திவான் பகதூர் சீனிவாசன் அவர்களுக்கு திரு.வி.க அவர்கள் 'திராவிடமணி' என்ற சிறப்புப் பெயர் வழங்கினார். அவ்விழாவில் ராஜாஜி, சீனிவாசனின் சேவைகளைப் பாராட்டிப் பேசினார்.

Govt. of Madras, Development Department G.O. No. 2104. 27th August 1938. Schedule Classes-Provincial advisory Board and District advisory committees constitution orders passed.

மேற்கண்ட டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்டில் Member of the provincial Advisory board ஆக விளங்கினார்.

*வட்ட மேஜை மாநாட்டுக்கு வந்திருந்த இந்தியப் பெருமக்களைத் தமது மாளிகைக்கு அழைத்து விருந்தளித்த ஐந்தாம் ஜார்ஜ் மன்னர், இரட்டை மலை சீனிவாசன் அவர்களிடம்,*

*"தீண்டாமை என்றால் என்ன" என்று வினவினார்.*

*"மேல்ஜாதிக்காரன் என்போன் கீழ்ஜாதிக்காரன் என்பவனைத் தீண்டமாட்டான்"—என்று தெரிவித்தார் சீனிவாசன்.*

*"கீழ்ஜாதிக்காரன் ஒருவன் கீழே விழுந்து விட்டால் மேல்ஜாதிக்காரன் தூக்கி விட மட்டானா?"—மன்னர் வியப்பு மேலிட, வினவினார்.*

*"தூக்கிவிட மாட்டான்"—சீனிவாசன்*

*"என்னுடைய ராஜ்யத்தில் அப்படி நடக்க விட மாட்டேன்"—மன்னர் உறுதியுடன் கூறினார்.*

*ஆதாரம் : இரட்டை மலை சீனிவாசன் ஜீவிய சரித்திரச் சுருக்கம்*

1939-ல் இரண்டாவது உலகப் போர் மூண்டது, சென்னை மாநில செட்யூல்டு வகுப்பார் பெடரேஷனின் தலைவரான சீனிவாசன் 1939 செப்டம்பர் 17 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணியளவில் சென்னை சிந்தாதரிப்பேட்டை நேப்பியர் பூங்காவில் செட்யூல்டு மக்களின் மாபெரும் கூட்டத்தைக் கூட்டி, அவர்களது ஆதரவை பிரிட்டிஷாருக்கு வழங்கினார். 80 வயதிலும் ஒரு படையைத் திரட்டுவதற்குத் தான் ஆயத்தமாக இருப்பதாகக் கூறினார்.

1939 அக்டோபர் 8 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் அல்லாதார் இயக்கங்களைக் கொண்ட பொதுக்கூட்டம் ஒன்றைக் கூட்டினார். அக்கூட்டத்தில் செட்யூல்டு வகுப்பினர்களின் தலைவர்களான திவான் பகதூர் சீனிவாசன், ராவ் பகதூர் எம். சி. ராஜா, ராவ் சாகிப் என். சிவராஜ் ஆகியோர் முக்கிய அங்கம் வகித்தனர்.

1945 செப்டம்பர் 18 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.45 மணியளவில் சென்னை பெரியமேடு வீரபத்திரன் தெருவில் இருந்த தன் இல்லத்தில் உயிர் நீத்தார். மறுநாள் அன்னாரின் புனித உடல் ஓட்டேரி இடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. அவரது மனைவியாரின் கல்லறைக்கு அடுத்தாற்போல் இவரது கல்லறையைக் காணலாம்.

தாழ்த்தப்பட்ட இனத்தவர்களின் மேன்மைக்குப் பாடுபட்டவர்களில் தனி இடம் பெற்று - துருவ நட்சத்திரமாக விளங்குகிறார் இரட்டை மலை சீனிவாசன் என்றால் அது மிகையாகாது.

## தமிழன்னை மற்றும் அரசியல் தலைவர்களின் உருவப்படங்கள் விற்பனை



*செய்தி, சுற்றுலாத் துறை மூலம் வெளியிடப்பட்ட தமிழன்னை மற்றும் அரசியல் தலைவர்களின் உருவப்படங்கள் கலைவாணர் அரங்க வளாகத்திலுள்ள மாநிலச் செய்தி மையத்தில் விற்பனைக்குக் கிடைக்கும். இப்படத்தைப் பெற விரும்பும் அரசு அலுவலகங்களும் தனியார் நிறுவனங்களும் பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளலாம்.*

*-மக்கள் தொடர்பு அலுவலர்,*
*மாநிலச் செய்தி மையம்,*
*கலைவாணர் அரங்கம் பின்புறம்,*
*சென்னை-600 002.*

## விடுதலைப் போராட்ட வீரர்க்கு ஓய்வு ஊதியம் உயர்வு

*மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் (முன்னாள் இந்திய தேசிய ராணுவத்தினருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும்) மாநில அரசால் வழங்கப்படும் ஓய்வு ஊதியம் தற்போது ரூ. 150/- பெறுகின்றனர். மாநில அரசின் ஓய்வு ஊதியம் மட்டும் பெறுபவர்களின் ஓய்வு ஊதியம் மாதம் ரூ. 150/-லிருந்து மாதம் ரூ. 250/-ஆக உயர்த்தப்பட்டுள்ளது, இது 10.6.86 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.*






**மாணவர் பக்கம் :**

சென்னைக் காங்கிரசில்தான் 1927ல் முதன் முதலாக 'பூரண சுதந்திரம்' தீர்மானத்தை ஜவகர்லால் நேரு கொண்டு வந்து நிறைவேற்றினார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு 1921ல் முதன் முதல் சிறைசென்ற பெண்மணி, கவிக்குயில் சரோஜினிதேவி.

காங்கிரசின் முதலாவது பெண் அக்கிராசனர் திருமதி அன்னி பெசண்ட்.

காங்கிரஸ் ஸ்தாபனத்தை நிறுவி முதலில் அமைத்தவர் சர்ஹென்றிஹியூம் என்றாலும், இதற்கு ஆலோசனை கூறிய முதல் இந்தியர் திவான் பகதூர் ரகுநாதராவ்.

இந்தியாவில் தூக்கிலிடப்பட்ட முதல் தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன்.

அன்னியருக்குக் கப்பம் கட்ட மறுத்த முதல் குறுநில மன்னர் சிவகங்கைச் சீமையை ஆண்ட முத்து வடுக்நாதர்.

தமிழகத்தில் கதர்ப்பிரச்சாரம் செய்த முதலாமவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அவரது மனைவி நாகம்மையாரும், சகோதரி கண்ணம்மாவும்தான் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட முதல் பெண்மணிகள் ஆவர்.

1920ல், தமிழகத்திலேயே முதன்முதலாக சிறுவயல் என்ற கிராமத்தில் காந்தி ஆசிரமம் ஆரம்பித்தவர் ப.ஜீவானந்தம்.

காங்கிரஸ் கொடியின் பெருமை காக்க முதன் முதலில் போராடி உயிர்நீத்த தியாகி திருப்பூர் குமரன்.

இந்தியாவை மீட்க வெளிநாடுகளில் எல்லாம் முதலில் படை திரட்டியவர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

தனி நபராகவே முதன் முதல் சத்தியாகிரகத்தில் ஈடுபட்டவர் வினோபா பாவே.

காமன்ஸ் சபையின் முதல் இந்திய உறுப்பினர் தாதாபாய் நவுரோஜி.

கப்பல் மூலம் படையெடுக்க முதலில் முன்வந்த தமிழ் வீரர் செண்பகராமன் பிள்ளை.

உண்ணாவிரதப் போராட்டத்தால் வெல்ல முடியும் என்பதை முதலில் உலகுக்கு உணர்த்தியவர் மகாத்மா காந்தியார்.

ஆங்கிலேயருக்கு எதிராகக் கப்பல் வர்த்தகம் தொடங்கிய முதல் தமிழர் வ.உ. சிதம்பரம் பிள்ளை.

—எஸ். வசந்தா




*சிந்தனைகள் சிதறிடாமல்*
*பார்த்துக் கொள்ளவேண்டும்-தம்பி*
*தீமைகளைத் தயங்கிடாமல்*
*ஒதுக்கித் தள்ள வேண்டும்!*

*எந்த நாளும் உண்மையையே*
*எடுத்துச் சொல்ல வேண்டும்-தம்பி*
*ஏற்றமிகு பாதையிலே*
*நடந்து போகவேண்டும்!*

*தேசநலன் ஆர்வத்தோடு*
*தினமும் காக்க வேண்டும்-தம்பி*
*தியாகமிகு எண்ணங்களை*
*நெஞ்சில் சேர்க்க வேண்டும்!*

*நாசவேலை நரிகள்வேலை*
*போக்கி வாழ வேண்டும்-தம்பி*
*நமதுநாட்டின் அமைதியையே*
*நாடி உழைக்க வேண்டும்!*

—கே. எஸ். நாகராஜன்.

# மதுவிலக்கு வெற்றிபெற...



மது விலக்கைத் தீவிரமாக அமல்படுத்தப் பூவிருந்தவல்லியை அடுத்துள்ள செந்நீர்க்குப்பம் கிராமத்தில் மதுவிலக்குக் காவல் நிலையத் திறப்புவிழாவும், மதுவிலக்குப் பிரசாரத் தொடக்க விழாவும் 6-7-86 அன்று நடந்தது.

மதுவின் தீமைகளை விளக்கும் வண்ணச் சுவரொட்டிகள், விழா மேடையை அலங்கரித்தன. பூவிருந்தவல்லி, ஆவடி, அம்பத்தூரிலிருந்து வந்த பொதுமக்களும் தொழிலாளர்களும், வழக்கறிஞர்களும், பள்ளி மாணவ, மாணவிகளும் திரளாக விழாவில் பங்கேற்றனர்.

மதுவின் தீமைகளை விளக்கும் துண்டுப் பிரசுரங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டன. திரு. வி. சுந்தரவரதன் (கூடுதல் கண்காணிப்பாளர், மதுவிலக்கு அமல்பிரிவு, செங்கை கிழக்கு) அனைவரையும் வரவேற்று மதுவினால் ஏற்படும் தீமைகளை எடுத்துச்சொல்லி 'கள்ளச் சாராயத்தை ஒழிக்கத் தீவிர நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறினார்.

பள்ளிச் சிறுமிகள் விழாவில் மதுவின் தீமைகளைப் பற்றி ஆற்றிய உரை அனைவருடைய மனதையும் வெகுவாகக் கவர்ந்தது. திரு பாலகிருஷ்ணன் (துணை கமிஷனர், மதுவிலக்குப் பிரிவு, சென்னை) பேசுகையில், ஏழை எளிய மக்கள் மதுவின் கொடுமையால் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் என்று விளக்கினார்.

திரு. ஏ. வி. அலெக்ஸாண்டர் (காவல் துறைத் துணைத் தலைவர், மதுவிலக்குப் பிரிவு, சென்னை) காவல் நிலையத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், கூறியதாவது: இனிமேல் காவல் துறையினர் மதுவிலக்கு சம்பந்தமாக மூன்றுவித நோக்குடன் செயல்படுவார்கள்-அதாவது: (1) அமல்படுத்துதல் (2) கல்வி அறிவு புகட்டுதல் (3) வேலை வாய்ப்பு.

''நவீன யுக்திகளைக் கையாண்டு மதுவிலக்குச் சட்டம் தீவிரமாக அமல்படுத்தப்படும். ஏழை எளிய மக்களை மது அரக்கனின் கோரப்பிடியிலிருந்து விடுவிக்க மதுவின் தீமைகள் பற்றி மக்களின் மத்தியில் விரிவாக பிரசாரம் செய்யப்படும். இப்பணியில் மாணவர்கள், சமூக நல நிறுவனங்களின் ஒத்துழைப்புடன், கூட்டங்கள், வீடியோ காட்சிகள் நடத்தப்படும். பூமிக்கு அடியில் ரகசியமாகப் புதைத்து வைத்திருக்கும் சாராய ஊறல் கொண்ட இரும்புப் பாரல்கள் Metal Detector போன்ற நவீன கருவிகளைப் பயன்படுத்தி அழிக்கப்படும். மனம் மாறி இந்தத் தீய வழக்கத்திலிருந்து விடுபட்ட ஏழை மக்களுக்கு நல்ல ஒரு மாற்றுத் திட்டத்தை வகுத்து, அவர்களை ஒரு நல்ல வருவாயுள்ள நிரந்தரப் பணியில் அமர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

> மதுவிலக்கு ஒரு பெரிய சமுதாய நலத் திட்டம் என்பது என் கருத்து. அதனால் மக்கள் எவ்வளவோ நன்மையடைந்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது-மறைக்கவும் முடியாது.
>
> —பேரறிஞர் அண்ணா.

''மாநில அரசின் சுயவேலைத் திட்டம் மற்றும் தேசியமயமான வங்கிகள் அளிக்கும் கடன் வழங்கும் திட்டம் இவைகளைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தத் தீய தொழிலை அறவே விட்டவர்களுக்கு ஒரு நல்வாழ்வு அமைக்கப்படும்.

''மதுவிலக்கு தமிழ்நாட்டில் வெற்றிகரமாகச் செயல்படுவதற்குக் காவல்துறையினர் முழு மூச்சுடன் செயல்படுவார்கள். பொது மக்களும் சாராயம் காய்ச்சும் ஊர்களில் சிறு குழுக்கள் அமைத்து மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து காவல் துறையினருக்கு இப்பணியில் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.''



# படமும் செய்தியும்


சென்னை கலைவாணர் அரங்கில் 10.7.86 அன்று நடைபெற்ற பாபு ஜெகஜீவன்ராம் அவர்களின் அஞ்சலிக் கூட்டத்தில் அவரது உருவப்படத்தினை மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர் அவர்கள் திறந்து வைத்தார்.





மேதகு குடியரசுத் துணைத் தலைவர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள், கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மையத்தின் கருத்தரங்கக் கூடம், நூலகம் ஆகியவற்றிற்கு 26-7-86 அன்று அடிக்கல் நாட்டினார்.





## சென்ற இதழில்....

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்தைச் சென்ற இதழ் (16-7-86) அட்டை அலங்கரித்தது.

# பார்த்தோம் படித்தோம்

வண்ணப் புகைப்படங்களுடன், கட்டுரை, கவிதை, கதைகள் இத்தனையுடன் தமிழகத்தின் செய்திகளையும் தாங்கி வெளிவந்து நல்லதொரு பயனை அளித்து வருகிறது, தமிழரசு.

—எஸ்.எஸ். வாசன்,
தென்எலப்பாக்கம்.

புகளூர் தொழிற்சாலையின் வெளி முகப்பின் வண்ணப் படம் 'தமிழரசு' அட்டைப் படத்துக்கு ஒரு சபாஷ் போட வைத்தது. தத்ரூபமாக இருந்தது!

ஆப்பிரிக்கக் குழந்தைகள் நலத்துக்காக ஓட்டம் நடந்ததைக் கட்டுரையில் (காலத்தை வெல்லும் ஓட்டம்) அழகாகச் சித்திரித்திருக்கிறீர்கள்!

—எம். லேனாப்ரியன்,
திருமருகல்

1-6-86 இதழ், முன் பக்க அட்டையில் புகளூர் காகித ஆலையையே எங்கள் கண்முன் நிறுத்திவிட்டீர்கள். நேரில் காண முடியாதவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதம்.

—சு. பாஸ்கரன்,
அணிக்கடவு.

தேனின் மருத்துவக்குணங்கள் மற்றும் தேன் அருந்துவதால் ஏற்படும் பயன்கள் பற்றிக் கூறியிருந்தவை மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. அருமையான கருத்தைத் தொகுத்து வெளியிட்டதற்கு நன்றி.

—மு. வேதபுரி,
கோட்டுப்பாக்கம்.

16-6-86 தமிழரசு இதழில் 'சட்ட மன்றங்கள் ஆற்றும் பணிகள்' என்ற தலைப்பில் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச்.பாண்டியன் அவர்கள் கூறிய கருத்து மிக அருமை.

—சிவன்
மதுரை.

கவியரசர் பற்றி பல அறிந்திடாத புதிய செய்திகளைத் தொகுத்து, நெஞ்சில் நிலைத்து நிற்கும்படியாக — ஒரு அழிவில்லாக் கலைஞனுக்கு அஞ்சலி செலுத்தும் விதமாய் அமைந்திருந்த தமிழ்ப்பித்தனின் கட்டுரை அற்புதம்!

—ரேவதி ப்ரியன்,
ஈரோடு-1.

ஜூன் 16, இதழில் வந்த கவியரசர் கண்ணதாசன் படங்கள் அருமை! கட்டுரைகள் மூலம் புதிய செய்திகளை அறிய முடிந்தது தேநீர் குடித்தால் புற்றுநோய் வராது, ஆப்பிள் - தலைவர்கள் பொன்மொழிகள் போன்ற குறிப்புகள் பயனுள்ளதாகும்.

—ஆர். ஜி. துரைராஜு,
கீழப்பழுவூர்.

## உதவி இயக்குநர் திரு கே.எம். ராஜு மறைவு



செய்தி மக்கள் தொடர்புத் துறையில் நினைவகங்கள் பிரிவின் உதவி இயக்குநராகப் பணியாற்றி வந்த திரு கே. எம். ராஜு அவர்கள் சில நாட்கள் உடல் நலக் குறைவாக இருந்து 21-7-86 அன்று இரவு 12 மணி அளவில், சென்னை மருத்துவ மனையில் காலமானார்.

22-7-86 அன்று அவரது உடல் மருத்துவ மனையின் அமரர் ஊர்தியின் மூலம் அவரது சொந்த ஊரான செக்கானூரணிக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆணையர் மற்றும் செயலர் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை திரு ஏ.பி. முத்துசாமி, இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. மற்றும் செய்தி மக்கள் தொடர்புத்துறை அலுவலர்கள் மருத்துவ மனைக்குச் சென்று, மறைந்த ராஜுவுக்கு அஞ்சலி செலுத்தினர்.


53 வயதை எட்டிய திரு ராஜு அவர்கள் மண்டல செய்தி மக்கள் தொடர்பு அலுவலராகவும், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராகவும், தமிழரசு - விற்பனை மேலாளராகவும் பணிபுரிந்திருக்கிறார்.

எப்போதும் எளிமையாகவும், இனிமையாகவும் பழகி வந்த திரு ராஜு அவர்களின் மறைவுக்கு 'தமிழரசு' தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23






# துரிதவேகத்தில் வறட்சி நிவாரணப் பணிகள்



மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களை மாண்புமிகு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு சிவ்சங்கர் அவர்கள் 26.7.'86 அன்று சந்தித்து உரையாடினார்.



சென்னை மாநகரில் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் தொடர்பான பணிகளை ஒருங்கிணைப்பது குறித்து ஆய்வு நடத்த உயர்மட்டக் கூட்டம் 1.8.'86 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர்கள், தலைமைச் செயலர், அரசு உயர் அலுவலர்கள், வாரியத் தலைவர்கள், தொடர்புடைய உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வறட்சி நிவாரணப் பணிகளைச் செயல் படுத்துவதில் உள்ள முன்னேற்றம் குறித்து சிறப்பு ஆணையர் களுடனும், செயலாளர் களுடனும் துறைத் தலைவர்களுடனும், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் திரு ஏ. பத்மநாபன் இ.ஆ.ப. அவர்கள் ஆய்வு செய்தார். பின் செய்தியாளர் களைச் சந்தித்தபோது (11-8-86) அவர் தெரிவித்த தகவல்களாவன:

"குடிநீர்ப் பணிகளில், ஆழ்துளைக் கிணறுகள் 6,674 போட ரூ. 1,668.47 இலட்சம் நிதி ஒதுக்கியதில் 2,724 ஆழ் துளைக் கிணறுகள் ரூ. 666.50 இலட்சம் செலவில் போடப்பட்டுள்ளன. 319.46



இலட்சம் செலவில் 6,230 கிணறுகள் ஆழப் படுத்த ஆணையிட்டதில் ரூ. 161.65 இலட் சம் செலவில் 4,038 கிணறுகள் ஆழப்படுத் தப்பட்டுள்ளன. 51 பொதுக் கிணறுகள் அமைக்க ரூ. 98.77 இலட்சம் நிதி ஒதுக்கி யதில் 29 கிணறுகள் ரூ. 8.69 இலட்சம் செலவில் போடப்பட்டுள்ளன. 1,188 உறைக் கிணறுகள் அமைக்க ரூ. 24.70 இலட்சம் நிதி ஒதுக்கியதில் ரூ. 15. 50 இலட்சம் செலவில் 842 உறைக் கிணறு கள் அமைக்கப்பட்டுள்ளன.

"குடிநீர்ப் பணிகளுக்காகத் தனி மின் வசதி இணைப்பு வழங்க ரூ. 20 இலட்சம் நிதி ஒதுக்கியதில் ரூ. 14.01 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. லாரிகள் மற்றும் வண்டிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.40.08 இலட்சம் ஒதுக்கியதில் ரூ. 20.43 இலட் சம் செலவு செய்யப்பட்டுள்ளது. குடிநீர்த் திட்ட மேம்பாட்டுப் பணிகளுக்கென ரூ. 146.73 இலட்சம் நிதி ஒதுக்கியதில் ரூ. 15.46 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

"மற்ற குடிநீர்ப் பணிகளுக்கென ஒதுக் கிய ரூ. 25.30 இலட்சத்தில் ரூ. 21.30 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 2,343.51 இலட்சம் நிதி ஒதுக்கியதில் ரூ. 925.54 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. முன்பிருந்த கைப் பம்புகளும், மேல் நிலை நீர்த்தொட்டி களும் மோட்டார் பம்புகளும் நல்லமுறை யில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

"குறுபாசனம், பெரும்பாசனம், மண் வளப்பாதுகாப்பு, நெடுஞ்சாலைப் பணித் துறை, மற்றும் காடு வளர்த்தல் ஆகிய இனங்களின் மூலம் 11,900 இடங்களில் 35 இலட்சத்து 62 ஆயிரம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டு 1 இலட்சத்து 96 ஆயிரத்து 16 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது.

"குடிநீர்ப் பணிகளில் மீதமுள்ள இனங் களையும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட் டங்களாக மேலும் முனைப்பாகச் செயல் படுத்த வேண்டி, இப்பணிகளைக் கூர்ந்து ஆய்வுசெய்ய வறட்சி நிலவி வரும் 18 மாவட்டங்கள், 5 சிறப்பு ஆணையர் களுக்கும் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை ஆணையருக்கும் பகிர்ந்து வழங்கப்பட் டுள்ளன.

"மாவட்டங்களில் ...றும் பணிகளை அவ்வப்போது ...பார்வை யிட்டு, துரிதமாகச் செயல்படுத்த அறி வுறுத்தப்பட்டுள்ளது.

85378

"துறைத்தலைவர்களையும், அவ்வப் போது மேற்பார்வை செய்வதுடன் திடீர் சோதனையும் செய்து துரிதமாகச் செயல் படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்பட் டுள்ளது. மாவட்டத்துறை அலுவலர்கள் இப்பணிகளைத் துரிதமாகச் செயல்படுத்து வதுடன், மாவட்ட ஆட்சித் தலைவர் களுக்கு முழு ஒத்துழைப்புத் தர வேண்டு மெனவும் கூறப்பட்டுள்ளது."

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2017
அட்சய - ஆடி 32
மலர் : 17 இதழ் : 4
16-8-1986



# மகளிர் குல மாணிக்கம்

**டாக்டர் திருமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் மகனார் தமது தாயை இங்கே நினைவுகூர்கிறார்**

டாக்டர் திருமதி எஸ். முத்துலட்சுமி ரெட்டி 30.7.1886 அன்று புதுக்கோட்டையில் மத்தியதரக் குடும்பத்தில் பிறந்தார், இவருடன் பிறந்தவர்கள் மூவர். இவர் மூத்தவர்.

அந்தக் கால இந்து மத வழக்கப்படி இவரது படிப்பு தொடக்கப்பள்ளி நிலையிலேயே நிறுத்தப்பட்டு விட்டது. இவரது ஆசிரியர் பாலையா வாத்தியார், இவரது படிப்பு பாதியில் நிறுத்தப்பட்டதற்காக மிகவும் வருந்தினார். கண்மூடித்தனமான பழக்க வழக்கங்களால் அறிவுக் கூர்மையுள்ள ஒரு பெண் பாதிக்கப்படுவதைக் குறிப்பிட்டு, முத்துலட்சுமி அவர்களது பெற்றோர்களிடம் வேண்டினார். அவரது படிப்புச் செலவினையும் தாமே ஏற்பதாகவும் கூறினார். தன்னலமற்ற அந்தத் தூயவரின் கோரிக்கை வெற்றியடைந்து, முத்துலட்சுமியின் கல்விக் கதவு திறக்கப்பட்டது.

அவர் வீட்டிலிருந்தே தனியாகப் படித்து மெட்ரிக்குலேஷன் தேர்வை எழுதித் தேர்வடைந்தார். இது அந்தக் காலத்தில் புதுக்கோட்டை நகரில் பரபரப்பூட்டும் முக்கிய செய்தியாகப் பேசப்பட்டது.

புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் பெண்களைச் சேர்ப்பதில்லை. ஆனால் முத்துலட்சுமி இன்டர்மீடியட் வகுப்பில் சேர அக்கல்லூரிக்கு மனுச்செய்தார். கல்லூரி முதல்வர் ,ஆசிரியர்கள் மற்றவர்கள் அதிர்ச்சியடைந்தனர். இளைஞரான புதுக்கோட்டை மகாராஜா ஆஸ்திரேலியா பெண்ணை மணந்தவர். அவரின் சிறப்பு அனுமதியின் பேரில் அக்கல்லூரியில் முத்துலட்சுமி சேர்க்கப்பட்டார்.

கல்லூரியில் மாணவர்களுக்கும் இவருக்குமிடையே ஒரு திரையிருக்கும்; இவர் மாணவர்களுக்குத் தெரியமாட்டார். ஆனால் ஆசிரியர்களுக்குத் தெரிவார். ஒவ்வொரு நாளும் கல்லூரி முடியும்போது அவர் வெளியே சென்ற பிறகு தான், மற்ற மாணவர்கள் வெளியே அனுப்பப்படுவார்கள். இந்நிலையில் இன்டர்மீடியட் பல்கலைக் கழகத் தேர்வில் முத்துலட்சுமி தனது வகுப்பிலேயே முதலாவதாக வெற்றியடைந்தார்.

1907ல் சென்னை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். புதுக்கோட்டை மகாராஜா உதவிப் பணம் வழங்கினார். தந்தையுடன் சென்னையில் வீடு எடுத்துத் தங்கிப் படித்தார். உரிய காலத்திற்குமுன்னே ஓய்வுபெற்று இவரது தந்தையார் துணையாக இருந்தார். இவர்தான் மருத்துவப் படிப்பில் (M.B&C.M), சேர்ந்த முதல் மாணவி. கல்லூரி வாழ்வில் எப்பொழுதும் முதல் மாணவியாகவே திகழ்ந்து வந்தார். 1912ல் மருத்துவப் பட்டதாரியானார். இந்தியாவிலேயே மருத்துவக் கல்லூரியில் முதல் பட்டதாரி பெண்மணி இவரே!

எழும்பூர் தாய்-சேய் மருத்துவ மனையில் ஹவுஸ் சர்ஜனாகச் சேர்ந்தார், முத்துலட்சுமி இதுவரை இம்மருத்துவமனையில் ஹவுஸ் சர்ஜனாக எந்தப் பெண்மணியும் இருந்ததில்லை. சென்னை மருத்துவத் துறை வரலாற்றில் இவரே முதல் பெண் ஹவுஸ் சர்ஜன்.

1913ல் ஹவுஸ்சர்ஜன் முடித்து எழும்பூரில் தனியே மருத்துவத் தொழில் செய்ய ஆரம்பித்தார். அந்தக் காலத்தில் டாக்டர் டி. சுந்தரரெட்டி என்பவர் எப்.ஆர்.சி.எஸ். பட்டம் பெற்ற முதல் இந்தியராகப் புகழ் பெற்று விளங்கினார். அவர் டாக்டர் முத்துலட்சுமியின் தகப்பனாரை அணுகி, பெண் கேட்டார். அதற்கு அவரும் இணங்கினார். 1914 ஏப்ரலில் டாக்டர் டி.சுந்தர ரெட்டி - டாக்டர் முத்துலட்சுமி திருமணம் நடந்தது. இவர்களுக்கு அவ்வாண்டு டிசம்பரில் முதல் மகனும், 1919 செப்டம்பரில் இரண்டாவது மகனும் பிறந்தார்கள்.

புற்று நோய் பற்றி இவர் 1922 வரை அதிகம் கவனம் செலுத்தவில்லை. இவரது சகோதரிக்குப் புற்றுநோய் தோன்றி அவதியுற்றார். அப்போதுதான் புற்றுநோய் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். இவரது சகோதரி 1923ல் மறைந்தார். சொந்த இழப்பு இவரைப் புற்றுநோய் குணப்படுத்தும் துறையில் இழுத்து விட்டது.

சென்னை இந்திய மகளிர் மன்றத்தின் (Womens Indian Association of Madras) முதல் இந்திய உறுப்பினரானார். பல ஆண்டு காலம் செயலாளராகவும் 'ஸ்திரி தர்மா' இதழின் ஆசிரியராகவும் விளங்கினார். பின்னால் அதன் ஆயுள் காலத் தலைவரானார்.

மேல் படிப்பிற்காக 1925ல் இங்கிலாந்து சென்று 1927ல் நாடு திரும்பினார். சென்னை சட்டமேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டார். விரைவில் அதன் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். உலகிலேயே சட்டசபைக்குத் தலைமையேற்ற முதல் பெண்மணியும் இவரே !

1927 முதல் 1930 வரை சட்டமன்றத்தில் டாக்டர் முத்துலட்சுமி சிறப்பாகப் பணியாற்றினார். அவரது பெருமுயற்சியின் காரணமாக சமூக சீர்திருத்தச் சட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை தேவதாசி ஒழிப்புச் சட்டம், விபச்சார ஒழிப்புச் சட்டம், குழந்தைகள் வதைத் தடுப்புச் சட்டம், பெண்கள் திருமண வயதை உயர்த்தும் சட்டம் போன்றவையாகும். இந்தக் கால கட்டத்தில் இந்தியாவிலும் பர்மாவிலும் கல்வித் திட்டங்களை ஆய்வு செய்வதற்கான குழுவிலும் அவர் வைஸ்ராயினால் நியமிக்கப்பட்டார்.

1930ஆம் ஆண்டு உப்பு சத்தியாக்கிரகம் நடைபெறும்போது ஊட்டியில் இருந்தார். அப்போது காந்தியடிகள் கைதானதை அறிந்து உடனே தனது சட்ட மன்றத் துணைத்தலைவர் மற்றும் உறுப்பினர் பதவிகளை ராஜினாமா செய்தார்.

அடுத்து என்ன செய்வது என்ற கேள்விக்கு மூன்று வழிகள் முன் நின்றன. ஒன்று மருத்துவத் தொழிலில் தொடர்ந்து ஈடுபடுவது. அடுத்தது அரசியலில் ஈடுபடுவது. மற்றொன்று சமூக மறுமலர்ச்சி இயக்கங்களில் ஈடுபடுவது.

மூடத் தனமான இந்து வழக்கப்படி ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பெண்கள் ஆலயங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டனர். அவர்கள் பக்தியாலும் பயத்தாலும் பின்னர் விலைமகளாக்கப்பட்டார்கள். இதை டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி எதிர்த்தார். இவ் வினத்தைச் சேர்ந்த தைரியமான இளம் பெண்களும் இம்முறையை

**டாக்டர்**
**எஸ். கிருஷ்ணமூர்த்தி**
**துணைத் தலைவர்,**
**புற்றுநோய் மருத்துவமனை,**
**அடையாறு,**
**சென்னை.**



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியும் அவரது கணவரும் தமது புதல்வர்களுடன் (1940)

புதுக்கோட்டை மகாராஜாக் கல்லூரியின் ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களுடன் ஒரே மாணவியான முத்துலட்சுமி (1902)





# அவ்வை இல்லத்தின் அன்னை

சமுதாயப் பணியில் ஈடுபட்டுள்ள பெண்கள் ஓரளவு பெருமைப்படுத்தப்பட்டாலும் சமுதாய வாழ்வில் எத்தனையோ இன்னல்களுக்குப் பெண்குலம் இலக்காகியிருக்கிறது. இந்தக் கொடுமைகளிலிருந்து பெண்குலத்தை விடுவிக்க அரை நூற்றாண்டுக்கு முன்பே பாடுபட்டவர்கள் பலர். அவர்களில் முதன்மையானவர் டாக்டர் முத்துலட்சுமிரெட்டி.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களின் நூற்றாண்டு விழாவும், சிறப்பு அஞ்சல் உறை வெளியீட்டு விழாவும் சென்னை அடையாறு அவ்வை இல்லத்தில் 30.7.1986 அன்று நடைபெற்றன.

செய்தி - மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா.கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்றுப் பேசுகையில் கூறியதாவது:

வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட முத்துலட்சுமிரெட்டியின் நூறாவது ஆண்டு விழாவினை இன்று இங்கு நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அவர் அன்று அமைத்த மருத்துவமனை இன்று வளர்ந்து 200 படுக்கைகள் கொண்டதாகத் திகழ்கிறது.

''1930ஆம் ஆண்டு ஆதரவற்ற குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க அவர் முயற்சி செய்தார், முடியவில்லை. அதன் காரணமாகத் தன்னுடைய வீட்டின் ஒரு பகுதியில் ஆரம்பித்த பள்ளி, இன்று பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. நூற்றாண்டு விழாவின் முதற்கட்டமாக இன்று அஞ்சல் சிறப்பு உறை வெளியிடப்படுகிறது.''

விழாவில் தலைமையேற்ற செய்தி சுற்றுலாத் துறையின் ஆணையர் மற்றும் செயலர் திரு ஏ.பி.முத்துசாமி, இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில் கூறியதாவது:

''ஐம்பது ஆண்டுகளுக்கு முன் சமூகப் பணி ஆற்றுவது மிகவும் கடினம். அதைவிட சீர்திருத்தப் பணி ஆற்றுவது கடினமாகும். இந்த இரண்டு பணிகளை இவர் ஆற்றியது பாராட்டுக்குரியது. பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவரின் நினைவாக இன்று அஞ்சல் உறை வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.''

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்பு அஞ்சல் உறையையும், முத்திரையையும் வெளியிட, டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.


மாநில அஞ்சல் துறைத் தலைவர் திரு எம்.எஸ்.ரங்கசாமி அவர்கள் பேசுகையில், ''கோடி கோடி மனிதர்களில் ஒருவர் முத்துலட்சுமி ரெட்டி என்றால் மிகையாகாது'' என்றார்.

டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது: ''சமூக நலத்தொண்டு ஆற்றியவர்களில் மிகவும் பாராட்டத்தக்கவர். சட்டமேலவையில்,தான் வகித்த துணைத் தலைவர் பதவியை, காந்தியடிகளைக் கைதுசெய்ததற்காகத் துறந்தவர். அந்தக் காலத்தில் உலகம் முழுவதும் சுற்றிப் பெண்கள் சமுதாயத்திற்காக மிகவும் பாடுபட்டவர்.''

திருமதி சரோஜினி வரதப்பன் அவர்கள் பேசுகையில், ''தோன்றிற் புகழோடுதோன்றுக' என்ற இலக்கணத்திற்கு உதாரணமாகத் திகழ்ந்தார். அவ்வை இல்லம், புற்றுநோய் மருத்துவமனை அவரது பணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். அவ்வை இல்ல நிறுவனத்தில் படிக்கும் மாணவச் செல்வங்கள் அதிர்ஷ்டசாலிகள். முத்துலட்சுமி போன்று



முத்துக்களாக வருவார்கள் என்று நம்புகிறேன். முத்துலட்சுமியின் புகழ் இமயம்போல் உள்ளது'' என்றார்.




புற்றுநோய் மருத்துவமனை துணைத் தலைவரும், முத்துலட்சுமிரெட்டியின் மகனுமாகிய டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகையில்,''எனது தாயின் பெயரில் அரசு சார்பில் விழா கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். அந்தக் காலத்தில் கிராமத்துப் பாணியில் மருத்துவக் கல்லூரிக்குப் போய் முதல் மருத்துவப் பெண்மணியாகப் படித்து டாக்டர் பட்டம் பெற்றார்'' என்றார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் கூறியதாவது:

''இறந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மாபெரும் தலைவி பிறந்த நாளில் அமைதியாகக் கூடியிருக்கிறோம். அடிமைப்பட்ட சமுதாயத்தில் உள்ள பெண்மணி சிறந்த காரியத்தில் ஈடுபட்டிருந்தார். இந்தியாவில் எத்தனைப்பேர் அவரை எண்ணிப் பார்க்கிறார்கள். நாம் முத்துலட்சுமி பெயரில் அஞ்சல் தலை வெளியிட வேண்டும் என்று மைய அரசைக் கேட்டோம். அவர்கள் கால அவகாசம் இல்லை என்று அஞ்சல் உறை வெளியிடுகிறார்கள்.

''இந்த நாட்டில் உள்ள எல்லாப் பெண்களுக்கும்தான் அவர் சமூகத்தொண்டு ஆற்றினார். சிங்கத்தின் குகையிலேயே சிங்கத்தைச் சந்தித்தவர் முத்துலட்சுமியாவார்கள். முத்துலட்சுமி அமைத்த புற்றுநோய் மருத்துவமனைக்குத் தன் பெயரை வைக்கக்கூடாது என்று சொன்னார். 'அவ்வை இல்லம்' என்று தமிழ்ப் பெயர் வைத்துப் பள்ளி நடத்திவருவது மிகவும் பாராட்டுக்குரியது. இரண்டு பிள்ளைகளைப் பள்ளியில் சேர்க்க விரும்பினார், முடியவில்லை. அதனால் தன்னுடைய வீட்டின் ஒரு பகுதியிலேயே பள்ளியைத் தோற்றுவித்தார் அவர்.


மருத்துவக் கல்லூரி மாணவி முத்துலட்சுமி (சென்னை)

''முத்துலட்சுமி அவர்கள் சட்டமேலவையில் சிறந்த முறையில் வாதாடும் திறமையுடையவராகத் திகழ்ந்தார். முத்துலட்சுமியின் பெருமையை நாம் இந்தியா முழுவதும் தெரியப்படுத்த வேண்டும். இளையதலைமுறையினருக்கும் நாம் அவ்ரது பெருமையை எடுத்துக் காட்ட வேண்டும்.


''இந்த அரசு அமைந்த பிறகுதான் 8 பக்கத்திற்கு முத்துலட்சுமி பற்றி பாடப் புத்தகத்தில் வைக்கப்பட்டுள்ளது. முத்துலட்சுமி உயிரோடு இருந்த காலத்தில் 1956இல் முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் ரூ.30 ஆயிரத்தை முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவ்வை இல்லத்திற்குக் கொடுத்தார்கள்.

''இந்தியாவில் சமூகத் தொண்டிற்காக வழிகாட்டிய முதல் பெண்மணி முத்துலட்சுமி என்றால் மிகையாகாது. இந்த நாட்டிற்கு நல்லவர்களை நாம் அடையாளம் காட்ட வேண்டும். சமுதாயத்திற்காகப் பாடுபட்டவர்களை நாம் நன்றி மறவாதவர்கள் என்று உலகிற்குத் தெரியப்படுத்த வேண்டும். அரசு சார்பில் அவருக்குச் சிலை வைக்கப்படும்''.

திருமதி மந்தா கிருஷ்ணமூர்த்தி நன்றி தெரிவித்துப் பேசினார்.

அவ்வை இல்லத்தில் முத்துலட்சுமிரெட்டியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் அரிய புகைப்படக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் அவரது உன்னதமான வாழ்க்கை வரலாற்றை எளிதில் அறிந்து கொள்ள முடிந்தது.

—நமது செய்தியாளர்



**மகன்கள், மருமகள்கள் மற்றும் பேரக் குழந்தைகளுடன்....**
**(1950)**

எதிர்த்தனர். முத்துலட்சுமி அவர்களது முயற்சியால் தேவஸ்தானங்களில் தேவதாசி முறை ஒழிக்கப்பட்டது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட இளம் பெண்களுக்குக் கல்வியும், நல்ல வாழ்க்கையும் ஏற்படுத்தித்தர முயற்சி எடுத்தார்.

சென்னையில் அப்போது இந்துப்பெண்களுக்கான இரண்டு விடுதிகள் மட்டுமே இருந்தன. ஒன்று ஐஸ்ஹவுஸில் பிராமணப் பெண்களுக்கும், மற்றொன்று திருவல்லிக்கேணி பெரிய தெருவில் பிராமணர் அல்லாத மற்ற இனப்பெண்களுக்கும்ஆகஇரண்டு இருந்தன. திருமதி ரெட்டி இவ்விரு விடுதிகளிலும் கௌரவ மருத்துவ அதிகாரியாக இருந்தார். தேவதாசி இனத்தைச் சேர்ந்த ஏழு பெண்கள் தங்கள் வாழ்விற்காக டாக்டர் முத்துலட்சுமியை அணுகினர். அவர்களை அவர் மேற்கண்ட விடுதிக் காப்பாளரைச் சந்திக்குமாறு கூறி கடிதம் கொடுத்து அனுப்பினார். அங்கு இடம் மறுக்கப்பட்டு அழுது கொண்டு அவர்கள் அவரிடமே திரும்பினர். அன்று இரவே திருமதி ரெட்டி அவர்களது இல்லத்தில் அவ்வை இல்லம் அமைக்கப்பட்டது. அவரது சகோதரி திருமதி நல்லமுத்து ராமமூர்த்தி இவ்வில்லத்தில் முதல் வார்டன் ஆனார்.

1930ல் அநீதியையும் தன்னலத்தையும் எதிர்த்துப் புரட்சிகரமாக அமைக்கப்பட்ட அவ்வை இல்லம் மிகவும் வலுவுடன் வளர்ந்தது. 350 குழந்தைகள், பல ஆதரவற்ற பெண்கள் அதில் இருந்தனர். அங்கு ஆரம்பப்பள்ளி, தொழிற் பயிற்சிப்பள்ளி,

**பெற்றோர் மற்றும் சகோதர சகோதரியருடன் முத்துலட்சுமி**
**(15 வயதில் - கையில் புத்தகம் வைத்திருப்பவர்.)**







**அவ்வை இல்லக் குழந்தைகளுடன்....**

ஆரம்ப ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஆகியவை நடத்தப்பட்டன.

ஆயிரக்கணக்கான ஆதரவற்ற பெண்கள் மற்றும் குழந்தைகள் இவ் வில்லத்திலிருந்து டாக்டராகவும், ஆசிரியராகவும், நர்ஸாகவும் வெளியேறினார்கள்.


டாக்டர் திருமதி ரெட்டி முதல் பாதுகாப்புச் சங்கம் ( Vigilance Association ) மகளிர் காப்பகம் ஆகியவற்றைச் சென்னையில் அமைத்தார். குழந்தைகள் உதவி சங்கத்தின் செயலாவராக இருந்தார்.

லண்டனில் நடைபெற்ற 3வது வட்ட மேஜை மாநாட்டிலும், சிக்காகோவில் நடந்த உலக மகளிர் காங்கிரஸிலும் 1934ல் இந்திய தேசிய மகளிர் அமைப்பின் சார்பாக இந்திய மகளிர் பிரதிநிதியாகக் கலந்து கொண்டார்.

1926ல் லண்டனில் இருந்த போது டாக்டர் சர் எர்னஸ்ட் மைல்ஸ் அறுவைச் சிகிச்சை மூலம் புற்று நோயை ராயல் புற்றுநோய் மருத்துவமனையில் குணப்படுத்துவதைப் பார்த்தார். அப்போது அவர் ஒரு லட்சியக் கனவைக் கண்டார். இதுபோன்று ஒரு மருத்துவமனையைச் சென்னையில் ஏற்படுத்த வேண்டும் என்பது தான் அந்தக் கனவு. 1927ல் சென்னை திரும்பியதும் புற்றுநோய் மருத்துவமனை அமைப்பு பற்றி சட்டமன்றத்திலும், பல கூட்டங்களிலும், அமைப்புகளிலும் கூறினார். ஆனால் அரசோ, மக்களோ இதில் ஆர்வம் காட்டவில்லை.

1936-ல் ஐந்தாம் ஜார்ஜ் நினைவு நிதி வசூலிக்கப்பட்டது. அப்போது இந்தப் புற்றுநோய் மருத்துவமனை பற்றி அதனிடம் கூறினார். அதுவும் பலன் இல்லை. அந்த நிதியைக் கொண்டு புற்றுநோய் மருத்துவமனையைக் கட்ட வேண்டும் என்ற யோசனையை தெரிவித்தார். அந்த யோசனை ஏற்கப்படவில்லை. 1949-ல் இந்திய விடுதலைக்குப் பிறகு அவரது கனவு நனவாகத் தொடங்கியது. புற்றுநோய் நிவாரண நிதி அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் நிதி வசூலித்து, புற்று நோய் மருத்துவமனை அமைக்க முயற்சி மேற்கொண்டார். இரண்டாண்டு கடுமையான முயற்சி எடுத்து ரூ.2 லட்சம் வசூல் செய்தார். 1955ல் குறைந்த நிதியுடனும் ஆனால் நிறைந்த துணிவுடனும் புற்றுநோய் நிலையத்தை ஏற்படுத்தினார். அவரது வாழ்த்துடனும் வழிகாட்டுதலுடனும் அந் நிலையம் சிறப்பாக வளர்ந்தது. 301 படுக்கைகள் கதிர் இயக்கக் கருவிகளுடனும் உயர்ந்த அறுவைச் சிகிச்சைக் கருவிகள் சிறந்த பயிற்சி பெற்ற மருத்துவர்களுடனும்சிறப்புப்பெற்றுத் திகழ்ந்தது. தென் மண்டலப் புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சை மையமாக இதனை மத்திய அரசு தேர்ந்தெடுத்துள்ளது.

**சென்னை சட்டமேலவையின் துணைத் தலைவராகப் பணியாற்றிய டாக்டர் திருமதி முத்துலட்சுமி, மேலவைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுடன் (1926-31)**



டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்கு மத்திய அரசு'பத்மபூஷண்' விருதினை 1956ல் அளித்தது. 1966ல் அவரது 80வது பிறந்த நாளில் தமிழ்நாட்டில் உள்ள மகளிர் அமைப்புகள் ராஜாஜி மண்டபத்தில் விழா எடுத்து அவரைப் பாராட்டின. அவரால் உருவாக்கப்பட்ட இந்திய மகளிர் சங்க வெள்ளி விழாக் கொண்டாட்டங்களில் 1967 நவம்பர்5ல் கலந்து கொண்டு உருக்கமான உரையாற்றினார். அவரது உடல்நிலை சிறிது சிறிதாகப் பாதிக்கப்பட்டு வந்தது. சென்னைக்கோடையைத் தவிர்க்க 1968ல் அவர் பெங்களூர் சென்றார். ஜூலை 18ல் அவர் உடல் நலம் குன்றியதால் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டார். ஜூலை 22ல் அடையாறு புற்றுநோய் நிலையத்தில் அமைதியாக அவரது ஆவி பிரிந்தது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களது வாழ்க்கை ஒரு வீர காவியமாகும். அவர் தன்னலமற்ற துணிவுடன் அமைத்துக் கொண்ட அவரது வாழ்க்கைப் பாதை மிக உன்னதமானது. ஈடுபட்ட எல்லாத்துறையிலும் முதன்மையாகத் திகழ்ந்த அவர் தனது வாழ்வை இன்பமாக அமைத்துக் கொண்டிருக்கலாம். ஆனால்சமுதாயத்திற்கே தன்னை முற்றிலும் அர்ப்பணித்துக் கொண்டு ஏழை எளிய மக்களின் ஏற்றத்திற்காகப் பல இன்னல்களை இன்முகத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார். அவர் தொட்ட துறைகளில் எல்லாம் வெற்றியடைந்து நம் மனங்களில் வெற்றிச் செல்வியாகத் திகழ்ந்தார். மகளிர் குல மறுமலர்ச்சியின் மாணிக்கமாகத் திகழும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் வாழ்க்கை, சாதனை படைத்த ஒரு சரித்திரமாகவும், சமுதாய சீர்திருத்தவாதிகள் பின்பற்றத் தக்கதாகவும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது.

ஞர்களுக்குத் தொழிற்சாலைகளில் நீலக்காலர் வேலை பெற அதிக வாய்ப்புண்டு.

புரட்சித் தலைவருடைய அரசு, தமிழகத்தில் அமைந்ததற்குப் பிறகு தமிழகத்தில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்து, ஐந்து ஆண்டுக் காலம் பட்டியலில் காத்திருப்பவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டும் என்ற திட்டம் கொண்டு வரப்பட்டது. எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ரூ. 50, பி.யூ.சி படித்தவர்களுக்கு ரூ 75, பட்டதாரிகளுக்கு ரூ 100 தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு உதவித் தொகையாக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையின் பேரில் தமிழக அரசு வழங்கி வருகிறது.


வேலையில்லாத் திண்டாட்டம் விலகிட தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் அயல்நாடுகளில் வேலை பெற்றிட ரூ. 50 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனமாய்க் கொண்டு தமிழக அரசு அயல்நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனத்தை 1978—79-ஆம் ஆண்டு நிறுவியது. இந்த நிறுவனம் துவங்கியதிலிருந்து சுமார் 2,922 நபர்களைத் தேர்ந்தெடுத்து அரேபியா மற்றும் வட ஆப்பிரிக்கா நாடுகளுக்கு அனுப்பியுள்ளது. முதன் முதலாக 1984—85ல் சவுதி அரேபியாவிற்கு இந்த நிறுவனம் ஆட்களைத் தேர்ந்தெடுத்து, 46 மருத்துவர்களுடன் ஹஜ் மருத்துவமனை 45 நாட்களுக்கு நடத்தியது. சமீபத்தில் ஓமனில் இருக்கும் தங்குவோர் விடுதிக்கும் சௌதி அரேபியா, லிபியாவிலிருக்கும் மருத்துவமனைகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுத்தது.

ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.20, பதிவு செய்வதற்கு ரூ. 30— என இந்த நிறுவனம் விண்ணப்பதாரர்களிடம் பெறுகிறது. இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை ரூ. 10 கட்டிப் பதிவினைப் புதுப்பிக்க வேண்டும். தேர்தெடுக்கப்பட்ட தொழிலாளர் இனத்தைச் சேர்ந்தவர்கள் இறுதியாகக் குடிபெயர்ந்ததும் ரூ 1,500— கட்ட வேண்டும். தொழில் சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், பொறியாளர்கள் பட்டயக் கணக்காளர் போன்றோர் ரூ. 3,000 செலுத்த வேண்டும். சிறப்பு மருத்துவர் ரூ. 5,000 செலுத்த வேண்டும். கடின உழைப்பால் ஆண்டு ஒன்றுக்கு 1,500 நபர்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவது இந்த நிறுவனத்தால் சாத்தியமாகலாம். வேலையில்லாத் திண்டாட்டம் விலகிட தமிழக அரசின் திட்டங்களும், வழிமுறைகளும், செயல் முறைகளும் இதன்மூலம் உணர்த்தப்படுகின்றன.

இளைய சமுதாயத்தினரும், இனிய தமிழகத்தின் மக்களும் நல்வாழ்வு பெற அரிய பல சாதனைகள் புரிந்து வரும் அரசின் இத்தகைய முயற்சிகள் எல்லா மக்களின் இணைந்த உழைப்பினாலும் ஒன்றுபட்ட உணர்வினாலும், வெற்றி பெறும் உறுதி நமக்கு உண்டு என்பதைக் கூறி நிறைவு செய்கிறேன். **— வானொலி உரை (20-7-86)**

## சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டம்:

சென்னை துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் சென்னைக் கடற்கரையிலிருந்து மயிலாப்பூர் லஸ் வரை 8.45 கி. மீ. தூரம் இருக்கும். இதில் 2.93 கி.மீ. தூரம் தரைமட்டத்திலும் மீதி 5.52 கி.மீ. தூரம் 18 அடி உயர மேல் மட்டத்திலும் அமையும். ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, இத்திட்டம் 1989-1990 ஆண்டிற்குள் முடிவடைய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்திற்கான வேலை 1983-84 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இத்திட்ட அறிக்கையின்படி 1989-1990ல் முடிவடைய வேண்டுமானால், ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வருடமும் ரூ. 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஆனால் மத்திய அரசு 1989-86 ஆம் ஆண்டு வரை ரூ. 8 கோடி மட்டும் 1983-84-லிருந்து 1985-86 முடிய மூன்றாண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டிற்கு ரூ. 4 கோடியை மட்டும் மத்திய அரசு இத்திட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது. இத்திட்டம் குறித்த காலத்திற்குள் முடிவடையவேண்டுமென்று இவ்வரசு ஆர்வமாக உள்ளது. இவ்வரசு இரயில்வேயிக்கு முழு ஒத்துழைப்புக் கொடுத்துள்ளது. மேலும் இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலங்களை இரயில்வேயிக்கு இனாமாக மாற்றம் செய்துள்ளது. இருப்பினும் இத்திட்டத்திற்கு மத்திய அரசு ஒதுக்கியுள்ள நிதி போதுமானதாக இல்லை. இத்திட்டத்திற்கு அதிக நிதி கோருவது குறித்து மத்திய அரசுடன் உயர் மட்ட அளவில் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.







முழு விவரங்களுக்கு, அருகிலுள்ள நியூ இந்தியா ஆபீஸ் அல்லது ஏஜெண்டோடு தொடர்பு கொள்ளுங்கள்.

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

(ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவின் துணை நிறுவனம்)

**இன்சூரன்ஸ்— நஷ்ட காலத்தில் நம்பகமான ஆதரவு!**



# பெருந்தலைவருக்குப் பெருமை

"நல்லவிதமாக ஆரம்பமாகிற எல்லாமே நல்லவிதமாக முடியும்" என்பார்கள்.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் திருநெல்வேலியில் நடைபெற்ற பெருந்தலைவர் காமராஜர் விழா.

24.7.86 அன்று இந்த விழா நடைபெற்றது. விழாவின் ஒரு பகுதியாகக் காலை நிகழ்ச்சி - கருத்தரங்கம்.

மண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் இந்தக் கருத்தரங்கம் நடைபெற்றது.

இதன் முதல் பேச்சாளர் திரு. செங்கோட்டை சனார்த்தனம். "காமராசர் ஒரு ஏழை பங்காளன்" என்னும் தலைப்பில் அவர் ஆற்றிய உரையில் கருத்தரங்கம் களைகட்டி விட்டது.

காமராசரின் சமத்துவக் கண்ணோட்டம் - ஏழைகள் நலனில் அவர் எடுத்துக் கொண்ட அக்கறை இவற்றை அழகுற எடுத்துரைத்தார் இவர். தொடக்கமே சுவையாக அமைந்துவிட்டது.

அடுத்துப் பேசியவர் குற்றாலம் பராசக்தி கல்லூரி முதல்வர் செல்வி பாகீரதி. "காமராசர் ஒரு சிந்தனையாளர்" என்பது இவர் பேசிய தலைப்பு. காமராசரின் சிந்தனை-சொல்-செயல் மூன்றும் ஒன்றின் பரிணாம வளர்ச்சியாக மற்றொன்று இருந்த பாங்கினை விளக்கினார் இவர்.

பேராசிரியர் திரு. சொ.சொ. மீ. சுந்தரம், காமராசர் எவ்வாறு ஒரு செயல் வீரராக விளங்கினார் என்று சொற்சித்திரம் வரைந்தார்.

காமராசரின் கல்வித் தொண்டினைக் கவினுற விளக்கினார் திரு. வலம்புரி ஜான்.

இவர்களது மணியான உரைகளுக்கு மகுடம் சூட்டியது போல் விளங்கியது மாண்புமிகு அமைச்சர் டாக்டர் காளிமுத்து அவர்களின் தலைமையுரை. பெருந்தலைவர் காமராசரின் நினைவைப் போற்றும் வகையில் தமிழக அரசு ஆற்றியுள்ள அரும்பணிகளை அமைச்சர் விவரித்தார்.

"அவர் பிறந்த மண் ஒரு மாவட்டமாக அமைந்துள்ளது. ஒரு காலத்தில் அவர் கல்லூரியில் படித்தவரா என்ற கேள்விக்குறியை எழுப்பியதுண்டு மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு அவரது பெயரைச் சூட்டியுள்ளார் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்." என்று கூறினார் அமைச்சர்.

அன்று மாலை நெல்லை நகரின் மையப் பகுதியான வஉசை யடித் திடலில் மாபெரும் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாண்புமிகு தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு பி.எச். பாண்டியன் தலைமை வகித்தார். அவர் தமது தலைமையுரையில் "எந்த நன்மையானாலும் ஏழைகளுக்குச் சீக்கிரமாகப் போய்ச் சேரவேண்டும். சிவப்பு நாடா முறையினால் தாமதம் ஏற்படக் கூடாது என்பது காமராஜரின் கருத்து" என்று கூறினார்.

மாண்புமிகு மத்திய தொழில் இணை அமைச்சர். திரு எம். அருணாசலம் தமது உரையில், "காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை காமராசரின் புகழ் பரவிக் கிடக்கிறது. அதற்குக் காரணம் அவர் இந்த எல்லைகளுக்கு இடையில் எந்த வேற்றுமையையும் காணவில்லை. இரண்டையும் ஒன்றாகக் கருதிய ஒருமைப் பாட்டுணர்வுக்கு அவர் ஒரு உதாரணம்" என்று கூறினார்.

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. யா.சை. மு. யூசுப் பேசுகையில் "ஏழைக் குழந்தைகளுக்குச் சோறிட வேண்டும் என்று விரும்பிய காமராஜர், 'பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளிக்கும் திட்டத்தைத் தொடங்கினார். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். இத்திட்டத்தினைப்






பல கோணங்களில் விரிவுபடுத்தி, பல லட்சம் பேருக்குச் சத்துணவு வழங்குகிறார்" என்று கூறினார்.

மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில், "காமராஜரிடமிருந்தும், அமரர் பேரறிஞர் அண்ணாவிடமிருந்தும் கற்றுக் கொண்ட சில பண்புகள்தான் இன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களை வழிநடத்திச் செல்கின்றன. ஏழைகள் நல்வாழ்வுக்காக எப்படிக் காமராஜரும்-அண்ணாவும் எதையும் செய்யத் தயாராக இருந்தார்களோ-அப்படித்தான் தமிழக முதல்வரும் ஏழைகள் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் எந்தத் தடையோ- சிக்கல்களோ வந்தால் அவற்றை லட்சியம் செய்வதில்லை" என்று கூறினார்.

நலிந்த பிரிவினருக்கு அரசின் உதவிகளையும் அமைச்சர் வழங்கினார்.

விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு எம்.ஆர். சனார்த்தனம், திரு. ஆர். தனுஷ்கோடி ஆதித்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் திருவாளர்கள் குமரி அனந்தன், எம். ஜான் வின்சென்ட், எஸ். பாலசுப்பிரமணியம், ஆர்.எஸ். ஆறுமுகம், பெருமாள் பிள்ளை, நெல்லை மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் ஒன்றியத் தலைவர் திருமதி கமலா செந்தில் குமார் ஆகியோர் உரையாற்றினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி.ஆர். பிந்துமாதவன் அரசின் நலத்திட்ட உதவிகள் பற்றி விளக்க உரையும், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ.ஆ.ப., வரவேற்புரையும், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. என். பாண்டி நன்றி உரையும் ஆற்றினர்.



படிக்காத மேதையின் பெயரால் ஒரு பல்கலைக் கழகம்

கருத்தரங்குக்கு வந்தவர்களை செய்தித்துறை—துணை இயக்குநர் திரு. வீ.டி. வீரப்பன் வரவேற்றுப் பேசினார். இவ்விழாவினையொட்டிக்' காமராஜர் வாழ்க்கையை விளக்கும் புகைப்படக் கண்காட்சியும், கலைமாமணி திரு. சுப்பு ஆறுமுகம் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டன.

—டி.கே.டி. துரைராசன்

# விந்தைக்குரிய விண்கற்கள்



அறிவியல் சரித்திரத்திலேயே மிகப் பெரியது 1947 பிப்ரவரி 12ல் பெய்த விண்கற்கள் மழைதான்! 100 டன் எடையுள்ள, "சிகோட்டே அலின்" என்ற, ஒரு விண்கல்லே இதற்குக் காரணமாகும். அந்த விண்கல், செவ்வாய் கிரகத்துக்கும் வியாழனுக்கும் இடையில் இருக்கும் சுழற்சிப் பாதையில் உள்ள அஸ்டிராய்டுகளின் அருகில் இருந்து புறப்பட்டு, வினாடிக்கு 12.4 கி.மீ. வேகத்தில் பூமியின் வளி மண்டலத்துக்குள் பிரவேசித்திருக்க வேண்டும். இதனை விண்கற்களில் இருந்து சிதறிய துகள்களைப் பற்றிய வரைபடங்களின் உதவியுடன், அந்த விண்கற்களின் வானவியல் பண்புகளைக் கணக்கிடும் முறையின் மூலமாக சோவியத் விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர்.

காற்றழுத்த மண்டலத்துக்குள் பிரவேசிக்கும்போது, பெரும்பாலும் பெரிய விண்கற்கள் ஆவியாகி விடுகின்றன. இதன் விளைவாக அவற்றின் துகள்கள் சிதறி பூமிப்பரப்பில் வீழ்கின்றன. இதனையே விண்கற்கள் மழை என்கிறோம்.

அப்படிச் சிதறி வீழ்ந்த துகள்கள் நிறைந்த பகுதி ஒன்று பூமிப் பரப்பின் மீது உருவாகிறது. "சிகோட்டே-அலின்" விண்கல்லில் இருந்து சிதறிய 6000 துகள்கள் 124 கிலோ மீட்டர் பிரதேசத்தில் காணப்படுகின்றன. அந்தத் துகள்கள் ஓர் ஒழுங்குடன் அமைந்துள்ளன. இதனைக் கண்டறிந்த விஞ்ஞானிகள்,இதனைக்கொண்டு கடந்த கால நிகழ்வுகளை அறிவதற்கு வகை செய்யும் கணிதவியல் முறை ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

கம்ப்யூட்டர் உதவியுடன், 14 விண்கற்களின் சுழற்சிப் பாதைகளை ஏற்கெனவே விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இவற்றில் 10 விண்கற்கள், சூரியனைச் சுற்றிவரும் பாதையில், அதிக பட்சத் தூரத்தில், அஸ்டிராய்டுகள் வளையத்தில் இருந்தவையாகும். இதர மூன்று விண்கற்கள் பூமியின் சுழற்சிப் பாதையை விடவும் சிறிய சுழற்சிப் பாதையைக் கொண்டவை. 1949ல், யூரல்ஸ் பகுதியில் வீழ்ந்த 'குனாஷக்' விண்கல் யூரானஸ் கிரகத்தின் அருகிலிருந்து வந்ததாகும்.

—சோவியத் செய்திக் கட்டுரையிலிருந்து.



# வேலை இல்லாத் திண்டாட்டம் விலகிட....

மாண்புமிகு மறுவாழ்வு மற்றும்
வேலைவாய்ப்புத்துறை அமைச்சர்
**திரு டி. இராமசாமி**



தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீவிரத்தைத் தணிக்க, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை பல்வேறு திட்டங்களையும் ஏற்று நிறைவேற்றி வருகின்றது. தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 42 வேலைவாய்ப்பு அலுவலகங்கள் உள்ளன. இவற்றில் உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலை வாய்ப்பு அலுவலகங்கள், பல்கலைக்கழக வேலைவாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டிப் பிரிவுகள், தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகம் ஆகிய சிறப்பு வேலைவாய்ப்பகங்கள் அடங்கும்.

இவ்வாண்டில் மே மாதம் முடிய 21,777 பேர்கள் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பகங்கள் மூலமாக வேலையில் அமர்த்தப் பெற்றனர். கடந்த ஆண்டில் 52,390 பேர்கள் வேலையில் அமர்த்தப் பெற்றனர். அவர்களில்:-

| | |
|---|---|
| தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்கள் | —9,898 பேர்கள் |
| உடல் ஊனமுற்றோர் | —1,182 ,, |
| பர்மா மற்றும் ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பியோர்— | —966 ,, |
| பெண்கள் | —8,806 ,, |

வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

அகில இந்திய அளவில் பார்க்கும்பொழுது விண்ணப்பதாரர்கள் வேலையில் அமர்த்தும் விகிதாசாரம்—

| | | |
|---|---|---|
| 1982ல் | — | 8.1 சதவிகிதம் |
| 1983ல் | — | 7.2 ,, |
| 1984ல் | — | 6.5 ,, |

ஆக உள்ளது. இதே ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இந்த விகிதாசாரம் முறையே—

| | | |
|---|---|---|
| 1982ல் | — | 13.1 சதவிகிதம் |
| 1983ல் | — | 14.4 ,, |
| 1984ல் | — | 11.3 ,, |

ஆக உள்ளது.

விண்ணப்பதாரர்களை வேலையில் அமர்த்தும் விகிதாசாரம் தமிழ்நாட்டில், அகில இந்திய அளவைவிடக் கணிசமான அளவில் அதிகமாக இருப்பது, நமது மாநிலத்தின் சாதனையை விளக்குவதாய் அமைகின்றது. வேலைவாய்ப்புத் தேடிவரும் படித்த இளைஞர்களுக்கு, தொழில்களைத் தேர்ந்தெடுப்பதில் வழிகாட்டி, வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு உதவ வேண்டியது முக்கிய கடமையாகும். தொழில் முறைக்கு இவ்வாறு வழிகாட்டுதலால், படித்த இளைஞர்கள் உலகின் உண்மை நிலைமையைத் தெரிந்து கிடைத்த வேலைகளுக்குத் தயார் செய்து, வாழ்க்கையில் வெற்றி பெற முடிகின்றது.

இந்தத் தொழில் வழிகாட்டும் பணியினை ஒவ்வொரு மாவட்ட வேலை வாய்ப்பகத்திலும் உள்ள தொழில்-நெறி வழிகாட்டும் பிரிவு செய்கிறது. இப்பிரிவின் முக்கியப் பணி ஒவ்வொரு வேலைதேடும் இளைஞரும் தன்னுடைய தகுதி, திறமை, ஆர்வம் ஆகியவைகளுக்கு ஏற்ற வகையில் வேலைச் சந்தையில் உருவாகும் வேலைகளுக்கு ஏற்ற வகையில் நெறிப்படுத்துதல் ஆகும்.

தொழில் நெறி வழிகாட்டும் அலுவலர்கள் தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகள், கல்லூரிகளுக்குச் சென்று அங்குப் பயிலும் மாணவர்களுககு வேலை வாய்ப்பு, பயிற்சி உதவித் தொகை, வேலை வாய்ப்பு நிலவரம் போன்றவை குறித்துப் பல்வகைத் தகவல்களையும் அளித்து விளக்குகின்றனர். இதனைப் பேச்சுகள் மூலமாகவும், விவர அட்டைகள் மூலமாகவும் அலுவலகத்திற்கு விண்ணப்பதாரர்களுக்கு அளித்து வருகின்றார்கள். இதன் மூலம் 30,388 பேர்களுக்கு வேலையுலக விவரங்களும், 226 தொழில் முறை வழிகாட்டும் பேச்சுகளும் அளிக்கப்பட்டுள்ளன.

சம்பள வேலைகள், சுயவேலைகள் என வேலைகள் இருவகைப்படும். ஒழுங்குபடுத்தப்பட்ட துறையில் (ஆர்கனைஸ்டு செக்டாரில்) வேலை தேடும் அனைவரையும் சம்பள வேலைகளில் அமர்த்திட இயலாத நிலை உள்ளதால், தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மனித ஆற்றல் மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கக் குழுவை அமைத்து



படித்த இளைஞர்களை சுயவேலை வாய்ப்புத் திட்டங்களில் ஈடுபடுத்தி வேலையில்லாத் திண்டாட்டம் விலகிட ஆவன செய்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரைச் செயலாளராகவும் கொண்ட ஒரு குழு, படித்த இளைஞர்களிடம் லாபகரமான சுய தொழில் திட்டங்களுக்கான விண்ணப்பங்களைப் பெற்று, வங்கிகளின் உதவியுடன் கடன்களைப் பெற்றுத்தந்து, படித்த இளைஞர்களைச் சுய வேலைவாய்ப்புகளில் ஈடுபடுத்தி வருகிறது. இந்தச்சுயவேலை வாய்ப்புக் குழு, வங்கிகள் அளிக்கும் கடன் தொகையில் நான்கில் ஒரு பகுதியை அரசே மானியமாக, சுயவேலை வாய்ப்பு முயற்சிகளைத் துவக்கும் இளைஞர்களுக்கு வழங்கி வருகிறது. பல்வேறு சிறு தொழில்களில் இளைஞர்கள் சுயவேலைத் திட்டங்களில் பயன் பெற்று வருகின்றனர்.

உருவாகிவரும் வேலைகள் எவையென ஆய்ந்தறிந்து வேலை தேடும் இளைஞர்கள் தங்களைத் தயார் செய்து கொள்ளலாம். இதற்காக வேலை வாய்ப்பகங்களுடன் இணைக்கப்பட்டுள்ள தொழில் நெறி வழிகாட்டிப் பிரிவுகளின் உதவியை நம் இளைஞர்கள் நாடிப் பயன் பெறலாம்.

இந்த ஆண்டு மே மாத இறுதி வரை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் 4,655 பேர்களுக்கு ரூ 1.57 கோடி வங்கிக் கடன் மூலமாகப் பண உதவி செய்யப்பட்டு, சுய தொழிலில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

## கூடுதல் தமிழாசிரியர் பதவிகள்

தமிழ்நாடு அரசின் கல்வித்துறை (அரசாணை எம். எஸ். எண்: 957 நாள்: 10.7.'86) 75 தமிழாசிரியர் பதவிகளை உருவாக்கியுள்ளது. இப்பதவிகள் தமிழ்நாட்டில் உள்ள நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் நடுநிலை வகுப்புகளிலும் நிரப்பப்படும். ஊதிய விகிதம் ரூ. 780-35-1025-40-1385 மற்றும் வழக்கமான படிகள். 1986 ஜூன் முதல் தேதியிருந்து உருவாக்கப்பட்டுள்ள இப்பதவிகள் நிரந்தரமானவை.

## கூடுதல் ஆசிரியர் பதவிகள்

தமிழ்நாடு அரசு கல்வித்துறை (அரசு ஆணை எம். எஸ். எண்: 955 நாள்: 10.7.'86) 500 செகண்டரிகிரேட் ஆசிரியர் பதவிகளை உருவாக்கியுள்ளது. அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் பள்ளிகளில் சேருவதால் அவர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் இப்பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பதவிகள் தொடக்கப்பள்ளிகள், நடுநிலைப்பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளில் பயன்படுத்திக் கொள்ளப்படும். 1986 ஜூன் மாதத்திலிருந்து உருவாக்கப்பட்டுள்ள இப்பதவிகள் நிரந்தரமானவை.

வேலையில்லாத் திண்டாட்டம் விலகிட மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முயற்சிகளில் சென்னை நகரில் துவக்கப்பட்ட ''வீட்டுச் சேவை மையங்கள்'' திட்டமும் ஒன்றாகும். ரூ. 1.4 லட்சம் செலவில் வீட்டுச் சேவை மையங்கள், 7 சென்னை நகரில் நிறுவப்பட்டன. ஒரு மின்சாரப் பணியாளர், ஒரு தச்சர், ஒரு குழாய் பழுது பார்ப்பவர் என ஒவ்வொரு வீட்டுச சேவை மையத்திலும் தொழில் பயிற்சி பெற்ற கைவினைஞர்கள், சுயதொழில் செய்யப் பணியில் அமர்த்தப்படுகின்றனர். இவர்களுக்குத் தேவையான கருவிகள் வங்கிக் கடன் மூலமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தினைச் சென்னை நகரில் விரிவுபடுத்தவும், மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், வேலூர் ஆகிய இடங்களில் ஏற்படுத்தவும் ஆன செயல குறிப்பு உள்ளது. இத்திட்டம் முழு அளவில் செயல்படுத்தப்படும்பொழுது மேலும் பலருக்குச் சுய தொழில் புரிய, வேலையில்லாத் திண்டாட்டம் குறைய வாய்ப்புகள் ஏற்படவுள்ளது.

நீலக்காலர் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதற்கான வேலைவாய்ப்பு மற்றும் பயிறசிததுறையில் உள்ள அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மகளிருக்கென்று அமைக்கப்பட்ட ஐந்து தொழிற் பயிற்சி நிலையங்கள் உள்பட 42 அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.

இயந்திரப்பொறிகள் பொருத்துபவர், கடைசல் இயந்திரம் இயக்குபவர், உலோகம் பற்ற வைபபவர் போன்ற 30 பொறியியல் தொழில்களிலும், 12 பொறியியல் அல்லாத தொழில்களிலும் சுமார் 9,680 இளைஞர்கள் பயிற்சி பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. சில தொழில்கள் பயிற்சி இரண்டு ஆண்டுக் காலம், சிலவற்றிற்கு ஓராண்டுக் காலம். பயிற்சி இலவசமானது. மூன்றில் ஒரு பகுதி மாணவர்களுக்கு உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. கடந்த ஆண்டு 8,519 பயிற்சி பெற்ற கைவினைஞர்களை அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கி, தொழில் பணிகளைப் பெற உதவி வருகிறது.

பொறியியல் துறைகள், நெசவாலைகள், அச்சுத்துறை, இரசாயனப் பொருள்துறை, கட்டுமானத்துறை, உணவு விடுதிகள், வணிக வேலைத்துறைகள் போன்ற 217 தொழில்களில், வேலை வாய்ப்புகளைப் பெறத் தேவையான, தொழில் அனுபவம் பெற தொழில் பழகுநர் பயிற்சித் திட்டம் அமல்படுத்தப்பட்டு 134 தொழில்களில் பயிற்சி பெற வசதியும் செய்யப்பட்டுள்ளது.

தொழில்களுக்குத் தக்கபடி பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி, ஒன்பதாவது வகுப்பில் தேர்ச்சி, +2 வகுப்பில் தேர்ச்சி, 8-ஆம் வகுப்பு, 5-ஆம் வகுப்புஎனக் கல்வித் தகுதி நிர்ணயிக்கப்படுகிறது. பயிற்சிக் கால அளவும் நான்காண்டு, இரண்டாண்டு, ஓராண்டு, ஆறு மாதம் எனக் குறிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி முதலாண்டில் ரூ. 230, 2-ஆம் ஆண்டில் ரூ.260, 3-ஆம் ஆண்டில் ரூ. 300, 4ஆம் ஆண்டில் ரூ. 350- ஆக உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. 30.9.85 அன்றைய நிலவரப்படி 11,450 தொழில் பழகுநர்கள் பல்வேறு தொழிற்சாலைகளில் தமிழ்நாட்டில் அமர்த்தப்பட்டனர். பயிற்சி முடித்த இளை



# குடும்ப நலம் காக்கச் சிறப்புத் திரைப்படங்கள்

குடும்பநலத் திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே தமிழ் நாடு முதலிடத்தில் இருந்து வருகிறது. மக்கள் கல்வி மற்றும் விளம்பரம் நம் மாநிலத்தில் ஒரு முக்கியமான அங்கம் வகித்து வந்துள்ளது. சிறு குடும்ப நெறி தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தரப்பு மக்களுக்கும் தெரிந்த ஒரு கோட்பாடாகும். குடும்பம் சிறியதாக இருப்பதற்கான அவசியம், அதற்குத் தேவையான கருத்தடை முறைகள் ஆகியவற்றைப் பற்றி மக்களுக்கு விளக்கிக் கூற வேண்டிய தருணம் வந்துள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டுதான் 1986-87-ஆம் ஆண்டுக்கான குடும்பநல விளம்பரச் செயல் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு, தமிழ்நாட்டிலுள்ள ஐந்து கோடி மக்களையும் ஒரேவிதமாகக் கருதாமல், தனித்தன்மை கொண்ட பல பிரிவுகளாகக் கருதுதல் வேண்டும். நகர்ப்புறங்களில் சேரிவாழ் மக்கள் மற்றும் உழைப்போர் ஆகியோரும், கிராமப்புறங்களில் விவசாயக் கூலிகளும் குடும்பநலத் திட்டத்தின் கீழ் அணுக வேண்டிய பிரிவுகளில் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றனர். இப்பிரிவுகளை அணுகுவதற்காகவே இத்திட்டம் ரூ. 73.775 இலட்சம் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன வெவ்வேறு மக்கள் பிரிவுகளையும், அவர்களது சுற்றுப்புறங்களையும், தற்போதுள்ள விளம்பரம் மற்றும் விரிவாக்கப் பணியின் நிலைமையையும் நன்கு ஆராய்ந்த பிறகே, இவ்வாண்டின் விளம்பரச்செயல் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால், இத்திட்டத்தில், ஒவ்வொரு மக்கள் பிரிவுக்குத் தகுந்த வாசகங்களும் செய்திகளும் முழுமையான பலனையும் தரும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. தாய்மார்களுக்கான சிறந்த, பாதுகாப்பான கருத்தடைச் சாதனமாக ''காப்பர்-டி'' பற்றிய விளம்பரம் இதன் சிறப்பு அம்சமாக அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் சுமார் முப்பது திரைப்படங்கள் (ஒவ்வொன்றும் இரண்டு நிமிடங்களுக்கு மேற்படாமல்) தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றைத் திரை அரங்குகளிலும், தொலைக்காட்சி மூலமாகவும் திரையிட்டுக் காண்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறப்புச் செய்திப் படங்கள், பாடல் கேசட்டுகள், சுவர்ச் சித்திரங்கள், விளம்பரப் பலகைகள், விளக்குக் கம்பத்தில் விளம்பரங்கள், புகை வண்டி மற்றும் பேருந்துகளுக்கான விளம்பரத் தகடுகள், பத்திரிகை விளம்பரங்கள், கார்ட்டூன் படங்கள், சுவரொட்டிகள், புத்தகங்கள், குடும்பநலப் போதனைக்கான சாதனங்கள், குடும்பநலச் செய்திகளுடன் கூடிய பரிசுப்பொருட்கள், பொருட்காட்சிகள், ஒட்டக்கூடிய விளம்பரத் துண்டுப் பிரசுரங்கள் ஆகியன இந்தச் சிறப்பு விளம்பரச் செயல் திட்டத்தின் பல்வேறு அம்சங்களாக விளங்குகின்றன. 1986 ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் ஆகிய மாதங்களில் இத்திட்டம் மிகத் தீவிரமாகச் செயலாக்கப்பட உள்ளது.

குடும்பநலத் திட்டத்தில் முதன்மையாக அணுக வேண்டியுள்ள மக்கள் பிரிவினரின் பெரும்பாலோர் கல்வி கல்லாதவர்களாக இருப்பதால், இந்தச் செயல்திட்டம் முழுவதும் வெறும் வார்த்தைகளினால் அல்லாமல், எளிதில் மனத்தில் பதியக் கூடிய வடிவங்களால் அமைக்கப்பட வேண்டியுள்ளது.

தற்போது, குடும்பநலத் துறையின் கருத்துக்கள் அடங்கிய குறுகிய நேரத் திரைப்படங்கள் பத்து தமிழ்நாடு அரசால் அங்கீகாரம் பெற்ற தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு படத்திலும் ஒரு கருத்தை மட்டுமே வலியுறுத்தி, படத்தைப் பார்க்கும் தகுதி




இப்போது! பேன்மின்த்*
(மோரென்ட்டல் சிட்ரேட்)
நாக்குப் புழுக்களை அழிக்கிறது.
நாக்குப் புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பு.



நாக்குப்புழுக்கள்—உங்கள் கண்ணுக்குத் தெரியாத எதிரிகள். கால்நடையின் வயிற்றிற்குள் நாக்குப் புழுக்கள் வளர்ந்து வாழ்கின்றன. அவை கால்நடையின் ஊட்டச் சத்துக்களை உண்ணுகின்றன. இதன் பலனாக கால்நடை மெலிந்து, உற்பத்தி குறைந்து விடுகிறது, லாபம் குறைந்து விடுகிறது.

மேய்ச்சல் தளத்திலே கால்நடைகள் மேயும்போது நாக்குப் புழுக்கள் தொற்றிப் பரவுகின்றன. அடிக்கடி புழு நோய் வருவதால், நிரந்தரமான, புழுவே அற்ற கால்நடைகள் இருக்க வாய்ப்பே இல்லை எனலாம். ஆகவேதான், கால்நடை மருத்துவர்கள், 3-4 மாதங்களுக்கொரு முறைப்புழுக்களை அப்புறப்படுத்த வேண்டுமென்று சிபாரிசு செய்கின்றனர்.

பேன்மின்த் நாக்குப்புழுக்களை அழிக்கிறது நாக்குப்புழுக்கள் உங்கள் லாபத்தை அழிக்கும் முன்பாக.

பேன்மின்த், உலகெங்கிலும் கால்நடைகளைத்தாக்கும் நாக்குப் புழுக்களை ஒழிக்கிறது.

பேன்மின்த், பாதுகாப்பானது பலகீனமான சோர்வான, கால்நடைகளுக்கும், சினையுள்ள மற்றும் கன்று ஈன்ற கால்நடைக்கும். இதர சில புழுக்கொல்லிகளை போல் இது, பால் நிறத்தில் மாற்றமோ, தீய விளைவுகளோ ஏற்படுத்தாது. பேன்மின்த் கொடுத்த பின்பும், பாலினைப் பயன்படுத்தலாம்.

இப்போது, பேன்மின்த் எளிதான வசதியான புழுக்கொல்லி. உபயோகிக்க எளிதானது பேன்மின்த்—காரணம், உடனடி உபயோகத்திற்கான கரைசல் மாத்திரை, உருண்டை ஆகிய வடிவங்களிலே கிடைக்கின்றது.

கால்நடை மருத்துவரிடம் ஆலோசனை பெறுங்கள்.




ஒப்பற்ற பேன்மின்த்
புழுக்களை அழித்திடும் ஆரோக்கியம் அளித்திடும்

*யு.எஸ்.ஏ ஃபைஸர் இன்கார்ப்பரேட்டடின் ட்ரேட்மார்க் pfizer கேட்பதன் பேரில் மேலும் தகவல்கள் கிடைத்திடும்

ஆதிதிராவிட மக்களுக்கென 201 சதுரஅடி பரப்பில் வீடுகள் கட்டித்தரப்படுகின்றன. தற்போதைய இதன் மதிப்பு ரூபாய் 6,000 ஆகும். இது வரை இம்மாவட்டத்தில் இப்படி 815 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. இதனால் பயன்பெறும் ஆதிதிராவிட மக்களே வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். இத்தொகை 5 தவணைகளில் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

காமராஜர் மாவட்டத்தில் 'தொகுப்புத் திட்டத்தின் கீழ்' இராஜபாளையம் தொகுதி தேர்வு செய்யப்பட்டு கீழ்க் கண்ட பணிகள் செய்திட அரசின் அனுமதி வேண்டி குறிப்பு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

மூலம் 40 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர். இதற்குக் கிடைக்கும் அரசு மானியம் ரூபாய் 1.30 இலட்சம்.

செங்கல் ஓடு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்று ரூபாய் 76,000 மதிப்பில் உருவாகிறது. இதன் மூலம் 60 பேர் வேலைவாய்ப்புப் பெறுவர். இதற்கெனக் கிடைக்கும் அரசு மானியம் ரூபாய் 3.66இலட்சம்.

பட்டுப்பூச்சி வளர்த்தல் பிரிவு 4 நிறுவப்படும். இதற்கென ரூபாய் 21.39 இலட்சம் செலவிடப்படும். இதில் அரசு மானியம் 13.39 இலட்சம். இதன் மூலம் 265 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

150 பேருக்கு ஆட்டு மந்தைகள் அமைக்க ரூபாய் 6 இலட்சம் செலவிடப்படும். இதில் அரசு மானியம் ரூபாய் 3 இலட்சம் ஆகும்.

பேப்பர் கோன் தயாரிக்கும் தொழில் ரூபாய் 7.50 இலட்சம் செலவில் உருவாகிறது; இதற்கு அரசு தரும் மானியம் ரூபாய் 3.25 இலட்சம். இதன் மூலம் 50 பேர் பயன் பெறுவர்.

கால்சியம் ஆக்சைடு தயாரிக்கும் தொழில் ஒன்று ரூபாய் 11 இலட்சம் செலவில் உருவாகும். இதற்கு அரசு தரும் மானியம் ரூபாய் 4.98 இலட்சம். இதன் மூலம் பயன் பெறுவோர் 120 பேர்.





கிராம நூற்பு மையங்கள் 7 அமைக்கப்படும். இதன் மூலம் 210 பேர் பயன் பெறுவர். சுமார் 29 இலட்ச ரூபாய் மதிப்பில் செயல்படப்போகும் இத்திட்டத்திற்கு அரசின் மானியம் சுமார் 12.25 இலட்சம் ரூபாய்.

நேப்பாளி நெசவு மூன்று நிறுவப்படும். இதன் மூலம் 240 பேர் பயன்பெறுவர். சுமார் 33 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்படும். இதற்கு அரசின் மானியம் ரூபாய்16.44 இலட்சம் ஆகும்.

கயிறு தயாரிக்கும் அமைப்பு ஒன்று ரூபாய் 42 இலட்சம் செலவில் நிறுவப்படுவதன்

கல் உடைத்தல் தொழில் ரூபாய் 7.44 இலட்சம் செலவில் அமைக்கப்படும். இதில் அரசு மானியம் ரூபாய் 3.02 இலட்சம். இதன் மூலம் 100 பேர் வேலை வாய்ப்புப் பெறுவர்.

தேனீ வளர்த்தல் சுமார் ரூபாய் 5.36 இலட்சம் மதிப்பில், உருவாகும். இதில் அரசு மானியம் 2.86 இலட்சம். இதன் மூலம் 100 பேர் பயன் பெறுவார்கள்.

250 பேருக்குப் பால்மாடுகள் ரூபாய் 12.50 இலட்சம் மதிப்பில், வழங்கப்படும். இதில் அரசு மானியம் ரூபாய் 6.25 இலட்சம்.

நெருப்பில் பயன்படுத்தும் செங்கல் தொழில் சுமார் 16.1 இலட்சம் ரூபாய் செலவில் உருவாகும். இதற்கு அரசு மானியம் ரூபாய் 6.48 இலட்சம். இதனால் 100 பேர் பயன் பெறுவார்கள்.

இவ்வாறு 1705 பேர் பயன் பெறக்கூடிய திட்டத்தை காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல். என்.விஜயராகவன் இ.ஆ.ப., அவர்கள் சுமார் 1.61 கோடி ரூபாய் மதிப்பில் திட்டங்கள் தீட்டி அரசுக்கு அனுப்பியுள்ளார். விரைவில் ஒப்புதல் கிடைத்ததும், இப்பணிகள் போர்க்கால அடிப்படையில் இம்மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.



# சிதம்பரத்தில் சேக்கிழார் விழா

அறிஞர் பெருமக்களுக்கும், சான்றோர்களுக்கும, அவர்களை நினைவு கூரும் வகையில், தமிழக அரசு ஒவ்வொரு ஆண்டும் விழா எடுத்து வருகிறது. தேசத் தலைவர்களுக்கும மற்றும் நாட்டிற்காக உழைத்தவர்களுக்கும் அவ்வப்போது அவாகளின் பிறந்த நாளைப் பெருமையுடன் கொண்டாடி வருகிறது.

இவ்வகையில் சைவப் பெரியார் சேக்கிழாரை நினைவு படுத்தும் விதத்தில் அவ்விழாவினை 'தெய்வச் சேக்கிழார்' விழாவாக அரசு கொண்டாடியது. தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரத்தில் இவ்விழா சென்ற 5.7.86 மற்றும் 6.7.86 ஆகிய தினங்களில் அரசினால் கொண்டாடப்பட்டது. சிதம்பரம் பழம் பெரும் நகரமாகும். இது வரலாற்றுச் சிறப்பிற்கும், சுற்றுலா சிறப்பிற்கும் உரியதாகும். இங்கு நடந்த இவ் விழாவில் மாண்புமிகு செய்தி — அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்களும், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் திரு வி.வி. சுவாமிநாதன் அவர்களும் கலந்து கொண்டனர்.

விழா 5.7.86. அன்று காலை 8.00 மணிக்குத் தொடங்கியது. விழாவிற்கு ஆனந்த நடராச தீட்சதர் தலைமை தாங்கினார். சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். பின்னர் சிங்காரவேலன் தலைமையில் பாமாலை நிகழ்ச்சி நடந்தது. இந்து சமயத் துறை துணை ஆணையர் திரு நா. சீனிவாசன் வரவேற்றுப் பேசினார்.

இதில் சேக்கிழாரைப்பற்றி ''சமயச்சான்றோர்'' என்கிற தலைப்பில் திரு பசுபதியும், 'வரலாற்றுச் சிற்பி' என்னும் தலைப்பில் திரு அமிர்தலிங்கமும், 'பெண்மைக் காவலர்' என்ற தலைப்பில் திருமதி தங்க அன்புவல்லியும் கவிதை பாடினார்கள். பாமாலை நிகழ்ச்சியினைத் தொடர்ந்து திரளான மக்கள் கண்டு களித்தனர்.

இரவு 7.30 மணிக்கு 'சேக்கிழாரின் பெரிய புராணத்தால் பெரிதும் ஏற்றம் பெற்றது வரலாறா?, சமயமா?' என்பது பற்றி தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் பட்டி மன்றம் நடந்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் திரு ஆறு. அழகப்பன் தொடக்கவுரை நிகழ்த்தினார். வரலாறு என்பது பற்றி பேராசிரியர்கள் அறிவொளி, அ.வெ. இராசகோபாலன், புலவர் கோ. சாரங்கபாணி ஆகியோர் பேசினார்கள். 'சமயம்' என்பது குறித்து பேராசிரியர் சோ. சத்தியசீலன், டாக்டர் இரா. செலவ கணபதி, டாக்டர் மு. சிவச்சந்திரன் ஆகியோர் பேசினார்கள். இப் பட்டிமன்றத்தில் காரசாரமான விவாதக் கருத்துக்கள் வெளியிடப்பட்டு. முடிவில் சேக்கிழாரின் பெரிய புராணத்தால் பெரிதும் ஏற்றம் பெற்றது வரலாறே என்று நடுவர் தீர்ப்புக் கூறினார். வருகை தந்த பொதுமக்கள் கண்டு ரசித்தனர். இறுதியில் சூலமங்கலம் சகோதரிகளின் இன்னிசைக் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது.





யுள்ள தம்பதியர் குடும்பத்தைத் திட்டமிட்டு அமைக்க ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளது. 35 மி.மீ அளவில் 145 பிரதிகளும், 16 மி.மீ. அளவில் 131 பிரதிகளும் தயார் செய்து, திரை அரங்குகள், தொலைக்காட்சி மற்றும் எல்லா வழிகளிலும் இப்படங்களைத் திரையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சார்பில் மாநில குடும்பநலத் துறை தயாரித்துள்ள 10 திரைப்படங்களின் வெளியீட்டு விழா, சென்னை அண்ணா சாலையில் உள்ள தென் இந்தியத் திரைப்பட வர்த்தக சபைக் கட்டடத்தில் 29-7-86 அன்று நடந்தது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் திரைப்படத்தின் முதல் பிரதியை வெளியிட்டார். செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூர சுந்தரபாண்டியன், இ.ஆ.ப. பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் பேசும்போது கூறியதாவது :

''குடும்பநலத் திட்டத்தில் ஆரம்பத்தில் இருந்து தமிழகம் முதல் இடத்தில் இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டை, படித்த பெருமக்களிடத்திலும் பாமர மக்களிடத்திலும் பரப்புவதற்கு விளம்பர சினிமாப் படங்கள் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, திரை அரங்குகள், சுவர்ச் சித்திரம், செய்திப் படங்கள், பொருட்காட்சிகள் மற்றும் பல்வேறு அம்சங்கள் பயன்படுத்தப் படுகின்றன.

''இந்தத் திட்டங்கள் நகர்ப்புற மக்களும் குடிசைப்பகுதி மக்களும் உழைக்கும் கிராமப்புற விவசாயத் தொழிலாளர்களும் பயன்பெற அரசு 1986-87ஆம் ஆண்டுக்கு 73 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவிடுகிறது. இத்திட்டம் முழு அளவிலான பலனைத் தரும்வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

''இன்று வெளியிடப்பட்டுள்ள 10 திரைப்படங்களும் தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட தயாரிப்பாளர்கள் தயாரித்துள்ளனர். ஒவ்வொரு படத்திலும் ஒரு கருத்தை மட்டுமே சொல்லி இருக்கிறோம். படத்தைப் பார்க்கும கணவன் -மனைவி தங்கள் குடும்பத்தைத் திட்டமிட்டு அமைக்க இவை மிகவும் பயனுள்ளதாக அமையும். இந்தத் திரைப்படங்கள் தொலைக்காட்சி மற்றும் தமிழகத்தில் உள்ள அனைத்துத் திரை அரங்குகளிலும் பொது மக்களுக்காக காண்பிக்கப்படும்.



''இந்தப் படங்களை இந்தியா முழுவதும் காட்டுவதற்கு வசதியாக மற்ற மாநில மொழிகளிலும் தயாரிக்கப்படும்''.

'வாழ்க்கைக்கு ஒரு கணக்கு'
'வாழுங்கள் வசதியாக'
'போதும் நிறுத்துங்கள்'
'அழகின் ரகசியங்கள்'
'காப்பர்-டி'
'பங்குபோட்டால் மிச்சமில்லை'
'பாப்பா வேண்டும்',
'முத்துவின்வீடு'
'கல்யாணப்பந்தி,
'காலம் கடந்த கவலை'

என்ற தலைப்பில் திரைப் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

மாநிலத் திட்டக் குழுத் தலைவர் திரு டி. வி. அந்தோணி இ.ஆ.ப, இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். குடும்ப நலத்துறை இயக்குநர் திருமதி ஓ. பி. சோசம்மா இ.ஆ.ப. வரவேற்புரையாற்றினார்.

இந்தப் படங்கள், பொதுமக்களின் நெஞ்சங்களை எளிதில் கவர்ந்து, குடும்ப நலத்திட்டத்தை அவர்கள் மேற்கொள்வதற்குத் தூண்டும் என்பது திண்ணம்.

# காமராஜர் மாவட்டத்தில் இருபெரும் பணிகள்

**கா**மராஜர் மாவட்டத்தில் காலராவினால் பாதிக்கப்பட்ட வத்றாயிருப்புப்பகுதியில் உள்ள கிராமங்களான மாத்தூர் நாகலாபுரம், அம்மாபட்டி, சுந்தரபாண்டியம், வெங்கட்டராயபுரம், புதுப்பட்டி, அர்ஜுனாபுரம், ஆத்தங்கரைப்பட்டி, எஸ். கொடிக்குளம், சேதுநாராயணபுரம் ஆகிய 10 கிராமங்களையும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.என் விஜயராகவன், இ. ஆ. ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித் தலைவருடன் மாநில சுகாதாரத் துறை துணை இயக்குநர் திரு ராகவேந்திரா உடன் வந்தார். இராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர்கள், ஒன்றிய ஆணையர்கள், குடிநீர்வடிகால் வாரியப் பொறியாளர்கள், டாக்டர் இரத்தினசாமி குழுவினரும் உடன் வந்தார்கள்.

சுந்தரபாண்டியம் கிராமத்தில் உள்ள கிணற்று நீரை எடுத்து துணை இயக்குநர் டாக்டர் ராகவேந்திரா சோதனை செய்து பார்த்து மாவட்ட ஆட்சியர்க்கு விளக்கினார். தற்போது காலரா நோய் இங்குக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது. இந்நோயால் பாதிக்கப்பட்டோர் மருத்துவ மனையில்இருந்து தக்கசிகிச்சை பெற்று ஊர் திரும்புகிறார்கள். மற்றவர்களுக்கு நோய் பரவாதவாறு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

10 டாக்டர்கள் தலைமையில் 100 ஆரம்பச் சுகாதார உதவியாளர்கள் ஊசி போடுதல், குளோரின் பவுடர்போடுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஊர் மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் தேவை என்றும், கிணற்று நீரால்தான் இந்நோய் வருகிறது என்றும் முறையிட்டனர். காலரா பாதிக்கப்பட்ட 10 கிராமங்களுக்கும் 10 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்ட உடனே மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பித்தார். 'நான்குரிக்'குகள் இப்பணியில் ஈடுபடுத்தப் பட்டன. தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், குப்பைகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தவும், தேவைப்பட்டால் கூலியாட்களை நியமிக்கவும் ஒன்றிய ஆணையாளர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்த 10 கிராமங்களிலும் மக்கள் நலக்குழு அமைக்கப் பட்டுள்ளது. அரசு எடுக்கும் நடவடிக்கையை இவர்கள் கண்காணிப்பர். ஏதாவது தவறு நடந்தால் உடனே தமக்குத் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மக்களைக் கேட்டுக் கொண்டார்.



சத்துணவுக் கூடங்களில் உள்ள பள்ளிக் குழந்தைகளுக்குக் கட்டாயம் குளோரின் கலந்த சுத்தப்படுத்தப்பட்ட குடிநீர் தான் வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். வீதிகள் தோறும் மருந்துகள் அடிக்கவும் உத்தரவிட்டார். இவை அனைத்தையும் மக்கள் நலக் குழு கண்காணிக்கும் என்றார். இம்மாவட்டத்தில் காலரா நோய் மேலும் பரவாமல் நல்லமுறையில் கட்டுப்படுத்த அரசு அனைத்தும் செய்துள்ளது.

**அ**ண்ணல் காந்தியடிகளின் கனவை நனவாக்க மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் செயல்படுத்தப்பட்டு வரும் ஒரு உன்னதமான அமைப்பு தான் 'தாட்கோ'.

1980-81 முதல் ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காக, ஆதிதிராவிடர்களுக்கு வங்கிகள் வழங்கும் கடன் திட்டத்தின், விளிம்புத் தொகைக்கடனாக25 சதவிகிதம் வழங்கப்படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டத்தின் ஒரு வட்டாரம் தேர்வு செய்து ஆயிரம் ஆதி திராவிடர் குடும்பங்கள் பயனடையும் வகையில் 'தொகுப்பு கிராமத் திட்டத்'தின் கீழ் அமல்படுத்தப்படுகிறது. 1984-85 முதல் வட்டியில்லாத சிறு தொழில் கடன் மானியக் கடனாக மாற்றப்பட்டு'தாட்கோ' மூலம் வழங்கப்படுகிறது.

காமராஜர் மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியங்களும் 6 நகராட்சிகளும், 437 ஊராட்சி மன்றங்களும், 11 பேரூராட்சிகளும் உள்ளன.

இம்மாவட்டத்தில் உள்ள மொத்த மக்கள் தொகை 13,43,093. இதில் ஆதி திராவிடர்கள் 2,33,070பேர். பழங்குடியினர் எண்ணிக்கை 4227.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி 6.7.86 அன்று காலை 11.00 மணிக்குத் தொடங்கியது. சேக்கிழார் பற்றி கருத்தரங்கிற்கு திருப்பனந்தாள் மடாதிபதி முத்துக்குமாரசாமி தம்பிரான் தலைமை தாங்கி வாழ்த்திப் பேசினார். மாவட்ட பால் வளத் தலைவர் திரு முத்துகோவிந்தராசன் வரவேற்றுப் பேசினார். கருத்தரங்கில் திரு கு. சுந்தரமூர்த்தி, திரு கோவி மணிசேகரன், திரு ஆர். நாகசாமி, வெள்ளை வாரணனார் ஆகியோர் பேசினார்கள். நிறைவுரையைப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தமும், நன்றியுரையை அறநிலைத் துறை உதவி ஆணையர் திரு லிங்கராஜாவும் நிகழ்த்தினர்.

சேக்கிழார் விழாவினையொட்டி சபாநாயகர் ஆலய முகப்பு வாயிலில் கடலூர் செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் புகைப்படக் கண்காட்சி அரங்கு அமைத்திருந்தது. இவ்வரங்கில் அறநிலையத்துறை தொடர்பான படங்கள், அரசின் சாதனைகள், திட்டங்கள், கொள்கைகள் போன்றவற்றை வெளிப்படுத்தும் புகைப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. விழாவிற்கு வருகை தந்த பொதுமக்கள் இப் பொருட்காட்சியினைப் பார்த்துச் சென்றனர்.

விழாவினையொட்டி சிதம்பரம் கீழ வீதியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் சேக்கிழார் சிலையை அலங்கரித்து எடுத்துச் சென்றனர். பெரிய புராண ஓலைச் சுவடிகளும் எடுத்துச் செல்லப்பட்டன. இரண்டு யானை, இரண்டு குதிரை ஊர்வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டன. கரக ஆட்டம், மயில் ஆட்டம் இதில் இடம் பெற்றன. 63 நாயன்மார்களைப் போல வேடமணிந்த 63 சிறுவர்கள் ஊர்வலத்தில் சென்றனர். இவர்களைப் பார்க்கும்போது 63 நாயன்மார்களையும் நேரிலேயே பார்ப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது.

ஊர்லவத்தில் அறிஞர் பெருமக்கள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தினை அமைச்சர் பெருமக்கள் ஆறுமுக நாவலர் பள்ளியிலிருந்து கண்டு களித்தனர். பள்ளி மாணவ, மாணவியர்கள், சாரணப் படையினர், என்.சி.சி. மாணவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். பின்பு நடைபெறுவதாக இருந்த 'நிறைவு விழா' முன்னாள் துணைப்பிரதமர் திரு ஜெகஜீவன் ராமின் மறைவினால் ஒத்தி வைக்கப்பட்டது. அன்று காலை (6.7.86) மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் திரு இராம.வீரப்பன் திரு வி. வி. சுவாமிநாதன் ஆகியோர் ரூ. 1½ கோடி செலவில் சி. முட்லூரில் கட்டப்பட்டு வரும் அரசு கல்லூரி வளாகத்திற்குச் சென்று தென்னங்கன்றுகளையும், மரக்கன்றுகளையும் நட்டனர்.

**ந. பாலையா,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**தென்னார்க்காடு மாவட்டம்.**

## வறட்சிப் பகுதிகளில் நிலவரி ரத்து

*தமிழக அரசு வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று அறிவித்துள்ள 11 மாவட்டங்களில் உள்ள கிராமங்களில் விளைச்சல் 50 சதத்துக்கும் குறைவாகக் கண்டுள்ள நிலங்களுக்கு நிலவரி மற்றும் உள்ளூர் தீர்வைகளை ரத்து செய்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது. 1985 ஜூலை 1 முதல் 1986 ஜூன் 30 தேதி வரையிலான ஆண்டுக்கு இவ்வாறு நிலவரி ரத்து செய்யப்படுகிறது.*

*திருச்சி, கோவை, சேலம், தர்மபுரி, பெரியார், மதுரை, அண்ணா, இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கம், காமராஜர், கன்னியாகுமரி ஆகிய 11 மாவட்டங்களை வறட்சிப் பகுதியாக அரசு அறிவித்துள்ளது.*



# மாவட்டச் செய்திகள்

## காமராஜர் மாவட்டத்தில்...

**1977** முதல் சிவகாசியைத் தலைமையிடமாகக் கொண்டு இராமநாதபுரம் மத்திய சர்வோதய சங்கம் செயல்பட்டு வருகிறது. இச்சங்கம் சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை, கமுதி ஆகிய நான்கு வட்டங்களில் உள்ள ஒன்பது ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் தனது பணியை விரிவுபடுத்தியுள்ளது.

ஆரம்பத்தில் கதர் உற்பத்தியை மட்டும் முக்கியமாகக் கொண்டு செயல்பட்டு வந்த இந்த மையம், தற்போது கிராமக் கைத்தொழில் வேலைகளை அபிவிருத்தி செய்ததன் மூலம் 1977ல் ரூபாய் 26 இலட்சத்திற்கு மட்டுமே இருந்த விற்பனைத் தொகை இன்று எல்லோரும் வியந்து அதிசயிக்கும் வண்ணம் ரூபாய் 1 கோடியே 60 இலட்சத்தைத் தாண்டியுள்ளது.

இத்தகைய சாதனை புரிந்து வரும் இச்சங்கம், தனக்கென சகல வசதிகளும் கொண்ட ஒரு விற்பனை மையத்தைப் புதிய மாவட்டத் தலைநகரான விருதுநகரில் உருவாக்கிக் கொண்டுள்ளது. தன்னுடைய நிறுவனங்கள் மூலமே இப்புதிய மாளிகையை உருவாக்கிய இச்சங்கம் இக்கதர் பவனை உருவாக்கிட ரூபாய் 10 இலட்சத்தைச் செலவிட்டுள்ளது.

இந்த சர்வோதயச் சங்கத்தின் கதர்பவனை அகில இந்தியக் கதர் வாரியத் தலைவர் திரு தாமஸ் அவர்கள் திறந்து வைத்தார். கதர் பவனின் விற்பனையை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் திரு எல். என். விஜயராகவன், இ.ஆ.ப. அவர்கள் குத்துவிளக்கேற்றினார். தமிழ்நாடு கதர் வாரிய அத்தாட்சித் தலைவர் திரு பத்மநாபன், கலந்து கொண்டார். இவ்விழா மலரை காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு இரத்தினசபாபதி வெளியிட, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் பெற்றுக் கொண்டார்.

இச்சங்கம் ஆற்றிவரும் பணிகளைக் கூர்ந்து நோக்கும்போது, கதர் உற்பத்திக்காக செவல்பட்டி, ரெட்டியபட்டி, சங்கரலிங்கபுரம், புலியூரான், கோனப்பநேந்தல் ஆகிய ஊர்களில் கதர்நூற்பு நிலையங்கள் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போதுள்ள நாகரீக வளர்ச்சியைக் கருதி கதர் ரகத்துடன் பாலி வஸ்திரா ரகமும் தயார் செய்கிறார்கள். இதற்கான நூலையும் இவர்களே உற்பத்தி செய்கிறார்கள். இக்கதர் மாதந்தோறும் ரூ. 2.75 இலட்சத்திற்கு உற்பத்திஆகிறது.

பட்டு உற்பத்தியில் ஆரம்பத்தில் பட்டு பீஸ் ரகம் மட்டும் தயார் செய்து வந்த நிலைமை மாறி, தற்போது பட்டு வேட்டி, பட்டுப் புடவை, துண்டுஆகியவை தயார் செய்கிறார்கள். தற்போது மாதம் ரூபாய் 75000க்கு உற்பத்தி ஆகிறது. இவ்வாண்டு இறுதிக்குள் இதன் உற்பத்தி ரூபாய் 2இலட்சத்தைத் தாண்டும் ''பாலி வஸ்திரா'' ரகம் தற்போது மாதந்தோறும் ரூபாய் 2 இலட்சத்திற்கு உற்பத்தி ஆகிறது. இது ரூபாய் 6 இலட்சத்திற்கு உயர்த்தப்படும்.

சோப்பு உற்பத்தி தற்போது ஒரு இலட்சத்தைத் தாண்டியுள்ளது. இவ்வாண்டு இறுதிக்குள் இதன் விற்பனைஇம்மையங்களில் ரூபாய் 13 இலட்சத்தை எட்டும் என்று நம்பப்படுகிறது. காலணி உற்பத்தி நடப்பாண்டில் ரூபாய் 3.50 இலட்சத்தை எட்டும். பேக்கரி உற்பத்தி ரூபாய் 2.50 இலட்சத்தை அடையும். இதுபோல் அகர் பத்தியும் உற்பத்தி ஆகிறது.



மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் விருதுநகரில் உருவாகியுள்ள புதிய கதர் பவனில் விற்பனையைத் துவக்கி வைக்கிறார்.

மேலும் ஸ்டீல் பர்னிச்சர் யூனிட் மூலம் உற்பத்தி அருப்புக் கோட்டையில் ரூபாய் 7 இலட்சம் வரை இருந்தது தற்போது, ஸ்டீல் பீரோ உற்பத்தி ரூபாய் 15 இலட்சமும், மரச்சாமான்கள் உற்பத்தி ரூபாய் 5 இலட்சமும் உற்பத்தி ஆகிறது. சிவகாசி, சாத்தூர் பகுதிகளில் நல்ல தீப்பெட்டிகளை உருவாக்கும் யூனிட்டுகளும் உருவாக்கப் பட்டுள்ளன. ஸ்ரீவில்லிப்புத்தூரில் உள்ள இந்த யூனிட் மூலம்தான் விருதுநகரில் ரூபாய் 10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள கதர் பவனின் அலங்காரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கதர் விற்பனையில் காந்தீய வழியில்-காந்தி கண்ட கனவு நனவாகிட அவரது சீடர் பெருந்தலைவர் காமராஜர் பெயரில் அமைந்துள்ள இம்மாவட்டம் அகில இந்தியாவிலும் முன்னோடியாக விளங்கும் நாள் வெகு தொலைவில் இல்லை!...

**ரெ. இராவணன்**
**உதவி செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**காமராஜர் மாவட்டம்.**

---

# இராமநாதபுரம் மாவட்டத்தில்...

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் அறிவிப்பின்படி தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இராமநாதபுரம் மாவட்டத்தைத் தத்து எடுத்துள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தேவேந்திர நாத்சாரங்கி, இ.ஆ.ப., அவர்கள் ரூ. 10 கோடிக்கான தொடர் திட்டத்தினைத் தீட்டி அதற்கு அரசு அனுமதியும் பெற்றுள்ளார். இதன் மூலம் ஆண்டிற்கு ரூ. 2 கோடி அளவிற்குக் கிராமத் தொழில்கள் துவக்கப்பட்டு உற்பத்தி செய்யப்படும்.

1986-87ஆம் ஆண்டுக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 19 கதர் மற்றும் கிராமப்புறத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் 4 சிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படவிருக்கின்றன. அவைகளின் மூலம் சுமார் 1897 குடும்பங்களுக்கு உதவியாகக் கடனும் மானியமும் ரூ. 50 லட்சம் அளிக்கப்படவிருக்கிறது. மேற்படி திட்டத்தில் தச்சு மற்றும் கொல்லு தொழில் கதர் நூற்பு மற்றும் நெசவு மண்பாண்டத்தொழில், பனை ஓலைப் பொருட்கள் செய்தல், கோரைப் பாய் பின்னுதல், கயிறு மற்றும் கயிறு சம்பந்தமான பொருட்கள் செய்தல், மீன் பிடி வலைகள் பின்னுதல், மீன்பிடி படகு கட்டுதல், கற்றாழை நாரில் பலவகைக் காட்சிப் பொருட்கள் செய்தல் முதலிய தொழில்கள் வளர்ச்சியடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்தொழிற்களின் வளர்ச்சிக்குக் கதர் மற்றும் கிராமப்புறத் தொழில் வளர்ச்சிக் கழகம் பயிற்சி அளித்தல், கடன் வழங்குதல், செய்யப்பட்ட பொருட்களை உரிய முறையில் விற்பனை செய்தல் போன்ற பணிகளை ஆற்ற ஒப்புக்கொண்டுள்ளது.

இத்திட்டங்களில் பயன்படுத்தப்படும் கருவிகள், சிறிய இயந்திரங்கள், கச்சாப் பொருட்கள் முதலியன இத்தொழிற்கான கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வாங்கப்படும். இதற்கான மூலதனம் இச்சங்க அங்கத்தினர்கள் ஒவ்வொருவருக்கும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலம் 50 சதவீதம் மானியமாகவும் 50 சதவீதம் கதர் மற்றும் கிராமப்புற வாரியத்தின் மூலம் மானியமாகவும் வழங்கப்படும். கூட்டுத்தொகை பயன்படுத்தப்படும். இதனால் விலையுயர்ந்த கருவிகளைக் கூட்டாக வாங்க இயலும். மானியமும் 50 சதவீதம் பெற வாய்ப்பு அளிக்கப்படுகிறது. செய்பொருட்களின் விற்பனைக்கும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. இதனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர் கிராமப் புற மற்றும் சிறு தொழில்கள் நிச்சயம் வளர்ச்சி அடையும்.

**கோ. தி. மோகன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**இராமநாதபுரம் மாவட்டம்.**

*இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு தேவேந்திரநாத்சாரங்கி, இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் குறித்து விளக்குகிறார்.*



---

## தினக்கூலி உயர்வு



தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், கிராமப்புற நிலமற்றோர் வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் ஆகிய இரு திட்டங்களின்கீழ் பணி புரியும் பயிற்சி பெறாத ஊழியர்களுக்கு வழங்கப்படும் தினக் கூலியை உயர்த்தித் தமிழக அரசு உத்தரவிட்டது.

ஆண், பெண் வேறுபாடின்றி, பயிற்சி பெறாத எல்லா ஊழியர்களுக்கும் வழங்கப்படும் தினக்கூலி 8 ரூபாயிலிருந்து 10 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

1986 ஜூலை முதல் தேதியிலிருந்து இது அமலுக்கு வருகிறது. வழங்கப்படும் 10 ரூபாய் தினக் கூலியில் ரூ. 5.15 ரொக்கமாகக் கொடுக்கப்படும். ரூ 1.85 மதிப்புள்ள ஒரு கிலோ அரிசியும், மூன்று ரூபாய் மதிப்புள்ள இரண்டு கிலோ கோதுமையும் வழங்கப்படும்.

இதற்கு முன்பாக, பயிற்சி பெறாத ஊழியர்களுக்குத் தினக்கூலியாக எட்டு ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இதில் ரூ. 3.15 ரொக்கமாகவும், ரூ. 1.85 மதிப்புள்ள ஒரு கிலோ அரிசியும், மூன்று ரூபாய் மதிப்புள்ள இரண்டு கிலோ கோதுமையும் அடங்கும்.

இந்த உத்தரவின்படி இம்மாதத்திலிருந்து ரொக்கத்தில் இரண்டு ரூபாய் அதிகமாக வழங்கப்படும்.

---

இம்மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்குச் சிறுதொழில்கள் துவங்கக் கடனாக 1984-85-ல் 69 நபர்களுக்கு ரூபாய் 56,575-ம், 1985-86-ல் 25 நபர்களுக்கு ரூபாய் 17,125ம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அரசு தரும் கடனில் மானியம் 25 சதவிகிதம் ஆகும்.

இம்மாவட்டத்தில் உள்ள நகர்ப்புற ஆதிதிராவிடர்களுக்குச் சுயவேலைவாய்ப்புக் கடன் உதவி வழங்கியதன் மூலம் 1984-85-ல் இந்த அரசுமானியமாக ரூபாய் 1,98,616 வழங்கியுள்ளது. 1985-86ல் 50 சதவிகிதம் மானிய அடிப்படையில் ரூபாய் 2.10 இலட்சம் வழங்கப் படவுள்ளது.

இது தவிர நகர்ப்புற ஆதி திராவிடர்கள் 70 பேருக்கு எலக்ட்ரிக் சாமான்கள் பழுது பார்த்தல், வயரிங் செய்தல், டிராக்டர் சர்வீஸ் மற்றும் பழுது பார்த்தல் போன்றவற்றிற்காக. விருதுநகர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 6 மாதம் பயிற்சி தரப்படும். இந்தப் பயிற்சிக் காலத்தில் இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 125 உதவித்தொகை வழங்கப்படும்.

மத்திய நிதி உதவியுடன் இந்து ஆதிதிராவிட மக்களுக்கு இம்மாவட்டத்தில் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன:

மின் விசைத்தறி, தளவாய்புரத்தில் 40 இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டு செயல்படுகிறது. இதற்கு அரசு ரூபாய் 15 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது. இதன் மூலம் 100 பேர் பயன் பெறுகிறார்கள்.

அருப்புக்கோட்டையில் ரூபாய் 5.8 இலட்சம் முதலீட்டில் தச்சு கொல்லு தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இதில். அரசு 50 சதவிகிதம் மானியமாக ரூபாய் 2.9 இலட்சம் வழங்கியுள்ளது. இதன் மூலம் 50 பேர் பயன் பெறுகிறார்கள்.

திருவில்லிபுத்தூரில் ரூபாய் 3.54 இலட்சம் முதலீட்டில் தீப்பெட்டி குச்சி அட்டை தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கம் நிறுவப்பட்டுள்ளது. இதற்கும் அரசு ரூபாய் 1.77 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது. இதன் மூலமும் 50 பேர் பயனடைகிறார்கள்.

மேலும், இம்மாவட்டத்தில் உள்ள 155 ஆதிதிராவிடர்களுக்கு முழுநேர வேலையும், 80 ஆதிதிராவிடர்களுக்குப் பகுதிநேர வேலையும் வழங்கும் தொழில்கள் கல்லுப்பட்டியில் உள்ள காந்தி நிகேதன் மூலம் உருவாக்கப்படுகிறது. இத்தொழில் ரூபாய் 13.12 இலட்சம் செலவில் உருவாகும். இதற்கு அரசு மானியம் ரூபாய் 6.56 இலட்சம் ஆகும்.


மகளிர் மேம்பாட்டுக் கழகத் திட்டத்தின் மூலம் இம்மாவட்டத்தில் உள்ள அருப்புக் கோட்டையில் 16 ஆதிதிராவிடர் பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் வகையில் ரூபாய் 3.20 இலட்சம் செலவில் நேப்பாளி நெசவு மையம் உருவாக்கப்படுகிறது.

'தாட்கோ' மூலம் இம்மாவட்டத்தில் 7 இடங்களில் மாணவர் தங்கும் இல்லம் செயல்பட்டு வருகிறது. இதன் மூலம் 720 மாணவர்கள் பயனடைகிறார்கள். மாணவியர் இல்லம் 2 செயல்படுகிறது. இதில் இப்போது 160 மாணவிகள் தங்கிப் பயன் பெறுகிறார்கள்.

இது தவிர இம்மாவட்டத்தில் 'தாட்கோ' மூலம் பள்ளிக் கட்டடங்களும், பாலர் பள்ளிக் கட்டடங்களும், சமுதாய நலக் கூடங்களும் ஆதிதிராவிடர்களுக்கெனக் கட்டப்பட்டுப் பயன்பட்டு வருகின்றன.

இம்மாவட்டத்தைப் பொறுத்த வரை ஆதிதிராவிடர்கள் 'தாட்கோ' ஆற்றிவரும் பணி மூலம் அகம் மகிழுகிறார்கள் என்றால் அதில் ஆச்சரியப் பட ஏதுமில்லை.

**—சு. தீனதயாளன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்**
**காமராஜர் மாவட்டம்.**



# வறட்சியைப் போக்கிட விரைவான நடவடிக்கைகள்

## மதுரை மாவட்டம்

பருவகால நிலை மாறியதால் ஏற்பட்ட வறட்சியினைப் போக்க மதுரை மாவட்டத்தில் விரிவான நடவடிக்கைகள் பல எடுக்கப் பட்டு வருகின்றன.

குடிநீர் வசதிக்காக, குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் ஆழ் குழாய்கள் அமைக்கத் தமிழக அரசு முதல்கட்டமாக 55 புதிய ஆழ்குழாய்க் கிணறுகளையும், இரண்டாம் கட்டமாக 200 புதிய ஆழ் குழாய்க் கிணறுகளையும் அமைக்க அனுமதியளித்தது. அதன்படி இதுகாறும் 235 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக் கப்பட்டன. மீதமுள்ள ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கும் பணி மிக வேகமாக நடை பெற்று வருகிறது.

இது தவிர, ஊராட்சி ஒன்றிய உபரி நிதியிலிருந்து 68 புதிய ஆழ் குழாய்க் கிணறுகளும், ஊராட்சி நிதியிலிருந்து 15 புதிய ஆழ் குழாய்க் கிணறுகளும் அமைக்க அனுமதிக்கப்பட்டது. அதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன.

**நகராட்சிகளில் குடிநீர்**

கம்பம், திருமங்கலம் நகராட்சி களில் தலா 10 ஆழ்குழாய்க் கிணறுகள் வீதம் 20 ஆழ்குழாய்க் கிணறுகள் புதிதாக அமைக்க அரசு ஆணையிட்டு, இதுகாறும் 20 புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து முடிக்கப்பட்டன. இரண்டு நகராட்சிகளிலும் லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.75,000 நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு இதுவரை, ரூ. 24,750 செலவிடப்பட்டது. மேலும் குடி நீர் நிலையங்களைப் பராமரிக்க, தலா ரூ. 2 இலட்சம் முன்பண மாக அரசு அனுமதித்துள்ளது.

மேலூர் நகராட்சிக்கு, சிங்கம் புணரி உபமின் நிலையத்திலிருந்து தனி மின்பாதை அமைக்க ரூ. 5.75 இலட்சம் அனுமதிக்கப்பட்டு அதற்கான வேலைகள் நடை பெற்றுக்கொண்டுள்ளன.

**ஊராட்சி ஒன்றியங்கள் பேரூராட்சிகளில் குடிநீர்**

மதுரை மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி களில் குடிநீர்க் கிணறுகள் ஆழப் படுத்த ரூ. 20.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பலனாக 566 வேலைகள் நிறை வேற்ற எடுத்துக்கொள்ளப்பட் டன. இதில் 412 பணி முடிக்கப் பட்டன. இதுகாறும் ரூ. 15.95 இலட்சம் குடிநீர் வசதிக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

**பொன். சுப்பையா,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்.**

## திருச்சி மாவட்டம்

தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சி நிலைமையால் கிராமப்பகுதி களில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற் பட்டுள்ளது. இக் குடிநீர்த் தட்டுப்பாட்டை உடனடியாக நீக்கிடும் வகையில் தமிழகம் முழுவதும் மிகத் துரிதமாக நிவா ரண வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டதுடன் அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த அடிப்படையில் திருச்சி மாவட்டத்தில் எல்லா ஊராட்சி ஒன்றியம், நகரப் பஞ்சாயத்து, பேரூராட்சி, நகராட்சிப் பகுதிகள் அனைத்திலும் குடிநீர்ப் பற்றாக் குறையைப் போக்க தமிழ்நாடு அரசு முன்னுரிமை அளித்து, ஆழ்குழாய்க் கிணறு போடுதல், குடிநீர்க் கிணறுகளை ஆழப் படுத்துதல், வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்கல் போன்ற பணி களை மேற்கொள்ள ஆணை யிட்டுள்ளது. தமிழ்நாடு அரசு மேற்கண்ட பணிகளுக்கு நிதி ஒதுக்கீடும் செய்துள்ளது.

திருச்சி மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 368 குடிநீர்க் கிணறுகளை ஆழப் படுத்தி குடிநீர்த் தட்டுப்பாட் டைப் போக்க அரசு 15.80 இலட்சம் வழங்கியுள்ளது. ஆனால் அரசு அளித்த குறியீட்டைத் தாண்டி 22-6-86 வரை 596 குடிநீர்க் கிணறுகள் ஆழப்படுத் தப்பட்டுள்ளன. இதற்கு ரூ. 7.76 இலட்சம் செலவிடப்பட் டுள்ளது.

இதேபோன்று பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்த அரசு 60 ஆயிரம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.





ஆழ்க்கோரக் பள்ளைக் கிராமத்தில் குடிநீர்க் கிணறு ஆழப்படுத்தும் காட்சி.

**வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்கல்**

மேலும் பேரூராட்சிகளில் வண்டிகள் மற்றும் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படு கிறது. துறையூர் மற்றும் கரூர் நகராட்சிகளுக்கு வாகனங்கள் மூலம் பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்க ரூ. 55 ஆயிரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு இதுவரை ரூபாய் 20,580 செல விடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத் தில் உள்ள 46 பேரூராட்சிகளில் வாகனங்கள் மூலம் குடிநீர் வழங்க அரசு ரூ. 90,000 ஒதுக்கீடு செய் துள்ளது.

**ஆழ்குழாய் அமைத்தல்**

ஊராட்சி ஒன்றியப்பகுதிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதி களில் 160 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு உத்தரவு வழங்கி யுள்ளது. ஆழ்குழாய் அமைக் கும் பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இரவு பகலாக நடைபெறும் இப்பணி யில் இதுவரை 120 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

நகர்ப்புறப்பகுதி பேரூராட்சி களில் 5 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், 6 நகராட்சிப்பகுதி களில் 15 ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும், அரசு அனுமதி அளித்துள்ளது. இதுவரை நக ராட்சிப் பகுதியில் 11 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கப் பட்டுள்ளன.

ஆக, திருச்சிராப்பள்ளி மாவட் டத்தில் மொத்தம் 180 ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க ரூ. 45 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ப. சாமிநாதன்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**

### முன்மாதிரி தமிழ்நாடு

**சமுகத்தில் நலிந்த பிரிவின ருக்குத் தேவையான ஊட்டச் சத்தைக் கொடுத்து, சுகாதாரத் தைக் காக்கத் தமிழ்நாடு அரசு செயலபடுத்தி வரும் ஊட்டச் சத்துத் திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டம். குறைந்த செலவில் அதிக பலன்தரக் கூடியது.**

**இத்திட்டம் தமிழ்நாட்டில் 9,000 கிராமங்களில் அமலாக் கப்படுகிறது. இதன் மூலம் 10 இலட்சம் குழந்தைகளும் 2.5 இலட்சம் தாய்மார்களும் பயன் அடைகின்றனர்.**

**இவ்வாறு உலக வங்கியின் 1986 உலக வளர்ச்சி அறிக்கை தெரிவிக்கிறது.**

## புதுக்கோட்டை மாவட்டம்

'நீரின்றி அமையாது உலகு' என் னும் முதுமொழிக்கேற்ப குக்கிரா மங்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரப் போர்க்கால அடிப்படையில் முனைப்போடு செயலாற்றி வரும் தமிழக அரசு வறட்சி மாவட்ட மான புதுக்கோட்டை மாவட்டத் திற்குப் பற்பல பயன்தரும் திட்டங் களை அளித்து வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ. 578 இலட்சம் செலவில் குடி யிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கப் பட்டுள்ளது. அதனால் 3,345 இலட்சம் மக்கள் பயன் பெற் றுள்ளனர். கடும் வறட்சியினைச் சமாளிக்கும் வகையில் 1087 ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் அறந்தாங்கி மற் றும் கறம்பக்குடி குடிநீர்த் திட் டங்கள் இப்பகுதியில் துரித கதி யில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை சுமார் 1500 குடியிருப்பு களுக்குக் குடிநீர் வழங்கப்பட் டுள்ளது.

**சி. பி. இராமநாதன்**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**புதுக்கோட்டை மாவட்டம்.**

## இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம் மாவட்டம்— 1910-ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து சாத்தூர் மற் றும் ஸ்ரீவில்லிபுத்தூரை வட்டங் களாகப் பிரித்தும், மதுரை மாவட் டத்தில் இருந்த சிவகங்கை மற் றும் இராமநாதபுரம் ஜமீன்களை இணைத்தும் உருவாக்கப்பட்டு மது

ரையைத் தலைநகரமாகக் கொண்டு இயங்கி வந்தது. சரித்திரப் புகழ் வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க சேதுபதி மன்னர்கள் இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டார்கள். அந்த இராமநாதபுரத்திற்குப் புகழ் சேர்த்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடையதாகும். அவர்தான் 1984-ஆம் ஆண்டு ஜூலை 16-ஆம் தேதி, இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரை இராமநாதபுரத்திற்கு மாற்றியமைக்கும் பணிகளைத் துவக்கி வைத்தார்.

இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் 6 தாலுகாக்களையும், 11 ஊராட்சி ஒன்றியங்களையும் 2 கோட்டங்களையும் தன்னடக்கிய 4216.41 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும் 10,21,744 மக்கள் தொகையையும் கொண்டதாகும்.

இப்புதிய மாவட்டத்தில் அமைந்துள்ள இராமேஸ்வரம் தீவு இந்துக்களின் புனித தலமாக வளங்குகிறது. இங்குள்ள அருள்மிகு இராமநாதசுவாமிகளைத் தரிசிக்க இந்தியாவின் பல இடங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பயணிகள் இத்தீவிற்கு வருகிறார்கள். இதனால் இந்தியாவின் தேசிய ஒற்றுமைக்கு இத்தீவு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இம்மாவட்டத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழில்கள் தான் மக்களுக்கு முக்கியத் தொழில்களாக உள்ளன. இருப்பினும் சமீப காலத்தில் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டு முன்னேற்றமடைந்து வருகின்றது.

வேளாண்மையைத் தலையாய தொழிலாகக் கொண்டுள்ள இம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு வானம் பொய்த்ததன் விளைவாக வறட்சி ஏற்பட்டது.

''நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலை உலகம்'' என்ற பாடல் வரி போல் மக்களின், நலன் காக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் வறட்சியைப் போக்கி வளமாக்கிட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டை சென்னையில் கூட்டி அறிவுரை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்யத் துரித நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார்.



ரூ. 8 இலட்சம் செலவில் 16 புதிய திறந்த வெளிக்கிணறுகள் வெட்டப்பட்டும், ரூ. 10.80 இலட்சம் செலவில் 630 உறைக்கிணறுகளும், 80 ஆழ் குழாய்க் கிணறுகளும், ரூ. 1.37 இலட்சம் செலவில் 52 கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டும், 441 கை பம்புகள், 258 மேல்நிலைத் தொட்டிகள் மூலமாகவும் குடிநீர் வழங்கப்பட்டும் இப்பகுதி வேகமாகச் சீரடைந்து வருகிறது. பட்டி தொட்டியில் 2 நுண்துளைக் கிணறுகளும், 2 ஆழ் குழாய்க் கிணறுகளும் ரூ.7இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிடச் சிறந்த பல நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார். ஒரு நாளைக்கு 240 இடங்களில் லாரிகள், டிராக்டர்கள் மூலமாகக் கிராம நகர்ப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த முறையில் குடிநீர் வழங்குவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ரூ. 4.50 இலட்சம் நிதியளித்துள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஒரு ஊரணி வீதம் 417 ஊரணிகள் ரூ. 16.80 இலட்சம் செலவில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அப்பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டு 1,43,950 மனித சக்தித் திறன் பயன்படுத்தப்பட்டது. 3083.250 டன் அரிசி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

அல்லும் பகலும் அயராது உழைத்து ஏழை எளியோர்களின் துயர் துடைத்திடும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கிடவும், வறட்சியைப் போக்கி வளமாக்கிடவும் தாயன்போடு அளித்த நிதியுதவிக்கு இம்மாவட்ட மக்கள் நெஞ்சார நன்றி கூறி வாழ்த்துகின்றனர்.

**வே. இராமநாதன்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், இராமநாதபுரம்.**

## பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்

**1986-ஆம்** ஆண்டின் பாதகப்பருவ நிலையின் காரணமாக ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க அரசு தீவிர நடவடிக்கைமேற்கொண்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில் உறைக்கிணறுகள் அமைத்தல் மற்றும் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துதல் பணிக்கு ரூ. 7.50 இலட்சமும், புதிய திறவைக் கிணறுகள் 16 அமைப்பதற்கு ரூ. 7.50 இலட்சமும், பேரூராட்சிப் பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ரூ. 1.35 லட்சமும், பேரூராட்சிகளில், லாரிமூலம் குடிநீர் வழங்குதல் பணிக்கு ரூ.0.20 லட்சமும், தேசிய ஊரகவேலை வாய்ப்புத் திட்ட நிதியிலிருந்து குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு ரூ. 1.27 இலட்சமும் செலவிடப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தின் 184 குடிநீர்க கிணறுகளை ஆழப்படுத்தும் வேலைகளும், 183 உறைக் கிணறுகள் அமைக்கும் வேலைகளும் முடிக்கப்பட்டு விட்டன. 16 திறவைக்கிணறுகள் கட்டும் வேலைகள் எடுக்கப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் புதிதாக 200 ஆழ்குழாய்க் கிணறுகள் வெட்டும்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் காரைக்குடி மற்றும் சிவகங்கை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, காரைக்குடி பிரிவின் கீழ், 85 ஆழ் குழாய்க் கிணறுகளும், சிவகங்கைப் பிரிவில் 115 ஆழ் குழாய்க் கிணறுகளும் வெட்டும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இதுகாறும் 85 ஆழ் குழாய்க் கிணறுகள் பணி முடிவடைந்துள்ளன. நகராட்சிப்பகுதியில் 15 ஆழ்குழாய்க் கைப்பம்பு நிறுவும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் 31 ஆழ் குழாய்க் கைப்பம்பு அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டதில் 31 பணிகளும் நிறைவுபெற்று விட்டன. இன்னும்சில நாட்களில் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டத்தில், அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீர் வழங்கும் பணிகள் நிறைவுபெற்று விடும்.

**வி. புண்ணியமூர்த்தி**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம்.**

# செங்கல்பட்டு மாவட்டத்தில் பட்டு வளர்ச்சி

**செ**ங்கல்பட்டு மாவட்டத்தின் தலைநகரம் காஞ்சிபுரம். இது. கலைநேர்த்திக்கும், தொழில் நேர்த்திக்கும் குறிப்பாக பட்டுத் தொழிலின் தனிச் சிறப்புக்கும் பெயர் பெற்று இருக்கிறது. காஞ்சிபுரம் பட்டு, என்றாலே உலகப் பிரசித்தி பெற்றது.

நகரங்களில் சிறந்தது காஞ்சி மாநகர் என்று சொல்லுவார்கள். தமிழகத்தில் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த ஊரும் காஞ்சி மாநகர் என்பதை நாமறிவோம்.

எங்குமில்லாத சிறப்பு இங்குத் தயாராகும் பட்டுச் சேலைக்கு உண்டு. இது தனித்தன்மை வாய்ந்தது. இங்குத் தயாராகும் பட்டுச் சேலையின் கவர்ச்சிக்குக் காரணம் என்ன தெரியுமா?

வித்தியாசமான பார்டரும் இணைக்கப்பட்ட தலைப்பும் தான். இவை தவிர பட்டு நூல் இழைகளும் தனித்தன்மை வாய்ந்தவை.

இந்தப் பட்டினை பல இழைகளாகச் சேர்த்து முறுக்கி உறுதியான பட்டு நூலாக்குகிறார்கள். இந்தப் பட்டு நூலின் முறுக்கலில் தான் பட்டுத் துணிகளின் உறுதியே அடங்கி உள்ளது. இங்குத் தயாராகும் பட்டு மிகவும் நேர்த்தியானது. மிகவும்நீண்ட நாள் வரும் தன்மையும் உடையது.

இந்தப் பட்டுச் சேலைகளுக்கான சரிகையை, குஜராத்தில் உள்ள சூரத்தில் இருந்து வரவழைத்துக் கொள்கிறார்கள். காஞ்சிபுரத்தில் அரசு சரிகைத் தொழிற்சாலையும் சரிகையை உற்பத்தி செய்கிறது. பட்டுப் புடவைகள் வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

பட்டுத்தொழில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட அதிக வேலைவாய்ப்புள்ள ஊரகத் தொழிலாகும். ஒரு ஏக்கரில் மல்பரி பயிரிடுவதன் மூலம் ஐந்து பேர்கள் வேலைவாய்ப்பைப் பெறுகின்றனர். ஒரு ஏக்கரில் மல்பரி பயிரிட்டு முறைப்படி தொழில்மேற்கொள்வதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 10,000 வரை வருமானம் பெறலாம்.

இம்மாவட்டத்தில் 1977-ஆம் ஆண்டு 50 ஏக்கர் பரப்பளவில் ஆரம்பிக்கப்பட்டு இன்று மேலும் பெருகி 656.30 ஏக்கர் பரப்பளவில் 775 விவசாயிகளால் செய்யப்பட்டு வருகிறது.

1985-86ஆம் ஆண்டில் 245.00 ஏக்கர் முசுக்கொட்டைச் செடி நடப்பட்டு உள்ளது. செங்கை மாவட்டத்தில் பட்டுத் தொழிலுக்கேற்ற சீதோஷ்ண நிலை இருப்பதால் இத்தொழில் வளர்ச்சியடைய வாய்ப்பு உள்ளது.

மாவட்ட பட்டு வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம் 17.7.82 அன்று நிறுவப்பட்டுச் செயல்பட்டு வருகிறது. இதனால் முசுக்கொட்டைச் செடி நடவையில் சீரிய முன்னேற்றம் கண்டுள்ளது.

### அரசு பட்டுக்கூடு அங்காடி

மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பட்டுக்கூடுகளை வாங்க காஞ்சிபுரத்தில், அரசு பட்டு நூற்பகத்தின் இணைப்புடன் கூடிய ஒரு அரசு பட்டுக்கூடு அங்காடி செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடியில் வாங்கப்படும் பட்டுக்கூடுகள் தனியார் பட்டு நூற்புக்காக விநியோகிக்கப்படுகின்றன அரசு பட்டு நூற்பாலையில உற்பத்தி செய்யும் பட்டுநூல் தமிழ்நாடு மாநில பட்டு உற்பத்தியாளர் தொழில்

காஞ்சிபுரம் அருகே கலக்காட்டூர் (மீஞ்சூர்) கிராமத்தில் மல்பரி பயிரிடப்படுகிறது.



கூட்டுறவு விற்பனை இணையத்தில் விற்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு முசுக்கொட்டைச்செடி நடவும் பட்டுவளர்ப்புப் பயிற்சி அளிக்கவும், மானிய விலையில் குச்சிகள் வழங்கவும் இதர தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கவும் ஒரு முன்னோடி விரிவாக்க மையம் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் துவக்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

திருத்தணி வட்டாரத்திலுள்ள விவசாயிகளுக்குத் தொழில்நுட்ப உதவிகள் வழங்குவதற்காகத் தொழில் நுட்பப் பணி மையம் 10.9.81ல் ஆரம்பிக்கப்பட்டது. 1982-83-ஆம் ஆண்டில் மேலும் மேம்பாடு செய்ய திருவள்ளூரில் மற்றொரு மையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.


இம்மாவட்டத்தில் பட்டுகூடுகள் அறுவடை செய்ய வேண்டி இரண்டுகிராம இளம்புழுவளர்ப்பு மையங்கள் மாங்காளிபுரம், கீழ்வொட்டிவாக்கம் ஆகிய கிராமங்களில் செயல்பட்டு வருகிறது. இதனால் பட்டுக்கூடு அறுவடை 100 நோயற்ற முட்டைத் தொகுதிகளுக்கு சராசரியாக 25 சதவீதத்தில் இருந்து 38 சதவீதமாக உயர்ந்து உள்ளது. 1.4.85 முதல் காஞ்சிபுரம் அருகில் மானாம்பதி கண்டிகை என்னுமிடத்தில் மற்றொரு மையம் துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.



பட்டுப்புழு முதல் பருவம்

காஞ்சிபுரம் ஒன்றியத்தில் விச் சந்தாங்கல் கிராமத்தில் 5.00 ஏக்கர் இளம்புழு வளர்ப்புப் பண்ணை நிறுவப்பட்டுள்ளது.

வளர்ச்சியடைந்த பட்டுப்புழு



தற்போது கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதனால் மாதம் 50 விவசாயிகளுக்குமேல் பயன் அடைந்து வருகின்றனர்.

பட்டு விரிவாக்க வளர்ச்சி மையம் 1986-87-ஆம் ஆண்டில் சுற்றியுள்ள கிராமங்களில் 125.00 ஏக்கரில் மல்பரி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன்முதலாகக் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயம் செய்து அமல்படுத்திப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளது தமிழ்நாடு அரசு. தமிழ்நாட்டில் விவசாயத்துக்கு அடுத்தபடி ஜீவனுள்ள தொழில் கைத்தறி தொழிலாகும். சுமார் அரைகோடி பேர்கள் இந்த கைத்தறித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இத்தொழிலுக்கு எனத் தனியாக ஒரு தொழிற்சாலையோ, மின்சாரச் செலவோ இல்லை.

**எஸ். கே. மூர்த்தி**

**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

# புதிய வட்டாட்சியர் அலுவலகம்

மதுராந்தகத்திற்குத் தென்கிழக்காக 25 கி.மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது செய்யூர். 18 கி. மீட்டர் நீளக் கடற்கரைச் சாலையைக் கொண்டது.

கிழக்குக் கடற்கரைச் சாலை செல்லும் மொத்தம் 48 கிராமங்கள் மணற்பரப்பைக்கொண்ட நில பூமியாகும். கடல் கழிவு நீர் நான்கு பக்கமும் சூழப்பட்டு இடையில் அமைந்துள்ள 19 கிராமங்கள் 'இடைக்கழி நாடு' என அழைக்கப்படும் பகுதி இச்செய்யூர் வட்டத்தில் அடங்கும். ஆர்க்காட்டு நவாப் சதக்கத்துலாகான் ஆட்சியில் கட்டப்பட்ட கோட்டை இவ்வட்டத்தில் உள்ள ஆலம்பரை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இப்பகுதியில் திரைப்படப் படப்பிடிப்புகள் அடிக்கடி நடைபெறும்.

கும். சித்தாமூர் ஒன்றியத்தில் நான்கு பிர்க்காக்களும் முறையே சித்தாமூர், கயப்பாக்கம், கடப்பாக்கம், மற்றும் சூணாம்பேடு ஆகியவையும் லத்தூர் ஒன்றியத்தில் முறையே லத்தூர் கொடூர், செய்யூர் ஆக மொத்தம் 194 கிராமங்களைக் கொண்ட 74 வருவாய் வட்டக் கிராமங்கள் இவ்வட்டத்தில் அடங்கும். 74 கிராம நிர்வாக அலுவலர்கள் அங்கு பணியில் உள்ளனர்.

இவ்வட்டத்தின் மொத்த பரப்பளவு 13 சதுர மைல்கள். 68,065 ஏக்கர் புஞ்சை நிலங்களையும், 31,730 ஏக்கர் நஞ்சை நிலங்களையும் கொண்டது. அடிப்படை நிலவரி தீர்வை ரூபாய் 2,01,495 கொண்டது.

40 பொதுப்பணித்துறை நீர்த்தேக்கங்களையும், 115 சிறுபாசன நீர்த்தேக்கங்களையும்,

ரிப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செய்யூரில் இயங்கி வருகிறது.

இவ்வட்டத்தின் மொத்த மக்கள் தொகை 1981-ஆம் ஆண்டின் கணக்கெடுப்புப்படி 2,00,405. இவர்களில் 60,445 பேர் ஆதிதிராவிடர்கள், செய்யூரில் அரசு மருத்துவமனை ஒன்றும் பவுஞ்சூரில் ஆரம்ப சுகாதார நிலையமும், பொலம்பாக்கத்தில் தொழுநோயாளிகளின் மருத்துவமனையும், சூணாம்பேடு கிராமத்தில் ஆரம்பச சுகாதார நிலையமும் உள்ளன. செய்யூர், சூணாம்பேடு கிராமங்களில் கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது.

புதிய செய்யூர் வட்டத்தின் ஒரே பேரூராட்சி இடைக்கழி நாடு ஆகும். செய்யூரில் அரசு உயர்நிலைப்பள்ளி, அரசு ஆதி திராவிட மாணவர் விடுதி ஆகியவைகளும் உள்ளன.



இக்கோட்டைக்குப் பின்புறம் 'இடைக்காடல் திட்டு' அமைந்துள்ளது. 'இடைக்காடர்' என்னும் சித்தர் ஒருவர் வாழ்ந்ததாக இங்குள்ள ஒரு கல்வெட்டு கூறுகிறது. கடைச்சங்க காலத்தில் வாழ்ந்த நத்தத்தனார் என்னும் புலவர் வசித்த நல்லூர் என்னும் கிராமம் இவ்வட்டத்தில் அமைந்துள்ளது.

இவ்வட்டத்தில் சித்தாமூர், மற்றும் லத்தூர் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்கள் அடங்

174 வாஞ்சி தேக்கங்களையும் கொண்டது இது. முக்கியப் பயிர் நெல், மா, பலா, தென்னை, சவுக்கு முதலியன ஆகும். கடலோரப் பகுதிகளில் மீன் பிடித்தல், சங்கு எடுத்தல் மற்றும் கிளிஞ்சல் சேகரித்தல் முக்கியத் தொழிலாக உள்ளது. செய்யூரில் 336 ஏக்கர் பரப்பில் உப்பளவயல்கள் உள்ளன. இவற்றிலிருந்து உப்பு தயாரிக்கப்பட்டு வெளியூர்களுக்கு அனுப்பப்படுகிறது. இதற்கென உப்பு தயா

சார்பதிவாளர் அலுவலகம் செய்யூரிலும், சித்தாமூரிலும் உள்ளன. மேல்மருவத்தூர் சித்தாமூர், சூணாம்பேடு செய்யூர், கவத்தூர் ஆகிய கிராமங்களில் உதவி காவல் ஆய்வர் அலுவலகமும், அணைக்கட்டில் புறக்காவல் நிலையமும் உள்ளன. கடலோரப் பகுதிகளான வேம்பனூர், பனையூர் முதலியார் குப்பம், பரமங்கேணி, வடபட்டினம், கடலூர் ஆகிய பகுதிகளில் புயல் பாதுகாப்பு அகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை

களில் இலங்கை அகதிகள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.


இவ்வட்டம் பொருளாதார அடிப்படையில், தொழில் வளர்ச்சியிலும் பின் தங்கி உள்ளது. முக்கிய அத்தியாவசியத் தேவைகளுக்கும், அவசரக் காரியங்களுக்கும், திருமண, திருவிழா வைபவங்களுக்கும் மக்கள் மதுராந்தகம் நகரையே சார்ந்துள்ளனர். செய்யூரிலிருந்து மதுராந்தகம் போன்ற நகரங்களுக்குப் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைவாக உள்ளன.

மாநிலத்திலேயே 16 பிர்க்காக்களைக் கோண்ட மிகப் பெரிய மதுராந்தகம் வட்டத்தை நிர்வாக நலன் கருதி இரண்டாகப் பிரித்து செய்யூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டத்தை ஏற்படுத்த 1965-ஆம் ஆண்டில் இருந்தே கருத்துருக்கள் அனுப்பி வைகக்கப்பட்டு, புதிய செய்யூர் வட்டம் 1.7.86 முதல் செயல்பட்டு வருகிறது.

செய்யூர் வட்டாட்சியர் அலுவலகத் துவக்க விழா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஏ. மாத்யூ, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு நிதி மற்றும் வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெஞ்செழியன் அவர்கள் புதிய வட்டாட்சியர் அலுவலகத்தைத் துவக்கி வைத்தார். ரூ. 2.20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட செய்யூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியைத் திறந்து வைத்து, 3119 பேர்களுக்கு விட்டு மனைப்பட்டாக்களையும், 898 நிலப் பட்டாக்களையும், 125 பேருக்கு முதியோர் உதவித் தொகையை வழங்கினார்.

கிராம வேலைத் திட்டத்தின் கீழ் ரூ. 98 ஆயிரம் செலவில் பவுஞ்சூர் கிராமத்தில் கட்டப்பட்ட கால்நடை மருந்தகக் கட்டடத்தையும் ரூ. 1,67,500 செலவில் புதுப்பட்டுக் கிராமத்தில் 25 குடியிருப்பு இல்லங்களையும், முதலமைச்சர் சத்துணவுக் கூடங்கள் 5 ஐயும், சித்தாமூரில் ரூ. 92 ஆயிரம் மதிப்புள்ள அரிசிக் கிடங்கினையும் திறந்து வைத்தார்.




மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள், குடிநீர் வடிகால் வாரியம் கட்டிய 4 மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளைத் திறந்து வைத்தார்.

மாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

ரூ. 56 லட்சம் செலவில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் இப்பகுதி குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு நிதியமைச்சர் பேசுகையில் கூறினார். மேலும் தமிழக அரசு கல்வித்துறைக்கு அடுத்தபடியாக நல்வாழ்வுத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னதாக மதுராந்தகத்தில் ரூ. 8 லட்சம் மதிப்பில் புறநோயாளிகள் மருத்துவப் பிரிவை மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் தலைமையில் மாண்புமிகு ஊரகத் தொழிலமைச்சர் திரு ஆனூர் கோ. ஜெகதீசன் அவர்கள் முன்னிலையில் மாண்பமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளுக்கு முன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. ஏ. மாத்யூ, இ.ஆ.ப. அவர்களுடன், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ரூ. 83 லட்சம் செலவில் மதுராந்தகம் ஏரி செப்பனிடும் பணியைப் பார்வையிட்டார்.

## இங்கே எல்லோருக்கும் நூறு வயது!

சோவியத் நாட்டின் கார்கோவ் நகரில், நூறு வயதானவர்கள் சங்கம் ஒன்று துவக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில் நகரில், நூறு வயதை நெருங்குகிற அல்லது நூறு வயதைத் தாண்டிய ஆண்களும், பெண்களுமாகச் சுமார் 3,000 பேர் வசித்து வருகிறார்கள்.

சுத்தமான காற்று, நல்ல உணவு வகைகள் கிடைப்பதால் கிராமப்புறங்களில் உள்ளவர்களே அதிக நாள் உயிர்வாழ்கிறார்கள் என ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், கார்கோவ் நகரில் அதிக நாள் உயிர்வாழ்பவர்களில் பலர், நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் நிறைந்த அந்த நகரிலேயே பிறந்தவர்கள். உதாரணமாக, 103 வயதான ஸ்டீபன்போச்சரோவ், ஒரு பொறியியல் ஆலையில் கருமானாக வேலை செய்தவர்; 92 வயதான தூப்சக் டிராக்டர் ஆலையில் பொறியியலாளராக இருந்தவர்; 98 வயதான மரியா, ஆடைத் தயாரிப்பு ஆலையில் 50 ஆண்டுக் காலம் பணி புரிந்தவர்.

### நூறாண்டு வாழக் காரணம் என்ன?

இளம் வயதிலிருந்தே அவர்கள் சுறுசுறுப்பான உடலுழைப்பில் ஈடுபட்டு வந்துள்ளனர். பாரம்பரியமான உணவு வகைகளையே சாப்பிடுகிறார்கள். பால் பொருட்களும், காய்கறிகளுமே இதில் அதிகம். தேநீர் அருந்துவதில் அவர்கள் நாட்டம் கொண்டுள்ளனர்.

அவர்கள் ஒருபோதும் புகை பிடிப்பதேயில்லை. ஒவ்வொருவரும், அவர்களால் இயன்றளவு உடலுழைப்பில் ஈடுபடுகிறார்கள்.






நூல்நயம் பகுதிக்கு இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். அரசியல், தொடர்பான நூல்கள் மதிப்புரை செய்யப்படுவதற்கில்லை.

—ஆசிரியர்.

### முருகனைப் பாடிய மூவர்

ஆசிரியர் : ஓவியப் பாவலர். மு. வலவன்,
வெளியீடு: முத்தையன் பதிப்பகம், 65 பெரிய தெரு, திருவல்லிக்கேணி சென்னை - 600 005

விலை ரூ. 15. பக்: 126

அருட்பிரகாச வள்ளலார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், குமாருகுருதாசர் என்று வழங்கப்பட்ட பாம்பன்சுவாமிகள் மூவரும் முருகப் பெருமானை வணங்கிய மூதறிஞர்கள் ஆவர். இவர்களுக்குள்ள ஒற்றுமையை இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

மூவரும் இளம் பருவத்திலேயே முருகப்பெருமான் மீது பாடல் புனைந்துள்ளனர். மூவரும் தமிழார்வம், மிக்கவர்களாக விளங்கியுள்ளனர். மேலும், சீவகாருண்ய ஒழுக்கம் சமுதாய சீர்திருத்தம், இலக்கிய இலக்கண ஆர்வம் ஆகியவற்றில் மிகுந்த அக்கறை கொண்டிருந்திருக்கிறார்கள். மூவருமே அருணகிரிநாதரைப் பாடிப் பரவியுள்ளனர். சென்னை தலத்தைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இவ்வாறு இம் மூவருக்கும் உள்ள ஒப்புமையை ஆய்வு மனப்பான்மையுடன் நூலாசிரியர் எழுதியிருக்கிறார். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் நூல்களைப் பட்டியல் போட்டுக் காட்டியிருப்பது, நூலாசிரியர் எடுத்துக்கொண்டு அக்கறையுடன் ஆற்றியுள்ள பெருமைப்பையும் நமக்குத் தெரிவிப்பது-இனிய-எளிய தமிழ் இந்நூலுக்கு உள்ள மற்றொரு சிறப்பம்சம்!

—தமிழ்ப்பித்தன்

### காணாமல் போன முகம்

ஆசிரியர்; ராஜேஷ்குமார்
வெளியீடு: மயிலவன் பதிப்பகம் 17, கங்கை அம்மன்கோயில் தெரு,
வடபழனி. சென்னை-26

விலை ரூ. 11.00 பக்கம்:144

நூலின் தலைப்பைக் கொண்டது முதல் கதை. 'ஒரு மாலை நேர மரணம்' என்பது இரண்டாவது கதை.

தன் நண்பனின் வறுமையைப் பயன்படுத்திப் பணத்தாசை காட்டி தனக்கு வேண்டாத ஒருவரைக் கொலை செய்யத் தூண்டும் பணக்காரன் எப்படி ஏமாந்தான் என்பது முதல் கதை.

இளம் பெண் பிணம் ஒன்று குப்பை மேட்டிலிருந்து தோண்டி எடுக்க, இரண்டு பெண்கள் சோக முத்தூர் வர. இவர்களில் யார் கொலையுண்டவள்..? இந்தக் கதை மிக விறுவிறுப்பாகப் போகிறது. சஸ்பென்ஸாகக் கதை சொல்லிச் செல்வது பிரமாதம்.

எக்ஸ்பிரஸ் பஸ் டிக்கெட் ஒன்றை மட்டுமே வைத்துக் கொண்டு போலீஸ் துப்பு துலக்குவது நன்றாக எழுதப்பட்டிருக்கிறது.

இரண்டும் கொலை கேஸ் கதைகள்தான் என்றாலும், இரண்டாவது கதையே சிறப்பாக இருக்கிறது.

### உதடுகளும் உதடுகளும்

ஆசிரியர் : பட்டுக்கோட்டை பிரபாகர்
வெளியீடு: மயிலவன் பதிப்பகம் 17, கங்கை அம்மன் கோயில் தெரு, வடபழனி. சென்னை-600 026.

விலை. ரூ. 8.00 பக் :112

வழக்கமாக எழுதும் கதைகளினின்றும், சற்று மாறுபட்டு இக்கதையை எழுதி இருக்கிறார் ஆசிரியர்.

தாய், மகன், மருமகள் கொண்ட சிறு குடும்பம். இக்குடும்பத்தில் குழந்தை ஒன்று பிறக்காததால் பிரச்சினை உருவானது. தன் தம்பி மகளை மறுமணம் செய்து வைக்க மாமியார் முயல, பொய்யைச் சொல்லித் தன் வாழ்க்கையைக் காப்பாற்றிக் கொள்ள ராதா முயல, கதை சூடு பிடிக்கிறது.

விறுவிறுப்பான சம்பவங்கள். துரித நடையில் கதையில் பல முடிச்சுகள் போட்டு, இறுதியில் அழகாக அவிழ்த்திருக்கிறார் ஆசிரியர்.

### ஒரே ஒரு ஊரில்

ஆசிரியர் : கு.ரா.
வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி தபால் பெட்டி நெ. 617. மயிலாப்பூர். சென்னை-4.

விலை ரூ. 11. பக்:144

மாறுபட்ட பல கருத்துக்களை கொண்ட பதினான்கு சிறு கதைகள் இந்நூலில் இருக்கின்றன.

எல்லாம் சென்னையில் டிராம் ஓடிய, நினைத்தவுடன் போய் மிலிட்டிரியில் சேர்ந்து கொள்ளும் காலத்தைய கதைகள்.

காரி இட்லரின் சாம்ராஜ்யம அழிக்கப்பட்டது. பின்னர் நான்கு பிரதேசங்களாக ஜெர்மனி பிரிக்கப்பட்டு, நேசநாடுகளின் நிர்வாகத்தின் கீழ் இருந்தன. ஒரு ஜனநாயக ஜெர்மனியை அமைப்பதற்கு 1945ஆம் ஆண்டில் நேச நாடுகள் ஒப்புக் கொண்டன. ஆயினும், பிரிட்டன், அமெரிக்கா, பிரானஸ், ஆகிய நாடுகளின் ஆதிக்கத்திலிருந்த மேற்கு ஜெர்மனிப் பகுதியில் 1949ஆம் ஆண்டில் ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு என்ற பெயரில் ஓர் அரசு அமைக்கப்பட்டது. அந்த ஆண்டில் கிழக்கு ஜெர்மனியில் ஜெர்மானியக் குடியரசு அமைக்கப்பட்டது.



மேற்கு ஜெர்மனியின் நிலப் பரப்பு 2,48,000 சதுர கிலோ மீட்டர். மக்கள் தொகை ஐந்து கோடியே ஐம்பது லட்சத்திற்கும் அதிகம்.

ஜெர்மனியை மேற்கு ஜெர்மனி என்றும், பெடரல் ரிபப்ளிக் ஆப் ஜெர்மனி ( Federal Republic Germany ) என்றும் அழைக்கிறார்கள். இதன் தலைநகரம் போன் ( Bonn ) மேற்கு ஜெர்மனி ஐரோப்பாவின் மத்திய பகுதி -கேந்திரமாக அமைந்து இருக்கிறது. மேற்கு ஜெர்மனியின் அண்டைநாடுகள் நெதர்லாந்து, பெல்ஜியம், லக்ஸம்பர்க், பிரான்ஸ், ஸ்விட்சர்லாந்து ஆஸ்ட்ரியா, செக்கோஸ்லோவேகியா, கிழக்கு ஜெர்மனி, டென்மார்க் ஆகிய நாடுகள் ஆகும்.

இதிலிருந்து மேற்கு ஜெர்மனி எப்படி கேந்திரநாடாக அமைந்திருக்கிறது என்பது புலனாகும். 1867ஆம் ஆண்டில் ப்ரஷ்யா என்றழைக்கப்பட்ட ஜெர்மன் நாடுகளின் அப்போதைய சான்ஸலர் பிஸ்மார்க் என்பவர், ஜெர்மன் பேரரசை நிறுவினார். இரண்டாவது உலகப் பெரும்போருக்குப் பிறகு ஜெர்மனியை நேசநாடுகள் இரண்டாகப் பங்கு போட்டுக் கொண்டன. கிழக்கு ஜெர்மனியை ரஷியாவும், மேற்கு ஜெர்மனியை மற்ற நேச நாடுகளும் தங்களுடைய ஆதிக்கத்தில் வைத்திருந்து விட்டு விடுதலை அளித்தன. ஒன்றாக இருந்த பெர்லின் தலைநகரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. 1949ஆம் ஆண்டு மே, 23ஆம் நாளன்று மேற்கு ஜெர்மனி நிறுவப்பட்டது. இரண்டாவது உலகப் பெரும்போரின் போது மேற்கு ஜெர்மனி முழுவதுமாக அழிக்கப்பட்டது. ஆனால் உலகப் போருக்குப் பிறகான நாட்களில் நாம் எண்ண முடியாத அளவு முன்னேற்றத்தை மேற்கு ஜெர்மனி கண்டது.

இப்போது நாம் பார்க்கும் ஜெர்மனி இரண்டாவது உலகப் பெரும்போரினால் முழுவதும் அழிந்துபோன நாடுதானா என்று நாம் கற்பனையில் கூட எண்ணிப் பார்க்க முடியாத அளவு எல்லா வகையிலும் உயர்ந்துவிட்ட நாடாகும். உலக யுத்தத்தின் போது ஒவ்வொரு குடும்பமும் ஏதாவது ஒரு வகையில் சின்னாபின்னப்பட்டது. பெரும்பாலான ஆண்கள் கொல்லப்பட்டார்கள். ஆனால் நாம் இன்று பார்க்கும் ஜெர்மனியோ மிகவும் மேம்பாடு அடைந்த நாடுகளில் ஒன்றாகத் திகழ்கிறது.

குறிப்பாக-இரும்புத் தொழில், கனரகத் தொழில், பொறியியல் துறை, கப்பல் கட்டும் தொழில், மின்சாரம், இரசாயனம் சம்பந்தப்பட்ட பொருட்கள் ஆகிய தொழில்களில் முதலிடமோ, முக்கிய இடமோ வகிக்கிறது. மேற்கு ஜெர்மனியில், இந்தக் குடியரசில்தான் ஏராளமான நிலக்கரிப் படிவங்கள் இருக்கின்றன. மின் பொறியியல் தொழிலுக்கு இது அடிப்படையாக இருக்கிறது. இரும்பு, எஃகுத் தொழில்களுக்குத் தேவையான உயர்ந்த ரக கட்ட நிலக்கரி இதிலிருந்து ஏராளமாகக் கிடைக்கிறது. இந்தப் பள்ளத்தாக்கு இரும்பு, எஃகு, இரசாயனத் தொழில், பொறியியல் தொழில் ஆகியவற்றின் மையமாகவும் விளங்குகிறது.

மொத்தத்தில் இயந்திரங்களை உற்பத்தி செய்வதிலும், தொழில் உற்பத்தியிலும் ஐக்கிய அமெரிக்கா நீங்கலாக முதலாளித்துவ நாடுகளில் மேற்கு ஜெர்மனிதான் முதலிடம் பெற்றிருக்கிறது. குறிப்பாக கனரக இயந்திரங்களை உற்பத்தி செய்வதுதான் இங்கு மிக முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

1960ஆம் ஆண்டிலேயே மேற்கு ஜெர்மனி 20,00,000 (இருபது லட்சம்) மோட்டார் வாகனங்களை உற்பத்தி செய்தது. அந்த அளவிற்கு அதன் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. போர்க் கருவிகளை உற்பத்தி செய்வதிலும் இந்நாடு முன்னணியில் உள்ளது. கப்பல் கட்டும் தொழில் பெரிய அளவில் நடைபெறுகிறது. இரசாயனத்தொழில் தொடர்ந்து உற்பத்தியை அதிகரித்துக் கொண்டு இருக்கிறது. உர உற்பத்தியிலும் இந்நாடு முக்கிய இடம் வகிக்கிறது. எண்ணெய்ச்சுத்திகரிப்புத் தொழிலும் இங்கே முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வேளாண்மைத் துறையிலும் இந்நாடு குறிப்பிட்ட இடம் வகிக்கிறது. பால் பண்ணை, மாட்டுப் பண்ணைகள் இங்கே ஓங்கி வளர்ந்துள்ளன.

இன்று, அமெரிக்காவைத்தவிர வேறு எந்த முதலாளித்துவ நாட்டைக் காட்டிலும் அதிகமாக மேற்கு ஜெர்மனிதான் வெளிநாடுகளோடு விரிந்த பொருளாதார உறவுகளை வைத்திருக்கிறது.

இந்தக் குடியரசின் வெளிநாட்டு வியாபாரம் மூன்றில் ஒரு பங்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளோடு-முக்கியமாக மேற்கு ஜெர்மனி முக்கியப் பாத்திரத்தை வகிக்கும் பொதுச் சந்





தையில் உள்ள நாடுகளோடு நடைபெறுகிறது. உலக வணிக அரங்கில் மேற்கு ஜெர்மனி தயாரித்திடும் பொருட்களுக்கு நல்ல மதிப்புள்ளது. 1948ல், மேற்கு ஜெர்மனி தனது நாணயத்தைப் புதுப்பித்தது. அத்துடன் மேற்கு ஜெர்மனியின் பொருளாதாரமும் புதுமையை ஏற்றுக்கொண்டது. இன்று மேற்கு ஜெர்மனி ஏற்றுமதி வாணிபத்தில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஒட்டு மொத்த தேசிய உற்பத்தியும், தனி மனிதனின் சராசரி வருவாயும் இங்கு மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளன.

எப்படி அவர்களால் இதைச் சாதிக்க முடிந்தது என்பதை நாம் எண்ணி, சிந்தித்து அதைச் செயல்படுத்த எல்லாவித முயற்சிகளையும் மேற்கொண்டால் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு ஒரு வகையில் உதவியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

இயந்திர உலகமான மேற்கு ஜெர்மனியில், உடல் நலக் குறையை நிவர்த்திப்பதற்கான இடங்கள் பல உண்டு. இதயக் கோளாறு உள்ளோர் 'பாட்நகம்' என்ற இடத்திற்குச் சென்று நலம் பெறலாம். வாதநோயுற்றோர் ரிகென்ஹால், பேடன் பேடன், பேடன் வீலர், ஆசென் போன்ற இடங்களில் இயற்கை மருத்துவம் செய்து கொள்கிறார்கள். இந்தப் பகுதிகளில் உடல் நலத்திற்கேற்ற உப்புக்களைக் கொண்ட நீர்ச் சுனைகளும், ஊற்றுக்களும், பல உள்ளன. இவற்றை நீராடும் இடங்கள் எனப் பொதுவாகக் குறிப்பிடுகிறார்கள்.

அழகிய மலைப் பகுதிகளும் உள்ளன. மன்னராட்சிக்காலத்தில் கட்டி முடிக்கப்பட்ட மாளிகைகள் மிக அழகாகவும், பொலிவோடும் விளங்குகின்றன. இசை, கலை, நாடகம் ஆகிய துறைகளில் இந்நாடு சிறப்பான இடத்தை வகிக்கிறது. உலகப் புகழ் பெற்ற இசைக் குழுக்கள் பல இங்கே உள்ளன.

**கொலோன்**

நான் பார்த்த ஜெர்மானிய நகரங்களில் கொலோன முக்கியமான நகரமாகும். கொலோனைத் தான் ரோமானியர்கள் முதன் முதலாகக் கட்டியதாகச் சொல்கிறார்கள். ஜூலியஸ்சீசர் ரோமாபுரியை ஆண்டபோது அவனுடைய ஆதிக்கம் ஜெர்மனியில் கொலோன் வரைக்கும் எட்டியிருந்ததாக அறிகிறேன். ஜூலியஸ் சீசர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்கள் இன்னும் கொலோனில் காணப்படுகின்றன. முதல் நகரச்சுவர் ரோமானியர்களால்-அதுவும் ஜூலியஸ் சீசரால் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதன் அழிவுச் சின்னங்களை இன்னமும் சில இடங்களில் காண முடிகிறது. நல்ல வீதிகள் கூட. ரோமானியர்கள் அந்தக் காலத்தில் நிறுவியது அப்படியே அழியாமல் இன்னமும் இருக்கின்றன.

கொலோனில் மிக முக்கியத் தெருவான 'கோசூ' தெரு ரோமானியர் காலத்தில் ஏற்பட்டது. இன்று இந்தத் தெருக்களில் தான் பெரு வணிகங்கள் நடைபெறுகின்றன. நகரம் பெருகப் பெருக இரண்டாவது நகரச் சுவரையும் தாண்டி நகரம் வளர்ந்து விட்டது.

கொலோன் கிறித்துவமேம்பாட்டோடு தொடர்பு கொண்டிருக்கிறது. மூன்று முக்கிய சர்ச்சுகள்; செயின்ட் செவேரியன், செயின்ட் செயின்ட் உஸ்லா கெரியன், ஆகியவை இங்குள்ளன. எல்லாமே அந்தக் காலத்தில் ஏற்பட்டவை தான். கி.பி. 1200ல் இரண்டாவது நகரச் சுவர் கட்டப்பட்டது. அந்நகருக்குள் கிட்டத்தட்ட 40 ஆயிரம் மக்கள் வசித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றோ, நகரம் மிகமிகப் பெரியதாகிக் கொண்டு வருகிறது.

இரண்டாவது உலகப் பெரும் போர் 1939ல் ஆரம்பமானது என்பது எல்லோரும் அறிந்ததே. ஆனால் கொலோன் நகரம் அதனால் உருத் தெரியாமல் அழிந்து போயிற்று என்பதை நம்மில் மிகச் சிலரே அறியும் வாய்ப்பு இருக்கிறது. 95 சதவீதம் கட்டடங்கள் அழிந்து போயின என்பதை அறிந்தால் போரின் கொடுமையை நாம் உணரலாம். கிட்டத்தட்ட 10 லட்ச மக்கள் தொகையைக் கொண்ட நகரம் 40 ஆயிரம் மக்களே வாழும் நகரமாக மாறியது இந்தப்போரினால். பொதுவாக அனைத்து வேலைகளும்ம பொருளாதாரம, கலாச்சாரம், வியாபாரம் என்று பல வகைகளில் ஸ்தம்பித்துப் போய், நகரமே சூன்யமாகி விட்டது. அப்படிப்பட்ட நகரமா இன்று பெரும் அழகோடு திகழ்கிறது என்பதை அறிந்தால் ஜெர்மானியர்கள் எவ்வளவு அரும்பாடுபட்டு மிகக் குறுகிய காலத்தில் மறு நிர்மாணம் செய்து இருக்கிறார்கள் என்கிற நேர்த்தியை அறியலாம். கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் இந்த மறு நிர்மாணப் பணியில் செலவாகியது என்று அறிந்தேன். உலகப் பெரும் போரின் போது நகரம் சீரழிந்து போனதால் மறு நிர்மாணம் செய்யும் போது பல நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறார்கள். பாதாள ரயில் பாதையும் இப்படி ஏற்பட்ட ஒன்றுதான். மாதா கோயில்களும் மற்ற முக்கியமான கட்டடங்களும் அழிவதற்கு முன்னால் எப்படி இருந்தனவோ அந்த அழகு கெடாமல் அப்படியே மறுபடியும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஐரோப்பாவில் இருக்கும் எல்லா நகரங்களிலுமே ஒரு தனிச்சிறப்பைக் கவனிக்கலாம். 'ஸிட்டி சென்டர்' அல்லது நகர மையம் என்று ஓர் இடம் இருக்கின்றது. அதிலிருந்து நகரத்தின் எந்தப் பகுதிக்கும் போகலாம். அது உண்மையாகவே நகரின் மையமாகவும் இருக்கும். அதைப் போலவே கொலோனில் 'ஸிட்டி சென்டர்' என்ற ஒரு இடம் உள்ளது. இதற்கு அருகிலேதான் ஜெர்மனியின் புகழ் வாய்ந்த கதீட்ரல் இருக்கின்றது. இந்த கதீட்ரல் 144 மீட்டர் நீளமும், 86 மீட்டர் அகலமும், 157 மீட்டர் உயரமும் கொண்டகோபுரத்தைக்கொண்ட உன்னதமான ஒன்றாகும்.

கிறித்துவ மதம் தோன்றிய காலத்திலிருந்தே இந்த இடம் தொழுகை இடமாக இருப்பதாகக் கூறப்பட்டது. இதே இடத்தில் ரோமானியர்கள் ஆண்டபோது பேகன் கோவில் இருந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன. இந்த கதீட்ரலுக்கு உள்ளேயே கத்தோலிக்க மதத்தின் அரும்பெரும் காட்சிப் பொருள்கள் நிறைய இருக்கின்றன. உலகத்திலேயே பெரிய கோவில்மணி இந்த கதீட்ரலில்தான் இருக்கிறது. அதைத்தவிர ஏராளமான சர்ச்சுகள் கொலோனில் உள்ளன.

கொலோனை ஐரோப்பாவின் அருங்காட்சியகம் என்று சொல்லிக் கொள்வதில் ஜெர்மானியர்கள் பெருமைப்படுகிறார்கள். ஆனால் அதைப் பிரஞ்சுக்காரர்கள் ஒப்புக் கொள்வதில்லை.



வார்த்தை அலங்காரம், சொற்சிலம்பம் இல்லை. எளிய வார்த்தைகள், தெளிவான நடை, தடுமாற்றம் இன்றிக் கதையைச் சொல்லிச் செல்லும் பாங்கு அற்புதம். ஒவ்வொரு கதையும் ஒரு படிப்பினையைக் கொண்டிருக்கிறது. அனைத்தும் தேவையானவை தான்.

இக்கதைகளில் வரும் லட்சுமி போன்ற (தாரமல்ல, தாய்) பாத்திரங்கள் நீண்ட நாட்கள் நினைவில் நிற்பவை.

— என். குமாரசாமி

## டால்ஸ்டாய் வாழ்க்கையும் உபதேசமும்

ஆசிரியர்: கு. ப. ராஜகோபாலன்

வெளியீடு: அல்லயன்ஸ் கம்பெனி
த.பெ.எண்: 617 மயிலாப்பூர்
சென்னை-600 004.

விலை: ரூ. 11 பக்கம்: 139

கதை, கட்டுரை, நாடகம், நவீனம், தத்துவ ஆராய்ச்சி என்று எழுபது ஆண்டுக் காலம் ரஷிய மொழியில் எழுதிக் குவித்தவர் அறிஞர் டால்ஸ்டாய். அவர் ஒரு சிறந்த இலக்கிய கர்த்தா; நூலாசிரியர்; காந்தியடிகளின் கொள்கைகளினால் ஈர்க்கப்பட்டவர்; அதனைத் தம் புத்தகங்களிலும் எழுதி வந்தவர். அன்னாரின் வாழ்க்கை வரலாற்றினை மிகச் சிறப்பாக வடித்துத் தந்துள்ளார் ஆசிரியர்.

நூலின் இறுதியில் டால்ஸ்டாய் எழுதிய நூல்களின் சுருக்கமும், அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகளும் (ஆண்டு வாரியாக) சேர்க்கப்பட்டிருப்பது வரவேற்தக்கது.

– பி. வி. கிரி

## கருணை மனு

ஆசிரியர்: எஸ். ரகுநாதன்.

வெளியீடு: சந்திரா பதிப்பகம்,
சி. 391, சந்திர
சேகரன் சாலை,
பெரியார் நகர்,
சென்னை-600082.

விலை: ரூ. 10 பக்கம்: 71.

பதினாறு புதுக்கவிதைகளைக் கொண்ட நூல் இது. இதில் ஒரு சில, நமது அன்றாட வாழ்க்கைக்குகந்த முறையில் அமைந்துள்ளன. உதாரணமாக 'எதுசுகமான வாழ்க்கை' எனும் கவிதையில், மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவும் எளிய முறைகளை ஆசிரியர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். 'வரதட்சணை நூல் அறுக்கப்படும்' என்னும் கவிதையில் மங்கை ஒருத்தி வடிக்கும் கண்ணீருக்குரிய காரணங்களை எடுத்துரைத்து—ஒருநாள் அதற்கு விடிவு ஏற்படும் என்று வலியுறுத்துகிறார்.

'நாங்கள் வித்தியாசமானவர்கள்'—ஒரு வித்தியாசமான கவிதை. அடுப்படி மட்டுமே கதி என்று நின்ற காலம் மலையேறி இன்று கோப்புகளைத் திருத்தும் அளவிற்கு உயர்ந்து நிற்கின்ற புதுமைப் பெண்களை, அன்றைய பெண்களிடமிருந்து வித்தியாசப்படுத்தும் அரிய படைப்பு.

— கு. மல்லிகா

## தமிழ் உணர்ச்சி தமிழ் வளர்ச்சி தமிழ் ஆட்சி

ஆசிரியர்: டாக்டர் பொற்கோ,

கிடைக்குமிடம்: பாரிநிலையம்,
59, பிராட்வே,
சென்னை-600001.

ஐந்திணை பதிப்பகம்,
282, பைகிராப்ட்ஸ் சாலை,
சென்னை-600 005

பக்கம் 200 விலை ரூ.15.00

கல்கி அறக்கட்டளைத் திட்டத்தின்கீழ் தான் நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளைத் தொகுத்து நூலாக்கியிருக்கிறார் பேராசிரியர் டாக்டர் பொற்கோ.

கால்டுவெல் காலத்தில்தான் தமிழ் என்பது ஒரு மொழி என்கிற மொழி உணர்ச்சி தோன்றுகிறது... தமிழ் உணர்ச்சி என்பது தோன்றி வளர்ந்த பிறகு, அதன் விளைவாகத்தான் பல்வேறு இயக்கங்கள் உருவாயின. தமிழில் கையெழுத்துப் போடவேண்டும் என அரசு ஆணை பிறப்பித்தது வரையில் இன்னும் பல்வேறு செய்திகளுக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஆணிவேரே மொழி உணர்ச்சிதான் என்று முதலாவதுஉரைத் தொகுப்பில் தெரிவிக்கப்படுகிறது.




வளர்ச்சி என்பது மாற்றம்; மாற்றம் இல்லாமல் வளர்ச்சி இல்லை. தமிழ் வளர்ச்சியைத் தனி மனிதர்கள் மட்டும் ஆக்கிவிடவில்லை; பலருக்கும் அதில் பங்குண்டு; தானாக எம்மொழியும் வளர்ந்ததில்லை. தமிழ் வளர கலைச் சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம் முதலான பணிகளில் நாம் மிகவும் கவனம் காட்டவேண்டும் என்கிறது இரண்டாவது உரைத் தொகுப்பு.

தமிழக அரசு பல நிறுவனங்களை அமைத்து தமிழ் வளர்ச்சிக்கு உதவிக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லி -இன்னும் எவ்வாறெல்லாம் நாம் மொழி உயரப் பாடுபடவேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறது மூன்றாவது கட்டுரை.

மொத்தத்தில் - தமிழறிந்தார் ஒவ்வொருவரும் படித்துப் பயன் பெற வேண்டிய நூல் இது.

—இல. இராசேந்திரன்

## எலக்ட்ரிக்கல் இன்ஜினியரிங்

ஆசிரியர்: பேராசிரியர்
ம. மரியலூயி

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098.

விலை ரூ. 15 பக்: 176

மின்சாரம் பற்றிய அத்தனை முறைகளையும் நிலைகளையும் அறிய உதவும் நூல் இது.

நேர் மின் இயக்கிகள், மோட்டார்கள், மாறி மின்மாற்றிகள் ஆகியவற்றின் செயல்முறை, செயல்படும் விதம், அவற்றின் பயன்கள் ஆகியவற்றை விளக்குகிறது இந்நூல்.

நாம் அன்றாடம் காணும், பயன்படுத்தும் மின் சாதனங்களைப் பற்றி மிக விளக்கமாக அறிந்து கொள்ள உதவும் நல்ல நூல் இது.

—அ. மருதவிநாயகம்







# வழிகாட்டும் வெளிநாடுகள்


திருமதி சுலோசனா சம்பத்
தலைவர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்.


இயற்கை வளம்மிகுந்த எழில் கொஞ்சும் இடங்களைச் சென்று கண்டு இதயம் குளிர்வது.......

உழைப்பினாலும் வளத்தினாலும் உலக அரங்கிலே உயர்ந்து விளங்கும் நாடுகளுக்குச் சென்று — அவர்கள் பெற்ற ஆக்கம் கண்டு அகம் பூரிப்பது........

ஏற்றுக்கொண்ட பொறுப்பை ஏற்றமுடையதாக்கி, அந்தப் பொறுப்புக்கு உட்பட்ட செயல்களில் செம்மை தேக்கிடவென்றே அவ்வத்துறைகளில் மேம்பட்டு விளங்கிடும் நாடுகளுக்கெல்லாம் சென்றுவருவது......

—சுற்றுலா இப்படிப் பல்வேறு வகைப்படும்.

அண்மையிலே மேற்கு ஜெர்மனி, டென்மார்க், நார்வே, சுவீடன், பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளுக்கெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் ஆசியோடு நான் சென்று திரும்பினேன். பயணத்தின் நோக்கம் — என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கப்பணிகளை ஊக்கமுடையதாக்குவது.

'மேன்மைத் தொழில்கள் வளருது தெற்கே' என்கிற மேலான நிலை மலர அந்த நாடுகளுக்கெல்லாம் கடமையுணர்வோடு சென்று தொழில் வளம் கண்டு வந்தேன் நான். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற வகையிலே அதன் விவரங்களை எடுத்துரைக்கிறேன்.

இந்தச் சுற்றுப்பயணத்தின் நோக்கங்கள் பல. தமிழகத் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் திட்டங்களில் ஒன்றான மரவள்ளிக்கிழங்கிலிருந்து 'ஃபிரக்டோஸ்' திரவம் தயாரிக்கும் விதத்திற்கான முன்னேற்றம் அறிந்துகொண்டு வருவதும் அவற்றில் ஒன்றாகும். இந்தத் திட்டம் மேற்கு ஜெர்மனியின் கம்பெனிகளில் ஒன்றான ஸ்டார்கோசா என்ற நிறுவனம் அளிக்கும் உதவியுடன் தமிழகத்தில் ஆரம்பிக்கப்படும். இதற்கான ஒப்பந்தத்தில் ஸ்டார்கோசா நிறுவனத்தில் நான் மகிழ்வோடு கையொப்பமிட்டேன்.

இதன் பிறகு நார்வே நாட்டுத் தொழில் வளர்ச்சி அதிகாரிகள், மற்றும் அரசு அலுவலர்கள், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மேம்பாட்டுக்கான புதிய திட்டங்கள் பற்றி ஆலோசனை நடத்தினோம். இதன் பிறகு, ஸ்வீடன் நாட்டு முன்னணி நிறுவன உயர் அதிகாரிகளுடன் தொழில் முன்னேற்றத்திற்கான பல புதிய திட்டங்கள் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தினேன்.

அதன் பிறகு அகில உலக நிறுவனமான பாஸ்டர் வீலரின் இத்தாலி நாட்டு மிலான் அலுவலகத்தில் அதன் உயர் அதிகாரிகளுடன நமது நாட்டிற்குத்தேவையான அத்தியாவசியம் நிறைந்த மருந்துகள் தயாரிக்கும் தொழில் நுட்ப உதவி பெறுவதற்காகத் தமிழகத்தில் மருந்துத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றிப் பேச்சு வார்த்தைகள் நடத்தினோம். இந்தப் புதிய திட்டத்திற்கு வேண்டிய சகல தொழில்நுட்ப உதவிகளையும் பாஸ்டர் வீலர் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திற்கு அளிப்பதற்கு முன் வந்துள்ளது. இவற்றிற்கானதுவக்கப் பணிகள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிநிறுவனத்தால் உடனடியாக மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இவை தவிர, வெடி மருந்து தயாரிக்கும் நிறுவனமான ஜோசப் மேய்ஸ்னர் என்ற நிறுவனத்தோடும் ஒரு ஒப்பந்தம் தமிழகத் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் செய்து கொண்டேன்.

இப்படிப் பல வேலைகளுக்கிடையே அந்த நாட்டின் கலை, கலாச்சாரம், தொழில் வளர்ச்சி மேம்பாடு, மக்களின் பண்பாடு என்ற பல நோக்கங்களிலும் என் நேரத்தைச் செலவிட்டேன். இந்தச் சுற்றுப் பயணத்தில் நான் நேரில் பார்த்ததும் கேட்டு அறிந்துகொண்டவைகளும் பல விஷயங்களாகும்.

என் பயணத்தின் முதற் கட்டமாக நான் சென்னையில் இருந்து இந்தியன் ஏர்லைன்ஸ் மூலமாக 4.4.1986 அன்று பம்பாய் சென்றடைந்தேன். பம்பாயிலிருந்து மறுநாளே மேற்கு ஜெர்மனியின் முக்கிய நகரமான ப்ராங்க்பர்ட் சென்று சேர்ந்தேன். அங்கிருந்து மேற்கு ஜெர்மனியின் இன்னொரு முக்கிய நகரமான கோலோன் சென்றேன்.

இங்கேதான் என்னுடைய முதல் கட்ட அலுவலக வேலை ஆரம்பமாயிற்று. 7.7.86 அன்று ஜோசப் மேய்ஸ்னரோடு வெடிமருந்துத் தொழில் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தினேன்.

### மேற்கு ஜெர்மனி

1945ஆம் ஆண்டில் ஜெர்மனி முறியடிக்கப்பட்ட பிறகு, சர்வாதி



ஏனென்றால் அவர்களுக்கு பாரிஸ் நகரமே அருங்காட்சியகமாகத் தோன்றுகிறது. இதை அவர்கள அடித்துச் சொல்வார்கள்.

ஆனால், கொலோனில் பல அருங்காட்சியகங்கள் அரசாங்கத்தால் கண்காணிக்கப்படுகின்றன: அருங்காட்சியகங்கள் பல, மாதா கோயில்களின் நேரிடைக் கண்காணிப்பில் இயங்கி வருகின்றன. சில அருங்காட்சியகங்கள் நகர சபையினரால் கண்காணிக்கப் படுகின்றன. இதையெல்லாம் பார்த்தால் நாம் ஜெர்மானியர்கள் சொல்வது சரியா, அல்லது பிரெஞ்சுக்காரர்கள் சொல்வது சரியா என்ற பெரிய சர்ச்சைக்கு முடிவு எடுக்க முடியாமல் திணற வேண்டியிருக்கும்.

உலகத்தில் பல பகுதிகளிலிருந்தும் ஆண்டுதோறும் ஏறக்குறைய 15 இலட்சம் மக்கள் இந்த அருங்காட்சியகங்களைப் பார்க்க வருகிறார்கள் என்பதை அறிந்தால், அதன் முக்கியத்துவம் புலப்படும். அதைப் போலவே கொலோன் நகரத்தில் பாடல் மண்டபங்கள் நிறைந்துள்ளன.

ஜெர்மனியிலுள்ள எல்லா நகரங்களையும் விட கொலோன் நகரத்தில்தான் பாடல் மண்டபங்கள் அதிகமாக இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள்.

கொலோன் நகரம் ஐரோப்பாவின் முக்கியக் கேந்திரமாக இருப்பதால் ஒரு நாளைக்கு ஆயிரம் புகை வண்டிகள், அந்த நகர் வழியாகச் செல்கின்றன என்று சொன்னால் அதன் முக்கியத்துவம் புலப்படும். கொலோன் நகரத்தின் அழகை ரைன் நதி பன்மடங்காக்குகிறது என்று சொன்னால் அது மிகையல்ல. ரைன் நதியில் அன்னம் மிதக்கும் அழகில் படகுகளும், நீராவிப் படகுகளும், மோட்டார்ப் படகுகளும் மிதந்து செல்கின்ற அழகைப் பார்த்தால் - அதுவும் குறிப்பாக இரவில் அதன் அழகே அலாதி தான்.

கொலோன் நகரம் வணிகத்திலும் சிறந்து விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு இங்கு 35 ஆயிரம் மிலியன் மார்க்ஸுக்கு வியாபாரம் நடக்கிறது என்பதிலிருந்தே அதன் வியாபாரத் தன்மையை அறியலாம். இத்தனைக்கும் கொலோன் நகரின் எல்லைக்குள் பெரிய தொழிலகம் எதுவும் இல்லை. எல்லாமே நகரத்தை விட்டு வெகு தொலைவில்தான் இருக்கின்றன.

கொலோன் நகரத்தில் நிரந்தரமான தொழில் கண்காட்சிக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

நகரின் மையத்தில் இருக்கிற கதீட்ரலைத் தவிர, மற்ற நகரக் கட்டடங்கள் கிட்டத்தட்ட ஐந்து ஆறு மாடிக் கட்டடங்களாகவே பல இருக்கின்றன. ஆனால் நகர விளிம்பில் 'ஸ்கைஸ்க்'-ரேப்பர்'கள் இருக்கின்றன. இதையே கொலோன் நகர மக்கள், கொலோன் நகரம் ''தங்கக் கிண்ணம்'' போல இருப்பதாகவும், அடுக்கு மாடிக் கட்டடங்கள் அந்தத் தங்கக் கிண்ணத்தின் விளிம்பு போல இருப்பதாகவும் வர்ணிக்கிறார்கள்.

ஐரோப்பாவில் அழகிய பூங்காக்கள் இல்லாத நகரமே இல்லை என்று சொல்லலாம். அதற்கு கொலோன் நகரமும் விதிவிலக்கல்ல. ரைன் நதி ஓரமாக இருக்கும் பூங்காக்களைப் பார்த்தால் நேரம் போவதே தெரிவதில்லை. ரைன் நதியின் ஓரமாகத்தான் இயற்கையான சூழ்நிலையில் மிருகக் காட்சிசாலை இருக்கிறது. அங்கு மிருகங்களை இயற்கையான சூழ்நிலையில் உலவவிட்டு இருக்கிறார்கள்.

இன்னொரு முக்கியமான விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். ஐரோப்பாவின் முக்கிய நகரங்கள் அனைத்திலும் எந்த வாகனங்களும் போகாத வகையில் சிட்டி ப்ளாசாக்கள் அமைக்கப் பட்டுள்ளன. ஆகவே, கால்நடையாகவே ஏராளமான கடைகளை எந்தவித இடையூறுமின்றி மக்கள் போய்ப் பார்க்கவும் தங்களுக்கு வேண்டிய பொருட்களை வாங்கவும் வசதியாகச் செய்து வைத்திருக்கிறார்கள்.

பம்பாயில் (Fort Area) கோட்டைப் பகுதியை இப்படி கால் நடையாக நடந்து போகக்கூடிய முறையில் - எத்தகைய வாகனங்களும் இடையூறாக இல்லாத வகையில் மாற்றப் போவதாக ஓர் ஏற்பாடு இருந்ததாகச் சில நாட்களுக்கு முன்பு படித்த நினைவு எனக்கு. ஆனால் ஏனோ அதற்கு இன்று வரை செயல் வடிவம் தரப்படவில்லை.

இப்படி ஒரு இடம் சென்னையில் இருந்தால் எவ்வாறு இருக்கும்? கற்பனையே அற்புதமாக இருக்கிறது!

கொலோன் நகரத்துக் கடைக்குப் போனால் உலகத்தில் கிடைக்காத பொருள்களேயில்லை என்று அறியலாம். இன்னொரு விஷயத்தையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அங்குள்ள அதிகாரிகள் அந்த நகரைப் பார்க்க வருபவர்களுக்காக ஏற்ற பல ஏற்பாடுகளை இன்முகத்தோடு செய்து தருகிறார்கள். நாமும் அப்படிச் செய்யலாம்.

கொலோனிலிருந்து காரில் ஒரு மணி நேரப் பிரயாணமாக கீளின் நகரைப் போய் அடைந்தேன். அங்கும் எனக்கு அலுவலகப் பணிகள் காத்திருந்தன. தமிழ்நாடு ஸ்டீல்ஸ் நிறுவனத்திற்காகச் சில முக்கியமான உபகரணங்கள் இங்கு தருவிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது.

கீளீவ்பிகம்சுக்குச் சென்றேன். அகில உலக எஞ்சினீயரிங் பொருட்காட்சி நடக்கிற ஹனோவர் நகரைச் சென்றடைந்தேன். பொறியியல் கண்காட்சி நடந்தது அங்கே. ஹனோவர் நகரத்திற்குப் பக்கத்தில்தான் ப்ரான்ஸ்விக் நகரம் இருக்கிறது. இங்கேயும் எனக்கு மிக முக்கியமான வேலை இருந்தது. ப்ரான்ஸ்விகில் இருக்கிற ஸ்டோர்கோசா என்கிற தொழிலகத்துடன் மரவள்ளிக் கிழங்கிலிருந்து ஃப்ரக்டோஸ் திரவம் தயாரிக்கிற தொழிற்சாலைக்கான ஒப்பந்தம் இங்குதான் என்னால் கையெழுத்திடப்பட்டது.

(தொடரும்)



# மக்கள் பணியில் மகளிர் தொண்டு



அதோ அந்த இளைஞரை உற்றுப் பார்க்கிறோம்.

வலது முழங்காலுக்குக் கீழே கால் இல்லை, என்றாலும் அவர் முகத்திலே உற்சாகம்! வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பு!

அன்று நடந்த எளிமையான ஒரு விழாவில், அந்த ஊனமுற்ற இளைஞருக்குச் செயற்கைக் கால் தரப்படுகிறது.

தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனம் இவ்வாறு ஊனமுற்றவர்களுக்கு — வாழ்க்கையில் நலிந்தவர்களுக்கு — வளரும் குழந்தைகளுக்கு, அருந்தொண்டாற்றி வருகின்றது.

1972ஆம் ஆண்டில் தமிழ்நாடு கிளையாக, மகளிர் தொண்டு நிறுவனம் தொடங்கப்பட்டது. இதன் அகில இந்திய அளவில் டைரக்டர் ஜெனரலாக மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் இருந்து வந்தார். பல மாநிலங்களில் இந், நிறுவனம் செயல்பட்டாலும், சிறப்பாக இயங்குவது தமிழ்நாட்டில்தான். இதன் தொடக்க காலத்தில் தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி மதுபென்ஷா அவர்களின் ஊக்கத்தாலும் முயற்சியாலும் உத்வேகம் பெற்றது.

மகளிர் தொண்டு நிறுவனம் (Women's Voluntary Service of Tamil Nadu) சென்னை சேத்துப்பட்டிலுள்ள அலுவலகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இதன் தற்போதைய இயக்குநர் மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி இந்திரா குரானா அவர்கள். காப்பாளராக மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்களும், உதவி இயக்குநராக திருமதி சரோஜினி வரதப்பன் அவர்களும் இருந்து பணியாற்றி வருகிறார்கள்.



இந்நிறுவனத்தின் கிளைகள் மதுரை, கோவை, சேலம், நெல்லை, காமராஜர், கன்னியாகுமரி ஆகிய மாவட்ட ஊர்களில் செயல்பட்டு வருகின்றன.

பெண்கள், குழந்தைகள் நலம் பேணல் - விதவைகளுக்கு உதவி செய்தல் - கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு உதவுதல்- ஊனமுற்றவர்களுக்கு உதவுதல்- வாழ்க்கையில் நலிவுற்ற பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் - வரதட்சணைக் கொடுமைகள் ஒழிக்கப்பாடுபடுதல் - குடியினால் வரும் கேட்டினை எடுத்துரைத்தல் - குடும்ப நலம் பற்றி கூறுதல் போன்ற சமுதாய நலப் பணிகளில் தன்னை இந் நிறுவனம் ஈடுபடுத்திக் கொண்டு தளராமல் தொண்டாற்றி வருகின்றது. முக்கியமாக வேலைகளைப் பல குழுக்களாகப் பிரித்துக் கொண்டு, அந்தக் குழுக்கள் அந்தந்தத் தொண்டில் ஈடுபடுமாறு செய்யப் படுகின்றது.

கிராமங்களைத் தத்து எடுத்து மாதர் சங்கம் அமைத்து அங்குள்ள ஏழை எளிய மக்கள் எழுத்தறிவு பெறவும், குடும்ப நலம், குழந்தை நலம், சத்துணவு, சுகாதாரம், குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல், போலியோ சொட்டு மருந்து தருதல் முதலானவற்றில் கவனம் செலுத்தவும் இந்தக் குழு செயல் புரிகிறது. அத்துடன் வங்கி மூலம் கடனுதவி பெறவும், அனாதைக் குழந்தைகள், பெண்கள் ஆகியோருக்குப் புகலிடம் தரவும், முதியோருக்கு நல்வழி காட்டவும் இந்தத் தொண்டு நிறுவனம் தாயன் போடு உதவுகிறது.

அது மட்டுமல்ல, இயற்கையின் சீற்றத்தினால் விளையும் வெள்ளம், தீ விபத்து போன்ற சூழ்நிலைகளில் இந்நிறுவனம் தக்க நிவாரணப் பணிகளை மேற்கொண்டு, அம்மக்களுக்கு ஆறுதல்கள் கூறி ஆவன செய்து வருகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணிகள், பாத்திரங்கள், பாய், போர்வைகள் முதலானவை தரப்படுகின்றன.

ஆம்புலன்ஸ் வைத்துள்ள ஒரே தொண்டு நிறுவனம் இதுதான். அவசர அழைப்புகள் வந்தால், இந்த ஆம்புலன்ஸ் மூலம் உதவி செய்யப்படுகிறது. இலவச மருத்



மேதகு தமிழக ஆளுநர் அவர்களின் துணைவியார் திருமதி இந்திரா குரானா அவர்கள் ஒரு மாணவிக்குப் படிப்புதவித் தொகை வழங்குகிறார்.

துவ முகாம்களும் அவ்வப்போது நடத்தப்படுகின்றன.

பெண் கல்விக்காக இந்நிறுவனம் பெரும்பாடுபட்டு வருகிறது. 1979-லிருந்து 1986 வரை 26,000 பெண்கள் எழுத்தறிவு பெற்றுள்ளனர்.

கையெழுத்துக் கூடப் போடத் தெரியாத நிலையில் உள்ள நிலையை மாற்றி அமைத்திட முதியோர் கல்விக்கு முனைப்புடன் செயலாற்றி வருகின்றது.

20 அம்சத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சமாக கிராமங்களில் உள்ள 15 வயது முதல் 35 வயது வரை உள்ள எழுத்தறிவில்லா மக்களுக்கு எழுத்தறிவு ஊட்ட மத்திய அரசு மூலம் 20 மையங்கள் தொடங்கப்பட்டன. அவை ஆல் போல் வளர்ந்து இன்று 300 மையங்களாக விரிவடைந்திருக்கின்றன. இதன் மூலம் 300 பெண்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு மாதம் ரூ. 125 முதல் ரூ. 750 வரை ஊதியம் வழங்கப்படுகிறது.

கிராம மக்கள் சுயவேலை வாய்ப்பில் ஈடுபடவும் இந்நிறுவனப் பெண்மணிகள் தக்க உதவிகளைச் செய்து வருகின்றனர். ஊதுவத்தி, சோப்பு, பிஸ்கெட், பினாயில் முதலான பொருள்கள் செய்யக் கற்றுத் தரப்படுகிறது. வருங்காலத்தில் காதிகிராப்ட்டோடு இணைந்து தொழில் மையம் தொடங்கவும் இந்நிறுவனத்தில் திட்டம் உள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளாக ஊனமுற்ற பலருக்கு - சிறுவர் முதல் பெரியவர் வரை 874பேர்களுக்குக் காதுகேட்கும் கருவிகள்,



மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் நினைவாக, ஏழைக் குழந்தைகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்குகிறார் திருமதி சரோஜினி வரதப்பன்.





செயற்கைக் கை, கால் உறுப்புகள், மூன்று சக்கரச் சைக்கிள்கள், ஊன்று கோல்கள் முதலியன ரூ. 4 லட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

மாணவமணிகள் வருங்காலத்தில் சிறந்தவர்களாக விளங்கவும் அவர்களுக்கு ஊக்கமும் ஆக்கமும் தரப்பட்டு வருகிறது. வங்கியில் செலுத்திய வைப்புத்தொகை 80,000 ரூபாயிலிருந்து வரும் வட்டியைக்கொண்டு,கல்லூரி மாணவ மாணவியருக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதனால் ஏழை எளிய நடுத்தர மாணவர்கள் பயன் பெறுகிறார்கள்.

1972லிருந்து இதுவரை 357 மாணவர்களுக்கு, ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரம் செலவில் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. ஆண்டுதோறும், 30-40 மாணவர்கள் இதனால் பயன் பெறுகின்றனர். தனியார் ஒருவரும் இத்திட்டத்திற்காக ரூ. 6,000 வங்கியில் டெபாசிட் செய்துள்ளார்.

இதேபோல, தட்டெழுத்துப் பயிற்சிக்கு மத்திய சமூக நல வாரியமும், சுருக்கெழுத்துப் பயிற்சிக்குத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமும் மானியங்கள் வழங்குகின்றன. இத்திட்டத்தின் மூலம் ஏராளமான பெண்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவையன்றி, தையல் பயிற்சியும், பாட்டு வகுப்பும் நடக்கின்றன.

பணிபுரியும் பெண்களுக்கான மகளிர் விடுதி ஒன்றும் சேத்துப்பட்டிலுள்ள தலைமையகத்தில் உள்ளது. குறைந்த வருமானமுள்ள பெண்கள் 37 பேர் இவ்விடுதியில் உள்ளனர். நல்ல வசதிகள் உள்ள இவ்விடுதியில் சேருபவர்களுக்கு நியாயமான கட்டணமே வசூலிக்கப்படுகிறது. இங்கே சிற்றுண்டிச் சாலையும் உள்ளது. நல்ல தரமான சிற்றுண்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

மதுவினால் வரும் கேட்டினைக் கிராமமக்களிடையே உணர்த்தவும், குடிசைப்பகுதிகளில் வாழும் ஏழை எளியோரிடையே எடுத்துக் கூறவும் மகளிர் தொண்டு நிறுவனப் பெண்மணிகள் நல்ல பணிகளைச் செய்து வருகிறார்கள். சர்வோதய சங்கத்தின் மூலம் பாத யாத்திரை செய்தும், கருத்தரங்குகள் நடத்தியும் மது விலக்கைப் பற்றி உணர்த்தப் பட்டு வருகின்றது.

அத்துடன் தொழுநோய் பற்றிய பட்டறையும் நடத்தி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தியும், காசநோய் பற்றி பொம்மலாட்டம், படக்காட்சி மூலம் கருத்துக்கள் பரப்பியும் இந்நிறுவனம் அருந் தொண்டாற்றி வருகின்றது.

மற்றவர்கள் மெச்ச வேண்டும் என்பதற்காக வீண் ஆடம்பரத்துடன் நடத்தப்படும் திருமணங்களைப் பார்க்கிறோம். எவ்வளவு உணவுப் பொருள்கள் அங்கே வீணாகின்றன! அப்படி மீதியாகும் உணவுப் பண்டங்களை இந்நிறுவனம் பெற்று, அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கி மகிழ்கின்றது. இதே போல தீபாவளி முதலான பண்டிகைக் காலங்களில் மீதமாகும் உணவுகளை இவ்வாறு இது வழங்குகிறது.

இவ்வாறு பல்வேறு சமுதாயப் பணிகளைச் செவ்வனே ஆற்றி வரும் தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறுவனத்துக்கு மத்திய — மாநில அரசுகள் தக்க உதவிகளை வழங்கி வருகின்றன.

எல்லாவற்றையுமே அரசே செய்ய வேண்டும் என்பதில்லை. தொண்டுள்ளம் படைத்தவர்கள்-பொதுத் தொண்டில் ஆர்வம் உள்ளவர்கள் உழைக்க முன் வந்தால் அரசு தாராளமாக உதவும் என்பதற்கு இந்நிறுவனம் ஓர் எடுத்துக்காட்டு.

சிறப்புச் செயலர் திருமதி மனோ பக்தவத்சலம், சிறப்புப் பொருளாளர் திருமதி நிர்மலா கோக்கர்ன், நிர்வாகச் செயலர் திரு எம்.எஸ். சீனிவாசன், சமூக நலக்குழு-வயது வந்தோர் கல்வி மற்றும்மருத்துவக் குழுத் தலைவி திருமதி பத்மினி சிவசுப்பிரமணியம் ஆகியோர் பெருமைப் பினாலும், உற்சாகத்தினாலும் இந்நிறுவனம் வீறுநடை போட்டு வளர்ந்து வருகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட வேண்டும்.

முழுக்க முழுக்க மகளிரால் நடத்தப்படும் இந்நிறுவனம், ஆற்றி வருகின்ற பெருந் தொண்டினை எவ்வளவு பாராட்டினாலும் தகும். !

—பி. வி. கிரி

சுற்றுப்புறத் தூய்மைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ், துப்புரவுப் பணியில் ஈடுபட்டுள்ள பெண்மணிகள்



# வளமான வாழ்வுக்கு மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்

உங்கள் நிலத்தில் அமோக விளைச்சலைப்பெற தழை-மணி-சாம்பல் மூன்று சத்துக்களும் தேவை. மண் பரிசோதனை செய்து, அதன் சிபாரிசுப்படி விஜய் உரமிட்டு விளைச்சலைப் பெருக்குங்கள். மதராஸ் பெர்ட்டிலைசர்ஸில் உள்ள நவீன மண் பரிசோதனை நிலையம் இலவசமாக அளிக்கும் 'துரித மண் பரிசோதனை' சேவையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். மண் பரிசோதனை செய்ய இயலாவிடில் பொது சிபாரிசுப்படி உரமிடுங்கள்.




17-17-17

14-28-14

டி.ஏ.பி

யூரியா




ஏக்கருக்கு கிலோ

| நெல் உயர் விளைச்சல் ரகங்கள் | அடியுரம் | | | மேலுரம் |
|---|---|---|---|---|
| | விஜய 17-17-17 | விஜய யூரியா | பொட்டாஷ் | விஜய யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 90 | — | — | 35 |
| நடுத்தர, நீண்ட கால ரகங்கள் | 120 | — | — | 45 |
| அல்லது | | | | |
| | விஜய 14-28-14 | விஜய யூரியா | பொட்டாஷ் | விஜய யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 55 | 15 | 10 | 35 |
| நடுத்தர, நீண்ட கால ரகங்கள் | 70 | 20 | 15 | 45 |
| அல்லது | | | | |
| | விஜய டி.ஏ.பி. | விஜய யூரியா | பொட்டாஷ் | விஜய யூரியா |
| குறுகிய கால ரகங்கள் | 35 | 20 | 25 | 35 |
| நடுத்தர, நீண்ட கால ரகங்கள் | 45 | 25 | 35 | 45 |

மேலும் விவரங்களுக்கு :
வட்டார அலுவலகம்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
10 வில்லியம்ஸ் ரோடு, திருச்சி 620 001



MFL-1980

சமச்சீர் உரமிட விஜய்

மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் VIJAY MADRAS FERTILIZERS
மணலி, சென்னை 600 068


**மாணவர் பக்கம்**



## விந்தை மீன்

அண்மையில் அதிசய கடற் குதிரை ஒன்று பிடிக்கப்பட்டு, மீன் காட்சியகத்தில் வைக்கப் பட்டுச் சில நாட்கள் கழித்து அது இறந்து போனது தெரிந்ததே.

இப்போது 'கடல் தாமரை' என்னும் மீனினம் சென்னை மீன்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இது பார்ப்பதற்குத் தாமரைபோல் உள்ளதால் இதற்கு இப்பெயர் வந்தது. இது அசையாமல் ஒரே இடத்தில் உட்கார்ந்திருக்கும். இதன் மேற்புறம் குடை போன்றிருக்கும். உடலின் மேற்புறத்தில் நூற்றுக்கணக்கான முடிச்சுகள் போன்ற அமைப்பு இருக்கும். இது தொட்டாற் சுருங்கி அல்ல, தொட்டால் போதும், தரையில் விழுந்து தரையோடு தரையாகிவிடும்!

மிகப் பெரிய கடல் தாமரை அமெரிக்காவில் உள்ள ஃபுளோரிடாவில் உள்ளது. அது 18 அங்குலம் அகலமும், 12 அங்குலம் உயரமும் உள்ளது.

கடல் தாமரையின் உணவு? சிறிய பூச்சிகள், நண்டுகள், நந்தைகள், சிறுமீன்கள்!

## நாட்டைக் காக்க முனைவாய்






—சுருளி சுப்பு


தாயும் தமிழும் ஒன்றெனவே
தம்பி நீதான் கொள்வாயே!
தேயும் நிலவு போலின்றி
தேடிடு வாழ்வில் புகழ்ஜோதி
பாயும் வெள்ளம் கண்டேதான்
பயில்வாய் புதுமை உணர்வுகளே!
காயும் வெயிலின் நிகராக
கருதும் பணியை முடிப்பாயே!

வறியவர் உறவைத் தள்ளாதே
வஞ்சம் மனத்தில் கொள்ளாதே
அறிந்தும் தவறு செய்யாதே
அகந்தை கொண்டு பேசாதே
சிறிய வயது முதற்கொண்டே
சிந்தை மகிழ வாழ்ந்திடுவாய்
அறிவை நாளும் வளர்த்திடுவாய்
அரிய நூல்கள் படித்திடுவாய்!

ஏழை என்றே எண்ணாதே
ஏற்றம் பெற்றே நிற்பாயே
கோழை நெஞ்சம் கொள்ளாதே
கோணல் வழியில் செல்லாதே
கூழை உண்ண நேர்ந்தாலும்
குன்றம் போன்றே நிலைப்பாயே!
நாளை வீணாய்ப் போக்காதே!
நாட்டைக் காக்க முனைவாயே!







## அறிவியல் சாரம்:

### வழுக்கைத் தலையர்களே கவலை வேண்டாம்!

முடி வளர்ச்சிக்குப் புதிய தைலம் ஒன்று சோவியத் நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஷாம்புவில் இந்த தைலத்தின் ஓரிரு சொட்டுக்களைக் கலந்து, தலையில் தேய்த்துக் குளிக்க வேண்டும்.

இதனைப் பயன்படுத்தியவர்களுக்குத் தலைமுடி அடர்த்தியாகவும், பளபளப்பாகவும், தலை



வாருவதற்கு ஏற்றதாகவும வளர்ந்தது. முடியின் நிறம் மிகுந்த இயற்கைத் தன்மை பெற்றது. வழுக்கைத் தலையுள்ளவர்களுக்கு, வழுக்கை மறைந்து முடி வளர ஆரம்பித்தது!

இந்தத்தைலத்தை உபயோகிப்பதால் எந்தவிதத் தீயவிளைவுகளும் ஏற்படுவதில்லை. இதனை ஊசியிலை மரத்திலிருந்து தயாரிக்கிறார்கள்.

''தலை முடியின் வேர்கள் செத்துப் போயிருந்தால், இந்த மருந்து பலன் தராது; அவை 'உயிரோடிருந்தால்' மட்டுமே இதனைக் கொண்டு மீண்டும் முடி வளரச் செய்ய இயலும்'' என்று அந்தத் தைலத்தின் கண்டுபிடிப்பாளர்களில் ஒருவரான டாக்டர் விதாலி தாலபின் கூறினார்.

### 12 கி.மீ. ஆழமுள்ள பாதாளக் கிணறுகள்

எண்ணெய், எரிவாயு மற்றும் கனி வளங்களைக் கண்டறிவதற்காக ஆழ்கிணறுகளை, அதிஆழக் கிணறுகளைத் தோண்டும் தேசியத் திட்டம் ஒன்று சோவியத் நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

அதற்காக, சோவியத் நாட்டின் வடக்கு ஐரோப்பியப் பகுதியில் உள்ள, 12 கிலோ மீட்டர் ஆழம் கொண்ட கோலோ அதிஆழக் கிணறு போல, அஜர்பைஜானில் உள்ள 9 கிலோ மீட்டர் ஆழமுடைய சாட்லின்ஸ்கயா கிணற்றைப் போல பல கிணறுகளைத் தோண்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதிஆழக் கிணறுகளைத் தோண்டுவதால் என்ன பயன்?


அவை பூமியின் அதிஆழப் பிரதேசங்களில் எண்ணெய், எரிவாயு, கனிப் படிவங்கள் இருக்கிறதா என்பதை ஆராய்வதற்கு உதவுகின்றன.

### எடையற்ற தன்மையின் விளைவு

எடையற்ற தன்மையானது 'மைடோசிஸ்' எனப்படும் உயிரணுக்கள் பிளவுபடும், அடிப்படை உயிரியல் நிகழ்ச்சிப் போக்கைப் பாதிக்கிறது என சோவியத் உயிரியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். அதிலும் குறிப்பாக, உயிரணுக்களின் புனரமைப்புக்கு இது காரணமாகிறது. விண்வெளியில், 'ஸ்பைடர்வொர்ட்' தாவரங்களைப் பரிசோதனை செய்தபோது இந்த மாற்றங்கள் தெரிய வந்தன.

ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட உயிரணுக்களில், 3 சதவீத உயிர் அணுக்கள் கட்டமைப்பு மாற்றம் அடைந்தன. ஆனால் பூமியில் கதிரியக்கம், அதிர்வுகள், வெப்ப நிலை இடைவெளிகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும் கூட அத்தகைய மாற்றங்கள் நிகழவில்லை. இதர சில உயிரினங்களில் நடத்தப்பட்ட சோதனைகளும் இதையே நிரூபித்தன.

எடையற்ற தன்மையான 'மைடோசிஸ்' நிகழ்ச்சிப் போக்கை பாதிப்பதோடு மட்டும் நிற்கவில்லை. நெடு நாட்கள்



விண்வெளியில் இருக்கும்போது, தலைக்கு இரத்தம் அதிகமாகப் பாய்தல், இருதய இரத்த ஓட்ட மண்டலத்திலும், வளர்சிதை மாற்றப்போக்கிலும் மாற்றங்கள் ஆகிய அனுபவம் விண்வெளி வீரர்களுக்கு ஏற்பட்டது.

எடையற்ற தன்மையான, உயிரினங்கள்மீது ஏற்படுத்தும் பாதிப்பைத் தடுப்பதற்கு, சோவியத் விஞ்ஞானிகள் பல வழிகளைத் கண்டறிந்துள்ளனர். இதனால், மனிதன் விண்வெளியில் அதிக நாள் தங்குவதற்கு வாய்ப்பு உருவாகியுள்ளது.

—சோவியத் சிறப்புக் கட்டுரைகள்



### மரபியல் மருந்து

உயிரியல் தொழில்நுட்பமுறையில் உருவாக்கப்பட்ட ''தடுப்பு மருந்து'' ஒன்றைப் பொதுமக்களின் உபயோகத்திற்கென வர்த்தக ரீதியில் தயாரிப்பதற்கு அமெரிக்க அரசு முதன் முறையாக அனுமதி அளித்துள்ளது.

கல்லீரலைப் பாதிக்கக்கூடிய ''ஹெபடைடிஸ்-பி'' என்னும் நோய் வராமல் தடுப்பதற்கு ''ரிகாம்பி-பி.எச்.'' என்னும் புதிய மருந்து மரபியல் தொழில் நுட்ப முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்தைப் பரிசோதனை செய்து பார்த்ததில், இது மிகவும் திறனுள்ளதாகத் தெரியவந்தது என்றும், குழந்தைகள் இருவருக்குக்கூட இந்த மருந்து தரப்பட்டு குணப்படுத்தப்பட்டதாகவும் ''அமெரிக்க உணவு மற்றும் மருத்துவ நிர்வாகத்'' துறை ஆணையாளர் பிராங்க்யங் கூறினார்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்



கவிஞர் வே. கபிலன் அவர்களின் 35 ஆண்டுக்கால இலக்கியப் பணிக்காக 20.7.86 அன்று நடைபெற்ற பாராட்டு விழாவில்-அன்னாருக்குப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார் மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா காளிமுத்து அவர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

சென்னை பெரியார் அறிவியல், தொழில் நுட்ப மையத் திற்கு. மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் அளித்துள்ள ஹெலிகாப்டர் மாதிரிகளை மாண்புமிகு தொழில்துறை அமைச்சரும், தமிழ்நாடு அறிவியல், தொழில்நுட்ப மையத் தலைவரு மான திரு க. இராசாராம் பார்வையிட்டார்.







வட ஆர்க்காடு மாவட்டம், கீழ்செவலாம்பாடி கிராமத்தில் மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. உ. சண்முகம் அவர்கள் 14.6.86 அன்று திறந்து வைத்தார்.

## படமும் செய்தியும்

புதுடெல்லியில் உள்ள பிரிட்டிஷ் தூதர் திரு ஜே.டி.போர்பனேச்யூ, தமிழ்நாடு அரசு தலைமைச் செயலர் திரு ஏ. பத்மநாபன் இ.ஆ.ப. அவர்களை 1.8.86 அன்று சந்தித்தார்.



# அதே அளவு உரங்களைப் பயன்படுத்தி, பயிர்கள் பெரிய வேர்களைப் பெற்று, அதிக சாகுபடியைத் தரும் வழி இதோ!




## பாரஸ் ஃபோட்டோஸின்த்

சூரிய ஒளி, தண்ணீர், எரு இவைகளைச் சிறப்பாக உபயோகித்துப் பயிர்களுக்கு உதவி, சாகுபடியைப் பெருக்குகிறது.

HLL-2588

பாரஸ் ஃபோட்டோஸின்த் உண்மையிலேயே அதிசயமானது. பயிர்கள் உரங்களை நல்ல முறையில் பயன்படுத்த உதவுகிறது. இதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கிறது.

### ஆனால் பாரஸ் ஃபோட்டோஸின்த் எப்படி செயல்படுகிறது.




பாரஸ் ஃபோட்டோஸின்த்திலுள்ள மிக்ஸ்டாலோல் எனும் பொருள் நேரடியாக ஃபோட்டோஸின்த்தெஸில் செயலை துரிதப்படுத்து கிறது.

80 % முதல் 90 % பயிர் வளர்ச்சிக்கு இதுவே காரணம். பாரஸ் ஃபோட்டோஸின்த் காரணமாக பயிர்கள் நிலத்திலிருந்து அதிக நீரையும் மண்ணிலுள்ள போஷாக்கையும் உறிஞ்சிக் கொள்வதுடன் காற்றிலிருந்து கரியமில வாயுவையும் எடுத்துக் கொண்டு வேகமாக வளர்கின்றன.

### பாரஸ் ஃபோட்டோஸின்த் பயன் தரும் என்று நான் எப்படி நம்புவது?

உங்கள் வயலை இரு பாகங்களாகப் பிரியுங்கள். இரு பாகங்களிலும் சம அளவு நீர், எரு இவைகளை இடவும். ஆனால் ஒரு பாகத்தில் மட்டும் பாரஸ் ஃபோட்டோஸின்த் தெளியுங்கள்.




15 தினங்களுக்கு பிறகு, நீங்களே காண்பீர்கள் பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகித்த பகுதியிலே பயிர்கள் உயரமாகவும் பெரிதாகவும் வளர்ந்திருக்கும். மேலும் இவற்றின் வேர்கள் நீண்டும் உறுதியாகவும் இருப்பதையும் காணலாம். இதன் பயனாக இப்பயிர்கள் அதிக சக்தியுடன் நீரையும் சத்துக்களையும் உறிஞ்சிக் கொள்ள முடியும்.

எந்தப் பயிர்களில் பாரஸ் ஃபோட்டோஸின்த் தெளிக்கப்பட்டுள்ளதோ, அப்பயிர்களில் பூக்கள் வாடி விழுவதில்லை. எனவே பழங்கள்/காய்கறிகள் இவற்றில் உங்களுக்கு அதிக விளைச்சல் கிடைக்கிறது. தானியங்களும் எண்ணிக்கையிலும் அளவிலும் பெருகி வளரும்.

### எருவுக்குப் பதிலாக பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகிக்கலாமா என்ன?

கூடாது. பாரஸ் ஃபோட்டோஸின்த் எருவுமல்ல, மைக்ரோ நியூட்ரியென்ட்டும் அல்ல எனவே வழக்கமான எல்லா எருவையும் நீங்கள் பயன்படுத்தும் போது, கூடவே பாரஸ் ஃபோட்டோஸின்த்தையும் பயன்படுத்துங்கள். அதிக சாகுபடி, உங்களுக்குக் கிடைக்கும்.

### பாரஸ் ஃபோட்டோஸின்த், அரசுத்துறை விஞ்ஞான அமைப்புகள் மூலம் சோதிக்கப் பட்டுள்ளதா?



ஆம். இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் மற்றும் விவசாய பல்கலைக்கழகங்கள் பாரஸ் ஃபோட்டோஸின்த்தைப் பற்றிய பரிசோதனை செய்து நெல், கோதுமை, சோளம் மற்றும் பற்பல பயிர்களுக்கும் பாரஸ் ஃபோட்டோஸின்தை உபயோகித்துப் பயன்பெறலாம் என நிருபித்துள்ளன.

### எந்த பயிருக்கும் பாரஸ் போட்டோஸின்த் பயன் படுத்தலாமா?




ஆம். கோதுமை, நெல், கம்பு, பருத்தி, நிலக்கடலை, பஜ்ரா, காய்கறி, பழம், தேயிலை எதற்கும் பாரஸ் ஃபோட்டோஸின்த் பயன் மிக்கது.

| பயிர்கள் | சாகுபடி பெருக்கம்* |
|---|---|
| கோதுமை | ஏக்கருக்கு 300 கிலோ |
| நெல் | ஏக்கருக்கு 400 கிலோ |
| தக்காளி | ஏக்கருக்கு 2000 கிலோ |
| பருத்தி | ஏக்கருக்கு 200 கிலோ |

* அரசுத்துறை அமைப்புகள் நடத்திய பரிசோதனை மூலம் கிடைத்த அளவுகள்.

### பாரஸ் ஃபோட்டோஸின்த் மூலம் எனக்கு வருமானம் எவ்வளவு பெருகும்?



பாரஸ் ஃபோட்டோஸின்த் மிக சிக்கனமானது. 50 ரூபாய் மதிப்புள்ள பாரஸ் ஃபோட்டோஸின்த் உபயோகிப்பதன் மூலம் சுமார் 500 ரூபாய்க்கும் அதிகம் ஆதாயம் கிடைக்கிறது. மேலும் இது ஏறக்குறைய எல்லா பயிர்களுக்கும் பொருந்தும்.

### பாரஸ் பயன்படுத்துவது எப்படி?

250 மி.லி பாரஸ் ஃபோட்டோஸின்த் ஸ்ப்ரே, 200 லிட்டர் நீரில் கலந்து, விதைத்து/நாற்று நட்டு 15 நாட்களுக்குப்பின் ஏக்கர் ஒன்றுக்கு என்ற கணக்கில் தெளிக்கவும். பூவிடத் தொடங்கும் முன், ஒரு முறை தெளிக்கவும், பயிர்களில் இலைகள் நன்கு நனையும்படி

பாரஸ் ஃபோட்டோஸின்த் கிரான்யூல், ஏக்கருக்கு 10 கிலோ என்ற அளவில், விதைத்து/ நாற்று நட்டு 15 நாட்களுக்குப்பின் வயலில் உரங்களைத் தூவுவது போல், தூவவும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உடன், வழக்கமான உரங்களையும் எருக்களையும் பயன்படுத்தவும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் உங்கள் அருகாமையிலுள்ள விவசாய வியாபாரியிடம் கிடைக்கும்.

பாரஸ் ஃபோட்டோஸின்த் பற்றிய மேல் விபரங்களுக்குக் கீழ்க் கண்ட முகவரிக்கு எழுதவும்:

அக்ரி ப்ராடக்ட்ஸ் டிவிஷன்,
இந்துஸ்தான் லீவர் லிமிடெட்.,
165/166 பேக்பே ரிக்ளமேஷன்,
பம்பாய் 400 020.




**பாரஸ் தெளியுங்கள். வயலில் பொன் விளையும்.**





85378

சென்ற இதழில்....

இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் காட்சியை சென்ற இதழ் (1.8.86) அட்டை அலங்கரித்த...

# பார்த்தோம் படித்தோம்

1-7-86 தமிழ்நாடு அரசின் 9 ஆண்டுப் பணிகள் தொகுப்பு மலர், படித்துப் பாதுகாக்கப்பட வேண்டிய அளவிற்குச் சிறப்பாக அமைந்திருந்தது.

—எஸ்.ஏ.எம். இப்ராகீம்,
ராஜ மைதம்,
ஜோர்ஹாட்,
அஸ்ஸாம்.

தமிழ்நாடு அரசின் 9 ஆண்டுச் சாதனைகளைப் படித்து அனைத்தையும் தெரிந்து கொண்டேன். அதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா வழியில் தமிழக அரசு என்ற தலைப்பில் கூறியுள்ள செய்தி மிகவும் சிறப்பாக இருந்தது.

—ஏ.எம். ராஜேந்திரன்,
அத்தாணி.

16-7-86 இதழ் கண்டேன். பெருந்தலைவரின் மேலட்டையுடன், பக்கத்திற்குப் பக்கம் தாங்கள் அள்ளித் தெளித்திருந்த புகைப்படங்களும், நினைவுக் குறிப்புகளும் உண்மையிலேயே பாதுகாக்கப்பட வேண்டியவை.

—இரா. செல்வமணி,
பாப்பாக்குடி.

கர்மவீரர் காமராஜ் அவர்களின் அட்டைப் படமும் - அவரது சாதனைகளும் உள்ளடக்கிய இந்த இதழ் அருமை. இதழிற்குச் சிறப்புச் சேர்க்கும் விதமாய் - அமைந்திருந்தது அரசவைக் கவிஞரின் 'கறுப்புச் சூரியன்' கவிதை.

— ரேவதி ப்ரியன்,
ஈரோடு.

''பெருந்தலைவரின் வாழ்க்கைக் குறிப்புகள்'' மிகவும் பயனுள்ளவை. ஒவ்வொரு கால கட்டத்திலும் அவர் ஆற்றிய அரும் பணிகளின் தொகுப்பு அருமை. அச்சமுதாய மேதைக்குக் கவிஞர்களின் கவிதைகள், ஓர் அஞ்சலியாக விளங்கின.

—எம். சேக் அப்துல்லா,
சில்வார்பட்டி.

# கருவில் ஒரு நட்சத்திரம்

ஒரு நட்சத்திரம் உருவாவதை முதன் முதலாக வானவியல் விஞ்ஞானிகள் நேரடியாகப் பார்த்துள்ளனர்.

பூமியிலிருந்து 520 ஒளி ஆண்டுகள் தூரத்துக்கு அப்பால் (ஒரு ஒளி ஆண்டு என்பது சுமார் 5 இலட்சத்து 86 ஆயிரம் கோடி மைல்) பிரம்மாண்டமான வாயுமேகம் ஒன்று சிதறி நட்சத்திரம் போன்ற ஒன்றாகக் காட்சி அளித்ததை 'ரேடியோ' தொலை நோக்கி மூலம் கவனித்ததாக அரிஸோனா பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்கள் கூறினர். சிதறும் மேகமண்டலத்தின் மையத்தில் காணப்பட்ட ஒளிப்பொருள் ஒரு நட்சத்திரக் கரு போன்று தோன்றியதாக அவர்கள் கூறினர்.

இந்த நட்சத்திரக் கரு பல ஆண்டுகளுக்கு முன் ஒரு செயற்கைக்கோள் மூலம் தெரியவந்தது. பின்னாளில் நன்கு கவனிக்கத்தக்க நட்சத்திர உருவாக்க நிகழ்வாக, அது தென்பட்டது.

இது மிகவும் அசாதாரணமாகத் தோன்றுகிறது. சூரியனைவிட 20 மடங்கு சக்தி அதிலிருந்து வெளிப்படுகிறது. ஆனால் மிகவும் குளுமையாக இருக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சுமார் ஒரு லட்சம் ஆண்டுகளில் நட்சத்திரக் கருக்கள் சூரியன் அளவுக்குப் பெருத்துவிடும். அப்போது உருவாக்க நிகழ்வு நின்று போய், மேகமூட்டத்திலிருந்து கண்ணுக்குத் தெரியும் பொருளாக அது காட்சியளிக்கும் என்று விஞ்ஞானிகள் குறிப்பிட்டனர்.

சூரியன், பூமி ஆகியவை அடங்கிய சூரிய மண்டலம் உருவாகியபோது, சுமார் 500 கோடி ஆண்டுகளுக்கு முன் இதேபோன்ற நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

புதிய வண்ண துணி வகைகளுக்கு

உள்ளம் கொள்ளை கொள்ளும்
வண்ணங்களிலும் டிசைன்களிலும்
சி:.பான், பாலியெஸ்டர், பட்டு
மற்றும் பருத்தி நூல் சேலைகள்



பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

